மகா மகத்துவந் தங்கிய

அகத்தியர்

பரிபூரணம் 1200.

இந்நூல் கிடைக்குமிடம்.—

இ. ராம.

குருசாமிக்கோனர் சன்

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை

இதன் விலை] 1936 [ரூ 2—8—0

உ

பரமபதி அம்மை

அகத்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பரிபூரணம் 1200.

FREE GIFT BY: V. R. P. L. KASIVISWA... PAGANERI.

இஃது

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூ.] 1934 [2—8—0.

Registered Copy Right.

" சித்தர், நூலாராய்ச்சிப் புலவர் "

இ. ரா. ம. குருசாமிக் கோனார்,

புரோப்ரைட்டர், ஸ்ரீராமச்சந்திர விலாஸம் பிரஸ்,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதி துணை.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், இன்னுமற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த அகத்தியர்பரிபூரணம் **1200** என்ற சாஸ்திரத்தை ஓலையேட்டுச்சுவடிகளாய்ச் சம்பாதித்து இந்நூலுக்குப் போதுமான பொருட் செலவுசெய்து என்னால் கவர்ன்மெண்டில் 'ரிஜிஸ்தர்' செய்திருப்பதால் இப்புஸ்தகத்தை என் அனுமதியின்றி எவ்விதத்திலும் அச்சிடக் கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

குரு இராமசாமிக்கோன்,

புஸ்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

முதற் பதிப்பு.

உ

பரமபதி துணை.

அகத்தியர் பரிபூரணம் 1200

அட்டவணை.

விபரம்.	பக்கநிர்.
அ.	
அகாரஉகார விபரம்	11
அபமிருத்தகல	25
அமூர்தரசபோதம்	45
அமூர்தரசகற்பம்	49
அஷ்டகர்ம சவுக்காரம்	54
அவையடக்கம்	102
அம்பிகாதேவி மந்திரம்	109
அயக்காந்த சத்துசெந்தூரம்	134
அஷ்டாங்கம்	158
அஞ்சனம்	196
அஞ்சனம்	200
ஷை	202
அமூர்தரச கற்பம்	204
அயக்களங்கு செந்தூரம்	212
அஷ்டாங்கம்-8.	281
அரூபமணி கமலமணியின் பெருமை	67
ஆ.	
ஆரூதாரம்	3
ஷை	15
ஆதிகுரு	115
ஆதிக்களங்கு	141
ஆக்கிருஷ்ணம் 8-ம் மந்திரம்	180
ஆதியந்தம்	204
ஆத்துமதத்துவம்	267
ஆசனம் 9.	282
ஆகாதவழியுடையவன்	292
இ.	
இல்லறப் பெரியோர்	236
இரும்புக்குச் சத்துரு	289
ஷை மித்துரு	289
இயமம் (11)	281
உ.	
உச்சாடனம் எட்டுக்கும் மந்திரம்	179
உப்புக்கட்டு	192
உப்புதீட்சைகட்டு	233
உருக்கினம்	279
உருத்திர தியானம்	26
ஊ.	
ஊத்துமுறை	291
எ.	
எழுவகைத் தோற்றம்	123
எழுவகைப் பிறப்பு	124
எமன் விலக	208
எதிரி சங்காரம்	123
ஏ.	
ஏகச்சக்கரம்	191
ஐ.	
ஐந்து ஆச்சிரமம்	94
ஒ.	
ஒட்டியான யோகத்தெண்டு	250

விபரம்.	பக்க நிர்.
ஓ.	
ஓமம்	167
க.	
கருஞ்சாரைக் கற்பம்	32
கல்தாமரை	44
கஞ்சமலை அதிசயம்	50
கற்பூரச்சுண்ணம்	56
கற்பூரச்சுண்ணம்	104
ஷை	105
கலைவிபரம்	147
கர்ப்ப அயக்காந்தசெந்தூரம்	156
கபாலரோகத்திற்குப் புவனைச்சக்கரம் எழுதிக்கட்ட	159
கணயதி மந்திரம்	176
கருவுமை	197
கற்பம்	209
கருநெல்லி வெண்சாரை	219
கருவூரார்நிலை	240
கமலமுனி	243
கருநெல்லி	258
ஷை தயிலம்	259
கட்டுவகை	267
கருநெல்லிவிபரம்	268
கல்லுப்பு சத்துரு	287
ஷை மித்துரு	287
கருவங்கச்சத்துரு	290
ஷை மித்துரு	290
கணபதி	298
கா.	
கால்தலை	10
காணிநெய்	198
காலாங்கி புண்ணுக்கீசர் நிலைபடபதி	245
காரத்தின் சத்துரு	287
ஷைமித்துரு	287
காயகற்பத்தயிலம்	202

விபரம்.	பக்க நிர்.
ஷை மித்துரு	287
கு.	
கும்பமுனியான விபரம்	9
குருவருள் பெருதல்	13
குருதியானம்	24
குற்றாலமகிமை	53
குருலிங்கம்	76
குளிகை	84
குயவன் செம்பு	149
குளிகைவகை	276
கே.	
கேசரிநெய்	199
கை.	
கைலாச மகிமை	8
கொ	
கொங்கணர் நிலை	240
கோ.	
கோரக்கர் நிலை	245
ச.	
சனிபகவான் குணம்	17
சத்திதீட்சை	21
சதாசிவ நிஷ்டை	27
சதுரகிரி மகிமை	42
சத்திமெழுகு	69
சத்திமகிமை	59
சத்தியின் பெயர்	60
சத்தியுப்பு மெழுகு	236
சட்டைமுனி	242
சகலரூப முண்டாக	253
சதுரகிரிபொதிகை விபரம்	266
சமாதி	284
சந்தானம் உண்டாக	159

விபரம்.	பக்க நிர்.
சரக்குமுடிக்குங் காலம்	291
சதாசிவம்	299
சண்முகபூசை	29
சா.	
சாமளைமந்திரம்	97
சாரத்தின் சத்துரு	286
ஷை மித்துரு	286
சாரக்கட்டு	294
சி.	
சிவதீட்சை	18
சிவசத்தி திட்சை	24
சிதம்பர மகிமை	36
ஷை சக்கரம்	36
சிவத்தின் பெயர்	59
சிரசுமுதல் சகலநோய்க்கும் தலைமுழுக நெய்	71
சிரசுவியாதிக்குப் பற்பம்	71
சிங்கிச்சுண்ணம்	238
சித்தர் கூட்டம்	240
சிங்கிவகை	275
சீ.	
சீவாத்மா பரமாத்மா	100
சீவகலை விவரம்	269
சீனத்தின் சத்துருமித்துரு	288
சு.	
சுந்தரானந்தர்	245
சுரூபரசமணி	65
சூ.	
சூதத்தின் சத்துரு	289
செ.	
செயநீர்	72
செயநீர் வகை	272
செந்தூரத்துகை	271
செந்தூர யினம்	279
செம்புச்சுத்தி	293
செஞ்சாரைக்கற்பம்	33
சோ.	
சோதிகாண	209

விபரம்.	பக்க நிர்.
ஞா.	
ஞானயோகம்	235, 292
த.	
தன்தாரத்துடன் இருக்கலாமெனல்	7
தத்துவங்கள் விவரம்	10
தன்னையறியா மூடர்	55
தள்ளும்பொருள்	62
தயிலம்	264
தயிலவகை	276
தங்கசத்துரு	288
ஷை மித்துரு	288
தயிலம்	73
தம்பனம் எட்டுக்கும்மந்திரம்	178
தா.	
தாரயீயம்	87
தாரணை	283
தி.	
திருநடன விவரம்	3
திரிகூட பர்வதம்	4
திலதம்	77
திருவக வகை	273
தியானம்	283
திருமூலர்	244
து.	
துருசுசத்துரு	285
ஷைமித்துரு	285
துருசுச்சுண்ணம்	221
ந.	
நம்பிமலை அதிசயம்	52
நந்தீசர்	244
நவலோக நீறு	274
நா.	
நாகச்செந்தூரம்	117
நாகக்கட்டு	173
நாகரசவேதை	217
நாககிரி	254
நாகச்சத்துரு	289

விபரம்.	பக்கநிர்.
ஷை மித்துரு	290
நாகக்கட்டு	295
நாலுவகையோனி	124
நி.	
நிஷ்டை விபரம்	79
நிஷ்டை நிலையறிய	14
நீ.	
நீத்தினக்கரு	278
நூ.	
நூல்விபரம்	13
நூல்விபரம்	265
நெ.	
நெறியறியா மூடர்	6
நே.	
நேமம் (10)	282
ப.	
பஞ்சபூதமறிய	5
பதிபசுபாச விபரம்	10
பருதிமதி சுடர்	27
பரமகுரு தியானம்	28
பஞ்சகணதீட்சை	35
பரகெதியறிய	74
பகவதிதியானம்	112
பஞ்சபூத சரக்குவிபரம்	163
பற்பவகை	271
பஞ்சபூதச் சரக்குகள்	284
பா.	
பாம்புத்தடை	164
பாம்புவாய்கட்ட	165
பாவங்கள் விலக்க	170
பாம்புத்தடைகட்ட ஒட்ட	255
பாசாண்டிகுணம்	230
பி.	
பிர்மா	298
பிரமதெண்டின் விபரம்	3
பிரமதெரிசனம்	25
பிர்மமூலம்	40
பிண்டத்தின்விபரம்	63

விபரம்.	பக்கநிர்.
பிர்மாவிஷ்ணு	232
பிராணாயாமம்	282
பிரத்தியாகாரம்	283
பு.	
புரியட்டகம்	269
புவனைச்சித்து	166
புடநிதானம்	290
புவனைச்சக்கரம்	184
புத்தி	204
புருஷாமிருகயோகி	253
பூ.	
பூரணச்செயநீர்	228
பூரணமெழுகு	58
பூரணத்தின்பெயர்	61
பூரணத்தின் மகிமை	62
பூரணநெய்	198
பூரணகற்பம்	262
பூரணலேகியம்	260
பெ.	
பெரியோர் மகிமை	230
பே.	
பேதனம்	181
பொ.	
பொற்சீந்தி	42
போ.	
போகர்நிலை	241
ம.	
மயேஷ்பர நிஷ்டை	27
மஞ்சள்நிறத் தும்பை	44
மலையில் குகையுண்டாக்க	139
மணல்இரும்பு களங்கு	153
மச்சமுனி	243
மருந்துமா மலைவனம்	257
மயேஷ்பரன்	299
மா.	
மாரணம்	182
மால்பதி	298

விபரம்.	பக்க நிர்.
மி.	
மிளகுகற்பம்	190
மிருகம் வாய்கட்ட	216
மு.	
முப்பூவிபரம்	55
முப்பூ	101
மூ.	
மூலாதாரம்	232
மெ.	
மெழுகுவகைச் செயநீர்	227
மெழுகுவகை	272
மே.	
மேர்வுநிதானம்	4
மோ.	
மோகனம்எட்டுக்கு மந்திரம்	177
யெ.	
யெரிப்புத் திட்டம்	291
யோ.	
யோகம் (10)	297
ர.	
ரசமணி	193
ரசமலி	222
ரசத்தின் மித்துரு	288
ரு.	
ருத்திரன்	232
ஷை	299
ரெ.	
ரெட்னகிரி	121
ரே.	
ரேசகபூரகக் கும்பகம்	12

விபரம்.	பக்கநிர்.
லி.	
லிங்கக்கட்டு	148
லிங்கக்கட்டு	296
ஷை	296
வ.	
வல்லாறைக் கற்பம்	260
வயிரவர் தியானம்	29
வரைதாண்ட	38
வசியம்	76
ஷை	78
வசியம் எட்டுக்கும்மந்திரம்	177
வசீகரமணி	194
வங்கரசக்குரு	219
வா.	
வாலைபூசை	36
வாசிமகிமை	68
வி.	
விஷ்ணுநிஷ்டை	26
வித்துவேஷணம் மந்திரம்	180
வியாக்கிரமரிஷி	216
விஷத்துக்கு	255
வியாதிவருங்குணம்	70
வெ.	
வெண்சாரைக்கற்பம்	31
வெடியுப்புச் செயநீர் கட்டுவகை	226
வெண்சாரைகருநெல்லிவிபரம்	268
வெடியுப்புச் சத்துரு	286
ஷைமித்துரு	286
வெங்காரக்கட்டு	293
வே.	
வேதைத்துகை	271

உ

பராபதி துணை.

அகத்திய மகாமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பரிபூரணம் சூஉ.

பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தைப்பாட
காரணமாய்க் கருவுருவா யெங்குநிறைந் திருந்த
கண்மணியி நடுவாகிக் கருணை தரும் பொருளை
ஆரணமாய் முக்கோணத் தடியில் நடுவாகி
அசையாத பொருளாகி யருவுருவு மாகி
வாரணமாய் மூலமதில் நந்தியெனும் பிள்ளை
வாசியெனும் பூரண மனோன்மணி காப்பாமே. (1)

ஆமப்பா பூரணத்தை அனுதினமு நோக்கி
அதினுடைய விபரமதை யாரறிந்து சொல்வார்
நாமப்பா சொல்வதற்கு நாவில்வலு வுண்டோ
நாதாந்த மனோன்மணியி நடுவொளியின் கீழே
சோமப்பா நிறைந்தபூ ரணத்தைக் கண்டால்
துலங்குகின்ற பூரணத்தால் சோதியுட னிருபை
தாமப்பா அல்லாமல் வேறுபொரு ளுண்டோ
தன்னிலையைத் தானறிந்து தாரணியைக் காரே. (2)

காரப்பா பூரணத்தால் பிருதிவியைக் கண்டு
கருணையுள்ள பிருதிவியி நடுவெளியி னுள்ளே
சேரப்பா மனதறிவால் பூரணமாய் நீயும்
சேர்ந்துமிக நீயுமொரு காரணமாய் நின்றால்
நீரப்பா தான்பெருகிப் பூரணமாய் நிற்கும்
நிலையாத பூரணத்தில் நிலைத்துமிக நின்றால்
தேரப்பா மனந்தேறி அந்தமுர்த்தங் கொள்ளு
சிவயோக சிந்தையிலே பூரணமாய் நில்லே. (3)

நில்லப்பா பூரணத்தில் தன்னிலையைப் பற்றி
நிலைத்தமன துருதியினால் தீபமதைக் கண்டு
செல்லப்பா மூலமதில் கனலைத் தூண்டி
திருவான அப்புகையைத் தீபமதில்செலுத்த
வில்லப்பா விசைபோலே அக்காலில் தீபம்
விபரமுடன் யிறங்குகின்ற கருணையென்ன சொல்வேன்
உள்ளப்பா நீயாகிஉளுந் துருளும்போ தளவில்
உருமையுடன் பூரணமாய் நின்றதுவைப் பாரே. (4)

பாரப்பா பூரணமாய் நின்றதுவைப் பார்த்தால்
பரமவெளி தன்னிலொரு தன்னொளிவு காணும்
ஆரப்பா அறிவார்கள் தன்னொளிவு தன்னை
அரகரா அறிந்தவர்கள் பூரண தேகமுமாம்
வீரப்பா செய்யாமல் பூரணத்தை நம்பி
விபரமுட நீயொடுங்கும் நடுமனையைப் பாரு
நீரப்பா தான்பெருகிப் பிருதிவிதன் னோடே
நேர்ந்துகொண்ட பூரணத்தை நீயிருந்து பாரே. (5)

பார்க்கையிலே பூரணங்கொண் டெழுந்து பாரு
பதிவான பிரிதிவியு மப்புங் கூடி
சேர்க்கையுள்ள நாதவிந்து சத்திசிவ மாச்சு
சிவசத்தி யானதுவும் ரவிமதியு மாச்சு
மார்க்கமுள்ள ரவிமதியும் ராப்பகலு மாச்சு
மயங்காதே ராப்பகலும் பகல்ராவுஞ்சேர்ந்து
தீர்க்கமுடன் விடிந்ததென்ற பொருளையறி யார்கள்
சிவசிவா யிப்பொருளை மந்திரமாய்க் கேளே. (6)

கேளப்பா நீயிருந்து மனது பூரணமாய்
கேசரத்தி லாடுவது அகாரபீ டமதாம்
வாளப்பா அப்பீட மிருக்குமிடந் தானும்
வளமான பிருதிவியாம் உகாரமது ரெண்டு
சூளப்பா ஒன்றான மனோன்மணியின் வீடு
சுத்தமென்ற பெரும்பாளில் மகாரநடு மனையாம்
ஆளப்பா மகாரமது ஓங்கார மாகி
அதுவட்டங் கொண்டதொரு விந்துநிலை யாச்சே. (7)

ஆச்சப்பா விந்துநிலை எங்கேயென்று பாரு
அந்தநிலை சொல்லுவது பூரணமே சொல்லும்
நீச்சப்பா வெகுநீச்சு விந்துநிலை தானும்
நிலையாத கேணியடா பூரண நீரப்பா
பாச்சப்பா அன்னீரை உகாரபதி மேலே
பத்திகொண்டு பூரணமாய்ப் பாச்சினதால் மைந்தா
மூச்சப்பா வென்றதொரு நாதமதுக் குயிராய்
மூளைத்தெழுந்த தீபவொளி முதுகிடமாய்ப் பாரே. (8)

பிரமதேண்டின் விபரம்.

பாரப்பா முதுகினிடம் பூரணமாய் நீயும்
பதிவாக நீயிருந்து பார்த்ததினால் மைந்தா
நேரப்பா நடுவீதி கம்பமதி னோரம்
நிறைந்தபரி பூரணத்தை யாரறியப் போறார்
பேரப்பா பெத்ததொரு மகிமைதனைச் சொல்வோம்
பிரமமென்ற தெண்டினுட விபரமதைக் கேளு
ஆரப்பா மனைதானும் ஆருமனை யென்றால்
அரகரா சொல்லுகிறோம் அங்கமதாய்க் கேளே. (9)

ஆறுதாரம்.

கேளடா பூரணமாய் மனதுருமை யாகக்
கிருபையுள்ள மூலமடா நந்தியுட கம்பம்
மேலடா பிரமாதி பட்டணத்துக் கப்பால்
வெகுதூரம் மாலினுட பட்டணந்தானென்று
கோளடா யில்லாத ருத்திரனார் தானும்
குடியிருந்தா ரவர்பதிக்கு மேலவப்பாக
வாளடா ருத்திரனு மயேஷ னுருவாகி
வரைந்தானே அதின்மேலோர் பட்டணமுந் தானே. (10)

திருநடன விபரம்.

பட்டணத்தின் மேலேயொரு பட்டணமுண் டாக்கி
பதிவாகச் சதாசிவன்போ லிருந்தானே ருத்ரன்
இட்டமுடன் ருத்திரனு மூன்றுமனை கட்டி
செம்மையுட னிருந்தாரே நடுமனையிற் றானும்
சட்டமுடன் நடுமனையில் தானிருந்து கொண்டு
தவமான மேல்மனையி லிருகாலை நாட்டி
இட்டமுடன் தலைகீழாய்த் திருநடன மாடி
இருந்ததிரு நடனமதைப் பூரணமாய்ப் பாரே. (11)

திரிகூட பர்வதம்.

பார்ப்பதுதான் திருநடன மெங்கேயென வென்றால்
பரமான கயிலாச பொன்மேரு கிரியில்
கூர்ப்பரிந்த கயிலாச மேருகிரி தானும்
கோணமென்ற நாற்பத்து மூன்றுவது கோணம்
சேர்க்கையுள்ள கோணமதில் நடுக்கோண மைந்தா
திரிகூட பருபதமென் றதற்குமிக நாமம்
மார்க்கமுடன் திரிகூடப் பருவதத்தின் மேலே
மகத்தான சத்திசிவம் வாழ்ந்ததுவைப் பாரே. (12)

மேர்வு நிதானம்.

வாழ்ந்திருந்த மேருவுக்கு நிதானமதைக் கேளு
வளர்த்தியது ஆகாசம் என்னென்று சொல்வேன்
தாழ்ந்திருந்த அகலமது கோடான கோடி
சதிரான யோசனைதா னிதான மதுவய்யா
சூழ்ந்திருந்த பரதகண்ட மாயிரத்தெண் கோடி
அருவமுள்ள மணல்கண்டம் அதிலுமிக ரெட்டி
ஆழ்ந்திருந்த லவனசா கரமுமது ரெட்டி
அதின்பிறகு பார்க்கண்ட மதிலுமிகக் கேளே. (13)

கேளப்பா மணல்கண்டம் அதிலுமிக ரெட்டி
கிருபையுள்ள சுத்தசா கரத்தைக் கேளு
சூளப்பா மூவிரட்டி சுத்தசா கரமும்
சூழ்ந்ததுக்கு மேலாகப் பார்மணல் கண்டம்
வாளப்பா பார்மணலுக் கடுக்கமிகத் தானும்
மகத்தான பாதாள கெங்கையென வாகும்
தாளப்பா கெங்கைதிருப் பாற்கடலு மாகி
தருவான பார்க்கடலுக் காதாரங் கேளே. (14)

கேளுநீ ஆதாரஞ் சொல்லுவதை மைந்தா
கேசரமாம் நாற்பத்தி மூன்றுநடுக் குள்ளே
வாளுநடுக் கோணமதி லமூர்தமூறி
வந்ததடா பூமிநடுப் பாதாளமாக
நீளடா தானபெருகி வந்தமதி யமூர்தம்
நிறைந்துதடா கீழ்பூமி பாதாள வரைக்கும்
தாளுவது மதியமூர்தம் ஒன்று மாத்திரமே
தருகாத சராசரங்கள் தான்பொங்கும்பாரே. (15)

பொங்கியது தான்வடிந்து பாதாளந் தன்னில்
பொருந்துமது மதியமூர்த்த மதனி லுறவாகி
தங்கியது பூரணமாய்த் தானிறைந்து தய்யா
சராசரத்துக் குயிராகித் தற்பரத்திற் சென்று
அங்கியென்றும் வாயுவென்று மாகாசமென்றும்
அடங்கிநின்ற பஞ்சகர்த்தா அதனினுட விபரம்
சங்கையுட னறியவென்று பராபரந்தா னெண்ணி
தாரணியை யளவிடவுந் தானினைந்தார் தானே. (16)

பஞ்சபூத மறிய.

தானென்ற தாரணியை அளவிடும் போதளவில்
தன்னுக்கு ளடங்காத பெருமைதனைக் கண்டு
ஊனென்ற பிர்மாவைத் தான்திட்டித்ததனுள்
உண்மையுட னிவ்வுலகில் நீயிருந்து கொண்டு
தேனென்ற உயிர்ப்பயிருக் காதாரமாகி
திட்டிக்கும் நகாரமெனும் விஞ்சைதனை யோதி
நானென்ற சத்தமொடு நன்மையுட னிருந்து
நன்றாகக் கார்மேக அப்பினிடஞ் சேர்ந்தார். (17)

சேர்ந்தந்தச் சாகரத்தை அளவிடவென் றெண்ணி
செம்மையுட னாடுருவிப் பார்க்கும்போ தளவில்
சார்ந்தவொரு சாகரமுந் தன்னளவுக் கையா
தப்பாமல் நின்றதினால் தண்மையுட னெண்ணி
கூர்ந்தவொரு மாலவனைச் சாகரத்துக் குயிராய்
குடியிருமென் றவர்தமையுங் கூர்மையுடன் சொல்லி
தேர்ந்தவொரு மகாரமெனும் விஞ்சைதனையோதி
சிவாயமெனும் பருசமதுக் கின்பமதாய் நில்லே. (18)

நில்லென்று சொல்லியபின் அக்கினிதன் னையுமே
நிசமாகச் சோதிக்குஞ் சோதனை தன்னளவில்
சொல்லென்றுஞ் சொல்வதற்கு முடியாத தினால்
துருவமுள்ள ருத்திரரென் றருளைமிக நல்கி
கல்லென்ற உலகுதனக் குயிர்த்துணையுமாகி
கருணையுட னிருமெனவே சிகாரமெனும் பொருளை
உள்ளென்ற உயிர்போலே உபதேசம் வைத்து
உருமையுட னிருவெனவே வாய்வினிடஞ் சென்றார். (19)

சென்றந்த வாயுதனை அளவிடும்போ தளவில்
 தீர்க்கமுட னளவிடைக்கிச் சேராதபடியால்
கண்டந்த மயேசுரனென் றருளைமிக யீய்ந்து
 கருவான உயிர்பயிருக் காதாரமாகக்
கொண்டிருந்த படியிருந்து காத்தருளு மென்று
 குருவான வகாரமெனும் விஞ்சைதனை நல்கி
விண்டுவதற் கப்பாலே ஆகாச மதனை
 விளாவிடும் போதளவில் முடியாத படியால். (20)

முடியாத படியதனைத் தன்னருளால் கண்டு
 முத்தியுள்ள சதாசிவமென் றவரைமிகப் பார்த்து
வடிவான ரூபமதுக் காதார மாக
 வாழ்ந்திருமென் றவர்தனக்கு யகாரமெனும் பொருளை
துடியாக அவர்தனக்கு உபதேசம் வைத்து
 சுகமாக யிருவென்று பாராபரனு மைந்தா
அடியான மூலமது ஓங்காரக் கம்பம்
 அதினுனியில் மேலாக அருஉருவா னாரே. (21)

அருஉருவு மாகியந்தக் கம்பநுனி மேலே
 அசையாத பொருளாகி அண்டமெனுந் தானுப்
திருஉருவங் கொண்டதுவு மாருமறி யர்கள்
 சிவயோக ஞானவொளி தீபமதின் மகிமை
கருஉருவாய் நின்றதொரு மானிடர்கள் தானும்
 கால்வேறு தலைவேறாய்க் கருதுவது ரெம்ப
குருஉரையை யறியாமல் குருடர்மதம் பேசி
 கூறுகெட்ட ஞானவழி கூறுவது பாரே. (22)

நெறியறியா மூடர்.

பாரப்பா கூறுவதுக் கிடமதுவு மில்லை
 பஞ்சபூ தங்களது நின்றநிலை தானும்
நேரப்பா நின்றபர மைந்துநிலை பார்த்து
 நிலையாமல் நின்றதினு லேகபார பரமும்
காரப்பா வென்றவரும் பஞ்சகர்த்தா வென்று
 கருவான உலகமதி லெங்குநிறைந் திருந்தார்
ஆரப்பா அறிவார்க ளஞ்சினுட மகிமை
 அறியாம லுலகமது அலறுவது பாரே. (23)

பாரென்ற உலகமது பேயான கூத்து
பக்குவங்க ளறியாத பஞ்சபா தகங்கள்
நேரென்ற சிவநிலை யறியாத மூடர்
நிலையறிந்து வழியறிந்து நில்லாத வண்டர்
கூறென்ற சொல்லதனைக் குறியாத மாந்தர்
கூசாமல் பொய்வசனம் கூறுகின்ற நேசர்
நாரென்ற நாரறிந்து நல்மலரைப் பூட்ட
நலமறியான் குலமறியான் நாட்டமறி யாரே. (24)

நாட்டமன மறியாத மூடர்களோ கோடி
நங்கையர்மே லாசைகொண்டு மயங்கியலை வார்கள்
வாட்டமது யில்லாத ம்லரையறி யார்கள்
மதுவான பூரணத்தின் உருசைதனை யறியார்
தேட்டமென்ற சிவயோக வழியையறி யார்கள்
சிவமான சத்திதனை யறியாத மூடர்
தாட்டிகமாய் ஞானவழி தன்னையறி யாமல்
சமுசயங்கள் தீராம லலைவார்கள் தானே. (25)

அலைவார்கள் தேசாதி தேசங்க டோறும்
அணுவான தமர்வாச லறியாம லேதான்
குலையான பாவங்கள் செய்வார்க ளையா
குணமாகத் தன்னுயிர்போல் மன்னுயிர்கா ரார்கள்
வலையான மோகவலை தன்னிலுற வாகி
மதியான மதிகெட்டு மாழுவர்மண் மீதில்
கலையான யிருகலையும் ஒருகலையாய்ப் பாரார்
காமவலை தன்னில்விளை யாடுவர்கள் பாரே. (26)

தன்தாரத்துடன் இருக்கலாமெனல்.

பாரப்பா யிந்தமதி யாலே லோகம்
பக்குவங்க ளறியாமல் பெண்ணாசை யாலே
வீரப்பா கொண்டுமதி யலைந்தே போனார்
மெய்யான பெண்ணுடனே வாழ்ந்தா லென்ன
காரப்பா தன்தாரந் தாரமது வாகி
காசினியில் மருதாரந் தாய்போலே யெண்ணி
நேரப்பா நின்றதினால் காயமது சித்தி
நினைவுதப்பி நின்றதினால் காயமது போச்சே; (27)

போகாமல் பூரணத்தைத் தினமு நோக்கி
புத்திகொண்டு அறிவதனால் மூலம் பார்த்து
வாகான வழியறிந்து கமலம் நோக்கி
மகத்தான தீபவொளி தன்னிற் சென்று
பாகான அத்திய வொளியிலேதான்
பதிவான கனியொன்று அதேதென் ருக்கால்
நீகாணச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நின்றயிடஞ் சத்திசிவ ரூப மாச்சே (28)

கைலாசமகிமை

ஆச்சப்பா சத்திசிவ மறிய வேண்டி
யான்பட்ட பாடுகளைச் சத்தே கேளு
பேச்சப்பா பேசுதற்கு பக்குவங்க ளில்லாப்
பிராயமதில் பெரியோரைப் பணிவேன் மைந்தா
வீச்சப்பா வெகு கொடுமை துடியோ மெத்த
வேணபடி திரிந்தலைந்தேன் வீண ரோடே
மூச்சப்பா நின்றநிலை யறிய வேண்டி
மோகமதாய்க் கயிலாசம் வலம்வந் தேனே. (29)

வலமாக வரும்போது தென்பு ரத்தில்
மகத்தான சித்தருட வலுமை மெத்த
குலமான சித்தரென்றால் பிர்மகுல மாகும்
கூர்மையுட னவர்களிடம் பேசவென்றால்
நலமான பக்குவங்க ளில்லையில்லை
நாளிகைக்கோர் நாளிகைதான் வேள்விசெய்து
பெலமான கால்தலைகள் வேறாய் நின்று
பேசினார் சரிதைவழி பின்னின் றேனே. (30)

பின்னின்று மேல்புரத்திற் செல்லும் போது
பிலமான சத்திரிய ரனந்தங்கோடி
கண்ணிறைந்த ஞானநெறி சற்று மில்லை
கருவான கிரிகையிலே கருவோர் மெத்த
முன்னின்று அவர்களுடன் பேச வேண்டி
முழுமனதாய்ச செல்கையிலே நீயா ரென்றார்
விண்ணிறைந்த காச்சிபெற்ற சூத்திரகுரு னென்றேன்
வினையமுற்றும் பேசாமல் நின்றார் தானே. (31)

நின்றநிலை தானறிந்து வடபா கத்தில்
நெடுந்தூரஞ் சென்றுவினை யாடும் போது
கண்டதொரு இடங்களெல்லாம் யோக வாழ்க்கை
கதிகொண்டு நின்றாரே வைசியர் தானும்
பண்டுடைய யோகமதில் திறமோ மெத்த
பத்திகொண்டு அவர்களிடம் பருவ மாக
சென்றுமிகப் பூரணத்தின் வகையே தேண்டேன்
திறந்தப்பாய்ச் சொன்னதினால் திரும்பி னேனே. (32)

திரும்பிமிகக் கீழ்திசையில் வரும்போ தய்யர்
சிவசிவா சூத்திரரோ திறமோ மெத்த
விரும்பியிக அவர்களிடஞ் செல்லும் போது
வெகுகோடி சித்தரிலே ஒருவர் தானும்
இரும்பதினு மிளகாத மனம தாகி
இருந்துசிவ யோகமது செய்தா ரப்போ
கரும்பதினு மினியசொல் லாகப்பேசி
கண்டறிவோ மென்றுமெள்ள அடுத்தேன் பாரே. (33)

அடுத்துமிகப் பூரணத்துக் குருதி கேட்டேன்
அப்போது நீயாரென் றழுத்திப் பார்த்தார்
கடுத்தமன தருநிகண்டு சூத்திரனு னென்றேன்
கருவான என்மகனே வாவா வென்றார்
தொடுத்துமிக அவரிடத்தி லடுத்து நின்றேன்
சுகமாக இருமென்று அறிக்கை யிட்டு
தடுத்துமிக ஆளடிமை கொண்டு யெக்கியம்
தான்வளர்த்தார் பூமிமுத லாகாச வரைக்கே. (34)

கும்பமுனியான விபரம்.

வறைகண்டு யெக்கியந்தான் வளர்க்கும் போது
மகத்தான தேய்வென்ற பூதந் தானும்
நிறைகின்ற பூரணமாக கும்பங் கொண்டு
நிலையாத அனலுக்குள் நின்று தப்பா
துறையாக யிருந்தென்னைக் கண்ணால் மேவி
சுகமாக அகத்தியமாய் வாவென் றார்கள்
குறையாத கும்பமடா பூரணத்தின் கும்பம்
கொண்டுநின்ற வடிவதனைக் கூர்ந்து பாரே. (35)

பாரென்று சொல்லியவர் பாய்ந்தா ரப்போ
பக்குவமா யவர் முன்னே பாய்ந்தே னானும்
சீரென்ற கும்பமது பெண்ரூப மாகி
சிவாயகுரு நாதனவ ராண்ரூப மாகி
நேரென்ற யிருவருக்கு நடுவாகி நின்றேன்
நிலையாக அமலதுவை நிசமாக உண்டேன்
தேரென்ற மனந்தேறி யிருவருமே வருமாய்
சென்றுகரை யேறினபின் சிவாயகுரு நாதன். (36)

கால்தலை.

குருவான நாதனவன் மடிமீதில் வைத்து
கும்பமுனி நீயெனவே என்முகந் தடவி
திருவான பூரணத்தை வாரிமிகத் திரட்டி
செம்மையுடன் தானீய்ந்தார் வாங்கிமிகக் கொண்டேன்
உருவான தேகமது அமுர்தபூ ரணமாய்
உண்மையுட னவர்பாதஞ் சிரமீதில் வைத்து
கருவான காலேது தலையேது யென்றேன்
கைமுறையாய் நீநானும் வேறல்ல வென்றார். (37)

பதிபசுபாச விபரம்.

வேறல்ல வென்றுமிக நாதன் சொல்ல
விரிந்துநின்ற தத்துவத்தின் விபரங் கேட்டேன்
கூருள்ள பதிபசுபா சத்தைக் கேட்ட
குறிப்புமிக நன்றெனவே கூர்ந்து நாதன்
சீருள்ள பதிபசுபா சத்தி னாலே
திரண்டுகூடா தத்துவத்தின் செனனக் கூறு
விருள்ள தத்துவங்க ளிம்மூன றுநாலே
விபரமுடன் சொல்லுகின்றோம் நன்றாய்க் கேளே. (38)

தத்துவங்கள் விபரம்.

கேளப்பா பதிதானும் பசுபாச மறியும்
கெணிதமுடன் பசுதானும் பதிதனையு மறியும்
வாளப்பா பசுவறியும பாசமதைத் தானும்
மகத்தான பாசமது பசுவையறி யாது
ஆளப்பா பாசமது பசுவதனைக் காண
அரகரா குருவருளா லரிய வேணும்
சூளப்பா பிதுதனையு மறியாதா ராகில்
சுளிவாகப் பசுபாசங் கூடும் பாரே. (39)

கூடியொன்றாய் விளைவதுவு மழிவதுவு மாகும்
குறிப்புடனே பசுவந்து மேவி நன்றாய்
நாடியதோ ரிச்சையிலே புகுதப் பண்ணி
நலமில்லா பிறப்பிறப்புக் கிடம தாகும்
தேடியே பசுபாசத் துடன் கூடாதே
சிறந்தபசு பாசமுருத் தரிக்குமோ தான்
சூடியே பதிவந்து புகுந்த வாரும்
சொற்பசுவும் பாசமுரு வான வாறும். (40)

வாரான பக்குவங்கள் பூரணம தாக
வகுத்துரைக்க வேணுமென்றால் அடியைக் கொண்டேன்
சீரான பக்குவங்க ளொன்று மில்லை
சிறந்தபதி பரமாகும் பசுவதுவு முயிராம்
பேரான பாசமது தேகமது வாகும்
பெலமான பசுவதுவும் பதியில்மிகச் சேர்ந்தால்
வீரான தேகமென்ற பாசமதுக் குருதி
மெய்யாக நின்றுதவம் மேன்மைபெறக் காணே. (41)

அகார உகார விபரம்.

காணென்று சொன்னதொரு கருவைக் கேளு
கதித்தஉடல் சத்தியது பாச மாகும்
மானென்ற பசுதானு முயிரான சிவமாம்
மகத்தான பதிதானும் பராபரமாய் நிற்கும்
தானென்ற முப்பொருளு மொன்றாய்ச் சேர்ந்தால்
தன்மையுட னின்றபடி அச்சரமாய்க் கேளு
நானென்ற சத்தியது உகாரமது வாகும்
நடுவான அகாரமது சிவமதுவு மாமே. (42)

ஆமப்பா அகாரமுட னுகாரமது சேர்ந்து
அசையாது பூரணமாய் விந்தையெனும் பொருளாய்
தாமப்பா யேகமய மானதொரு பொருளாய்
தருவான அஞ்செழுத்து மாறெழுத்து மதுவாய்
நாமப்பா சொல்லுகிறே மெட்டெழுத்து மதுவாய்
நலஞ்சிறந்த நாடிகளுந் தத்துவமு மதுவாய்
காமப்பால் கசிந்தொழுகுங் காரணமு மதுவாய்
கரையில்லாப் போதமய மானதுவுந் தானே. (43)

தானேதா னாயிருந்த தத்துவமு நீதான்
சகலகலை யானதொரு பிராணனுயிர் நீதான்
வீணேதான் திரிந்ததினால் பின்வருவ தேது
மெய்யான பூரணத்தை விரும்பிமிக நில்லு
ஊனேதான் தானறிந்து உள்மகிழ்ந்து பாரு
உலகமது வேறல்ல தானுலக மாகும்
பூணேதான் மூலமதின் கனலைத் தூண்டி
போக்கான தத்துவத்தைப் போன்றிடவும் பாரே. (44)

பாரப்பா தத்துவங்கள் தான்தீப் பத்தி
பகையான புகையடங்கி மாண்டு தானால்
நேரப்பா நின்றதொரு கமலந் தோன்றும்
நினைவாலே அக்கமலங் கண்ட போது
காரப்பா கமலமல ரமுதங் கொண்டு
கருணையுள்ள தீபமதைக் கண்டு போற்றி
சாரப்பா சிவயோகத் தடங்கி நில்லு
சடாதார தெரிசனமுந் தான்தா னாமே. (45)

ரேசக பூரக கும்பகம்.

தானான காலதனைப் பூரணத்தாற் பற்றி
தன்மையுட னறிவதனால் சார்ந்து கொண்டு
மானான மண்மீதில் நீரு வாரும்
மகத்தான விண்மீதி லேரு வாரும்
கோனான குருபீடந் தன்னில் நின்று
குணமான நெருப்பாறு மயிர்ப்பாலத் தப்பால்
தேனான மதியமுர்த அருவி கண்டு
தெளியமன துருதிதனைச் செப்பு வோமே. (46)

செப்புகிற விதமென்ன வென்றால் மைந்தா
செம்மையுடன் சொல்லுகிறேன் தெளிந்து கேளு
தப்பறவாய் நீயுமிந்த அகாரந் தன்னில்
திருவமுள்ள உகாரமதைக் கூட்டி மைந்தா
தப்பாமல் செபித்துவிடு கொடிக்குள் ளந்த
சதானந்தி மூலமதில் கனலோ சாடும்
அப்போநீ அதையறிந்து கொண்டு மைந்தா
அசையாமல் ஒட்டியான பந்தனம் பண்ணே. (47)

பண்ணியந்த மூலஅனல் மேலே சாடி
பக்குவமாய் நின்றதுவே ரேசகம தாகும்
துண்ணியந்த அனலோடித் தீப மீதில்
துருவமுட னடங்குவது பூரகம தாகும்
தன்னிமையாக் கும்பகமே தென்றால் மைந்தா
சாதகமா இடகலைபின் கலையுங்கூடி
உன்னிடமா யடங்குவது கும்பகம தாகும்
உத்தசிவ யோகமது புத்தியுடன் பாரே. (48)

நூல் விபரம்.

புத்தியுடன் கற்பமா யிரத்தைப் பாரு
புகழான தத்துவமா யிரத்தைப் பாரு
பத்தியுடன் பூரணமீ ராரு நூறும்
பதிவான காவியமா யிரத்தைப் பாரு
சித்தியுள்ள வகாரமா யிரத்தைப் பாரு
தெளிவான சவுமியசா கரத்தைப் பாரு
முத்தியுள்ள வயித்தியமா யிரத்தை நூறில்
முக்கியங்கள் ரெம்பஉண்டு முகித்திட் டோமே. (49)

முகித்திட்டோம் சாலமீ ராறு நூறில்
மோடியங்கம் விநோதவகை முழுதுஞ் சொன்னோம்
பகுத்திட்டோம் வாதத்தில் கோடா கோடி
பக்குவமாய்ச் சூஸ்திரத்தி லக்கோ யில்லை
வகுத்திட்டோந் தீட்சைவிதி பூசைவிதி தன்னை
வளமாகப் பார்ப்பவர்க்கு யெல்லாஞ் சித்தி
தொகுத்திட்டோம் வகைதோண மனுவிக் ஞானம்
சுருக்கியே ஆயிரமாய்ச் சொன்னோம் பாரே. (50)

குருவருள் பெறுதல்.

பார்க்கவென்று பலநூலுந் தேடிப் பார்க்க
பக்குவங்க ளில்லையடா வயதோ கொஞ்சம்
மார்க்கமுடன் கொஞ்சவய தானு லென்ன
மகத்தான சற்குருவைத் தேடிப் பார்த்து
ஏர்க்கையுட னவர்மனதுக் கேற்க நல்ல
இன்பமுடன் தயவுவர நடந்தா யானல்
தீர்க்கமுடன் சத்திசிவ தீச்சை வைத்து
செம்மையுட னுதியந்தத் திறஞ்சொல் வாரே. (51)

திறஞ்சொல்வார் சகலகலை சேதி யெல்லாம்
தீர்க்கமுள்ள மவுனமதின் திறமுஞ் சொல்வார்
பறஞ்சொல்வார் பராபரத்தின் பதிவுஞ் சொல்வார்
பதிவாக மவுனமதின் திறமுஞ் சொல்வார்
நிறஞ்சொல்வார் நிஷ்டையுட நேர்மை சொல்வார்
நெஞ்சகங்கள் தான்வலுக்க நிதியுஞ் சொல்வார்
கறஞ்சொல்வார் காயாதி கற்பஞ் சொல்வார்
கண்மணியே மனதுவரக் கருதிக் கேளே. (52)

கேழ்க்கையிலே நீசெய்த நன்மைப் பாகம்
கிருபையுடன் சொல்லிடுவா ரப்போ தானும்
வாழ்க்கையுள்ள தேகமடா வலுத்துப் போகும்
மகத்தான புத்தியுமே சொலிக்க லாச்சு
தாழ்க்காமல் பதவிலே மேவலாச்சு
சதாகாலம் போதையுமோ தரிக்க லாச்சு
காக்கையிலே கால்வலுத்து நடக்கலாச்சு
கதிரான தீபவொளி காண லாச்சே. (53)

நிஷ்டையி னிலையறிய.

ஆச்சப்பா இத்தவமே பெற்று கொண்டு
அஷ்டமா சித்துவிளை யாடு மைந்தா
பேச்சப்பா ஒன்றுமில்லை மனதுருதி வேணும்
பெரியோரைக் கண்டுபதம் பணியவேணும்
நீச்சப்பா நிலையறிந்து கொள்ள வேணும்
நிஷ்டையிலே மனதொடுங்கி இருக்க வேணும்
மூச்சப்பா முன்னிலையாய் நிறுத்திக் கொண்டால்
மூவுலகுந் தன்வசமாய் நிறுத்த லாமே. (54)

நிறுத்தடா புருவமய்யம் பிடரியோரம்
நீமகனே அப்பிடரி பிர்ம பீடம்
கருத்துறவே அப்பிடரி பீடந் தன்னில்
கமலமென்ற ஆயிரத்தெட் டிதளினுள்ளே
திருத்தமுள்ள பீடமடா மவுன பீடஞ்
சிவசிவா மனோமணிசென் றிருக்கும் பீடம்
விருத்தமுள்ள பீடமதி னடுவி லேதான்
மெய்ஞ்ஞான தீபமடா விளங்கும் பாரே. (55)

பாரடா இருகால்கொண் டொருகா லூணி
பக்குவமாய்ச் சென்றந்தப் பதியி லேகி
காரடா மனோமணியைக் கருத்தில் வைத்து
கருணையுடன் கண்டமதி லங்கென் றாணி
தேரடா மனந்தேறி வாசி பூட்டி
திருவாகி நின்றநிலை யதனுள் பாரு
மோரடா கிரிதீப வொளிதான் காணும்
மெய்படா அந்தவொளி யேகமாமே. (56)

ஏகமய மானதொரு தீபந் தன்னை
இருதயத்தில் மனதறிவா யிருந்து கொண்டு
ஆகமுடன் புருவநடுச் சுழினை மீதில்
அந்தரங்க மாகயிரு கால்கள் நாட்டி
யாகமுட நீயிருந்து பதியைப் பாரு
பருதிமதிச் செயலதனால் சுடர்தான் தோன்றும்
தாகமுட னச்சுடரைக் கண்டா யானால்
தன்தேகஞ் சுடரொளிபோ லாகுந் தானே. (57)

தானவனே தானாக யிருந்து கொண்டு
தனிவான மூலமதின் கனலைத் தாண்டி
மோனமுட னக்கனல்கொண் டாரா தாரம்
முத்திகொண்ட நடுவரையா மேலா தாரம்,
ஏனமுட னாதார மீரா றுக்கும்
ஏகபரா பரமான ஏக நாதன்
கோனவனாய் நின்றுஅவ ராடுங் கூத்து
குண்டலியி னங்கியிடங் கூர்ந்து பாரே. (58)

ஆராதாரம்.

பாரப்பா நந்தியுட மரபு கேளு
பாரான பிருதிவியா மூலா தாரம்
நேரப்பா அம்மூலா தாரந் தன்னில்
நிலைத்துநின்ற கணபதிவல் லபையுங் கூடி
பேரப்பா கொண்டஓங் காரந் தன்னில்
பெரிதான கம்பமதாய் வளர்ந்து நின்றார்
ஆரப்பா அறிவார்கள் ஓங்கார ரூபம்
அரகரா ஓங்கார மாதார மாமே. (59)

ஆமப்பா ஆதார மதின்மேல் பார்க்க
அருமையுட னின்றிலங்குஞ் சுவாதிஷ் டானம்
நாமப்பா சொல்லுகிறோம் நாற்கோண வீட்டில்
நான்முகனுஞ் சரஸ்வதியும் நன்றாய்க் கூடி
தாமப்பா நகாரமெனும் விஞ்சைதனை வோதி
சகலஉயிர் பயிர்முதலாய் திட்டித்தேதான்
சேமப்பா திரிகோண நிஷ்டைகூடி
சென்றிருந்தார் பிர்மமெனுந் தெய்வந்தானே. (60)

தானென்ற பிர்மாவு மனந்த காலம்
தவசிருந்து உயிர்பயிருக் காதாரம் வேண்டி
கோனென்ற திருமாலைத் தேடிப் பார்த்து
குவிந்தெளும்பு திருகோணம் பூரகத்திற்சென்று
ஊனென்ற மாலவனைக் கண்டு அந்த
உயிர்பயிருக் காதார மூட்டவேண்டி
தேனென்ற அப்புதனைத் திருமால்நல்கி
சிறந்துநின்ற பயிருயிர்கள் செனித்தவாரே. (61)

வாரான உயிர்பயிருக் காதாரமாகி
மகிழ்ந்திருந்து ருத்திரரைக் கண்டுபேசி
நேராக அக்கினியும் வாய்வும் வேண்டி
நெடுவானில் தவசிருந்தார் நேர்மை யோடே
பேரான அக்கினியும் வாய்வுங் கூடி
பேரண்டந் தனிலிருந்து பிறந்துதப்பா
தேராத உயிர்பயிருஞ் செழிப்ப தாகி
சிவசிவா சதாசிவத்தில் தெளிந்தார் பாரே. (62)

தெளிந்துமன மொன்றாகிப் பூரணமாய் நின்று
சீவசரா சரமெல்லாஞ் சிவனை நோக்கி
களிந்துமனம் போகாமற் காக்கவென்று
கருணையுள்ள பூரணத்தை வணங்கிக்கொண்டு
அளிந்துஅந்தப் பதியான பிரமபீடம்
அமுர்தநிலை யசனதொரு அண்டபீடம்
குளிர்ந்தஇத ழாயிரமாய் குவிந்தபீடம்
குருவான குண்டலியின் பீடந்தானே. (63)

தானென்ற தத்துவமாம் பிர்மபீடம்
சகலகலைக் கியானபூ ரணமாம் பீடம்
கோனென்ற குருபீடம் விந்துவட்டம்
குறையாத ஓங்காரம் நந்திக்கம்பம்
வானென்ற கம்பனுனி யதனில்பாரு
மகத்தான தீபமதி னொளியே வீசும்
நானென்ற அகம்போக்கித் தானாய் நின்றால்
நல்லபரி பூரணமு நண்ணுந்தானே. (64)

தானவனே தானாகத் தன்மை பூண்டு
சகலகலை யானபூ ரணத்தைப் பாரு
நானவனாய் நின்றநிலை தன்னைப் பாரு
நாதாந்த சத்தியுட நயனம் பாரு
வானவர்கோ னறியாத நயன தீபம்
மகத்தான பிடரியென்ற மார்க்கமாகும்
கோனவனார் குடியிருந்த பிடரிதன்னில்
கொள்கின்றார் சனியமெனும் பகவான் றானே. (65)

சன்பகவான் குணம்.

தானென்ற சனிபகவான் பிடரி மேலே
தானேறி நின்றுகொண்டு தலைகால் வேறாய்
கோனென்ற அறிவுதனை நிலைக்கொட்டாமல்
குடிலமென்ற குடிலமெல்லாங் கூறாய்ச்செய்து
நானென்ற ஆணுவமே நிலைக்கப் பண்ணி
நன்மையென்ற வெளிகளெல்லா மிருளாய்க் காட்டி
கானென்ற கபடமதுக் கேதுவாய் நின்று
கரையேற வொட்டாமல் கருதுவானே. (66)

கருதுகின்ற சனிபகவான் பிடரிமேலே
கவிழ்ந்துநின்ற பாசமது களறவேண்டி
சுருதிபொரு ளானதொரு நாதன்பாதம்
தொழுதுமன துருதியினால் துகளறுத்து
நிருதியெனுஞ் சாபமது நிவர்த்தியாக
நீமகனே சொல்லுகிறே னன்றாய்க்கேளு
பருதியெனும் ரவிதனையே நமஷ்கரித்து
பாங்குடனே ஓம்கிலி சிவவென்று சொல்லே. (67)

சொல்லிடுவாய் தினம்நூத்தி யிருபத்தெட்டு
சோர்வின்றி மண்டலமே செபித்தாயாகில்
வல்லிடும்பாய் நின்றசனி மாறிப்போகும்
மகத்தான மந்திரமுஞ் சித்தியாகும்
கள்ளமனக் கசடகத்திக் கருணைகூர்ந்து
கற்பூர தீபவொளி கடாச்சத்தாலே
செல்லுமனா துருநியினால் புத்திதோன்ற
சிங்குசிவா அங்கென்று திறமாய்சில்லே. (68)

திறமாக மண்டலமே செபித்தாயாகில்
தீர்க்கமுடன் புத்தியது திறமாய்க்காணும்
வறமான புத்தியது வளர்ந்துகொண்டு
மகத்தான மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
பறமான மந்திரங்கள் சித்தியானால்
பாலகனே அஷ்டசித்துங் கைக்குள் ளாகும்
திறமான தீபவொளி மயங்கா தய்யா
சிவமான தேகமது மந்திரசித் தாச்சே. (69)

சிவதீட்சை.

சித்தான சிவதீச்சை மைந்தாகேளு
சிவசிவா முதல்தீச்சை சிங்சிவ்வென்று
பத்தான அகாரபதி நடுவேநின்று
பாலகனே மண்டலமே செபித்தாயானால்
சுத்தான ஆங்காரந் தொலைந்தே போகும்
துன்பமென்ற தீவினைகள் தூரவோடும்
வத்தாமல் பாக்கியங்கள் வளர்ந்து நிற்கும்
மார்க்கமுடன் ரெண்டான தீச்சைகேளே. (70)

கேளப்பா ரெண்டான தீட்சை மார்க்கம்
கெம்பீர மாகஅங் அம்மென் றோது
காளப்பா மண்டலமே ஓதினக்கால்
நல்வினையுந் தீவினையும் காடாதோடும்
வாளப்பா வினைகள்ரெண்டு மடங்கித்தானால்
மகத்தான மனதுபூ ரணமாய்க்காணும்
ஆளப்பா அந்தமன துருதியாலே
அலையடக்கம் மூன்றான தீச்சைகேளே. (71)

தீட்சையிலே மூன்றான தீச்சைமைந்தா
திறமாக அம்சிங் கென்றுசொல்லு
காச்சியில்லாக் காச்சியது கண்ணிலகாணும்
கருணையுள்ள வாசியது களருதய்யா
பேச்சிலுன்னைப் பெரியோர்கள் புகழ்ந்துகொள்வார்
பேருலகில் நீயுமொரு சித்தனுவாய்
தாச்சியில்லாச் சிவயோகந் தானேதங்கும்
தன்மையுட னுலான தீச்சை ஓதே. (72)

ஓதுவது சுழிமுனையில் வாசிபூட்டி
ஒதுங்காமல் சுடாரதிலே சிங்வங்கென்று
நீதியுடன் செபித்துவிடு மண்டலந்தானப்பா
நேர்மையுடன் பொசித்ததெல்லா ருசியதாகும்
வாதுகள்தான் செய்துநிற்குந் தாதுவெல்லாம்
மயங்காம லறிவுபூ ரணமாய்நிற்கும்
ஆதியெனுஞ் சதானந்தி கமலமீதில்
அருள்பெருக நீயிருந்து அருளைப்போற்றே. (73)

போற்றுவது அஞ்சான தீட்சைகேளு
புண்ணியனே சொல்லுகிறேன் அம்றீங்கென்று
தோற்றமுடன் மண்டலமே செபித்தாயாகில்
சிவசிவா பஞ்சகர்த்தா சித்தியாகும்
நாற்றிசையுங் கீர்த்திபெறக் கருணையுண்டாம்
நாதாந்த சின்மயமே நடுநின்றுடும்
பார்த்திபனே பரமகயி லாசந்தோற்றும்
பக்குவமாய் யாரான தீச்சைபாரே. (74)

பாரப்பா ஆறான தீச்சைகேளு
பத்தியுடன் சொல்லுகிறேன் ஙங்கிலியென்று
நேரப்பா நின்றநிலை தன்னில்நின்று
நினைவாக மண்டலமே செபித்தாயாகில்
ஆரப்பா அறிவார்க ளாருதாரம்
அப்பனே சடாதாரக் கோர்வைதோன்றும்
பேரப்பா கொண்டதொரு ஞானதீபம்
பிசகாது தன்னிலையிற் பேணிப்பாரே. (75)

பார்க்கையிலே பதிவான யேழாந்தீச்சை
பத்தியுடன் அய்யும்சிவ் வென்றுசொல்லி
ஏர்க்கையுடன் செவித்துவிடு மண்டலந்தான்
ஏகாந்தக் கருணைவிழி சோதிதோற்றும்
மார்க்கமுள்ள மதியமுர்த மருவிபாயும்
மைந்தனே அந்தமுர்தம் மவுனரசமாகும்
தீர்க்கமுடன் அந்தரசங் கொண்டாயானால்
சிவயோகத் தீர்க்கமது புனிதமாமே. (76)

ஆமப்பா தீட்சையிலே எட்டாந்தீட்சை
அரகரா சொல்லுகிறோம் உம்சவ்வென்று
காமப்பா சொல்லுகிறோம் தினமுன்னூறு
நன்மையுடன் செபித்துவிடு மண்டலந்தானப்பா
தாமப்பா மண்டலமே செபித்தாயானால்
தவமான அஷ்டசித்துக் குருதியாகும்
காமப்பால் கானர்பால் கசடுநீங்கும்
கயிலாச நிலமைதனைக் காட்டுந்தானே. (77)

தானென்ற ஒன்பதாந் தீட்சைதன்னை
தன்மையுடன் சொல்லுகிறோம் ரம்லம்மென்று
வீனென்று பாராமல் மண்டலமே செபித்தால்
வேதாந்த சாரமெல்லா மெய்யிற் தோற்றும்
தேனென்று அமுர்தரச தேகமாகும்
திகம்பரமு மம்பரத்தின் தெரிசனமுமாகும்
ஊனென்ற தேகமது சித்தியாகும்
உண்மையுள்ள மவுனமது உறுதியாமே. (78)

உறுதியுள்ள தீச்சையது பத்தாந் தீட்சை
ஒருமனதாய்ச் சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
கருதுமன திருதியினால் கம்கிலியென்று
கலங்காமல் மண்டலமே செபித்தாயாகில்
பருதிமதி சுடரதுவும் பணியுமைந்தா
பரமகயி லாசவெளி தன்னிலேதான்
கருதியுள்ள தீபவொளி சுடரைக்காண்பாய்
சுந்தரம்போ லொன்றுமுதல் பத்தைப்பாரே. (79)

பாரப்பா சிவதீச்சை ஒன்றுமுதல்ப்பத்து
பதிவாக நீயிருந்து செபித்தால்மைந்தா
ஆரப்பா உனக்கிடு சொல்லப்போரேன்
அரகரா ஆதியந்த மருளேவாய்க்கும்
நேரப்பா நின்றகபி லாசந்தோற்றும்
நிஷ்டையிலே மனதொடுங்கி அறிவிற்சேரும்
தேரப்பா மனந்தேறிச் சத்திதீச்சை
சிவயோக புனிதமதைச் செப்புவேனே. (80)

சத்திதீட்சை

செப்புவேன் சத்தியுட தீச்சைமார்க்கம்
சிவசிவா ஓம்அரி யென்றேயோதி
துப்பரவாய் நீயிருந்து குருவைப்போற்றி
துருவமுடன் மண்டலமே செபித்தாயாகில்
தப்புகிறே னென்றேடும் சுரதோசங்கள்
சாங்கமாய்த் தன்தேகஞ் சித்தியாகும்
சிற்பரத்தின் தேகமது சித்தியாச்சு
சிவாயகுரு பாதமதிற் சேரலாமே. (81)

சேரப்பா ரெண்டான தீச்சைகேளு
சிந்தைமன தொன்றாக உம்அங்கென்று
நேரப்பா புருவநடுக் கமலமீதில்
நீயிருந்து மண்டலமே செபித்தாயாகில்
வீரப்பா கொண்டதொரு மூலந்தன்னில்
வேதாந்தத் தீயதுவு மெய்யிற்சாடும்
காரப்பா மூலமென்ற நந்திகாணும்
கண்ணுமனக் கண்ணதினால் கருத்தாய்ப்பாரே. (82)

கருத்தான தீச்சையிலே மூன்றுந்தீட்சை
காரணமாய்ச் சொல்லுகிறேன் நசிசிம்மென்று
திருத்தமுடன் மனதுருகி யாகமைந்தா
செம்மையுடன் மண்டலமே செபித்தாயாகில்
வருத்தமென்ற மாவியவன் அகன்றுபோவான்
மகத்தான தீவினைகள் மாண்டுபோகும்
நெரித்தமர்க்குள் விளங்குன்ற தீபந்தோணும்
நேரான தீபமதா லெல்லாஞ்சித்தே. (83)

சித்தான தீச்சையடா நாலாந்தீட்சை
சின்மயத்தி னருளாலே செப்பக்கேளு
சுத்தான சுத்தல்ல துருவங்காணும்
துருவமுடன் ரம்மென்று லம்மென்றுந்தான்
பத்தான நடுமனையில் மனதைநாட்டி
பக்குவமாய் மண்டலமே செபித்தாயாகில்
முத்தான மூலஅனல் சித்தியாகும்
மூதண்ட தெரிசனையா முழுதும்பாரே. (84)

பாரப்பா மனதுருமை யாகநீயும்
பத்தியுட னைந்தான தீட்சைதன்னை
ஆரப்பா அறிவார்கள் ஒப் றீங்கென்று
அருமையுடன் மண்டலந்தான் செபித்தாயாகில்
நேரப்பா நின்றதொரு பஞ்சகர்த்தா
நிசமாக உனதிடத்தில் நிலையாய் நிற்பார்
தேரப்பா மனந்தேறிப் பூரணத்தைப்பாரு
சிவசிவா பூரணத்தால் காரணத்தைநோக்கே. (85)

நோக்கப்பா தீட்சையிலே ஆறாந்தீட்சை
நன்மையுடன் அம்கிலி இங்கென்றேதான்
தாக்கப்பா தன்னிலையில் மனதுருதியாக
தன்மையுடன் சதாகாலஞ் செபித்தாயாகில்
வாக்கப்பா மங்காது சித்தியாகும்
வரிசையுள்ள ஆறுதலம் வளமாய்க்காணும்
நாக்கப்பா நுனிநாக்கு அண்ணாக்கூடே
நாதாந்த சிரோமணியை நாடிநில்லே. (86)

நில்லப்பா நிலைதனிலே நினைவாய்நின்று
நேசமுடன் ஏழான தீச்சைகேளு
சல்லப்பா நினையாமல் ஓம்நம்மென்று
தன்மையுடன் மண்டலமே செபித்தாயாகில்
வில்லப்பா விசைபோலே வாசியேறும்
வேதாந்தப் பொருள்தனிலே மேவிப்பாரு
உள்ளப்பா ஒருமனதாய்ப் பார்த்தாயானால்
உன்தேகம் விளக்கொளிபோ லுண்மையாமே. (87)

உண்மையுடன் தீட்சையிலே எட்டாந்தீட்சை
ஓதுவது ஓம்சும் சுவ்வென்றேநீ
தன்மையுடன் தன்னருளைத் தியானம்பண்ணி
சதாகாலம் உதையமதில் செபித்தாயாகில்
நன்மையுள்ள திசைவாய்வு அகலாமல்த்தான்
நடுவான பூரணத்தில் நாட்டமாகும்
தின்மையுள்ள தீவினைக ளகலத்தள்ளும்
சிவசிவா பூரணத்தில் சென்றுநில்லே. (88)

நில்லடா நிலையான ஒன்பதாந் தீட்சை
நினைவாகச் செபிப்பதற்கு நிதானங்கேளு
சொல்லடா ஒன்றுமில்லை மைந்தாமைந்தா
சுருதியுடன் ரம்ரங் யம்மென்றேதான்
செல்லடா மண்டலமே செபித்தாயாகில்
தேகவச்சிர காயமதாம் நோயோயில்லை
தள்ளடா சுகதுக்கம் ரெண்டுங்கண்டு
சற்குருவைப் போற்றிமன தறிவாய்நில்லே. (89)

அறிவான தீட்சையடா பத்தாந்தீட்சை
ஆரறிவார் தீட்சையிலே யனந்தமுண்டு
குறியான தீட்சையிது ஹிறிங்சும்மென்று
குருவான பதிநோக்கி மைந்தாநீயும்
நெறியாக மண்டலமே செபித்தாயாகில்
நிலையான மந்திரங்கள் சக்கரங்கள்
பொறியான தேவதைகள் சகலத்துக்கும்
பொருந்திநின்ற சாபமெல்லாம் போகும்பாரே. (90)

பாரப்பா பதினோராந் தீட்சைதன்னை
பக்குவமாய் சுழிமுனையில் டம்நம்மென்று
நேரப்பா நின்றகுறி தவறாமல்தான்
நிச்சயமாய் மண்டலமே செபித்தாயாகில்
பேரப்பா அண்டபதர் தன்னிலேதான்
பேசாத நாதவொலி காதில்கேட்கும்
ஆரப்பா உனக்குநிகர் சொல்வேனய்யா
அம்புவியில் நீயுமொரு சித்தனாமே. (91)

சிவசத்தி தீச்சை.

சித்தனாய்ப் போவதற்கு இன்னமொன்று
செப்புகிறேன் சிவசத்தி தீட்சைதன்னை
முத்திபெற உதயமதி லங்கென்றேநில்
மோனமுடன் மாலையிலே உங்கென்றேநில்
பத்தியுடன் கலைதவறு துருவேசெய்தால்
பாலகனே உன்தேகம் வாலையாகும்
புத்தியுட னந்திசந்தி நாதவிந்தை
பூரணமா யுருவேத்திப் பூரணத்தைக்கேளே. (92)

காரப்பா சிவசத்தி தீச்சைசொன்னோம்
கருணையுடன் செபிப்பதற்குக் காலஞ்சொன்னோம்
நேரப்பா நிற்பதற்கு நினைவுசொன்னோம்
நேரான பூரணத்தின் பதிவுஞ் சொன்னோம்
பேரப்பா பெற்றதொரு ஆராதாரம்
பெருமையுள்ள நிலமதுவும் பேணிச்சொன்னோம்
சாரப்பா வாசிபூ ரணமுஞ்சொன்னோம்
சதாபோத மானதொரு நிலைசொன்னோமே. (93)

சொன்னமொழி தவறாம லின்னூல்தன்னை
சுத்தமுடன் தானெடுத்துப் புத்திகொண்டு
விண்ணதனைத் தானோக்கிப் பூரணத்தைநன்றாய்
விபரமுடன் ஆதிதொடுத் தந்தம்பாரு
புண்ணியனே ஆதிதொடுத் தந்தம்பார்த்தால்
போக்குவரத் தானதொரு புதுமைகாணும்
தன்னருளே தனதாகத் தானேநின்று
தன்மயமாஞ் சற்குருவின் தியானங்கேளே. (94)

குருதியானம்.

கேளப்பா குருத்தியானஞ் சொல்வேன்மைந்தா
கேசரத்தில் பூரணமாய் சிம்சிங்கென்று
நாளப்பா தமறாம லோர்நாள் போலே
நன்றாகச் சுகாசனமா யிருந்துகொண்டு
மேலப்பா விந்துநிலை யதனைநோக்கி
மேன்மைபெற ரேசகபூ ரகமும்பண்ணி
தாளப்பா நடுமனையா முக்கோணத்தில்
சார்ந்திருந்து புருவநடுப் பிடரியாரே. (95)

அபமிருத் தகல.

பார்க்கையிலே பரமவெளி தன்னிலேதான்
பரமகுரு பருதிமதி போலேமைந்தா
ஏர்க்கையுட னிருதயத்தில் தோணும்பாரு
என்னசொல்வேன் மெஞ்ஞான தீபந்தீபம்
சேர்க்கையுட னத்தீபச் சுடரிலேதான்
சிவசிவா பூரணமாய்த் திறமாய்நின்று
ஆக்கைதனைத் தீபமதி லாகுதியே செய்தால்
அரகரா அபமிருத்து அகன்றுபோமே. (96)

போமப்பா அபமிருத்து அகன்றுபோச்சு
பூரணமாய்த் தேகமது சித்தியாச்சு
நாமப்பா வென்றசுகந் தணிந்துநல்ல
நலமாகச் சிவயோகம் புனிதமாச்சு
ஆமப்பா சிவயோகம் புனிதமானால்
அப்பனே பிரமநிஷ்டை யதனைக்கேளு
ஓமப்பா பூரணமாய்க் கேசரியை நோக்கி
உத்தசிவ சத்தியைநீ உகந்துகாரே. (97)

பிரமதெரிசனம்.

காரப்பா புருவநடுப் பிடரிதன்னில்
கருணைவளர் சகஷ்திரமாங் கமலமீதில்
பாரப்பா பூரணமாய் மனதுகொண்டு
பத்தியுடன் தான்பாரு ஞானதீபம்
நேரப்பா நின்றிலங்கும் சோதிபோலே
நேர்மையுடன் பூரணமாய் நின்றுபாரு
சாரப்பா தன்மையுடன் நங்மங்கென்று
தன்மையுடன் நூறுருவில் சித்தியாச்சே. (98)

சித்தான பிரமதெரி சனையுமாகும்
சிவசிவா பரஞான கேசரியின் மகிமை
பித்தான பித்துகளும் விலகுமைந்தா
பேரின்பஞ் சித்தின்ப மிரண்டுந்தோன்றும்
பத்தியுடன் ரெண்டுநிலை கண்டுமைந்தா
பக்குவமா யந்தநிலை பார்த்தாயாகில்
சுத்தனாய் முத்தனாய் சிவயோகியாகி
தொல்லுலகில் நீயுமொரு குருவாகுவாயே. (99)

குருவான பெரியோர்க்கு மனதுவர நடந்தால்
குணமான மனதையவர் கூர்ந்துபார்த்து
உருவான காயமதுக் குருதிசொல்லி
உண்மையென்ற பொருள்களையு முகந்துகாட்டி
திருவான வாசியுட திறமுஞ்சொல்லி
சிந்தைமன தொன்றாக நிலையுங்காட்டி
தருவான தேனுடனே கற்பஞ்சொல்லி
தன்மையுடன் மதியொடுங்குஞ் சார்புஞ்சொல்வார். (100)

விஷ்ணு நிஷ்டை.

சார்வாக இன்னமொரு நிஷ்டைகேளு
தன்மையுடன் பூரணமாய் மங்சிங்கென்று
நேர்வாக ஐம்புலனை யடக்கிமைந்தா
நெறியான குறியறிந்து கனலைத்தூண்டி
சீராக அக்கனல்கொண் டுருமையாக
சிவசிவா பூரணமாய்ச் சிவயோகத்தில்
பேராக நின்றதினால் மைந்தாமைந்தா
பெரியமால் தெரிசனையாம் பேணிப்பாரே. (101)

பேணிப்பா ரவரடியில் தெண்டம்பண்ணி
பிரியமுடன் மானதமாய்ப் பூசித்தாக்கால்
வாணிப்பா ரமூர்தமது ஈவார்மைந்தா
மைந்தனே அந்தமூர்தங் கொண்டாயானால்
ஆணிமாத் தந்தநுனி போலாந்தேகம்
அப்பனே அமூர்தரச தேகமாச்சு
ஊணிப்பா ரமூர்தரச தேகமென்றால்
உன்தேகம் விளக்கொளிபோ லுண்மையாமே. (102)

உருத்திர தியானம்.

உண்மையென்ற ருத்திரரைத் தியானிக்கக்கேள்
ஒருமனதாய் மனதுகந்து சிங்வங்கென்று
தன்மையுடன் சன்னதியை நோக்கிமைந்தா
தாயான புருவமதிற் சார்ந்துநின்றால்
நன்மையுடன் ரவிமதிபோல் ருத்திரமூர்த்தி
நாமூன்று கலையுடனே நடுவேநிற்பார்
நுண்மையுட னவர்பதத்தைப் பூசித்தாக்கால்
நீடூழி காலமொரு நாளாம்பாரே. (103)

மயேஸ்பர நிஷ்டை.

பாரப்பா மயேஷ்பரத்தின் தியானந்தன்னைப்
பாலகனே மனதுகந்து வங்யங்கென்று
நேரப்பா நின்றநிலை யதுக்குமேலே
நெருப்பாரில் மபிர்ப்பால மீதில்சென்றால்
வேரப்பா வொன்றுமில்லை நானுமில்லை
வேதாந்த தேகமது கற்பூரதேகம்
ஆரப்பா அறிவார்கள் கற்பூரதேகம்
ஆதியென்ற தேகமடா சதாசிவனுமாமே. (104)

சதாசிவ நிஷ்டை.

ஆமப்பா சதாசிவத்தின் தியானங்கேளு
அாகரா பூரணமாய் யங்ஙங்கென்று
தாமப்பா நிலையறிந்து வாசிபூட்டி
தன்மையுடன் ரேஷகபூ ரகமும்பண்ணி
வாமப்பால் மதிநிறைந்த கும்பகத்தில்நின்று
மகத்தான கேசரியின் தீபம்நோக்க
சோமப்பால் நிறைந்தமனோன் மணிதன்னாலே
சோதியுள்ள சதாசிவனுந் துலங்கும்பாரே. (105)

பார்க்கையிலே புருவநடு விந்தக்குள்ளே
பதிவான மனோன்மணியுஞ் சதாசிவனுங்கூடி
ஏர்க்கையுடன் திசநாத வடிவாய்நின்று
என்மகனே தீபவொளி போலேகாணும்
சேர்க்கையுடன் அத்தீபங் கண்டபோது
சிவயோக மானதொரு நிஷ்டைகூடி
தீர்க்கமுடன் மனதுதனில் நினைத்தவண்ணம்
சிவாயகுரு கிருபையினால் சித்தியாமே. (106)

பருதிமதி சுடர்.

சித்தியுள்ள மூலமடா ஆதாரமாகும்
சிவசிவா ஆதாரம் நந்திக்கம்பம்
பத்தியுள்ள கம்பமடா ஓங்காரந்தான்
பரமான பிர்மமடா யேகஷத்து
முத்தியுள்ள வஸ்துவைத்தான் தியானஞ்செய்ய
மூலமென்ற கணபதிதான் பிரகாசிப்பார்
சுத்தமுட னவர்பதமே கெதியென்றெண்ணி
தோணுமடா ஆதாரந் துருவமாமே. (107)

துருவமென்று லச்சுழினை நடுக்கமலமீதில்
துலங்குகின்ற பருதிமதி சுடரைக்காண
பருவமுடன் அங்கிவிலா வென்றஓதப்
பருவமாய் மதிதானும் பிரகாசிக்கும்
புருவமுடன் அடிமதியைக் கண்டபோது
புத்தியுடன் மனதறிவா லங்லங்கென்று
அருவமுடன் மதிதானும் ரவியிற்சேரும்
அந்தரவி காணுதற்கு அங்உங்கென்னே. (108)

எண்ணப்பா நூற்றுருவில் ரவிதான்காணும்
இன்பமுள்ள ரவிதனையே கண்டபோது
கண்ணப்பா முன்னிலையாய் ரங்ரங்கென்று
நாட்டமுடன் நடுவணையைப் பிடித்துப்பாரு
விண்ணப்பா நிலையான ரவிதான்சென்று
மெஞ்ஞானச் சுடர்தனிலே சேரும்பாரு
உண்ணப்பா அச்சுடரை வாசிகொண்டு
ஊடுருவிப் பார்த்ததினு லுண்மையாமே. (109)

ஆமப்பா முச்சுடரின் தெரிசனமுஞ் சொன்னோம்
அருள்பெருகும் பூரணத்தி னருமையாலே
நாமப்பா சொன்னமொழி பெத்துக்கொண்டு
நாதாந்த மனோன்மணியின் தெரிசனத்தைக்கேளு
தாமப்பா புருவநடுச் சுடரில்நின்று
தன்மையுடன் ஓம்சிறீங் றீங்கென்றாது
வாமப்பா மதிநிறைந்த பூரணியின்கிருபை
மகத்தான போதமய மாகும்பாரே. (110)

பரமகுரு தியானம்.

பார்க்கையிலே பரமகுரு தியானங்கேளு
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் புத்தியாக
ஏர்க்கையுட னுதையாதி காலந்தன்னில்
இன்பமுடன் சரீரமதைச் சுத்திசெய்து
மார்க்கமுடன் பூதியுத் தளமாய்ப்பூசி
மைந்தனே சுகாசனமா யிருந்துகொண்டு
தீர்க்கமுடன் புருவநடுக் கமலமீதில்
சிவசிவா மனதுபூ ரணமாய்நில்லே. (111)

நில்லந்த நிலைதனிலே நின்றுமைந்தா
நிச்சயமாய் லங்கிலிசிம் மென்றுஓது
சொல்லந்த மானகுரு நாதன்றானும்
சுடரொளிபோ லிருதயத்தில் தோன்றும்பாரு
நல்லதொரு நாதாந்தச் சுடரைக்கண்டால்
நந்தியென்ற சோதிவெகு சோதியாச்சு
சொல்லந்தச் சோதிதனைக் கண்டால்மைந்தா
தீர்க்கமுட னட்டசித்துஞ் சித்தியாமே. (112)

வயிரவ தியானம்.

சித்தியுள்ள வயிரவ தியானங்கேளு
தீர்க்கமுடன் சிங்சிம்அங் கிலியென்றோதி
மூத்தியுள்ள குருபதியில் நின்றாயானால்
மூர்க்கமுடன் வயிரவரும் பிரகாசிப்பார்
பத்தியுட னவர்பதத்தைத் தொண்டுபண்ணி
பாலகனே மானதமாய்ப் பூசைசெய்தால்
எத்திசைக்குங் காவலவ னாகியுந்தன்
இருதயத்தில் நினைத்தவண்ண மெய்தும்பாரே. (113)

ஷண்முக பூசை.

பாரப்பா சண்முகனார் பூசைகேளு
பத்தியுடன் முக்கோணம் பதிவாய்ச்செய்து
நேரப்பா அறுகோணந் தன்னிலேதான்
நிசமான சடாச்சரத்தை நன்றாய்ப்போடு
காரப்பா அதனிடையின் வெளியிலேதான்
கருணையுடன் சரவண பவாவென்றேதான்
சேரப்பா அச்சரத்தை நாட்டிக்கொண்டு
சிவசிவா நடுவெளியில் விந்துபோடே. (114)

போடப்பா விந்துநடு ஓங்காரந்தான்
புத்தியுடன் தானெழுதி அதனுள்மைந்தா
நாடப்பா ஏகமென்ற சுழியைப்போட்டால்
நன்மையுள்ள சக்கரமுஞ் சித்தியாச்சு
வீடப்பா பிலப்பதற்கு சக்கரத்தைச்சுத்தி
விருத்தமென்ற வளையமடா மூன்றுபோடு
கோடப்பா கீறிநன்றாய்க் கோட்டைபோட்டு
குறிப்பாக நால்வாச லிட்டுக்கேளே. (115)

கேளப்பா வாசலிற் தேவதையைக்கேளு
கீழ்வாசல் பிரமனுட பீஷம்போடு
தாளப்பா தென்வாசல் மாலின்பீஷம்
தயவான மேல்வாசல் ருத்திரபீசம்
வாளப்பா வடவாசல் மயேஷன்பீஷம்
மைந்தனே வாசலிலே தேவதைகள்காட்டி
ஆளப்பா சதாசிவன்போல் நீயிருந்துகொண்டு
அன்பாகச் சக்கரத்தைப் பூசைசெய்யே. (116)

செய்யப்பா பூசைவிதி தன்னைநன்றாய்
செப்பமுடன் செய்வதற்குத் திருவைநோக்கி
கையப்பா கால்முகங்கள் சுத்திசெய்து
கருணைபெற விபூதியுத் தளமாய்ப்பூசி
வையப்பா சக்கரத்தைப் பீடமீதில்
மார்க்கமுடன் தானிருத்தி மலர்கள்தூவி
மெய்யப்பா தூபமொடு தீபஞ்செய்து
வேதாந்தப் புருவமதில் சிம்மென்றுநில்லே. (117)

நில்லப்பா மனதறிவால் வணக்கமாக
நினைவாகப் பால்பழமு வர்க்கத்தோடு
உள்ளப்பா சடாச்சரமு மாகவேதான்
ஓமெனவே சண்முகர்க்குப் பூசைசெய்து
சொல்லப்பா மூலமென்ற அக்கினியினாலே
சிவசிவா புருவநடுக் கமலம்நோக்கி
நல்லப்பா நல்மனதாய் நோக்கமானால்
நாதாந்த சண்முகனார் தெரிசனையாம்பாரே. (118)

பாரப்பா சண்முகனார் வடிவேல்கொண்டு
பத்தியுட னுனதிடத்தில் பதிவாய்நிற்பார்
நேரப்பா உன்னிடத்தில் முருகன்றானும்
நேர்மையுட னின்றதினால் காலனணுகாது
ஆரப்பா உனக்கீடு அட்டதிசைவெல்லும்
அஷ்டாங்க யோகமதுக் கடிதானாகும்
காரப்பா சண்முகசக் கரத்தைமைந்தா
கருவாகப் பூசித்துக் கடாச்சமதாய்நில்லே. (119)

நில்லடா நிலைதனிலே நின்றுகொண்டு
நேசமுடன் பரசமதை நிவர்த்திசெய்து
செல்லடா மலைகளிலே சஞ்சாரம்பண்ண
திறமான கருமானஞ் சொல்வோமைந்தா
உள்ளடா அகாரமதை உருவேசெய்து
உருமையுடன் பூசைபண்ணி உகந்துகொண்டால்
கல்லடா கள்ளமனங் கசிந்துநல்ல
கனியான கனியதுபோற் கனியும்பாரே. (120)

கனிந்தமன துருதியினால் மைந்தாநீயும்
கால்விரசு கொண்டுமனக் கண்ணினாலே
துணிந்துவரை சென்றுவலம் வந்துநீயும்
துருவமென்ற மலைகளைநீ சுத்திப்பார்த்து
அணிந்தவொரு ஆதிசிவ தியானத்தாலே
அம்பரமா மேரினுட அடிதான் தோற்றும்
பணிந்துநின்று அடிவாரந் தன்னிலேதான்
பத்தியுடன் பத்திகொண்டு பதிவாய்க்காரே. (121)

வெண்சாரை கற்பம்.

கார்ப்பதுதா னெப்படிநீ யென்றுகேட்டால்
கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
கூர்ப்பரிந்து குருபதியில் குருவைக்கண்டு
குணமான அங்குடனே அம்மென்றாக்கால்
நேர்ப்புடனே சயிலகிரி தன்னிலேதான்
நிசமான சாரைவெண் சாரைதானும்
தாப்புடனே வருகுமடா வரும்போதன்னை
தனித்திருந்து சாரைமய்யம் பிடித்திடாயே. (122)

பிடித்திடவே சிவசிவா வென்றுநீயும்
பிரியமுடன் செடத்தினுள்ளே செலுத்தினாக்கால்
கடுத்தநீர் வாய்வுடனே குன்மந்தீரும்
காலசதி மேலசதி காணாதோடும்
அடுத்தவொரு கண்ணெரிவு கபாலக்குத்து
ஆகாத பிணிசமூ மகன்றுபோகும்
முடித்தவொரு தேகமதுக் கறிவுண்டாகும்
முத்தியுள்ள சாரையது முக்கியமாமே. (123)

கருஞ்சாரை.

முக்கியமுள்ள கருஞ்சாரை முறமைகேளு
மூதண்ட சிவகயிலை தன்னிலேதான்
பக்குவமாய்ப் பூரணத்தில் மனதைநாட்டி
பணிந்துமிக அடிவாரந் தன்னில்கார்த்து
சிக்கெனவே யிருந்துமிக ரேசித்தாக்கால்
சீக்கிரத்தில் கருஞ்சாரை சினந்துபாயும்
உக்கிரமாய்க் கருஞ்சாரை வரும்போதானே
உம்மெனவே தலைநிருகி உண்டுபாரே. (124)

பாரப்பா கருஞ்சாரை நிலத்திற்பாயும்
பாயுமுன்னே ஏந்தியபின் பகரக்கேளு
நேரப்பா கருஞ்சாரை கையில்வாங்கி
நிச்சயமா யச்சாரை மெழுகுபோலாம்
பேரப்பா அச்சாரை பிலக்கவேண்டி
பெருமையுடன் மசிமசிவென் றேதினுக்கால்
ஆரப்பா அறிவார்க ளந்தச்சாரை
அருமையுடன் பூரணமாய் நிற்கும்பாரே. (125)

பாரான கருஞ்சாரை அருமைச்சாரை
பாரிலுள்ளோ ரறியாத பசுமைச்சாரை
நேரான சாரையதை மைந்தாகேளு
நிசமாகப் பூரணமாய்க் கொண்டாயானல்
தேராத மனந்தேருந் தேகந்தேரும்
சிவசிவா வாசியதுக் குயிரேயாகும்
பேரான பூரணமுஞ் சித்தியாகும்
பெருமையுடன் சிவயோகம் பிலக்குந்தானே. (126)

தானன பூரணமாஞ் சத்திபாதம்
தனையறிந்து அனுதினமும் பூசித்தாக்கால்
ஊனன காயமடா பிலக்கும்வாசி
உருமையுடன் நின்றுசிவ யோகம்பண்ணு
வீணன புத்திகளு மகன்றுபோகும்
மெய்யிலுள்ள வினைகளெல்லாம் விலகும்பாரு
கோனன குருவருளி லனந்தங்காட்டும்
குண்டலியி னந்தியுட கூருதானே. (127)

சேஞ்சாரைக்கற்பம்

தானென்ற கருஞ்சாரை யுண்மைசொன்னேன்
சதாநித்திய பூரணத்தின் தன்மையாலே
தேனென்ற செஞ்சாரை மகிமைகேளு
தேவியெனுஞ் செகசோதி பாதம்போற்றி
மானென்ற மங்கைபடா மவுனப்பிள்ளை
மதனரதி யானசிறு மங்கைநாதம்
கானென்ற நாதமடா கமலநாதம்
கருணையுடன் பூரணமாய் நாதம்வாங்கே. (128)

வாங்கியந்த நாதமதைத் தியானஞ்செய்து
மனதுபரி பூரணமாய் மகிழ்ந்துபோற்றி
பாங்குபெற சிங்றீங்கென் றேநீயோதி
பத்தியுடன் பூரணமாய் மனதில்கொண்டு
ஆங்கதுகொண் டமுர்தரசங் கொண்டாயானால்
அசையாத கூத்துவனு மகன்றுபோவான்
தீங்கான பிரமையுமோ தீர்ந்துபோகும்
சிவசிவா கயிலாச தேகமாச்சே (129)

தேகமதில் வாசியது அசையாதய்யா
சிவயோக பூரணமாய்த் தேறுந்தேறும்
போகமென்ற அனுபோக பரூபவாசல்
பொங்கிநிறைந் தமுர்தமது ஊறும்வாசல்
ஆகமென்ற அமுர்தாசஞ் சொலிக்கும்வாசல்
அடங்காத போதமய மானவாசல்
மோகமென்ற மோகமதுக் கேதுவாய்நின்ற
முத்திதரு மணிவாசல் மோச்சமாமே. (130)

மோச்சமென்ற நிலையறியா மனுடர்தானும்
மோகமென்ற மாய்கையிலே மூழ்கிமெத்தக்
காச்சியென்ற கண்காச்சி மோக்ஷங்காணார்
கால்வாசி கொண்டுநின்று சந்திபண்ணார்
ஆச்சியுட ஆனந்த அமுர்தபோதம்
அந்தமுர்தங் கொண்டுநிலை யறியமாட்டார்
பேச்சுமன தறியாமல் மாண்டாரய்யா
பெருமையுடன் பூரணத்தில் பேணிநில்லே. (131)

நில்லென்ற நிலையறியார் நிலையாக்கேணி
நிலைத்தமன துறுதியினால் வாசியாச்சு
சொல்லென்ற சொல்லுறுதி யாலேமைந்தா
சுகமான சத்திசிவ பூசைரெண்டும்
உள்ளென்ற உறுதியடா வாலைபூசை
உத்தமன துறுதியினால் பூசைபண்ணி
செல்லென்ற கேசரியை யடுத்தாயாகில்
சின்மயமாம் பூரணத்தைச் செப்பக்கேளே. (132)

செப்புமொழி யென்னவென்றால் மைந்தாகேளு
சிவசிவா பூரணமாய்ச் செனித்தபாகம்
கைப்புநிறை யமுர்தரச பாகந்தன்னை
கால்மாறி நின்றகே சரியில்நீயும்
தப்புதலில் லாமல்நீ மைந்தாகேளு
தன்வசமாய் கைவசமே தானேகொண்டு
துப்புரவாய் ரவிநாதஞ் சரியாய்ச்சேர்த்து
துகளரவே ரவிதனிலே சமாதுவையே. (133)

வையப்பா ரவிதனிலே வைத்தபோது
மகத்தான திசைநாத மெழுகாய்நிற்கும்
மெய்யப்பா மெழுகாகி நின்றநாதம்
மேன்மைபெற யின்னமொரு பாகங்கேளு
செய்யப்பா சத்திசிவ மொன்றாய்க்கூட்டி
தெளிவான தெளிவெடுத்து மெழுகிற்சேரு
மையப்பா போலவுமே பாகஞ்செய்து
மகத்தான ரவியினிடம் வைத்துப்பாரே. (134)

பாரப்பா ரவியினிடம் நன்றாய்க்காய்ந்தால்
பசுமையுள்ள மெழுகாகப் பாகமாகும்
சேரப்பா அம்மெழுகில் நாதவிந்து
சேர்க்கையுள்ள விந்ததுவுங் கலசப்பாலாம்
ஆரப்பா அறிவார்கள் கமலப்பாலில்
அம்மெழுகைக் கரைத்துரவி முகத்திற்சேரு
வீரப்பா தானடக்கப் பத்துமுறைசெய்தால்
வேதாந்த பூரணமாய் நிற்குந்தானே. (135)

தானான பூரணமே தெய்வந்தெய்வம்
சதானந்த போதமய மானதெய்வம்
ஊனான காயமதுக் குருதியான
உண்மையென்ற தெய்வமடா ஆருஞ்சொல்லார்
கோனான குருவருளாற் காணவேணும்
கூர்மையுடன் கண்டதினால் கொள்ளவேணும்
தேனான பூரணத்தால் தெகிட்டவேணும்
சிவசத்தி பூசையைநீ செய்துபோற்றே. (136)

பஞ்சகண தீச்சை.

போற்றியபின் பஞ்சகண தீச்சைகேளு
பூரணத்தின் கிருபையினால் சொல்வேனய்யா
தேற்றியதோர் சிவதீச்சை சத்திதீச்சை
செப்பாத வாலையுட தீச்சைமூன்று
சாற்றியதோர் பூரணமு நாலுங்கூட்டி
சதானந்த ரவிபீசங் கூடச்சேர்த்து
மூர்த்திகர மாகவேதான் ரவியில்வைத்தால்
முத்திபரி பூரணமாய் நிற்கும்பாரே. (137)

பாரப்பா பூரணமாய் நின்றநாதம்
பஞ்சகண தீச்சையெனச் சொல்லலாகும்
நேரப்பா மனம்நிறுத்திக் கொண்டோர்தாமும்
நிசமான பஞ்சகண தீச்சைசெய்வார்
பேரப்பா பெற்றதொரு முத்தர்செய்வார்
பேருலகில் மற்றவர்கள் காணமாட்டார்
நீரப்பா நிலையறிந்து கொள்ளமாட்டார்
நின்றநிலை காணார்கள் மடையர்வாழ்வே. (138)

வாழ்வான வாழ்க்கையிலே நிற்கவேணும்
மார்க்கமுடன் குருபதத்தை வணங்கவேணும்
பாழான முப்பாழைப் பார்க்கவேணும்
பஞ்சகண தீச்சைவிதி யறியவேணும்
தாளான மதியமுர்தங் கொள்ளவேணும்
சதாபோத மார்க்கமதாய் நிற்கவேணும்
காலான வாசிநிலை யறியவேணுங்
கற்பூர தீபமதால் கனலைத்தூண்டே. (139)

சிதம்பர மகிமை.

தூண்டாத மணிவிளக்கின் சோதியாலே
சொல்லுவேன் சிதம்பரத்தின் சூட்சங்கேளு
பூண்டதொரு பூட்டான கமலவீடு
பொற்கமல மாயிரத்தெதன் மலரின்வீடு
காண்டமென்ற கமண்டலமாம் விந்துவீடு
கற்பூர தீபநிறைந் திருந்தவீடு
தாண்டவமாய் நின்றுவிளை யாடும்வீடு
சகலகலை போதமய மானவீடே. (140)

சிதம்பர சக்கரம்.

வீடறிந்து விந்துநிலை தன்னைப்பாரு
விலாசமுள்ள விந்துவடா வட்டம்வட்டம்
நாடறிந்து வட்டமதை நாட்டிக்கொண்டு
நல்லவிந்து வட்டமதில் நயனமூன்றுஞ்
சோடறிந்து அதின்கீழே யகாரம்போடு
சூட்சமுட னதின்கீழே பிறைதாங்போடு
கூடறிந்து விந்துவதி லிதழ்தான்ரெண்டு
கூர்மையுடன் கொண்டதைநீ கூர்ந்துபாரே. (141)

பாரப்பா சக்கரமுஞ் சிதம்பரமுமாச்சு
பஞ்சசபை யானதுவு மிதுதானுச்சு
நேரப்பா சக்கரத்தை நிதானம்பண்ணி
நிச்சயமா யஞ்செழுத்தை மாறிமாறி
தேரப்பா நின்றுசெபஞ் செபித்தாயாகில்
சிந்தைதனில் நினைத்தவண்ண முடிக்கலாகும்
ஆரப்பா சிதம்பரத்தை யறியப்போறார்
அறிந்தவனே சிவயோகி யாகுந்தானே. (142)

வாலை பூசை.

தானான சிதம்பரத்தின் மகிமைசொன்னேன்
சதானந்த போதமதின் தன்மையாலே
தேனான வாலையுட பூசைகேளு
சிதம்பரத்தின் தீட்சையடா வாலைதானும்
கோனான திரிகோண நடுவேவிந்து
குருவர்ண விந்துவதி னடுவேகேளு
மானான ரீங்கார மிட்டுமேலே
மகத்தான சூட்சமிட்டுச் சுழியும்போடே. (143)

போடப்பா சுழியறிந்து சூட்சமிட்டால்
　　பொன்னான திரிகோண மென்னசொல்வேன்
நாடப்பா மேருவென்று மிதுக்குப்பேரு
　　நல்லதிரி கோணமென்று மிதுக்குப்பேரு
வீடப்பா பெலத்தமொரு மெஞ்ஞானவீடு
　　வீடறிந்து விதியோடே பூசைசெய்தால்
காடப்பா கருங்காடாம் காட்டினுள்ளே
　　கருணையுள்ள வாசியதுக் குயிருமாமே. (144)

உயிரான திரிகோண விந்துதன்னை
　　உறுதியுள்ள பூரணமென் றுகந்துநின்றால்
பயிரான உயிர்பயிரு மவனைப்போற்றி
　　பத்தியுடன் தொழுதுமன துறுதியாக
கயிலாச சிதம்பரம் வாலையைக்கண்டால்
　　கண்ணடங்காத் தீபவொளி கருணையாகும்
மயிரான பாலமதும் நெருப்பார்தாண்டி
　　மகத்தான பொன்மேரை யடுக்கலாமே. (145)

அடுக்குநிலை யறியவென்றால் கடினமெத்த
　　அருளான பூரணத்தா லடுக்கலாகும்
நடுக்காமல் பூரணத்தைக் காணுதற்கு
　　நன்மையுள்ள நன்மனதாய்க் குருவைக்காரு
தொடுக்கும்வகை யென்னவென்று கேட்டாயானால்
　　சொல்லுவேன் சத்திசிவ பூசைபண்ணி
திடுக்கருத்து வாலையுட திரத்தில்நின்றால்
　　திருவான பூரணத்தில் சேரலாமே. (146)

சேர்ந்துநின்ற பூரணத்தைக் கண்டுகொண்டால்
　　செம்மையுள்ள அடுக்குநிலை போதந்தோன்றும்
கூர்ந்துநின்று அடுக்குநிலை போதங்காண
　　குண்டலியி னந்திதனைக் கூர்ந்துபார்த்து
தேர்ந்துநின்ற ஆதார மூலாதாரம்
　　திறமான ஓங்காரக் கம்பந்தன்னில்
சார்ந்துநின்ற கம்பதுனி மேலேதாவி
　　தனலான ரவிதனையே பூசைபண்ணே. (147)

பண்ணப்பா பூசையிலா குதியேசெய்ய
பதிவான மூலமதில் கனலோமீரும்
நண்ணப்பா அக்கனலா லாறுதாரம்
நடுவான மூலமடா மேலாதாரம்
விண்ணப்பா தானிறைந்த ஆதாரப்போக்கை
மேன்மைபெறக் காணுதற்கு மெதுவாய்மைந்தா
கண்ணப்பா கோலறிந்து கண்ணக்கோலால்
கால்வாசி கொண்டுஅந்தக் கனலைத்தூண்டே. (148)

வரைதாண்ட

தூண்டினால் கண்ணேரு வெகுசாய்ப்பாயும்
துகளறுத்து அடுக்குநிலை தோணுந்தோணும்
தாண்டினால் முதல்வரையே சிவமுமாச்சு
சகலகலை மருவரைதான் சத்தியாச்சு
ஆண்டதினால் மூன்றுவரை வாலையாச்சு
ஆதியென்ற நாலுவரை பூரணமாய்நிற்கும்
நீண்டதொரு பூரணத்தைக் கண்டபோது
நிலையாத அஞ்சுவரை நிசந்தான்காணே. (149)

நிசமான அஞ்சுவரை நாதம்நாதம்
நின்றிலங்கு மாறுவரை தீபந்தீபம்
வசமான ஆறுவரை மேலதாக
வன்னிரவி சோமனுமாய் மகிழ்ந்துநிற்பார்
திசமான ஏழ்வரைக்கு மேலதாக
தீயான அக்கினியா மாறுதன்னில்
நிசமான நெருப்பாறி லப்பாலேகி
நீமகனே மயிர்ப்பால மிட்டுத்தாண்டே. (150)

தாண்டினு லகண்டவெளி காணலாகும்
சகலகலை போதகமாய் நிற்கலாகும்
தாண்டினால் வெளியோடே வெளியுஞ்சேர்ந்து
சங்கற்ப விகற்பமெல்லாந் தவிர்ந்துபோகும்
தாண்டினால் யேகவெளி தீக்காடாகும்
தன்மயமும் வின்மயமு மொன்றாய்ப்போகும்
தாண்டினால் பரவெளி தன்னிலேதான்
தயங்காத தீபவொளி தான்தானுமே. (151)

தானவனாய் நின்றபூ ரணத்தைப்போற்றி
சகலகலை நிராமயமாய் நிற்கவேணும்
ஊனான காயமதாய் நம்பவேணும்
உண்மையென்ற திருநடனம் பார்க்கவேணும்
காணாத கண்காச்சி காணவேணும்
கமலமல ரமுர்தமதைக் கொள்ளவேணும்
கோனான சின்மயத்தில் நிற்கவேணும்
குருவான பூரணத்தில் பார்த்துத்தேறே. (152)

தேறுவது சுழினைநடுக் கமலமீதில்
செகசோதி யானபூ ரணத்தைநீயும்
மாறுவிதந் தனையறிந்து மாறினாக்கால்
மகத்தான விஞ்சையது சித்தியாகும்
கூறுவது அகத்தீசா வென்றுகூவி
குருவான அம்பரத்தில் குறிகண்ணாட்டி
சேறுவது பூரணத்தில் சேர்ந்தாயாகில்
சிவசிவா கயிலாசம் நீதானாமே. (153)

நீயென்றும் நானென்றும் வேறொன்றில்லை
நிசமான பூரணத்தை நம்பும்போது
தாயென்று வந்தமுர்தங் கொடுப்பாள்நன்றாய்
தலைவனையுந் தன்னையுந்தான் காட்டிவைப்பாள்
காயென்றும் பழமென்றும் வேறேயில்லை
கனியான முப்பழத்தைக் கண்டபோது
சேயென்ற வாலையவள் முன்னேநின்று
தெகுட்டாத பூரணத்தின் திறஞ்சொல்வாளே. (154)

சொல்லுவாள் மதனைமொழி யென்னவென்றால்
சொல்லரிது கேட்டவர்க்குச் சொர்க்கஞ்சொர்க்கம்
சொல்லுவ ரந்தரங்க சொர்க்கவீட்டில்
தெகிட்டாத மதியமுர்தக் கனிதானென்று
கொள்ளுவார் பெரியோர்க ளதனைவேண்டி
கொண்டுகரை யேறினவர் கோடிக்கொன்று
தள்ளுவார் திரோதகையின் கூத்தையெல்லாம்
தள்ளிமலை யேறுவது தனதென்பாரே. (155)

பிர்மமூலம்

பாரான பிருதிவியா மண்ணும்விண்ணும்
பசுந்தமண்ணுந் தண்ணீரு மார்தான்காண்பார்
ஆரான தண்ணீரு மண்ணுமப்பா
ஆதியந்தஞ் சத்திசிவ மானவாறு
நேரான சத்திசிவ மென்னசொல்வேன்
நிசமான நாதவிந்து முத்திமோச்சம்
பேரான மோச்சமடா விந்துவிந்து
பெருமையுள்ள விந்துமணி ரவியிற்றாக்கே. (156)

தாக்கினுல் காயசித்தி கைக்குள்ளாகும்
தன்மையுள்ள கெவுனசித்தி தானேதங்கும்
வாக்கினு லுரையாத மவுனசித்து
வரிசையுள்ள சிவயோக வாழ்க்கைதானும்
தூக்கினுல் தொடர்ந்தேறுஞ் சோதிவாழ்க்கை
சோதியென்ருல் செகசோதி யானமூலம்
நாக்கினு லசையாத மூலமூலம்
நடுவான மூலமடா பிர்மமாச்சே. (157)

ஆச்சப்பா பிர்மமென்ருல் மாவின்மூலம்
அருளான மூலமடா விந்துவட்டம்
மூச்சப்பா நின்றடங்கும் முனையாம்பாரு
முத்திதரும் புருவநடுக் கமலபீடம்
பேச்சப்பா பேசாத மவுனபீடம்
பேரண்ட மானதொரு வன்னிவன்னி
நீச்சப்பா நிலையாத வன்னிமேலே
நின்றிலங்குங் கற்பூர தீபம்பாரே. (158)

பாரடா கற்பூர தீபமேலே
பாச்சிவிடு மூலஅன லாவிதன்னை
சேரடா ஆவியதின் மேலேசென்ருல்
சிவஞான தீபமது ஆவியூடே
நேரடா பாயுமது மூலந்தன்னில்
நிசமான ஆவியொளி பிராணனுச்சு
காரடா பிராணநிலை காத்துஅந்தக்
கருவான சத்திசிவ பூசைசெய்யே. (159)

பூசையது செய்வதுவு மாசையாசை
பொங்கிநின்ற ஆசையினல் எல்லாமாச்சு
ஆசையினல் வாசிநின்று மூலத்தேகி
அடங்காத மேல்மூலம் அந்தத்தாலே
பரிசிமனத் தனுக்கறுத்து அமுர்தங்கொண்டு
பசுமையுள்ள சத்தியுட பாதம்போற்றி
நாசிநுனி நடுவான பூரணத்தைக்கண்டால்
நலமான நால்பதமு நண்ணுங்காணே. (160)

காணவே காலையிலே சிவத்தைப்பூசி
கனிவாக மாலையிலே சத்திபூசை
பேணவே காலைசிவ மாலைசத்தி
பேருமல் நின்றுதவஞ் செய்வாயாகில்
தோணவே சத்தியவள் சிரிப்பாளய்யா
சோதியெனும் பூரணத்தாய் துலங்கமாட்டாள்
ஊணவே வாசியது உழண்டுநின்று
உத்தசிவ யோகமதுக் குறுதிபோச்சே. (161)

போச்சப்பா அறிவுகளு மங்கிப்போச்சு
பொல்லாத மாய்கைவந்து சுத்தலாச்சு
பேச்சப்பா முன்பின்னய்ப் பிரண்டுபோச்சு
பேய்க்கூத்தாய் நின்றுவிளை யாடலாச்சு
ஆச்சப்பா ஆதார மகன்றுபோச்சு
ஆனந்த போதமதில் சுழலலாச்சு
மூச்சப்பா முன்னிலைவிட் டொதுங்கிப்போச்சு
முத்திசிவ சத்திவிட்டால் மோசம்பாரே. (162)

பாரடா பூரணநூல் தன்னிலேதான்
பத்திமுத்தி சித்திவயி ராக்கியஞ்சொல்லும்
ஆரடா அறிவார்கள் பூரணத்தின்பாகம்
ஆதியந்தப் பொருளறிந்தோ னவனேசித்தன்
தேரடா தனக்கழகு சிரசுபோலே
சிவதலத்துக் கழகுபூ ரணமேயாச்சு
சாரடா பூரணத்திற் சென்றுநீயும்
சதுரகிரி பொதிகையுட தன்மைகேளே. (163)

சதுரகிரி மகிமை.

கேளடா சதுரகிரி வளமைதன்னை
கேட்பவர்க்குக் கெதிமோச்சங் கிட்டுங்கிட்டும்
ஆளடா சதுரகிரி எண்கோணமாகும்
அருளான கோணமென்றால் குகைதானுண்டு
சூளடா கிரிமுடியில் குகைதானென்று
சொன்னகுகை ஒன்பதிலும் நவசித்தாதி
தாளடா மேருவிலே தவசுபண்ணி
தன்னருளால் பிர்மமய மானார்பாரே. (164)

பாரப்பா பிரமமய மாகிநின்ற
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பதிவாய்க்கேளு
கோரப்பா நின்றபூ ரணத்தினாலே
நிச்சயமாய்ப் பிர்மரிஷி யானார்பாரு
பேரப்பா பெத்தநவ சித்தர்தானும்
பெருமையுட நவகோடி சித்தரானார்
சேரப்பா சதுரகிரி முடியிலேதான்
தேனருவி பாயுதடா பூரணமுமாமே. (165)

ஆமப்பா சதுரகிரி கிழக்குச்சென்றால்
அடிவாரந் தன்னிலொரு குகைதானுண்டு
தாமப்பா அக்குகைக்கு மேலதாக
சந்திரபுஷ் கரணியெனுந் தடாகமுண்டு
நாமப்பா சொல்லுகிறே மச்சுனேயைச்சுத்தி
நலமான பொற்சிந்தி மெத்தஉண்டு
ஓமப்பா பொற்சிந்தி கொண்டுநீயும்
உருமையுட னச்சுனேயிநீ ருண்டுபாரே. (166)

பொற் சீந்தி.

உண்டுபார் மண்டலமே கொண்டாயானால்
உன்தேகம் விளக்கொளிபோ லொளியேவீசும்
நின்றுபா ரக்குகையில் சித்தருண்டு
நீமகனே அவர்களிடஞ் சென்றாயானால்
கண்டுபார்த் தணைத்தவரு மகனேயென்று
கற்பமுறை உற்பனத்தைக் கருதுவார்பார்
பண்டுடைய பண்மொழிகள் சொல்லுவார்பார்
பசுமையொளி பூரணத்தின் பாகந்தானே. (167)

பாகமுள்ள பொற்சிந்தி ரசத்தைவாங்கி
பக்குவமாய் நவலோகந் தன்னிற்பூசி
ஆகமுடன் அனல்காட்டி யெடுத்துப்பாரு
அசையாத தங்கமாத் தகிகங்காணும்
தாகமுட னச்சுண்ணயில் நவலோகத்தை
தணல்காட்டித் தோய்த்திடவே தங்கமாகும்
நாகமுடன் பாசாண முழுதுமந்த
நல்லசுண்ண நீரதனால் கட்டிப்போச்சே. (168)

போச்சென்று விடுகாதே தென்கிழக்கில்
புசுண்டர்வர்க்கச் சித்தருட குகைதானுண்டு
மூச்சென்ற அக்குகைக்கு அடுக்கநல்ல
முத்திபெரு ஞானமெனுஞ் சுண்ணதானப்பா
நீச்சென்ற அச்சுண்ணயைச் சுத்திநல்ல
நீலமெனுங் கொடுவேலி வெகுசாயுண்டு
பாச்சென்ற கொடுவேலி யிலையைத்தின்று
பரைஞானச் சுண்ணநீரை யுண்டுபாரே. (169)

பாரப்பா மண்டலமே கொண்டாயானால்
பசுமையுள்ள தேகமது சித்தியாச்சு
வீரப்பா கொண்டசடஞ் சித்தியானால்
வேதாந்த தீபமது மெய்யாய்க்காணும்
சாரப்பா அத்தீபக் கிருபையாலே
சார்பாகச் சித்தருமே யணைப்பாரய்யா
பேரப்பா பெத்ததொரு குருவைக்காண
பெரிதான மவுனவித்தை சொல்வார்காணே. (170)

காணவே கொடுவேலிச் சாருவாங்கி
கடுசான இரும்பைநீ காய்ச்சித்தோய்த்தால்
தோணவே யிரும்பதுவு யேமமாகும்
சுத்தமுள்ள கெங்கையிலே ரசந்தான்கட்டும்
பேணவே அர்தாசங் கொண்டாயானால்
பேரண்டஞ் சுத்துமடா கெவுனமார்க்கம்
பூணவே கொடிவேலிச் சாத்தினாலே
பொன்றினபே ரெழுந்திரிந்து போவார்தானே. (171)

மஞ்சள்நிற தும்பை.

தானான மேருவுக்குத் தெற்காகத்தான்
தண்மையுடன் மூன்றுசுனை நிலையாக்கேணி
ஊனான நடுச்சுனையைச் சுத்திமெத்த
உறுதியுள்ள மஞ்சள்நிறத் தும்பையுண்டு
பேணாமல் நின்றதினால் காணமாட்டார்
பெருமையுள்ள சுனையருகே குகைதானுண்டு
கோனான அக்குகையில் சித்தர்வாசம்
குருவான சித்தரைநீ பணிந்திடாயே. (172)

பணிந்திடவே சித்தருனை யணைத்துக்கொண்டு
பசுமையுள்ள தும்பைதனை காட்டுவார்கள்
கணிந்திடவே தும்பைதனைக் கசக்கிநல்ல
காரமுள்ள சாறுதனைக் கொண்டாயானால்
அணிந்தவொரு வாசியதுக் குறுதியாச்சு
அகம்பாவ புத்திகளு மகன்றுபோச்சு
துணிந்துவருங் காலனவன் மாண்டுபோவான்
சுயஞ்சோதி யானபிர காசமாமே. (173)

ஆமென்ற பிரகாச மதீதவித்தை
அந்தரங்க மானவித்தை யார்தான்காண்பார்
ஓமென்ற தென்மேற்கு வடக்கிற்சென்றால்
உயர்ந்தவொரு திட்டுஅதில் குகைதானுண்டு
தாமென்ற அக்குகைக்கி மேலதாகச்
சங்குநதி யானவொரு தடாகமுண்டு
நாமென்ற தடாகநதி யோரமெல்லாம்
நல்லகல்லுத் தாமரைதான் நிற்கும்பாரே. (174)

கல்தாமரை.

நிற்குமொழி தனையறிந்து சென்றுபார்த்தால்
நீதியுள்ள தாமரையைப் பிடுங்கிமைந்தா
தற்கமிட்டு அச்சாத்தில் யிரும்பைக்காய்ச்சி
தான்துவைக்க யிரும்பதுவுஞ் செம்பாய்ப்போகும்
வற்கமுள்ள சாத்திலதைச் சுருக்குப்போட்டால்
மாசற்றுக் கட்டுமடா மணிபோல்மைந்தா
துற்குணத்தை விட்டகன்று நற்குணமேயானால்
சுயஞ்சோதி யானவொரு பதங்காணலாமே. (175)

ஆமப்பா மேற்குமுத லீசானமட்டும்
அந்தரங்க மானயிட மார்தான்காண்பார்
ஓமென்ற கெவுனதி யேகவேணும்
உறுதியுள்ள சித்தனென்றால் காண்பாரய்யா
நாமென்ற ஆணுவத்தை மூலத்தியால்
நலுங்காம லத்தீயில் தகனம்பண்ணி
தாமென்ற சந்திரனை ரவியிற்றாக்கி
சதாகாலம் பூரணத்திற் சார்ந்துநில்லே. (176)

நில்லென்ற சதுரகிரி தன்னிலேதான்
நீமகனே ஒருபோது வாசமானால்
சொல்லென்ற மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
சோதியென்ற சுடரொளியுந் தோன்றுந்தோன்றும்
உல்லென்ற மவுனமது சித்தியாகும்
ஓமென்ற மூலமுத லாறுதாரம்
கல்லென்ற கோட்டையடா வச்சிரகாயம்
கயிலாச சதுரகிரி வாசந்தானே. (177)

அமுர்தரச போதம்.

வாசமுள்ள அமுர்தரச போதங்கேளு
மகத்தான போதமடா அமுர்தபோதம்
நேசமுள்ள போதமதை யார்தான்காண்பார்
நின்னிடத்தில் நின்னிடத்தை நினைவாய்ப்பாரு
தேசமென்ற ஆதார மூலாதாரம்
சிவசிவா ஓமெனவே நின்றமூலம்
பேசவொண்ணு மூலமடா என்தாய்சத்தி
பெண்ணிவளாங் கண்ணிமையாற் பேணிப்பாரே. (178)

பேணிப்பா ரமுர்தரச மாதுதன்னை
பின்னவளா முன்னவளா மென்னுளுந்தான்
பூணிப்பா யென்னாளும் பூசைபண்ணி
புத்தியுனக் கில்லையடா முத்திமோச்சம்
பாணிப்பாய்த் திரிந்ததினால் காணப்போமோ
பஞ்சகண பூரணத்தின் பதவிதன்னை
ஆணிமாத் தநிகமடா ஆத்தாள்ரூபம்
அந்தமதி ரவியினிட மணிக்தரூபம். (179)

ரூபமென்ற தூலமடா சூட்சமாகி
துண்ணிமையாய்க் காரணமாய் நின்றுளாத்தாள்
தாபமென்ற நில்லறமே சுழிமுனைமூலம்
சங்கையுடன் மூலத்தின் தணலையூதி
வாபமென்று யிருந்துகுளிர் காய்ந்துகொள்ள
மதியுனக்கு யில்லையடா மைந்தாமைந்தா
கூபமென்ற கற்பமடா குமரிகற்பம்
கூரறிந்து நேரறிந்தால் வாலையாமே. (180)

ஆமென்ற மூலமடா முதுகண்ணோட்டம்
அந்தரங்க மானசுழி கடைக்கண்பார்வை
காமென்ற பார்வையடா சுழிமுனைநந்தி
நாதாந்த முத்திபெருங் கமலவீடு
ஓமென்ற வீடுநடு மனையினுள்ளே
ஒளியான முச்சுடரின் மேலதாக
தாமென்ற சுனையருவி பாயுதய்யா,
சங்கையுட னந்தருவி யுண்டுபாரே. (181)

உண்டுமிக நின்றதிரு லமுர்தபோதம்
உண்மையுடன் சொன்னதிரு வுறுதியாகும்
கண்டுகொண்ட கலைக்யான முடிவாய்நின்ற
காலதுதான் தலையாகும் தலைகாலாகும்
விண்டுசொல்லப் போகாத அமுர்தபோதம்
மெய்யான கலைக்யான முடிவதாகும்
பண்டுடைய கலைக்யான மமுர்தபோதம்
பதிவான சுழிமுனையதிற் பத்திப்பாரே. (182)

பத்திப்பார் சந்திரகலை பதினாறாகும்
பகலான சூரியகலை பனிரெண்டாகும்
சுத்திப்பா ரக்கினியின் கலைதானாலு
துகைபார்க்கக் கலைகளொரு முடிவாய்நிற்கும்
முத்திபார் மூன்றுகலை ஒன்றும்போது
முக்யமென்ன முப்பத்தி ரெண்டதாகும்
புத்தியுட னின்றகலை எட்டெட்டாகி
பூரணமா யறுபத்தி நாலுமாச்சே. (183)

நாலான பூரணமே தெய்வந்தெய்வம்
நாதமென்ற கலைக்யான மதுவேயாகும்
காலான கலைக்யான முடிவைமைந்தா
கருத்துவைத்துக் கண்டவர்க ளாருமில்லை
மேலான சுழினையடா கமலவீட்டில்
மெய்யாக நிறைந்தகலைக் யானபோதம்
பாலான முப்பர்லுக் கப்பால்நின்ற
பதிவான கலைக்யான முடிவதாமே. (184)

முடிவான கலைக்யான முத்திமோச்சம்
மூலமென்ற பிராணனடா வாய்வுவாய்வு
அடியான வாய்வுகலைக் யானமான
அவையடக்கஞ் சொல்லுகிறே னாதியந்தம்
படியான ஆதியந்தம் ரவிமதியுமாச்சு
பாலகனே மதிதனையே ரவியிற்சேரு
வடிவான ஆதியந்த மொன்றும்போது
மகத்தான கலைக்யான முடிவுமாமே. (185)

ஆமப்பா முடிவாகி நின்றபோதம்
அடங்கிவிளை யாடுகின்ற அருமைநாதம்
ஓமப்பா வெளியேறி வந்தசூட்சம்
ஒன்றுபத்தாய் நின்றுவிளை யாடும்வாலை
காமப்பா லானபூ ரணமாய்வந்த
கலைக்யான மானகே சரியாள் தன்னை
நாமப்பா வென்றிருந்தால் நமன்தானேது
நாதாந்த கலைக்யான முடிவைப்பாரே. (186)

பாரப்பா இருவிழியு மொன்றுய்க்கூடி
பரைஞான கேசரியாள் பதத்தைப்பார்க்க
ஆரப்பா அறிவார்கள் சூக்சாசூக்சம்
அச்சூக்ச மானகலைக் ஞானபோதம்
நேரப்பா நின்றுகால் மாறியாடி
நிசமான சுழியிலொரு காலைநீட்டி
தோரப்பா மூலமுத லாராதாரம்
சென்றுவிளை யாடுமது கலைக்ஞானமாமே. (187)

ஆமென்ற கலைக்யானம் நயனசூட்சம்
அருள்பெருகப் பூரணமாய் வந்தசூட்சம்
ஓமென்ற ரவிமதியாங் கலைகள்ரெண்டும்
உருமையுட னடுமனையாஞ் சுழினைமீதில்
தாமெனவே அந்தநடு மனையில்சென்றால்
சாயுச்ய பதவியடா தானேதங்கும்
நாமென்ற பதவியடா நயனசூட்சம்
நாதாந்த முத்தியென நண்ணுந்தானே. (188)

நண்ணுவது என்னவென்றால் நயனம்ரெண்டும்
நாட்டமுடன் பூரணமாய்ச் சுழினைமீதில்
உண்ணுவது சிவயோகத் தன்மையாகும்
ஒடுங்குவது நிருவிகற்ப சமாதியாகும்
கண்ணுமன மொன்றாகி நின்றுபாரு
கருவான கலைக்யானங் கண்ணின்கண்ணு
தன்னிமையா யறிந்துநிமை தன்னைப்பாரு
தன்சாய்கை யத்துநடா தன்னைக்காணே. (189)

தன்னைத்தான் கார்க்கஒரு கருவைக்கேளு
தானவனாய் நின்றகுரு தன்னைக்கார்த்து
விண்ணைத்தா னோக்குவது கண்ணின்கண்ணு
மெய்யான கண்ணதுதான் வேதாந்தத்தி
கண்ணைத்தா னறிந்துநடுக் கண்ணைப்பார்க்க
கலைக்யான பூரணமாய்க் கருணையாகும்
மண்ணைத்தான் பார்த்துறுதி யறிந்துகொண்டு
மந்திரமாங் கலைக்யானம் வசியமாமே. (190)

வசியமுள்ள சத்தியடா வாசிமூலம்
வாசிவளர் பூரணமே பொதிகைக்கும்பம்
பசியகலுங் கும்பமுனி தன்னைக்கண்டால்
பத்திமுத்தி நின்றிலங்கும் பரமஞானம்
கசியமன துருதியிறை லந்தக்கண்ணை
காலறிந்து கண்துறந்து கமலவீட்டில்
பொசிக்கவே நீஅந்த அமுர்தங்கொண்டால்
பூரணமா யென்னாளும் வாழலாமே. (191)

அமுர்தரச கற்பம்.

வாழ்வதற்கு அமுர்தரச கற்பங்கேளு
மார்க்கமுடன் பூரணத்தை வாங்கிமைந்தா
ஆழ்வதற்கு அந்தகிரை சத்திசேரு
அந்தரங்க மாகவேநீ ரிவியில்வைத்து
மாழ்வதற்கு ரவிபீச மதனில்ரெட்டி
மைந்தனே மூன்றுமொன்றாய்க் கூட்டிநல்ல
கால்வலுக்க நாதவிந்து ஒன்றாய்க்கூட்டி
கருணைபெற ரவியில்வைக்க மெழுகுமாமே. (192)

ஆமெனவே மெழுகெடுத்து வைத்துக்கொண்டு
அப்பனே மறுபடியும் நாதவிந்து
ஓமெனவே விட்டுநன்றாய்ப் பிசைந்துவைக்க
உருமையுடன் ரவியனலில் பாகமாகும்
நாமெனவே ஐந்துருவு மொன்றாய்நின்று
நாதாந்த ரசகற்ப மானதாலே
தாமெனவே அந்தமுர்த மொருபோதுண்டால்
தானவனாய் நின்றுலகில் வாழலாமே. (193)

வாழ்வதற்கு என்னவிதம் செய்வோமென்று
மனதிடஞ்சல் கொண்டுதவஞ் செய்யவேண்டாம்
ஆழ்வதற்கு சதுரகிரி யீசானத்தில்
அங்கையொரு தலமுமொரு சுனையுமுண்டு
பாலமுர்த முறுமந்த சுனையிற்சென்று
பக்குவமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
கோல்முறித்து அக்குழியி லாழம்பார்த்து
குழிதுரைக்கு அடுக்கமஞ்சள் சேறுமாமே. (194)

சேரான சத்திநல்ல மஞ்சள்போலே
சிவந்தகளிச் சுண்ணமடா என்னசொல்வேன்
பேரான சுண்ணமென்ற களியைவாங்கி
பெருமையுடன் குடுக்கைதனி லடைத்துக்கொண்டு
நேரான நடுமனையைத் தியானம்பண்ணி
நிச்சயமாய்ச் சத்திசிவ பூசைபண்ணி
வீரான நவலோகந் தன்னிற்பூசி
மெய்யான செந்தீயிற் காய்ச்சிப்பாரே. (195)

காச்சிமிகப் பார்க்கையிலே நவலோகங்கள்
கருகருத்து ஊரலத்துக் கனகம்போலாம்
தாச்சியில்லாக் கனகமென்ற குருவைவாங்கி
தாம்பூர மாயிரத்துக் கொன்றுபோட்டு
பாச்சிநன்ருய்க் குகையிலதை உருக்கிப்பாரு
பாலகனே ஆயிரத்துக் கதிகமாத்தாம்
மாச்சலது யில்லையடா மலையினூரல்
மஞ்சள்நிறக் களிச்சுண்ண மகிமைதானே. (196)

கஞ்சமலை அதிசயம்.

தானான கஞ்சமலை நடுவிலேதான்
சதிரான கரும்பாறை யதற்குமேலே
தோணுது அதனிலொரு குகைதானுண்டு
துவாரமென்ன இடிகிணறு போலேகாணும்
காணாத இடிகிணற்றின் பக்கந்தன்னில்
கருவான வாசலுண்டு உள்ளேசென்ருல்
கோணாத வட்டமாங் குகைமேலாக
கொடுவளைமேல் பரணியுண்டு கூர்ந்துபாரே. (197)

கூர்ந்துபா ரப்பரணி தன்னிலேதான்
குருவான செந்தூர மெழுகுபற்பம்
சார்ந்துபார் தயிலமொடு உதகஞ்செயநீர்
சங்கையில்லாக் குப்பிகளில் மெத்தஉண்டு
சேர்ந்துபார்த் ததையெடுத்துத் தவசுபண்ணி
சிவயோகத் தில்தோணச் சேர்ந்துநில்லு
ஆய்ந்துஅந்தச் சரக்குவைப்பு கஞ்சமலைச்சித்தர்
அன்புவைத்துச் செய்தமுறை அறிந்துபாரே. (198)

அறிந்துபா ராதாரப் பொருளைப்பற்றி
ஆதியென்ற சத்திசிவ பூசைசெய்து
விரிந்துநின்ற வேதாந்த பூரணத்தினாலே
வெளியான சோதியிலே மேவிநில்லு
வருந்தியந்த வாலைரசங் கொண்டுநல்ல
மணிபூர பூரணத்தில் மருவிப்பார்த்தால்
சொரிந்தமுர்தம் வழிந்தோடு மந்தப்பாலை
சுழியறிந்து கொண்டுகரை யேறுவாயே. (199)

ஏறுவது பூரணத்தி லேறவேணும்
ஏகாந்த சத்திசிவ பூசைவேணும்
கூறுவது குருமுறையாய்க் கூறவேணும்
குருவான பஞ்சகண தீர்சைவேணும்
சாருவது பெரியோரைச் சாரவேணும்
சுதாபோத மார்க்கமதில் நிற்கவேணும்
நேருவது சுழினைநடு மூலந்தன்னில்
நின்றுசிவ யோகமதை நீதான்பாரே. (200)

பாரப்பா பொதிகையின்மேல் சென்றுநீயும்
பத்திகொண்டு தலைமலையைக் கண்டுபார்த்து
நேரப்பா நின்றநிலை பதியாய்ப்பார்த்து
நேர்மையுடன் சிவயோகஞ் செய்தாயாகில்
நீரப்பா பெருகிரசம் துஞ்சிநிற்கும்
நேர்மையுட னந்தரச மெடுத்துமைந்தா
காரப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
கருணையுடன் பணவிடைதான் கொண்டுதேறே. (201)

தேறுவதால் காயசித்தி யோகசித்தி
தீர்க்கமுள்ள தேவிசித்தி மவுனசித்தி
கூறினதோர் மந்திரங்கள் மாரணங்கள்
கூர்மையுள்ள அஷ்டகர்மம் சித்தியாகும்
நேறுவதால் சகலசித்துங் கைக்குள்ளாகும்
நீமகனே சத்திசிவ பூசைபண்ணி
மாறுவித மறிந்துகொண்டு வாசிபூட்டி
வாசிநடுப் புருவமதில் மகிழ்ந்துநில்லே. (202)

நில்லடா அந்தநிலை அந்தந்தன்னில்
நிசமான கற்பூர தீபந்தன்னில்
செல்லடா வாசிகொண்டு வெளிமேற்சென்று
தீபமென்ற சுடர்தனிலே வாசிபூட்டி
கொள்ளடா ரேசகபூ ரகமும்பண்ணி
கூர்மையுடன் கும்பகத்தில் நின்றுபார்த்தால்
அல்லடா சொல்லுகிறேன் வாசியூடே
அந்தவொளி யிணங்குவதை அறிந்துபாரே. (203)

அறிந்துபா ரவ்வாசி யதியாய்நிற்கும்
ஆதியென்ற தீபவொளி ரவியாய்நிற்கும்
வருந்திநின்ற ஒன்றான காலந்தன்னில்
வாசியென்ற தேசமடா அம்மாவாசி
விரிந்துநின்ற வாசிதனைக் கண்டபோது
மேலான சிவந்தனக்கு உயிருமாச்சு
பொருந்திநின்ற சத்திசிவ மொன்றாய்க்கண்டால்
புத்தியுள்ள வாலையவள் சித்தியாமே. (204)

நம்பிமலை அதிசயம்.

ஆமென்ற கள்ளர்பத்து நாட்டிலேதான்
அழகான நம்பிமலை யடிவாரத்தில்
ஓமென்ற அருவியுட னாலபாயும்
ஒடுக்கமென்ற சுனையுமுண்டு அதுக்குங்கீழே
தாமென்ற கல்குகைதா னுண்டுபாரு
சதிரான குகையடுத்துப் பரணியுண்டு
நாமென்ற தப்பரணி மேலதாக
நல்லதங்க மெழுகுமுண்டு நயந்துபாரே. (205)

நயந்துபார் யேமமென்ற மெழுகுதன்னை
நாதாந்த சற்குருவா லெடுத்துமைந்தா
சுயஞ்சோதி யானமனோன் மணிதானென்று
துகளறுத்து மனதுருமை யாகநீயுஞ்
செயம்பெறவே பணவிடைகால் கொண்டாயானால்
சித்தியுடன் யுகாந்தவரை யிருந்துபாரு
பயந்துமனங் கொள்ளாட்டால் பலனேதுண்டு
பத்தியுடன் சத்திசிவ பூசைபண்ணே. (206)

பூசையென்ன சிவபூசை சத்திபூசை
பூரணமாய் வாலையுட பூசைமைந்தா
நேசமுடன் வாலையவள் வாசமானால்
நிசமான மவுனமடா நிலைக்கும்பாரு
வாசமுள்ள மவுனமது நிலைத்துதானால்
மகத்தான பஞ்சகணஞ் சித்தியாகும்
பாசமுள்ள ஆதார நிலைகள்தோற்றும்
பரைஞான கேசரியைப் பணிந்துகொள்ளே. (207)

குத்தால மகிமை

பணிந்துநின்ற குத்தால மகிமைகேளு
பதிவான சின்மயமாங் கெங்கைதன்னில்
தணிந்தமலைத் திட்டிலொரு குகைதானுண்டு
சதானந்த ரதிலிருந்து தவமேசெய்து
கனிந்தமனக் கனிவதனால் வேதைபார்த்து
கனகமென்ற பானமது வெகுவாய்ச்செய்து
துணிந்துவருஞ் சிவயோகி சித்தர்க்கென்று
துருவமுள்ள கெங்கையிலே வைத்திட்டாரே. (208)

வைத்திட்ட பானமதை யெடுக்கவென்றால்
வகையொன்று சொல்லுகிறே மகிழ்ந்துகேளு
மெய்த்திட்ட மாகநீ வாசிபூட்டி
மேலான கும்பகத்தி லிருந்துகொண்டு
மைத்திட்ட மானநிமை யாடாமல்தான்
மார்க்கமுடன் பார்க்கையிலே மைந்தாகேளு
செய்திட்ட பானமெல்லாங் கண்ணில்தோன்றும்
சிவசிவா முக்குளித்து எடுத்திடாயே. (209)

எடுத்திடவே மலைப்பாக இருக்கவேண்டாம்
என்மகனே ஆழமது புருஷபாகம்
தொடுத்துமிகக் கீழிறங்கி எடுத்துக்கொண்டு
சுந்தரம்போல் சிவயோகஞ் சுகமாய்ச்செய்து
அடுத்தமொரு ஆதார மூலாதாரம்
ஆதாரப் போக்கைமிக அறிந்துகொண்டு
நடுத்தரமாய் நின்றுசிவ யோகஞ்செய்து
நாதாந்த சின்மயத்தில் நாடலாமே. (210)

நாடெல்லாஞ் சுத்தினதா லொன்றுமில்லை
நாதாந்தப் பதவியிலே நின்றால்மைந்தா
தேடலாஞ் சிவயோக மகிமைதன்னை
திறமான காயாதி கற்பந்தன்னை
கூடலாங் கற்பூர தீபந்தன்னை
கூர்மையுட நின்றுகெதி கொண்டுநின்று
ஆடலா மம்பரத்தில் நின்றுஅந்த
ஆனந்தப் பெருவெளியி லாடலாமே. (211)

அஷ்டகர்ம சவுக்காரம்.

ஆடலா மஷ்டகர்ம மெட்டெட்டுக்கும்
ஆதியென்ற சவுக்கார மொன்றுகேளு
வீடெலாந் திரிந்ததினால் காணப்போமோ
வேதாந்த நாதத்தில் விந்துசேர்த்து
கூடவே சத்தியிடஞ் சமாதுவைத்து
கொடியான பொற்கொடியைப் பூசைபண்ணி
தேடவே அஞ்சுகழித் தாருந்திங்கள்
திரண்டுநின்ற நாதவிந்தைத் திறமாய்வாங்கே. (212)

வாங்கிநடுப் பூரணத்தை மைந்தாநீயும்
வரிசையுட னடிபூரம் ஒன்றாய்க்கூட்டி
பாங்குபெறக் கல்வத்தில் கய்யத்தட்டி
பழச்சாறு விட்டுநன்றாய்ப் பிசைந்துகொண்டு
தீங்கில்லாப் பீங்கான்றன் மேருக்குள்ளே
திமிரவைத்து ரவிதனிலே வைத்துப்பாரு
பூங்கமல மாதுதிரு ரவியினாலே
பூரணமுங் காரணமும் பொருந்தும்பாரே. (213)

பாரான ஐந்துருவு மொன்றாய்நின்று
பரமபதந் தன்னருளாற் காரமேறி
வீரான காரமது வெந்துநீறி
வேதாந்தப் பிண்டமதால் வந்தகாரம்
கூராத காரமடா சவுக்காரத்தை
கொண்டுநன்று யரைத்துருட்டி வட்டுப்பண்ணி
கீராமை யோட்டில்வைத்துப் புடத்தைப்போட்டால்
கடினமுள்ள சுண்ணமடா காரந்தானே. (214)

தானான பூரணமாய் வந்தசுண்ணம்
சற்குருவைத் தான்தொழுது தனதாய்நின்று
வீணான நவலோகந் தன்னில்பூசி
வேதாந்த சின்மயத்தை வேண்டிமைந்தா
நானான அகம்போக்கிப் புடத்தைப்போட்டால்
நவலோக முழுதுமடா சுண்ணமாச்சு
கோனான சுண்ணமதா லனந்தங்கோடி
குருமுறைகள் மெத்தவடா குருவைக்காரே. (215)

தன்னையறியா மூடர்.

குருவான சற்குருவால் வேதாந்தத்தை
கூர்மையுடன் கண்டுமனந் தேர்ந்துகொண்டால்
உருவான காயாதி கற்பமெல்லாம்
ஒடுக்கமென்ற நிலைதனிலே ஒடுங்கிநல்ல
திருவான வாலையுட திறமேதங்கும்
சிவசிவா மவுனமதை தீர்க்கம்பண்ணி
தருவான பூரணத்தை மனதுட்கொண்டு
தாயான சத்திசிவந் தன்னைக்காரே. (216)

தன்னைத்தா னறியாத மூடர்தானும்
சாஸ்திரத்தின் படியறிந்து தன்னைக்கார்த்து
விண்ணைத்தா னோக்கும்வகை யறியமாட்டான்
வேதாந்த பூரணத்தை விரும்பமாட்டான்
கண்ணைத்தா னறிந்துமனக் கண்ணைக்கொண்டு
காலறியாப் பாவிகளைக் கண்டாயானால்
மண்ணைத்தா னள்ளியவன் வாயில்போட்டு
மதிகதிரில் நின்றகுறி காட்டுவாயே. (217)

காட்டுவது மூலமென்ற சுழினைநந்தி
கருணையுள்ள இருதயமாங் கமலமீதில்
நாட்டமுடன் பூரணமாய் நின்றுபாரு
நற்கமல மீதிலொரு சுனைதானுண்டு
தேட்டமுட னச்சுனைநீ ரமுர்தமுண்டால்
தேகசித்தி யோகமுதல் வாதந்தங்கும்
வாட்டமென்ன மனதுபூ ரணமாய்நின்று
மகத்தான முப்பூவின் வாசங்கேளே. (218)

முப்பூ விபரம்.

வாசமுள்ள முப்பூவின் வாசங்கேளு
மார்க்கமுடன் மனதுருமை யாகநின்று
நேசமுள்ள பூரணமா மமுர்தம்வாங்கி
நெருப்பாரு மயிர்ப்பால மூன்றுங்கூட்டி
ஆசையுட னறுவகைநீர் தன்னாலாட்டி
அனலேற ரவியினிட மடங்கப்பண்ணி
பாசமது தானடங்கப் புடத்தில்வைத்தால்
பருதியனல் போலவெகு சுண்ணமாமே. (219)

ஆமென்ற சுண்ணமடா சுழினைச்சுண்ணம்
அருள்பெருகும் பூரணத்தா லானசுண்ணம்
நாமென்ற ஆணுவமே விளையுஞ்சுண்ணம்
நாதாந்த சின்மயத்தால் வந்தசுண்ணம்
வாமென்ற வாமமதக் குவிராஞ்சுண்ணம்
வாசிசிவ யோகமதுக் கானசுண்ணம்
ஓமென்ற சுண்ணமதை யார்தான்காண்பார்
உலகத்தோ ரறியாமல் மாண்டார்பாரே. (220)

மாண்டவகை யென்னவென் றெண்ணிப்பார்க்க
மதிநிறைந்த பூரணத்தை மதியாமற்றான்
பூண்டதொரு வாசியினால் யோகம்பார்க்க
போக்குவரத் தறியாமற் பொன்றினார்கள்
ஆண்டவனை ரருள்பெருக வாலைபூசை
அறியாமல் மாண்டவர்கள் கோடாகோடி
காண்டமென்ற கமண்டலநீர் பூரணத்தினாலே
கற்பூர வாசமென்ற வாசிபாரே. (221)

கற்பூரச் சுண்ணம்.

பாரப்பா யின்னமொரு சுண்ணங்கேளு
பரமான கற்பூரக் கட்டிவாங்கி
நீரப்பா நிறைந்தகும்பக் குடநீர்தன்னில்
நிர்மலமாங் கற்பூரக் கட்டிதன்னை
வீரப்பா தானடங்க அந்நீர்தன்னில்
வீரடங்கத் தானதுவைத்து அனலிற்காய்ச்சு
நேரப்பா பத்துவிசை காய்ச்சித்தோய்த்தால்
சிவசிவா நிர்மலந்தான் திறக்குந்தானே. (222)

தானேதான் தானவனாய்த் திறந்துநின்ற
தாயான ரவியினுட பிள்ளைதன்னை
பூணேநீ அடிமுடியும் ஒன்றாய்ச்சேர்த்து
பூரணத்தின் பாகமதாய் வட்டுப்பண்ணி
வீணேநீ திரியாதே புடத்தைப்போடு
விருதுபெற்ற சுண்ணமா யிருக்கும்பாரு
கோணான சுண்ணமதை வைத்துக்கொண்டு
கூசாமல் கற்பமதைக் கொண்டுதேறே. (223)

தேறும்வகை சொல்லுகிறேன் கருவைக்கேளு
சிவசிவா சவுக்கார வேதாந்தத்தை
கூறும்வித மென்னவென்று மலைக்கவேண்டாம்
குருவருளால் பூரணமாய் வந்தசத்தம்
சாருகிற சத்தமடா அடங்குகின்ற
சாயுச்ய பதவியுட மூலம்வாங்கி
வேறுகூறுகிமண் விண்ணோடொக்க
வேதாந்த பூரணமாய்ச் சமாதுவைவயே. (224)

வையடா சமாதியொரு மூலந்தன்னில்
வைத்தசவுச் சாரமதில் அனலுமேறி
மெய்யடா மூன்றுமொன்று யுப்பாய்நிற்கும்
வேதாந்த முப்பூவை வாங்கிமைந்தா
கய்யடா தவறுமல் பழச்சார்விட்டு
கருவான வீரமொடு காரங்கூட்டி
செய்யடா சாரமொடு சித்தோரண்டம்
சிவசிவா சரியிடையாய்ச் சேர்த்துப்பாரே. (225)

சேர்த்துநீ பார்த்திடவே நவமூலந்தான்
சேர்ந்துஒன்றாய்த் திரண்டுசவுக் காரமாச்சு
போத்துகின்ற காரம்நவச் சாரமாச்சு
பொருளான சாரமதில் காரமே
கார்த்துநன்றாய் ரவியினிடம் வைத்துப்பார்த்தால்
கருணையுள்ள காரமடா அதிககாரம்
பார்த்துநீ மண்டலமூன் றுனபோது
பக்குவத்தை யென்னசொல்வேன் பணிந்துபாரே. (226)

பணிந்திருந்த சமாதுசவுக் காரந்தன்னை
பரைஞான கேசரியைப் பூசைபண்ணி
கனிந்ததொரு காரமதை யெடுத்துப்பாரு
கடுங்கார மானசவுக் காரமாகும்
அணிந்ததொரு சாரமதை மேருக்கேத்தி
அருள்பெருகுங் குருவெனவே பணிந்துபோற்றி
துணிந்துமனக் கசடகற்றி அறிவினூடே
துலங்குகின்ற பூரணத்தைத் தொழுதுபோற்றே. (227)

பூரண மெழுகு

போற்றுவதுக் கின்னமொரு காரங்கேளு
பூரணமாய்ப் பூரணத்தைப் போதவாங்கி
பார்த்திபனே அதுக்குநிகர் காரம்பூரம்
பதிவான நவச்சாரஞ் சீனக்காரம்
வேற்றுமையில் லாதசத்தி உப்போடொக்க
விபரமுட னறுவகையு மொன்றாய்க்கூட்டி
பூத்தமலர் வாசனைபோல் சித்தோரண்டம்
பூரணமாய் நின்றகரு தன்னாலாட்டே (228)

ஆட்டிநன்றாய் மடிந்தபின்பு மைந்தாகேளு
அனலேர ரவியினிடம் அமத்திவைத்து
தாட்டிகமாய் நீர்வத்திக் காய்ந்துதானால்
சச்சுதா நந்தமென்ற மெழுகுமாகும்
நாட்டியந்த மெழுகெடுத்து வாலைதன்னை
நயந்துரசம் வாங்கிமெழு கதனிற்சேர்த்து
சூட்டிநன்றாய்ப் பிசைந்துருட்டி அனலில்வைக்க
சூடேறி அமுர்தரச மெழுகுமாமே (229)

ஆமெனவே மெழுகெடுத்து மேருக்கேத்தி
ஆதிசதா நந்திபத மன்பாய்க்கொண்டு
ஓமெனவே ரேஷகத்தால் பூரகமேபண்ணு
ஒருமனதாய்க் கும்பகத்தி லுறுதிபண்ணி
தாமதமு ராசதமு விட்டுநீங்கி
சாத்துவித குணத்துடனே சார்ந்துகொண்டு
வாபவளர் பூரணமே யென்றுபோற்று
வணக்கமுடன் பணவிடைதா னெடுத்துக்கொள்ளே. (230)

எடுத்துமனப் பூரணமாய்க் கொண்டுநீயும்
இன்பமுடன் மூலமதில் வாசிபூட்டி
அடுத்தமனை சுழினைநந்திக் கரிவித்தேதான்
ஆதியென்ற கற்பூர தீபந்தன்னை
தொடுத்தந்த அகண்டவெளி தன்னில்நின்று
சுகமாகச் சிவயோகஞ் செய்துமைந்தா
நடுத்தரமாய் நின்றமணி பூரவீட்டில்
நந்திவளர் செந்தீயை நாடிப்பாரே (231)

நாடிப்பார்த் தறியவென்றால் திறமோயில்லை
நரசென்மம் நீர்க்குமிழி யானதேகம்
தேடிப்பா ரித்தேகந் தேவரூபம்
சிவசிவா கடைகெட்ட சென்மஞ்சென்மம்
வாடிப்போய் மதிவாழ்ந்து ரவியுந்தேய்ந்து
மண்ணோடே மண்ணாக மறைந்தேபோகும்
ஆடிப்போய் மறைந்தாலு மறிவினோடே
அகண்டவெளி தனிலிருப்ப தருமைகாணே. (232)

அருமையென வறிந்துமன தரிமையாக
அந்தறிவு பூரணமா யருளைக்காண
உருமையுட னருட்குருவைத் தேடிப்பார்த்து
உண்மையுட னக்குருவைக் கண்டாயானால்
திருவான தசைதீச்சை வைத்துநல்ல
சிவசத்தி பூசையுட திறமுஞ்சொல்லி
தருவான கற்பகமு மமுர்தமீய்ந்து
தானவனாய் நின்றநிலை தனதென்பாரே. (233)

சிவத்தின்பேர்

தனதாகச் சிவமகிமை தன்னைக்கேளு
தானவனாய் நின்றபொருள் அகாரமாகும்
மனதாக நின்றதொரு மதியாம்விந்து
மருவிநின்ற சாரமென்றும் அமுர்தமென்றும்
கனமாக ஊசிநீர் செயநீரென்றும்
கருவான உதகநீர் தண்ணீரென்றும்
குணமாக இன்னம்வெகு பேர்களுண்டுங்
குறித்தசிவம் அகாரமதைக் கொண்டுதேறே. (234)

சத்திமகிமை

தேறுவது மூலமதில் மனதைநாட்டி
சின்மயமாஞ் சற்குருவைத் தியானம்பண்ணி
மாறுவித மறிந்துசிவ யோகஞ்செய்தால்
மகத்தான மாய்கையெல்லா மாண்டுபோகும்
கூறினதோர் மந்திரமுங் குறியுஞ்சித்தி
குருவான போதமதுக் குயிருமாகும்
வேறுவித மொன்றுமில்லை முதலாந்தீட்சை
மெஞ்ஞான தீட்சையடா அகாரமாமே. (235)

சத்தியின்பெயர்

ஆமென்ற சிவமகிமை அதிகஞ்சொன்னேம்
அரகரா சத்தியுட பேரைக்கேளு
ஓமென்ற தீச்சையடா அதிதீச்சை
ஒடுங்காத மனேன்மணியென் றதர்க்குப்பேரு
தாமென்ற நாதமடா சத்தியுப்பு
தயங்காத கரிசலென்றுங் காரமென்றும்
நாமென்ற கெந்தமென்றும் மண்தானென்றும்
நாட்டமுட னின்னம்வெகு பேருண்டாமே. (236)

உண்டான சத்தியடா பெருமைக்காரி
ஒடுங்காத வாசமுள்ள ஓமசத்தி
கண்டாலோ மனம்பதருங் கைகால்கூசும்
கம்புடைய மங்கையடா யேகரூபி
வண்டணிசேர் மாதங்கி தன்னைத்தானே
மனதுரிமை யாகவேநீ பூசைசெய்தால்
சண்டாள தத்துவங்கள் தானேபோகும்
தானவளாய் நின்றகுறி காட்டுந்தானே. (237)

தானான சத்தியுட வலுமைசொன்னேன்
சதாநந்தி யானதொரு வாலைகேளு
ஊனான வாலையடா மவுனரூபி
ஓங்காரி ரீங்காரி உரிமைப்பிள்ளை
தேனான திருவென்றும் செந்தியென்றும்
தீட்டான தீட்டருக்குஞ் செல்வியென்றும்
கோனான காலென்றும் நன்மையென்றும்
கூர்மையுள்ள வேதாந்தி யென்றும்பேரே. (238)

பேர்பெரிய அமுர்தமென்றுஞ் செந்தேனென்றும்
பெருமைகொண்ட விசமியென்றும் பேச்சியென்றும்
சீர்பெரிய திருவென்றும் திருநீரென்றும்
திறமான செந்தூரத் திலதமென்றும்
நேர்குறியாய் நின்றகருச் செயநீரென்றும்
நிசமான திருநாம மெத்தஉண்டு
ஆரமித்து அவள்பதத்தைப் பூசைபண்ண
அரிதரிது கோடியிலே ஒருவன்றானே. (239)

ஒருவனவ னவன்றனே ஒருவனாகி
ஒடுக்கமென்ற நிலையறிந்து உறுதிபெற்று
அருபமென்ற மணிவாசற் குள்ளேபுக்கி
ஆதியந்த நடுவணையி னருகேசென்று
துருவமென்ற அத்துருவங் கிரியிற்சென்று
சோதியென்ற தீபவொளி வெளியிலேகி
பருவமுட னின்றுகெதி கொண்டுநல்ல
பங்கயத்தின் பூரணத்தைப் பதிவாய்க்கொண்டே. (240)

கொண்டுமனங் கண்டுறுதி கொள்ளவேணும்
குருவான பெரியோரை வணங்கவேணும்
நின்றுகெதி கொண்டுஅந்தம் நிலைக்கவேணும்
நிலையான நிலையறிந்து வாசிபூட்டி
மன்றில்வளர் திருநடனப் பார்க்கவேணும்
மதிகதிரில் நின்றகூறி காணவேணும்
அண்டகே சரிமாது தன்னைப்போற்றி
ஆதிசிவ சத்திபத மறிந்துகொள்ளே. (241)

பூரணத்தின் பெயர்

அறிந்தமட்டுந் தெரிந்துரைத்தேன் வாலைதன்னை
ஆதியென்ற பூரணத்தி னருளைக்கேளு
வரிந்துமனங் குவிந்துசிவ யோகஞ்செய்யும்
வரிசையுள்ள பூரணமாம் வழலையென்றும்
விரிந்தமதி ரவியான சுழினையென்றும்
வேதாந்த நவநீத வெண்ணையென்றும்
மறைந்துமதி குறைந்துவளர் போதமென்றும்
மணிநாதஞ் சொலிக்குகின்ற மாடந்தானே (242)

தானான மாடமென்றுங் கூடமென்றும்
தருவான அண்டகே சரிதானென்றும்
கோனான கொடுமுடியாம் பொதிகையென்றும்
குருவான பீடமென்றுங் குருக்களென்றும்
தேனான சோதியென்றுந் தீபமென்றும்
தெவிட்டாத அமுர்தரச வர்க்கமென்றும்
காணாத கமலமதாய் நின்றபோதம்
கமலமலர்த் தமுர்தபூ ரணந்தான்பாரே. (243)

பூரணத்தின் மகிமை

பூரணமாய் நின்றகுரு பிரமந்தன்னைப்
புத்திகொண்டு சத்திசிவ பூசைபண்ணி
காரணமாய் நின்றதொரு வாலைபூசை
கருவேற உருவேறக் கருணைபூண்டு
மாரணமா யுருவேறிச் சித்தியானால்
மகத்தான பூரணத்தில் மனதைநாட்டி
சீரணமாய் நின்றசெடந் திறக்கவேண்டி
சிவசிவா பூரணத்தைத் தினமுங்கொள்ளே. (244)

கொள்ளுவது பூரணத்தை வாங்கிமைந்தா
குருவான பிரமத்தைக் குணமாய்ப்போற்றி
நல்லுரவாய் பணைவிடைகால் கொண்டுதேர்ந்தால்
நரசென்ம மல்லவடா தேவரூபம்
உள்ளுணர்வாய் நின்றகலை வாசிபாரு
ஒடுக்கமென்ற நிலைதனிலே ஒடுங்கிநின்று
தள்ளுவது என்னவென்றால் மைந்தாகேளு
தனித்தபுளி எள்ளுடனே தள்ளுதள்ளே. (245)

தள்ளும் பொருள்

தள்ளடா தாம்பூல மீனிறைச்சி
சத்துருவாய் நின்றதெல்லாந் தள்ளவேணும்
அள்ளடா சொல்லுகிற புத்திகேளு
அருமையுடன் கற்பவகை கொள்ளும்போது
கொள்ளடா பாலுடனே அமுர்தரசவர்க்கம்
கொண்டுமன துரிமையினால் குருவைப்போற்றி
நில்லடா சுழினையென்ற கமலவீட்டில்
நிரைஞ்சனமாய் நின்றதொரு தீபம்பாரே. (246)

தீபமென்ற ஒளியில்நின்று வெளியிலேறி
செங்கமலத் தமுர்தரசத் தேனைவாங்கி
தாபமென்ற தாகபது தெளியவேதான்
தன்னமுர்தங் கொண்டுநிலை தன்னைக்கண்டால்
கோபமென்ற கொடும்பிணிகள் வெந்துபோகும்
கூத்துவனு மாண்டிடுவான் குறியைப்பாரு
சாபமென்ற சூழ்வினைக ளத்துப்போகும்
சத்திசிவ பூசையைநீ மறந்திடாதே. (247)

மறவாத நெறிபெற்ற சற்குருவைக்காத்து
மந்திரபஞ் சாட்சரத்தின் மகிமையாலே
திறமான சடாச்சரத்தின் பெருமைகேளு
சிவசிவா ஆதியென்று மனுதியென்றும்
உறவான பிரமமென்றும் பிண்டமென்றும்
உத்தசிவ சத்தியென்றும் உலகமென்றும்
பறமான தேசியென்றும் வாசியென்றும்
பக்திகொண்ட அண்டகே சரிதானென்னே. (248)

பிண்டத்தின் விபரம்

என்னவே யின்னம்வெகு பேர்களுண்டு
என்மகனே புத்தியினு லறிந்துகொண்டு
சொன்னதொரு கருமானப் பொருள்தானென்ன
சொல்லறிந்து சொல்லுகிறேன் பிண்டம்பிண்டம்
மன்னவனே பிண்டமென்றால் மலைக்கவேண்டாம்
மந்திரகலை வாலைமலர் பூக்குங்காலம்
முன்னமே அக்கால மறிந்துமைந்தா
முத்திகொண்ட நாதமதில் விந்தைப்பாச்சே. (249)

விந்துநிலை யறிந்துவிந்து பாயுங்காலம்
வேதாந்த நாதத்துக் குயிருமாகும்
சேர்ந்தமுடன் திரண்டுருண்டு மணியுமாகிச்
சோதிமதி யானதுவும் பிறையுமாகி
வந்தமதி பிறையதுவும் வட்டமாகி
வட்டமது திரண்டுருவாய் மண்ணுமாகி
அந்தமுள்ள மண்ணுகளி யுப்பாய்நின்று
ஆதியந்தப் பொருளான பிண்டமாச்சே. (250)

ஆச்சென்ற பிண்டமடா உப்புஉப்பு
அடங்கிஉருத் திரண்டஉப்பு அப்புனாலே
பேச்சென்ற சத்தமடா அடங்கிப்போச்சு
பிரணவமாய் நின்றபொருள் மவுனமாச்சு
மூச்சென்ற கலைக்ஞான முடிவுமாச்சு
முடிந்தகலைக் யானமதை யென்னசொல்வேன்
நீச்சென்ற வாசிசிவ யோகஞ்செய்யும்
நிசமான சுத்தசவுக் காரமாச்சே. (251)

காரமென்ற காரமதில் ரவிதான்சேர்ந்தால்
காயாதி கற்பமெனச் சொல்லலாகும்
வீரமென்றும் விஞ்சையென்றும் மதற்குப்பேரு
வேதாந்த பூரணமென் றிதற்குப்பேரு
பூரமென்ற கற்பூர தீபமென்றும்
பூமிவளர் நாதமென்றும் பெண்தானென்றும்
சாரமென்ற கற்பகமாம் விருச்சமென்றும்
சார்வான காமதே னென்றும்பேரே. (252)

பேரான காமரச பற்பமாகி
பெருமைகொண்ட பற்மதை மைந்தாகேளும்
நேரான கலைபறிந்து வாசிபூட்டி
ரேசகமாம் பூரகமே செய்துகொண்டு
சீரான கும்பகத்தில் மனதுவைத்து
சிவசிவா காயாதி கற்பம்வாங்கி
மாராம லந்திசந்தி பணவிடைகால்கொண்டால்
மார்க்கமுள்ள வஷ்துவடா பிண்டந்தானே. (253)

பிண்டமதாய் நின்றகுரு நாதந்தன்னைப்
பெருமையதாய் மண்டலமே கொண்டுதேர்ந்தால்
அண்டகே சரிமாது தானாய்நின்று
ஆனந்த போதமதி னருளைக்காட்டும்
எண்டிசையுஞ் சென்றுவினை யாடநல்ல
என்மகனே கெவுனமதுக் குறுதியாகும்
கண்டதொரு கண்காச்சி மகிமையாலே
காரியமாய்த் தூரதிஷ்டி கருதலாமே. (254)

கருதலா மூலமுத லாறுதாரம்
காலடங்கு மேமூல வன்னிவிட்டில்
மருவலா மனதுகந்து வாசிபூட்டி
வாசமுள்ள கற்பூர தீபந்தன்னில்
அருபமாய் நின்றஒளி வெளியிலேகி
ஆனந்த மதியமுர்த மனுப்போற்கொண்டால்
துருவமென்ற புருவமையக் கமலவீட்டில்
துன்பமற்று என்னாளும் வாழலாமே. (255)

வாழ்வதற்கு ஒன்றமுத லைந்துஞ்சொன்னேன்
வரிசையுள்ள பஞ்சகண தீச்சையாச்சு
ஆழ்வதற்கு அஞ்சுநிலை பஞ்சபூதம்
அறிந்துமனங் கொண்டவனே யவனேசித்தன்
கால்வலுக்கும் மேல்வலுக்குங் கமலக்கண்ணு
கண்துலங்கும் விண்துலங்குங் காட்சிகாணும்
தாழ்வதற்குக் காலறிந்து மேலேநின்றால்
தன்மையுள்ள கெவுனமணி தான்தானே. (256)

தானான கெவுனமணி தானாய்நின்ற
தகமையறிந் துறுதியுடன் தனதாய்க்கேளு
தேனான நாதமடா தேவிநாதம்
தேவிமனோன் மணியின்ற நாதந்தன்னில்
கோனான குருவிந்து சரியாய்ச்சேர்த்து
கும்பமென்ற கமலரசந் தன்னாலாட்டி
ஊனான நாதவிந்து ஒன்றாய்ச்சேர்த்து
ஒமுடிந்து திரண்டுஒரு மணியுமாச்சே. (257)

சூதரச மணி.

ஆச்சப்பா அம்மணிதான் சித்தியாக
ஆதியென்ற அண்டமடா ஞானியண்டம்
மூச்சடங்கிக் கட்டிமெழு காகுதற்கு
முன்சொன்ன சவுக்கார உப்புவாங்கி
பாச்சப்பா அதினுடனே காரசாரம்
பதியவைத்துக் கல்வமதில் வாய்நீர்விட்டு
மூச்சப்பா விரசுகொண்டு அரைத்துஅந்த
நிசமான அண்டமதிக் கவசம்பண்ணே. (258)

பண்ணியதோர் கவசமதை வலுக்கச்செய்து
பருதியன லேறநிதம் பதிவாய்வைத்து
கன்னிமயேஷ் பரிதனையே பூஜைபண்ணி
கருணைபெற மண்டலஞ்சென் றெடுத்தாயானால்
வன்னிநிக ரண்டமது கட்டிநல்ல
மகத்தான மெழுகாக நிற்குமைந்தா
உன்னியதோ ரம்மெழுகை மணிக்குப்பூசி
உறுதியுள்ள நிபமதில் வாட்டிப்பாரே. (259)

வாட்டிப்பார் கற்பூர தீபந்தன்னில்
மணிகெவுன சுருபமணி யாகுமைந்தா
ஆட்டிப்பார் சுருபமணி யாட்டைப்பார்க்க
ஆதியந்தங் காட்டுமடா அரூபசித்தி
பூட்டிப்பா ரந்தமணி யென்னசொல்வேன்
புதுமையுட னந்தமணி பதினாறுசெய்து
சூட்டிப்பார் பட்டுநூல் தன்னிற்கோர்த்து
சுருதியுட மந்திரத்தைச் சூட்டிப்பாரே. (260)

பாரப்பா மந்திரத்தை அறிந்துநீயும்
பத்திகொண்டு யுத்தியினா லுருவேசெய்தால்
பேரப்பா கொண்டுநின்ற அட்சரங்கள்
பிசகாமல் சித்திமுத்தி யாகும்பாரு
சாரப்பா சதாகால முருவேசெய்தால்
தானேதான் பிர்மமதாய்த் தரணிமீதில்
வீரப்பா கொண்டநோ யாளருன்னை
வேண்டினால் சகலநோய் விட்டுப்போமே. (261)

போமடா உனதுபதங் கண்டபோதே
பொல்லாத மாய்கையெல்லாம் நில்லாதய்யா
ஓமடா இன்னம்வெகு சித்தியுண்டாம்
உலகதனி லுயிர்பயிர்கள் உன்னைக்கண்டால்
ஆமடா ஆதிகுரு வென்றுசொல்லி
அடிதொழுது பணிந்திடுவா ரய்யாஉன்னை
நாமடா அவனாக அவனுமாக
நல்லபதங் கிட்டுமடா யின்னங்கேளே. (262)

இன்னங்கேள் சுருபமணி தன்னைவாங்கி
ஏகாந்த மானதிரு வாலைநாதம்
வின்னமில்லா வாலையவள் பதமேபோற்றி,
வேதாந்த நாதமதை விரும்பிவாங்கி
முன்னமே சொன்னதரு சுண்ணம்போட்டு
முக்கியமாய்ப் பார்த்திடவே தெளிந்துநல்ல
தன்னமுர்த ரசம்போலே தெளிந்துநிற்கும்
தாயான அமுர்தமதைத் தானேவாங்கே. (263)

வாங்கியந்தச் சொரூபமணி தனக்குமைந்தா
வரிசையுட னமுர்தரசத் தேனையூட்டி
தீங்கில்லா ரவிதனிலே வைத்துப்பாரு
சிவசிவா அந்தரச மணியேகொள்ளும்
பூங்கமல மாதுதிரு மகிமையாலே
புருஷமுள்ள சொரூபமணி என்னசொல்வேன்
பாங்குடைய சுரூபமணி கமலிமணியாகும்
பரமபத கமலிமணி பெருமைகேளே. (264)

கேளடா சுரூபமணி அமுர்தந்தன்னை
கிருபையுடன் கமலித்தா யாலேமைந்தா
கோளடா யில்லாத கமலிமணியாச்சு
கொள்கையுள்ள கமலிமணிப் பெருமைகேளு
வாளடா அந்தமணி தன்னைவாங்கி
வரிசையுடன் ரேஷகபூ ரகமுஞ்செய்து
காலடா விரசுகொண்டு கனிவாயூணி
கமலிமணி நாவடக்கஞ் செய்துகொள்ளே. (265)

அரூபமணி கமலிமணியின் பெருமை.

கொள்ளடா நாவடக்கஞ் செய்துகொண்டு
குருவான குருபதத்தில் வாசியூட்டி
நில்லடா சுழினைநடுக் கமலமீதில்
நீமகனே கருத்துவைத்து நின்றாயானால்
உள்ளடா வாசிநின்று உயரத்தூக்கும்
உத்தமனே அந்தரச மணியின்வேகம்
சொல்லடா சொல்லுதற்கு நாவோயில்லை
சுரூபமென்ற கமலியுட பெருமைதானே. (266)

பெருமையின்னஞ் சொல்லுகிறேன் மைந்தாகேளு
பேர்பெரிய கமலிமணி கையில்வாங்கி
உருமையுடன் செபதபங்கள் செய்துகொண்டு
உறுதியுள்ள மவுனமதில் நின்றுகொண்டால்
வருமையுள்ள நோயாளர் வந்தாரானால்
வகையறிந்து ரேஷகமே செய்துபோடு
சிருமையொடு வறுமையெல்லாஞ் சிதறிப்போகும்
சிவசிவா கமலியுட திறந்தான்பாரே. (267)

வாசிமகிமை.

திறமாக நின்றுஅந்த மனையிற்சென்று
தியான ரவிமதியுஞ் சேர்ந்தபாகம்
பரமான தேசியடா அம்மாவாகி
பத்திநின்ற திருவாசி யேகாதேசி
உறமாக நின்றதொரு யேகாதேசி
உகந்தசதுர்த் தேசியிலே உறவாய்நின்று
சரமான சாபமதாய்த் தேசியாகி
தான்வாசி கொண்டபர தேசியாமே. (268)

தேசியென்ற குதிரையடா வாசியாகி
சிவசிவா சதுரகிரி வட்டமேறி
நாசிமுனை மீதில்வளர் நாதன்தானும்
நடுவீதி சென்றுவலம் நாடும்போது
ஓசையென்ற சிலம்பொலிதா னுள்ளேவாங்கி
ஒன்றுபத்தாய் நின்றகலைக் யானதேவி
பேசியசொல் லெழுத்துவகை யென்னசொல்வேன்
பெருமையுட னெட்டுமிரண்டும் பத்தென்றாரே. (269)

பத்தென்று சொன்னசிவ சத்திபாதம்
பயபத்தி யாய்மனதில் பதிவாயெண்ணி
உத்தமொழி சுத்தமென அந்திசந்தி
உருப்படுத்தித் திருவருளை யுண்ணிக்கண்ட
சித்தமென்றன் பாக்யமடா முத்திமோச்சம்
சின்மயமாம் நின்றபொருள் தன்னைக்கேளு
சுத்தமுள்ள சுழினையடா விந்துவட்டம்
சுருதிபொரு ளானசின் மயமாம்பாரே. (270)

பாரான சின்மயமே விண்மயமாய்நின்று
பருதிமதி சுடரெனவே பருவமாகி
நேராகி நின்றதுவு மெங்குந்தானாய்
நிரஞ்சனமாய் நிர்மலமாய் நிராமனென்று
கூரான சத்தமுமாய் சுத்தமாகி
மீறினதோர் நாதமடா மவுனப்பிள்ளை
பேரான பிள்ளையடா மவுனநாதம்
பெருமையுள்ள பூரணம்நா லஞ்சாம்பாரே. (271)

சத்திமெழுகு.

அஞ்சாகி நின்றபஞ்ச லவணமப்பா
 ஆரறிந்து கரையேறி நீஞ்சிப்பார்த்து
நஞ்சாகி மண்செலமாய் நின்றஉப்பை
 நாரிமனங் குன்றாமல் நயந்துவாங்கி
துஞ்சாத பழச்சாறு முடியுங்கூட்டி
 சுத்தமுள்ள உப்பிலிதைச் சேர்த்துநன்றாய்
தஞ்சமென மனதிலெண்ணிப் பாகம்பண்ணி
 சத்தியெனு முப்பதுவுஞ் சமைந்தவாறே. (272)

சமைந்தசத்தி யானஉப்பை மைந்தாகேளு
 தன்மையுட னடிமுடியு மொன்றாய்க்கூட்டி
அமைந்தமெழு காகும்படி கல்வத்திட்டு
 அஞ்சாறு சாமவரை நன்றாயாட்டி
குமைந்தமெழு காகுபதந் தன்னைப்பார்த்து
 குருவான ஞானியண்டக் கருவைவிட்டு
நமைந்துவரும் படியாகப் பிசைந்துநல்ல
 நாதமது விட்டுரவி முகத்தில்வையே. (273)

வையப்பா மண்டலமுன் றானபின்பு
 மகத்தான சத்தியுப்பை யென்னசொல்வேன்
நெய்யப்பா துஞ்சிநின்ற அமுர்தவெண்ணை
 நேரான பூரணமாய் வந்தபோதம்
செய்யப்பா செங்கமலத் தமுர்தபோதம்
 சிவசிவா பணவிடைதான் கொள்ளும்போது
மெய்யப்பா தளறாது வச்சிரகாயம்
 வேதாந்த கற்பமடா கற்பந்தானே. (274)

தானான கற்பமடா விஞ்சைமூலம்
 சமரசமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
மானான மங்கையடா மதனரூபி
 மகத்தான சத்தியடா மார்க்கக்காரி
தேனான மொழியுடைய தேவிவாலை
 தேகமடா செண்பகப்பூ வாசமுள்ளாள்
ஊனான சுவைமாது பாகமுள்ளாள்
 உத்தமியாங் கற்புடைய மங்கைதானே. (275)

தானேதான் தானவளாய் நின்றமாது
சகலமதி யுள்ளசிவ சத்திமாது
தேனேதான் மொழியுடைய சிறுபெண்மாது
செம்மையுள்ள சுத்தமதாய் நின்றவாலை
வீணேதான் திரிந்துமதி போகாமற்தான்
வேதாந்த வாலைதனைத் தேடிப்பார்த்து
ஊணேதான் மனம்பதிய ஊணிப்பார்த்து
உருமையுட னவள்பதத்தைப் பூசைபண்ணே. (276)

பண்ணப்பா மாதுமனங் கனியவேதான்
பரமான அதிரசங்கள் பால்பழங்கள்
நண்ணப்பா அவள்மனது மெய்க்கவேதான்
நயந்துஉப சாரமது நன்றாய்ச்செய்து
முன்னப்பா நீயிருந்து பூசைபண்ணி
முறைமைநெறி தவறாமல் கார்த்துமைந்தா
விண்ணப்பா நோக்கியிருந் தமுர்தம்வாங்கி
வேதாந்த சாரமெல்லாம் மெய்யில்பூணே. (277)

வியாதி வருங்குணம்.

மெய்யான வேதாந்த சாரந்தன்னை
மேலான சற்குருவைத் தியானம்பண்ணி
அய்யனே புலத்தியனே பூசைசெய்ய
ஆதார மூலமதி லனலோமீறி
மையமென்ற சுழினையடா விந்துவிந்து
மகத்தான பிரமமென்ற கபாலந்தன்னில்
பையவே அனல்மீறிச் சூடுகொண்டு
பனிநீர்போல் சொலிக்குமடா சிரசில்தானே. (278)

தானேதா நீரேறிக் கண்ணில்தாக்கி
தணலான அக்கினிபோல் கடுப்புமீறி
ஊனான தேகமதில் சூடுகொண்டு
உறுதியுள்ள வாய்வறண்டு மலஜலங்கள்,
வீணேதான் தேகமதில் சிக்கிக்கொண்டு
மெய்புளிச்சல் கையசதி விந்துபாழாம்
தோணுமே விச்சலனம் வந்துமென்று
சுகமான கற்பமதை மறந்திடாதே. (279)

சிரசுவியாதிக்குப் பஸ்பம்.

மறந்துமதி போகாமல் மைந்தாகேளு
வாராத வியாதிகள்தான் வந்துதானால்
சிறந்தகரு அண்டமதின் தோடுவாங்கி
சிவசிவா தண்ணீரில் முப்பூசேர்த்து
பிறந்தஅண்டத் தோடதனைச் சுத்திபண்ணி
பெருமையுடன் தானெடுத்துக் கல்வத்திட்டு
பறந்துவிடுங் கெந்தகத்தைப் பத்துக்கொன்று
பாய்ச்சிநன்றாய்ச் செயநீரி லரைத்திடாயே. (280)

அரைத்துநன்றா யுருட்டியதை வட்டுப்பண்ணி
அப்பனே புடம்போட வெளுத்துநீரும்
திரத்துடனே அதையெடுத்து வைத்துக்கொண்டு
சிவசிவா அந்திசந்தி கொண்டுதேறு
வெரித்தபித்தச் சூடுடனே கபாலச்சூடு
மேலான நேத்திரத்தில் நின்றசூடு
உரத்துடனே நின்றதொரு வாய்வெல்லாந்தான்
ஓமுடிந்து போகுமடா உண்மைபாரே. (281)

சிரசுமுதல் சகலநோய்க்கும் தலைமுழுக நெய்.

உண்மையுட னின்னமொரு சாந்தங்கேளு
உறுதியுள்ள பசுவிநெய் படிதானென்று
நன்மையுள்ள வால்மிளகு பலந்தான்ரெண்டு
நடுவான நீரதனை லாட்டிக்கொண்டு
தன்மைபெற அந்நீரா லரைத்துநன்றாய்
தான்பசுவி நெய்யோடே சேர்த்துமைந்தா
உண்மையுட னடுப்பேற்றிப் பதத்தில்மைந்தா
உறுதியாய் நெய்யதனை வடித்துக்கொள்ளே. (282)

வடித்துமிக வைத்துநன்றாய் வாரந்தோறும்
வரிசையுடன் முழுகிவரக் குணத்தைக்கேளு
யிடித்துவருங் கால்கைவலி நயனச்சூடு
இருமலொடு வாய்வுகளு மெடுபட்டோடும்
அடுத்ததொரு நெஞ்செரிவு அகன்றுபோகும்
அண்டமெனும் பஸ்பத்தா லகன்றுதய்யா
தொடுத்ததொரு தயிலமொடு பஸ்பம்பண்ணி
சகமான வாலையைநீ பூசைபண்ணே. (283)

பண்ணப்பா வாலைபதம் பூசைபண்ணி
பரமான கேசரியை மனதுட்கொண்டு
விண்ணப்பா தானேருக்கித் தவமேசெய்து
விருதுபெற்ற செயநீர்தா னென்றுகேளு
நன்னப்பா ஊர்வலையஞ் சென்றுவந்து
நடுவான தாவடியாங் கொடியைப்பத்தி
முன்னப்பா நின்றநிலை கொடியுங்கட்டி
முத்திபெற வீரமொடு பூரம்வாங்கே. (284)

வீரமொடு பூரமது ரெண்டுங்கூட்டி
விரிவான கொடிக்கிரா லொன்றுசேர்த்து
பேர்பெறவே சமாதுவைத்து மண்டலமேசென்றால்
பிரியமுடன் மூன்றுமொன்று யடியில்சேர்த்து
நேருகூ றுகவொரு பீங்கான்தன்னில்
நீவைத்து வாய்மூடி நிலத்தில்மைந்தா
காரமுள்ள நீராகிப் பெருகிநிற்கும்
கருவான செயநீரைப் பதனம்பண்ணே. (285)

பதனமதாய்க் குப்பிதனி லடைத்துமைந்தா
பத்தியுடன் சற்குருவின் பாதம்போற்றி
விதனமதைத் தானிறுத்தி அந்தநீரில்
வேதாந்த சவுக்காரக் குருவில்மைந்தா
பதனமதாய்ப் பணவிடைகா லெடுத்துப்போட்டு
பக்குவமாய் மண்டலமே கொண்டாயானல்
நிதமாக சகலவியா தியுமேநீங்கி
நின்தேகஞ் சித்தியடா நிசந்தான்பாரே. (286)

செயநீர்.

நிசமாக ஒருண்டு கொடியைவாங்கி
நீமகனே புத்தியினல் செய்துபாரு
வசமான அண்டமொடு வீரம்பூரம்
மகத்தான காரமுடன் சரியாய்ச்சேர்த்து
நிசமான அண்டநீர் தன்னலாட்டி
திறமாக ஆட்டியதை வட்டுப்பண்ணி
கசகாமல் மண்சீலை வலுவாய்ச்செய்து
கருத்துறவே புடம்போடச் சுண்ணமாமே (287)

ஆமென்ற சுண்ணமதில் பத்துக்கொன்று
அருள்பெருகுஞ் செயநீரில் ஒன்றுசேர்த்து
நாமென்ற ஆணுவத்தால் பொடியைப்பண்ணி
நலமான பீங்கானில் வைத்துப்பாரு
தாமென்ற சாரமதால் நீரதாச்சு
தடையில்லா நீரதனை வடித்துமைந்தா
ஓமெனவே குப்பிதனில் பதனம்பண்ணி
உண்மையென்ற சரக்குகளில் சுருக்குத்தாக்கே. (288)

சுருக்கறிந்து சுருக்கிடவே சரக்கெல்லாந்தான்
சுகமாகக் கட்டுமடா சுருதிமூலம்
கருக்கண்டு செய்தவனே அவனேசித்தன்
கருணையுடன் மூலமதில் கருத்தைவைத்து
உருக்கண்டு வேதைமுகந் தன்னைப்பாரு
உறுதியுள்ள பூரண நூல் தன்னைப்பாரு
பெருக்கமுடன் பூரண நூல் தன்னைக்கார்க்கப்
பெருமையினால் தயிலமொன்று பேசுவேனே. (289)

தயிலம்.

பேசவொண்ணு மவுனியடா சிறுபெண்வாலை
பின்னறியாள் முன்னறியாள் பிராணநாதம்
பாசமது தான்விலகும் பறைநாதந்தான்
பசுவையென்ற கரும்பசுவை சுத்தவெள்ளை
தேசமெல்லாஞ் சுத்தினதால் காணப்போமோ
சிக்குவது வெகுகடினஞ் சிக்கிக்கொண்டால்
நேசமுட னதுக்குநிகர் காரசாரம்
நிசமான வீரமொடு பூரங்கூட்டே. (290)

கூட்டுவது சத்திசிவ மதனப்பூடு
கூர்மையுள்ள பூடுநிகர் சத்திசேர்த்து
நாட்டுவது சரக்குவகை பத்துக்கொன்று
நயமாகத் தானிடித்துப் பாண்டத்திட்டு
ஆட்டமுடன் வாய்மூடித் தமர்தான் செய்து
ஆனகுழித் தயிலமதை யன்பாய்வாங்கி
தேட்டுடனே வாங்கியதோர் தயிலந்தன்னை
சிக்கெனவே குப்பிதனில் வைத்துப்போற்றே. (291)

போற்றுவது பூரணநூல் தன்னைமைந்தா
புத்தியுடன் தானெடுத்துப் பூசைபண்ணி
பார்த்துமன துறுதியினா லாதியந்தம்
பத்திகொண்டு புத்தியினால் பார்த்துநீயும்
காத்துமனக் கண்ணாலே விண்ணைநோக்கி
கமலமென்ற சுழினையிலே கருத்தைவைத்து
பூத்தமலர் வாசனைபோல் வாசிபூட்டி
பூரணமாய்க் கற்பூர தீபம்பாரே. (292)

தீபமென்ற சிவஞானக் கொழுந்திலந்த
திருவான தயிலமதில் நினைந்தாநீயும்
தாபமென்ற பசிதீரத் தன்னைப்பார்த்து
தயிலமதைப் பணவிடைதான் கொண்டாயானால்
கோபமென்ற கொடுமைகள்தான் வெந்துபோகும்
குருவான மூப்பூவில் கொண்டாயானால்
சாபமென்ற சஞ்சலங்கள் தானேபோகும்
சாயுச்ச மோச்சகெதி தருந்தானே. (293)

பரகெதியறிய.

தானான மோச்சகெதிக் கென்னவென்றால்
தரணிதனி லவரவர்செய் தர்மத்தாலே
நானான அகம்போக்கித் தானேதானாய்
நடுவான பூரணத்தால் வாழ்ந்துகொண்டு
தேனான மதியமுர்தங் கொண்டுமைந்தா
சிவசற்ப காலவரை யிருந்தாலுந்தான்
ஊனான தேகமொரு காலந்தன்னில்
ஒடுங்குவது உறுதியடா உண்மைதானே. (294)

உண்மையுட னொடுங்கும்வகை தன்னைக்கேளு
ஒமுடிந்து நின்றகுரு புறைக்கப்போமோ
தண்மையுடன் மூலமதில் நின்றநீயும்
சதாசிவமாய் நின்றதொரு வாய்வுங்கூடி
சின்மயமாய்ப் பூரணத்தில் சென்றுநீயும்
சிம்மெனவே யடங்கினபின் தெளிவில்லாமல்
நன்மையென்ற வழியறிந்து ஒடுங்கிடாமல்
நயந்தபடி ஒடுங்கியவர் நசித்திட்டாரே. (295)

நசித்திட்ட வகையென்ன வென்றுகேட்டால்
நலமான பிருதிவியு மப்புஞ்சேர்ந்து
பசித்திட்ட அக்கினியும் வாய்வுங்கூடி
படர்ந்தஉப்பு தண்ணீரை மதியாமல்தான்
கசிந்திட்ட கனிவாலே வாய்வுந்தீயும்
கர்மவினைக் கீடாகச் சம்பவிக்கும்
பசித்திட்ட தீவினையா லப்புஉப்பும்
பரகெதியை யறியாமல் பாழாய்ப்போச்சே. (296)

பாழாகிப் போகாம லறிவோடேதான்
பரகெதியைச் சேர்வதற்குப் பாகங்கேளு
நாளான நாளறிந்து மைந்தாநீயும்
நன்மைபெற ஓட்டியான பெந்தம்பண்ணி
தாளான யீஷான முகூர்த்தங்கொண்டு
தன்மையுடன் பிராணாயஞ் செய்துமைந்தா
காலான வாசியையரே சகமேசெய்து
கருணையுள்ள பூரகமாய்க் கண்டுகொள்ளே. (297)

கண்டுகொண்டு நின்றநிலை கும்பகமேயாச்சு
கருணையுள்ள சுழினையடா விந்துவட்டம்
பண்டுளதாய் நின்றதொரு விந்துக்கப்பால்
பரைஞான தீபவெளி தன்னில்நின்று
மண்டலமுன் றென்றன முப்பாழுக்கப்பால்
மகத்தான பெருவெளியில் மைந்தாநீயும்
சென்றுஅந்த வெளியோடே வெளியாய்நின்று
சிவசிவா பரவெளியில் சேர்ந்துபோமே. (298)

போமடா வெளியோடே வெளிதான்சேரும்
புதுமையடா வாய்வோடே வாய்வுசேரும்
ஓமடா தீயோடே தீதான்சேரும்
உத்தமனே அப்போடே அப்புசேரும்
ஆமடா மண்ணுடனே மண்தான்சேரும்
அவரவர்க ளினத்துடனே அவர்கள்சேர்ந்து
சாமடா தன்னிலையி லறிவைப்புக்கி
சதானந்த பூரணமா யிருந்துவாழே. (299)

குருலிங்கம்.

இருந்தறிவு சுழினையிலே புக்கித்தானால்
ஏகாந்த மானகுரு லிங்கமாகும்
அருந்தவஞ்சே ரந்தறிவு அறிவிற்சேர்ந்தால்
அரகரா சத்திசிவ மானதெய்வம்
புரிந்தறிவு மதிதனிலே சேர்ந்துநின்றால்
புத்தியில்லாப் பிறவியிலே புகுவான்பாரே
வருந்திமனக் கனிவாலே குருவைக்கார்த்து
மதிகதிரில் நின்றுகுறி வணங்கிப்பாரே. (300)

வணக்கமில்லா மூடர்களை மதிக்கவேண்டாம்
மனம்நிலையாப் பாவிகளை வணங்கவேண்டாம்
இணக்கமுடன் சத்திசிவ பூசைபண்ணி
இருசுடரின் முனையறிந்து இருத்திக்கொண்டு
மணக்குமலர் வாசனைபோல் வாசிகொண்டு
வாசிவரி வென்றுபூ ரணத்தைநோக்கி
தனக்குவழி தானறிந்து தன்னைப்பார்த்து
தானவனாய் நின்றநிலை தன்னைக்காரே. (301)

தானவனாய் நின்றசிவ பூசைசெய்ய
சராசரங்கள் முழுதுமடா வசியமாகும்
தானவனாய் சத்தியுட பூசைசெய்தால்
தன்வசமா யஞ்சனா தேவிநிற்பாள்
தானவனாய் வாலையுட பூசைசெய்தால்
தன்மையுள்ள வாதமது தானேதங்கும்
தானவனாய் நின்றுபூ ரணத்தைக்கண்டால்
தனையறியா ஆள்மறைப்புந் தான்தானாமே. (302)

வசியம்.

ஆமென்ற வசியமொன்று சொல்லக்கேளு
ஆதிமுத லானகொடி யருகுவாங்கி
ஓமென்று கண்டித்து மதுவில்போட்டு
உரிமையுடன் மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
நாமென்ற நீரதுவும் நன்றாய்வத்தி
நடுவான கொடியதுவும் பதமாய்நிற்கும்
தாமென்றுந் தன்பதமாய் வந்தமூலம்
தருவான மூலமதின் தன்மைகேளே. (303)

தன்மையுடன் வெள்ளியுடன் செம்புசேர்த்து
தருவான தங்கமது மூன்றுமொன்றாய்
உண்மையுடன் தானுருக்கித் தகடுதட்டி
உறுதியுள்ள மூலமதை வைத்துருட்டி
செம்மைபெற ரவிவளையம் போலேசெய்து
தெரியாமல் பொருந்தினவாய் சேர்த்துக்கொண்டு
நன்மைபெறச் சற்குருவைத் தியானஞ்செய்து
நலமாக ஞாயறுமுன் வைத்துப்போற்றே. (304)

வைத்ததொரு ரவிவளையம் வளவிதன்னை
வலதுகையில் தான்பூட்டி மனதாய்நின்றால்
மைதொடுத்த விழியாளு மன்னர்தானும்
மகத்தான மிருகமுதல் வசியமாகும்
மெய்த்ததொரு இம்முறைதா னதிதவித்தை
வேதாந்த வேதியர்தான் சொன்னமார்க்கம்
உத்ததொரு வித்தைதனை உலகத்தோர்க்கு
உரையாதே உரைத்ததினா லுறுதிபோமே. (305)

திலதம்.

உறுதியுட னின்னமொரு வசியங்கேளு
உரையாதே திலதவகை உண்மைசொல்வேன்
சுறுதியுடன் உள்ளங்கால் உள்ளங்கையில்
துடைத்ததொரு அழுக்குடனே சவாதுகூட்டி
கருதிமன தூரிமையுடன் ஒன்றாய்ச்சேர்த்து
கருவான தங்கமென்ற சிமிழில்வைத்து
பருதிமதி சுடரொளியைத் தியானஞ்செய்து
பத்திகொண்டு புருவமதிற் றிலதம்போடே. (306)

போடப்பா சிம்மெனவே திலதம்போட்டுப்
பூரணமாய் நீயிருக்கப் புதுமைகேளு
நாடப்பா உனதுமுகங் கண்டபோது
நன்மையுடன் பூரணமாய் வசியமாவார்
தேடப்பா யிவ்வசியம் நல்லவித்தை
சிவசிவா வேதியன்சொல் முறைதானப்பா
பாடப்பா இதினாலே சோலியுண்டோ
பத்திகொண்ட புத்தியினால் பணிந்துபாரே. (307)

வசியம்.

பணிந்துமிகக் கனிந்துருக வசியமொன்று
பதிவான புலத்தியனே பகரக்கேளு
துணிந்துருத்ர பூமியிலே சென்றுநீயும்
சுகமாக வெந்தஅஸ்தி எடுத்துக்கொண்டு
அணிந்தஅஸ்தி தன்னுடனே விஷ்ணுபீசம்
ஆதிசத்தி தன்னுடைய பீசங்கூட்டி
கனிந்தகும்பக் கலைமதி னாவின்பாலுங்
கருணையுடன் தானரைத்து உண்டைசெய்யே. (308)

செய்யடா உண்டைசெய்து உலரவைத்து
செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு
மெய்யடா சொல்லுகிற னீறிப்போகும்
வேதாந்த மானதிரு நீறைவாங்கி
வையடா சவாதுடனே புனுகுசேர்த்து
மார்க்கமுட னீயெடுத்து வைத்துக்கொண்டு
மய்யடா மய்யமென்ற நெத்திக்கிட்டு
மார்க்கமுட னரசரிடஞ் செல்லுவாயே. (309)

சென்றுமிக நின்றுடனே ராசமோகம்
சிவசிவா செகமோகம் அஷ்டகிரிவசியம்
அண்டர்பிரா னருள்பெருக வசியமுண்டாம்
ஆதியென்ற சற்குருவி னருளைப்பெற்று
கொண்டுநின்ற அஸ்தியென்ற வஸ்துவாலே
கொடுமையென்ற வியாதியெல்லாம் வசியமாகும்
கண்டதொரு வசியமது கிசந்தான்சொன்னேம்
கருவறிந்து குருவறிந்து கண்டுதேறே. (310)

தேறுவது பூரணத்தால் தேறவேணும்
திகட்டாத மதியமுர்தங் கொள்ளவேணும்
நேருவது வாசியினு லந்தங்கண்டு
நெறிமுறமை தவறாமல் சுழிமுனைமேவி
மாறுவித மறிந்துயிட கலையைநீயும்
மார்க்கமுடன் கதிரறிந்து சேர்த்தாயாகில்
பேருபெறக் கெதிமோச்ச முண்டாமைந்தா
பெருமையுள்ள சூட்சமடா கருவைப்பாரே. (311)

கருத்தறிந்து அண்டவெளி தன்னில்நின்று
காலறிந்து வாசியினால் யோகம்பார்த்து
உருத்தரித்து நின்றதொரு வாலைப்பெண்ணை
உற்றுப்பார் விளக்கொளிபோ லுள்ளேதோன்றும்
திருத்தமுட னக்கொளியிற் சேர்ந்தால்மைந்தா
சிவசிவா கற்பூர தேகந்தேகம்
விருத்தமுள்ள தேகமடா வேதாந்தத்தீ
வேதாந்த அந்தமென்ற வெளியிதாமே. (312)

வெளியான வெளியறிந்து வெளியில்நின்றால்
வெளியொளியும் விழியொளியும் மேவிப்போகும்
தெளிவான தெளிவெனவே மைந்தாநீயும்
செங்கதிரும் வளர்பிறையுஞ் சேர்த்துக்கொண்டு
ஒளியான சுடரதிலே நின்றாயானால்
உறுதியுள்ள தேகமடா வச்சிரகாயம்
அளியாத மொழியுடைய சத்தினாதம்
ஆதியென்ற செகநாதம் அருபசித்தே (313)

நிஷ்டை விபரம்.

சித்தான சித்துவினை யாடுதற்கு
சிவசிவா நிஷ்டையுட திறமைகேளு
பத்தான சிவநிச்சை அகாரபீடம்
பதிவான மூலமடா விந்துவட்டம்
சுத்தான வட்டமதில் விளங்குஞ்சோதி
சோதியென்ற கற்பூர தீபந்தன்னில்
வித்தான வாசியைநீ சாரப்பண்ணி
வேதாந்த சிவயோக விபரங்கேளே. (314)

கேளடா சிவயோக விபரங்கேளு
கேசரத்தில் கேசரியாள் பாதம்போற்றி
மேலடா போலவுமே நிஷ்டைமார்க்கம்
வேணபடி முன்பின்னாய்ச் சித்தர்சொன்னார்
ஆளடா ஆதியென்ற பிரமநிஷ்டை
அந்தரங்க மானநிஷ்டை யாருஞ்சொல்லார்
வாளடா பூரணசூஸ் நிரத்தில்நின்றாய்
வகுத்தமுறை சூட்சமடா வணங்கிப்பாரே. (315)

வணக்கமுடன் முன்கினது பிரமநிஷ்டை
மக்களே அகாரமென்ற சிவத்தின்கூறு
இணக்கமென்ற சிவத்தியானம் அகாரதீச்சை
இருந்துமன துரிமையினுல் செபித்துநீயும்
தனக்கொடுக்க மானதலந் தன்னில்நின்று
தன்மையுடன் சுகாசனமா யிருந்துமைந்தா
சுணக்கருத்து வாசிதனைத் துலங்கப்பண்ணி
துருவமதி லவ்வாசி சுருக்கியேற்றே (316)

சுருக்கியந்த வாசிதனைத் துருவமீதில்
சுழியான சுழியறிந்து சுழியில்நின்று
திருக்கான திருக்கருத்து மலர்க்கண்சாத்தி
திருவாசி கொண்டுநின்ற செங்கண்தன்னில்
உருக்கமுடன் வடிந்தொழுகும் அமுர்தந்தன்னை
உள்ளமதில் உள்ளுணர்வாய் உகந்துகொண்டால்
பெருக்கமுள்ள பிரமமுமே பிரகாசிப்பார்
பிரமமென்ற அகாரமதின் பெருமைதானே. (317)

பெருமையுள்ள பிரமநிஷ்ட்டை முதலாந்தீச்சை
பேணினபின் மாலினுட நிஷ்டைகேளு
உருமையுள்ள உகாரமடா சத்திதீச்சை
உருக்கமுடன் மாலையிலே செபித்துமைந்தா
அருமையுட நீயிருக்கும் ஒடுக்கந்தன்னில்
அடங்கின்ற காலிலொரு கால்மேல்தாக்க
பெருமையுள்ள மணிபூரந் தன்னில்நின்று
பிரளாமல் புருவமய்யம் பேணிப்பாரே. (318)

பேணிப்பார் மய்யமென்ற சுழினைமீதில்
பிரையான காலிருகால் முக்காலாகி
ஊணிப்பா ரந்தமென்ற காலொன்றாலே
உள்ளடங்கி மேலெழுந்து உரிமையாக
பூணிப்பாய் நின்றதொரு மகாரபீடம்
புத்திகொண்ட பீடமதிற் பொருந்திப்பாரு
பாணிப்பாய் பார்த்ததினுல் தோணுதப்பா
பறையான உகாரமதின் பசுமைதானே. (319)

பசுமையுள்ள மாலினுட நிஷ்டைசொன்னோம்
பத்திகொண்டு பூரணமாய்ப் பதிவாய்ப்பாரு
வசிகாஞ்சே ருத்திரனார் நிஷ்டைகேளு
வாலையென்ற மகாரமடா மவுனப்பெண்தான்
சுசிபெருகும் வாலைபதந் தன்னைக்கண்டால்
சுத்தமுள்ள பத்தியதாய்த் தொழுதுபோற்றி
உசிதமுள்ள வேதாந்த மகாரந்தன்னை
உகந்துமனப் பூரணமா யுன்னிப்பாரே. (320)

உன்னிப்பா ருத்திரனார் தன்னைக்காண
உள்ளபடி யிருந்துஇரு கையினாலே
நன்னிப்பார் காலதின்மேல் உன்னிமைந்தா
நயமாக நயனமிரு நயனந்தன்னை
விண்ணைப்பார்த் தமூர்தகலை தன்னைவாங்கி
மேன்மைபெறப் பூரணமாய் ரவியிற்சேர்த்து
தன்னைப்பார் தன்சாய்கை ருத்திரரூபம்
தானவனாய் நின்றமுகந் தன்னைப்பாரே. (321)

பார்நயன மூலமடா கண்தான்தெய்வம்
பருதிமதி சுடரெனவே நின்றசூட்சம்
ஆரறிவார் அந்தரங்க மானகண்ணை
அறிந்துநடுக் கண்ணொளியால் விண்ணைப்பார்த்தால்
நேர்பெரிய விலாசமடா கமலமாது
நிறைந்திருக்குங் கற்பூர தீபமாது
பேர்பெரிதாய் நின்றதொரு மவுனமாது
பெரிதான வாலையடா மகாரமாமே. (322)

ஆமப்பா ருத்திரனார் நிஷ்டைசொன்னோம்
அறிந்துகொள்ளு மயேசுரனா ருலைக்கேளு
தாமப்பா விந்துவடா சோதிசோதி
தாயான சோதியடா தங்கமாது
ஓமப்பா பூரணமாய் நின்றமாது
ஒளியாகி விண்மயமாய் ஒன்றாய்நின்று
நாமப்பா மந்திரகலைக் கியானரூபி
நாதாந்த அமுர்தரச ரூபிதானே. (323)

தானான அமுர்தரச ரூபிதன்னை
சங்கையுட னறிந்துரசந் தானேகொண்டால்
கோனான மயேசுரனார் நிஷ்டையாகும்
குருவான நிஷ்டையடா யேகரூபம்
தோனாத ரூபமடா மூலாதாரம்
துஞ்சிநின்ற விந்துவடா அமுர்தபானம்
தேனான அமுர்தமதைக் கொண்டுநீயும்
தெளிந்துகலைக் கியானமதில் நின்றுதேறே. (324)

தேறினால் கலைக்கியான தேவிபாதம்
தெகிட்டாத மந்திரகலைக் கியானபோதம்
மாறினால் திருநடனஞ் சிலம்பினோசை
மகத்தான ஓசையடா நாதகீதம்
கூறினா ளனுராகம் இசைநாதந்தான்
கொண்டுநின்ற இடமதுதான் குறிகண்ணாட்டம்
மீறினா லாகாச வெளியிலேதான்
வேதாந்த ஞானவொளி தீபந்தானே. (325)

தானான மயேசுரத்தி நிஷ்டைசொன்னேன்
சதாசிவத்தி நிஷ்டைதனைச் சாற்றக்கேளு
ஊனான காயமடா ஐங்காயந்தான்
உத்தசிவ கலைக்கியான சத்திமாது
தேனான பூரணமாய்த் தெளிந்துவந்து
சென்றுபரி பூரணமாய்ச் சேர்ந்தநாதம்
கோனான நாதமடா சமாதிகற்பம்
குருவான கற்பமதில் குவிந்துநில்லே. (326)

நில்லந்த நிலையான சுழியில்நீயும்
நிலையான கலையறிந்து கற்பங்கண்டு
செல்லந்த ஆதார மூலாதாரஞ்
சேர்ந்துநின்ற வாசியடா ஞானபோதம்
கொள்ளந்த போதமதைக் குறியாயெண்ணி
குருவான பராபரத்திற் குறிகண்ணாட்டி
நல்லந்தப் பூதிதனைக் கையில்வாங்கி
நாடிநின்று தேகமெல்லாம் நயமாய்ப்பூசே. (327)

பூசியே பூரணத்தை மனதிற்கொண்டு
புத்தியுடன் ஒட்டியான பெந்தம்பண்ணி
வாசியென்ற அனலெழுப்பி மேலேதாக்கும்
வரைஞான கற்பூர தீபந்தன்னில்
நேசமுடன் சென்றுவிளை யாடிநின்றால்
நிருவிகற்ப சமாதியென நேரலாகும்
பாசமுட னிவ்விதமாய் நின்றாயாகில்
பதிவான வாசியது பணியுந்தானே. (328)

தானேதான் தத்துவத்தை யறியவேணும்
சற்குருவால் பிருதிவியைக் காணவேணும்
வீணேதான் திரிந்ததினா லேதுண்டப்பா
விதியறியாப் பாவிகளை விரும்பவேண்டாம்
கோனேதான் தானெனவே குறிக்கமாட்டார்
குறும்பரவர் வாய்ச்சமத்தால் கூறுவார்பார்
பூனேநீ பொற்கமல கந்திபாதம்
பூரணமா யனவரதம் பூசையண்ணே. (329)

பூசையுள்ள நிஷ்டையிலே பஞ்சநிஷ்டை
பூரணமாய்ச் சொன்னமொழி கண்டுகொள்ளு
ஆசையுடன் பஞ்சநிஷ்டை அறிந்தாயாகில்
அகண்டவெளி தனிலேறி யாடலாகும்
நாசிநுனி நடுவான நயனதீபம்
நடுவான கற்பூர தீபந்தன்னை
வாசியென்ற சவுதகிரி வட்டமேறி
வளர்ஞான தீபமதில் சேர்ந்துநில்லே. (330)

சேர்ந்துநின்ற பூரணமா மமுர்தந்தன்னை
சிவசிவா அந்தமுர்தஞ் சிக்குங்காலம்
கூர்ந்துபரி பூரணமாய் வாங்கிமைந்தா
குருவான ஆதியந்தப் பொருளைநீயும்
சார்ந்ததொரு பூரணத்திற் சரியாய்க்கூட்டி
சமரசமா யமுர்தமதிற் றளரப்பண்ணி
தேர்ந்தமனங் குன்றாமல் ரவியிற்போட்டு
சிவசிவா மண்டலஞ்சென் றெடுத்துப்பாரே. (331)

பாரப்பா மண்டலஞ்சென் றெடுத்துப்பார்த்தால்
பசுமையுள்ள பூரணமு மெழுகாய்ப்போகும்
சேரப்பா அம்மெழுகை மேருக்குள்ளே
சிவசிவா வைத்துநன்றாய்ப் பூசைபண்ணி
நேரப்பா நின்றநடு மனையிற்குள்ளே
நின்றிலங்குந் தீபமதை நினைவிற்கொண்டு
காரப்பா அக்கிசந்தி பணவிடைதான் கொண்டால்
காலான வாசியது களாதய்யா (332)

குளிகை.

களாமல் விந்துநிலை கட்டமைந்தா
கருவான குளிகையொன்று சொல்லக்கேளு
மலரான விந்துவுட நாதங்கூட்டி
மடியநன்றாய் ரேகித்து மைந்தாகேளு
ஏறாமல் ரசமதுவைச் சுத்திபண்ணி
எடுத்துமே அந்நிடைக்குச் சரியாய்ச்சேர்த்து
குளாமல் கமலரச நாதங்கூட்டி
குமுறவே யரைத்துருட்டி மணிபோல்செய்யே. (333)

செய்தமணி தனையெடுத்து நாதனீரில்
சிம்மெனவே நிருத்திரவி முகத்தில்வைத்து
கப்தவரூக் கருணையினால் மறுநாள்வாங்கி
கருவான அண்டமதின் மெழுகுள்வைத்து
தொய்தமணி யிருகவேதான் தீபந்தன்னில்
தொங்கமுடன் வாட்டிடவே சூடுதாக்கி
மெய்தவறு மணியதுவு மிருகிநல்ல
வேதாந்த தம்பனமா மணியிதாச்சே. (334)

ஆச்சப்பா அம்மணியை அடக்கம்பண்ணி
அந்தாசங் கொண்டுஅனு போகஞ்செய்தால்
நீச்சப்பா நின்றதொரு விந்துதானும்
நெகிளாமற் நின்றிடத்திற் கட்டிப்போகும்
மாச்சப்பா மங்கையர்கள் மனதுநொந்தால்
மணியதனை யடக்கமிட்டுக் கயலில்வாங்கி
மூச்சப்பா விந்ததுவு மிருபெருக்கும்
மூர்ந்தாது பிந்தாது முத்தியாமே. (335)

முத்தியுள்ள மோச்சமடா மூலம்மூலம்
முனையான சுழிமுனையாம் விந்துமூலம்
சித்திபெற விந்துநிலை மூலந்தன்னை
சிதறாமல் கட்டினவன் சித்தன்சித்தன்
வெத்தியுள்ள சித்தமதா யிருக்கவேணும்
வேதாந்த பூரணத்தைக் காக்கவேணும்
சத்தியமே தவறாம லிருக்கவேணும்
தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்கநன்றே. (336)

காக்கவென்றால் வாசியைத்தான் காக்கவேணும்
கருணையுடன் காப்பதற்குக் குளிகைகேளு
ஏர்க்கையுட னரிதாரக் கட்டிவாங்கி
என்மகனே துருசுடனே ஆதியந்தம்
மார்க்கமுள்ள பொரிகார மண்டத்தோடு
மனோசிலையோ டறுசாக்கு வகையாய்மைந்தா
சேர்க்கையுடன் சரியிடையாய் வாங்கியந்த
திருவான நாதனீர் தன்னாலாட்டே. (337)

ஆட்டியந்த இடைக்கிநிகர் தாரந்தன்னில்
அழுத்தமுடன் கவசமது அன்பாய்ச்செய்து
காட்டியதோர் கவசமதில் மண்தான்பூசி
நன்றாகக் காய்ந்தபின்பு புடத்தைப்போடு
தேட்டமுடன் புடமாறி யெடுத்துப்பாரு
சிவசிவா தாரமது சயம்பேர்லாம்
பூட்டியதோர் சயமதை வாங்கிநீயும்
புத்தியுட னந்திடைக்கி ரசத்தைவாங்கே. (338)

வாங்கியதோ ரசமுடனே தாரயீயம்
வகையுடனே கூட்டிநன்றாய்க் கல்வத்திட்டு
பூங்கமல மாதுதிரு நீராலாட்டி
புத்தியுடன் வளித்தெடுத்து மணிபோற்செய்து
பாங்குபெற அம்மணிக்குக் கவசங்கேளு
பத்தியுள்ள அண்டமதின் மெழுகினாலே
சாங்கமாய்க் கவசமது நன்றாய்ச்செய்து
தவறாமல் வாட்டியபின் னெடுத்துப்பாரே. (339)

எடுத்துமிகப் பார்த்திடவே மைந்தாகேளு
என்னசொல்வேன் சத்திசிவம் ஒன்றாய்ச்சேர்ந்து
தொடுத்தமணி தன்னையெடுத்து வைத்துக்கொண்டு
சுந்தரம்போல் வாலைபதந் தொழுதுமைந்தா
அடுத்தமனை சுழிமுனையில் வாசிபூட்டி
அந்தரங்க மானமணி நாவில்வைத்து
கடுத்தரமாய் நின்றுசிவ யோகஞ்செய்தால்
நாதாந்த நடுவணையில் நாடலாமே. (340)

நாடலாம் நடுமனையில் வாசிபூட்டி
நாதாந்த பூரணத்தில் நாடிநின்று
தேடலாம் வெகுகோடி சித்துமார்க்கம்
சித்தென்றாற் புலத்தியனே செப்பக்கேளு
காடெல்லா மலைந்துசுத்தித் திரிந்தாலென்ன
கதையான சாஸ்திரத்தைப் படித்தாலென்ன
வீடெல்லா மலைந்துவாய் பசப்பிலென்ன
வேதாந்த சின்மயத்தில் விரும்பிநில்லே. (341)

விரும்பிநின்று சத்திசிவ பூசைசெய்து
வேதாந்த வாலைபதம் பணிந்துகொண்டு
திரும்பிமனங் கோணாமல் பூரணத்தில்
தெளிந்துநன்றாய்ப் பஞ்சகன தீச்சைபெற்று
வரும்பிறவி தன்னயகற்று மவுனதீச்சை
வகைவிபர மறிந்துஆ தாரம்பார்த்து
கரும்பதினு மதிகருசி போலேமைந்தா
கருணைவளர் சற்குருவைக் காருகாரே. (342)

காரப்பா சற்குருவைக் கார்த்தாயானால்
கருணைவைத்து அனுக்கிரகங் காட்டுவார்பார்
நேரப்பா அனுக்கிரகங் கண்டபோது
நேர்மையுடன் வாசியிலே நின்றுகொண்டு
சாரப்பா அந்தநடு மனையினுள்ளே
சார்ந்துசிவ யோகமது தானேசெய்தால்
வீரப்பா கொண்டசெடஞ் சித்தியாச்சு
வேதாந்த முத்தியடா விண்ணைப்பாரே. (343)

தாரயீயம்.

பாரப்பா யின்னமொரு கருவைக்கேளு
பச்சையென்ற துருசுடனே காரங்கூட்டி
வீரப்பா கொண்டதொரு அரிதாரந்தான்
விபரமுடன் மூன்றுகரு ஒன்றாய்ச்சேர்த்து
சாரப்பா கல்வமதிற் பொடியாய்ப்பண்ணி
சங்கையுடன் நாதனீர் தன்னைவாங்கி
தேரப்பா அப்பொடியில் பிசறிக்கொண்டு
செம்மையுடன் குகைதனிலே யிட்டுமூடே. (344)

மூடிநன்றாய் மண்சீலை வலுவாய்ச்செய்து
முக்கியமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாடிநின்ற மூன்றுகரு ஒன்றாய்ச்சேர்ந்து
நன்மையுட னுருகியது யீயம்போலாம்
வாடிநின்ற யீயமதை யெடுத்துமைந்தா
மார்க்கமுட னதற்குநிகர் ரசத்தைக்கூட்டி
ஆடிநின்று அலையாமல் கல்வத்திட்டு
அப்பனே நாதனீர் தன்னாலாட்டே. (345)

ஆட்டிவிட ரசமுடனே ஈயஞ்சேர்ந்து
அருமையுடன் கூடிநன்றாய்த் திரளும்பாரு
தாட்டிகமாய்த் திரண்டரச முருட்டிநீயும்
தன்மையுடன் அண்டமெழு கதனைவாங்கி
தேட்டமுடன் வாய்நீராற் குளைத்துநல்ல
செயமான ரசமணிக்குப் பூசிமைந்தா
வாட்டிடுவாய் கற்பூர தீபந்தன்னில்
மார்க்கமுடன் மணியதுதா னிருகும்பாரே. (346)

இருகின்ற மணியெடுத்து மைந்தாநீயும்
இன்பமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
பருதியெனும் ரவிநாதஞ் செகநாதந்தான்
பார்முழுது மரசாளும் பரமநாதம்
சுருதியொரு ளானதொரு நாதந்தன்னை
சூட்சமென்ற மணிக்குநிகர் காரங்கூட்டி
உருகிமன துரிமையினால் உருக்கிப்பாரு
உருக்கமுட னுருகியது களங்கமாச்சே. (347)

களங்கமில்லாக் களங்கமதில் கெந்திசேர்த்து
கருவான செந்தூரச் செயநீர்தன்னால்
உளங்கனியக் கல்வமதில் நன்றாயாட்டி
உரிமையுடன் வளித்துருட்டி ரவியிற்போட்டு
துலங்குவதைக் காரோட்டில் வைத்துமூடி
துப்பரவாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
விளங்கிநின்ற களங்கமது என்னசொல்வேன்
வேதாந்த பூரணத்தாற் செந்தூரமாச்சே. (348)

ஆச்சப்பா செந்தூர மென்னசொல்வேன்
அந்திசந்தி பணவிடைகால் கொண்டுதேர்ந்தால்
மூச்சப்பா முன்னிலேவிட் டசையாதய்யா
மூதண்ட கேசரியில் வாசியேறும்
நீச்சப்பா வாசியிற்சென் றேறினக்கால்
நிலையான தீபமதில் நேரலாகும்
காச்சப்பா அத்தீபந் தன்னிலேதான்
கசடான தத்துவத்தைக் கருக்கிப்போடே. (349)

கருக்கிடாய் தத்துவப்பேய் தன்னைமைந்தா
காலறிந்து கருக்குதற்கு வகையைக்கேளு
அரிக்கிமுத லானதொரு எழுத்தால்நீயும்
அமர்ந்துநிலை தனையறிந்து ஊதிவிட்டால்
கிருக்குடைய தத்துவப்பேய் மாண்டுபோகும்
கேசரத்தில் மணிநாத ஓசைகேட்கும்
சுருக்கமுள்ள மணிநாத ஓசைதன்னால்
சோதியென்ற சுயஞ்சோதி காணலாமே. (350)

காணாத சோதிதனைக் கண்ணால்காண
கமலமென்ற கடைக்கண்ணை மனக்கண்ணால்பார்
தோணாத சோதியது சுழினைமீதில்
துலங்குமடா செங்கதிர்போல் சோதிமூலம்
கோணாத வட்டமடா விந்துமூலம்
குவிந்தவிந்து மாலுடைய காலேயாச்சு
ஊணாத காலறிந்து உள்ளேஊண
ஓங்காரச் செங்கதிரா லுலாவலாமே. (351)

ஆமப்பா செங்கதிரே அங்கமாச்சு
அங்கமென்ற தங்கமடா சோதியாச்சு
ஓமப்பா சோதியென்ற மனக்கண்ணாலே
உள்ளுணர்ந்து அந்தமென்ற கண்ணைப்பாரு
தாமப்பா அந்தமென்ற கண்ணைப்பார்த்தால்
தானவனாய் அங்கனையே தானேதோணும்
காமப்பா லானதிருக் கண்ணாலந்தக்
கருணைவளர் பூரணத்தைக் காணலாமே. (352)

காணலாம் பூரணமே வாமபீடம்
கருணைவளர் சோதியடா அண்டமேரு
தோணலாஞ் சோதியென்ற சோதிமேரு
தூண்டாத நாதமடா ஞானமேரு
பேணலாம் ஞானமென்ற நயனமேரைப்
பிலத்திபுத்தி அறிவாலே பேணிப்பார்த்து
ஊணலாங் காலறிந்து வாசிகொண்டு
ஒடுங்கலாம் ஒடுங்கியந்தக் கண்ணைப்பாரே. (353)

கண்ணான சோதியடா தான்தானாகும்
கருணையுள்ள அஞ்செழுத்துந் தான்தானாகும்
விண்ணான மூன்றெழுத்துந் தான்தானாகும்
விசையான எட்டெழுத்துந் தான்தானாகும்
பண்ணான சடாச்சரமுந் தான்தானாகும்
பதிவான மண்ணும்விண்ணுந் தான்தானாகும்
ஒண்ணான அச்சரங்கள் தான்தானாகும்
உத்தசிவ சத்தியுமே தான்தானாமே. (354)

ஆமப்பா தேவகணந் தான்தானாகும்
அடங்காத பூதகணந் தான்தானாகும்
தாமப்பா அஷ்டநதி தான்தானாகும்
சங்கையில்லா அஷ்டகிரி தான்தானாகும்
காமப்பா உலகமெல்லாந் தான்தானாகும்
நன்மையொடு தின்மைரெண்டுந் தான்தானாம்
ஓமப்பா கலைக்கியானந் தான்தானாகும்
உரிமையுள்ள பூரணமுந் தான்தான்பாரே. (355)

பாரப்பா பிர்மமது தான்தானாகும்
 பத்தியுள்ள சிதம்பரமுந் தான்தானாகும்
சாரப்பா சராசரமுந் தான்தானாகும்
 சதாகோடி மந்திரமுந் தான்தானாகும்
காரப்பா தன்னொளிவுந் தான்தானாகும்
 கருணையுள்ள விண்ணொளியுந் தான்தானாகும்
ஊரப்பா நாதவிந்துந் தான்தானாகும்
 உற்பனமு மொடுங்கினமுந் தான்தானாமே. (356)

தானேதான் தானவனாய்த் தன்னுள்ளேதான்
 தன்மையுடன் தானாகத் தன்னுள்பாரு
கோனேதான் தன்னருளால் எல்லாந்தானாய்
 குருவான இருதயத்தில் பிரகாசிக்கும்
மானேதான் தன்னருளாய் பிரகாசத்தை
 மௌனமுடன் மானதமாய்ப் பூசைபண்ண
காணாத கண்காட்சி யெல்லாந்தன்னுள்
 கண்ணெதிரே தோணுமடா கண்ணால்பாரே. (357)

பார்ப்பதுதான் கண்ணாடிக் குள்ளேமைந்தா
 பத்தியுடன் தன்னுருவைப் பதிவாய்ப்பார்த்து
நேர்ப்பதுதான் மானதமாய்ப் பூசைபண்ண
 நிசமுனக்கு யில்லையடா நெற்றிக்கண்ணை
கூர்ப்பறிந்து குறிப்புடனே திறந்துபார்த்து
 குணமாக அந்திசந்தி பூசைபண்ணி
தீர்ப்புடனே சிவபூசை கோடிக்கொக்கும்
 சிவசிவா தேகவச்சிர காயமாமே. (358)

காயமென்ற காயமடா தேவரூபம்
 கருணையுள்ள பஞ்சகர்த்தா விருந்தவீடு
தாயகமாய் வாசிதனக் குகந்தவீடு
 சச்சிதா னந்தபூ ரணமாம்வீடு
நாயகனார் நின்றநா தாந்தவீட்டை
 நன்மையுடன் தானறிந்து பூசைபண்ணி
நேயமுடன் பராபரத்தோ டொத்துவாழ்ந்தால்
 நீடுலகில் நீயுமொரு சித்தனாமே. (359)

சித்தனென்ற தேகமடா தேவரூபம்
சின்மயமாய் நின்றபரா பரத்தின்ரூபம்
பத்தனென்ற வாசியடா தேசியாகி
பரைஞான கேசரியாய் நின்றமூலம்
சுத்தமுட னம்மூலச் சோதியாலே
சூட்சமாம் பராபரையைத் தொழுதுபோற்றி
புத்தியுடன் தானிருக்கச் சகலசித்தும்
பூரணமாய் நிறைந்ததிரு ஆதியாமே. (360)

ஆதியாய் மிகநிறைந்த ஞானசோதி
அருள்பெருகும் எக்கியமா முனியேஅய்யா
சோதியெனும் பூரணமாம் வாலைதீட்சை
சுருதிமய மானதொரு புவனைதீச்சை
நீதிபெரும் திரிபுரையாள் தீச்சைமூன்றும்
நேர்மையுட னடுமைதனக் குபதேசித்து
ஓதிவரு மந்திரகலைக் கியானமான
உறுதியென்ற தீபநிலை உறுதிசொல்லே. (361)

உண்மையுட னடிபணிந்து கேட்டாய்மைந்தா
உந்தனக்குச் சொல்லுகிறேன் வாலைதீட்சை
நன்மையுள்ள ஆதார மூலந்தன்னில்
நாடிநின்ற வாலையுட தீட்சைதன்னை
தன்மையுடன் காணுதற்கு மைந்தாகேளு
தனதாக ஓம்அங்உங்லங் கிலிசுவாகா
உண்மையாய்த் தானிருந்து தினம்நூற்றெட்டு
திருவான உருவேறச் சித்தியாமே. (362)

சித்தியுள்ள வாலையவள் தீட்சையாலே
சிவசிவா சிவதவத்துக் குறுதியாகும்
புத்தியாய் சிவதவத்தி லுறுதியானால்
பூரணமாய் வாசிசிவ யோகமாகும்
பத்தியாய் சிவயோக சித்தியானால்
பரைஞான கேசரியில் தீபங்காணும்
முத்திபெற உதயமதில் வாலைதீட்சை
மோனமுடன் தான்செபிக்க முத்திபாரே. (363)

பாரப்பா வாலையுட தீட்சைசொன்னேன்
பதிவான புவனையுட தீட்சைகேளு
நேரப்பா புருவமதில் மனதைவைத்து
நேர்மையுடன் ருத்திரனார் பதியில்நின்று
காரப்பா ஓம்சிரீம்றீம்வசிங் சுவாகாவென்று
கருணையுடன் புருவமதில் மனதைவைத்து
சேரப்பா மதியமதில் தினம்நூற்றெட்டு
சங்கையுடன் தான்செபிக்கத் தன்மைகேளே. (364)

தன்மையென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு
சத்தியென்ற ருத்திரியாம் புவனைதானும்
உண்மையுட னிருதயமாங் கமலமீதில்
ஒருகோடி சூரியன்போற் பிரகாசிக்கும்
நன்மையுடன் சோதிப்பிர காசங்கண்டால்
நாதாந்த தேகமது சித்தியாகும்
சின்மயமாய்த் தேகமது சித்தியானால்
சிவகற்ப காலவரை தெளிவாங்காணே. (365)

தெளிவாகப் புவனையுட தீச்சைசொன்னேன்
சிவசிவா திரிபுரையின் தீச்சைகேளு
ஒளியான புருவநடுச் சுழிமேல்நின்று
உத்தமனே அய்யுங்கிலியும்சவ்வும் வசிசுவாகாவென்று
முளியான முழியறிந்து முழிமேல்நின்று
முத்தியுள்ள நேரமடா சந்திநேரம்
நெளியாமல் தானிருந்து தினம்நூற்றெட்டு
நேமமுடன் னுருச்செபித்து நிலையில்நில்லே. (366)

நிலையான நிலையறிந்து வாசியேறி
நின்றிலங்கும் புருவநடுச் சுடரிற்சென்றால்
கலையான சந்திரகலை ஒளிபோல்மைந்தா
காணுமடா திரிபுரையாள் கருணைதானும்
சிலையான திரிபுரையாள் கருணைபெற்றால்
செல்வமென்ற கண்மணியே சொல்லக்கேளு
மலையான அண்டமடா பொதிகைதன்னில்
மகத்தான சிவசத்தி வசமாம்பாரே. (367)

பாரப்பா சிவசத்தி வசமாய்நின்று
பரைஞான அமுர்தரசந் தானேயீவாள்
ஆரப்பா உனக்கிடு சொல்லப்போறேன்
ஆதிசிவ சத்தியுட முப்பேர்தன்னை
காரப்பா காலசந்தி உச்சிமூன்றும்
கண்மூக்கு மத்தியிலே கருத்தைவைத்து
நேரப்பா விபூதியைநீ தியானம்பண்ணி
நேமமுடன் மெய்க்கணிந்து கொண்டுபாரே. (368)

கொண்டுநிலை தனையறிந்து குருவைப்போற்றி
கூர்மையுடன் விபூதியைநீ கடாச்சித்தாக்கால்
மண்டிவரும் பூதகணம் ஏவல்பில்லி
மகத்தான விஷரோகம் மாண்டுபோகும்
எண்டிசையுங் கீர்த்திபெற வாழ்வாய்மைந்தா
ஏகாந்த வாலையுட முப்பேர்தன்னை
கண்டபடி காலசந்தி உச்சிமூன்றும்
கருத்துவைத்து மானதமாய்ப் பூசைசெய்யே. (369)

செய்யப்பா மானதமாய்ப் பூசைசெய்து
செயமாகத் திருநீறை யணிந்துகொண்டால்
மெய்யப்பா தளருது வாசியேறும்
வேதாந்த பூரணமு மெய்யில்தங்கும்
மையப்பா மையமென்ற சுழினைதன்னில்
மகத்தான தீபவொளி மயங்காதய்யா
கய்யப்பா கையில்நெல்லிக் கனிபோல்மைந்தா
கருத்துவைத்துப் பூரணத்திற் கலந்துகொள்ளே. (370)

கலந்துகோண்டு பூரணமே தானாய்நின்று
கால்வாசி வாசியிலே கருத்தைவைத்து
உளங்கனிந்து ஆச்சிரமம் ஐந்துமொன்றாய்
உண்மையுடன் காணுதற்கு வேதம்பார்த்து
தலங்களுட சன்னதியைத் தானேதானாய்
தானவனாய் நின்றுசிவ யோகஞ்செய்து
இலங்குமணி மண்டபஆச் சிரமந்தன்னை
இருந்துசிவ யோகமதா லறிவாய்ப்பாரே. (371)

ஐந்து ஆச்சிரமம்.

அறிவான புலத்தியனே சொல்லக்கேளு
அருமையுள்ள பிர்மசாரி ஆச்சிரமந்தன்னை
நெறியாக ஒருபோது பிச்சைகொண்டு
நேமமுட னனுதினமும் வேதம்பார்த்து
திரிகால மறவாமல் நிஷ்டைநேமம்
செய்துமன தறிவாலே யோகஞ்செய்து
குறியாகச் சிகைவளர்த்து எண்ணைதள்ளிக்
கூர்மையுள்ள பிர்மஆச் சிரமந்தானே. (372)

தானாகத் தானவனாய் மனதுகூர்ந்து
சங்கையுடன் யிம்முறைதான் தவறாமல்தான்
கோனான குருபதியில் மனதுகூர்ந்து
குறிப்புடனே செபிக்கிறதோர் மந்திரங்கேளு
தேனான அமுர்தமடா அம்கிலிசிம்மென்று
சிவசிவா தினம்நூறு செபித்தால்மைந்தா!
ஊனான தேகமடா பிர்மமாச்சு
உத்தமனே பிர்மஆச் சிரமஞ்சித்தே. (373)

சித்தியுடன் பிர்மஆச் சிரமஞ்சொன்னேன்
சிவசிவா கிரகஸ்த னாச்சிரமங்கேளு
பத்தியுடன் கொலைகளவு காமந்தீமை
பாராமல் சமுசார மார்க்கமாகி
சுத்தமுடன் சகலவுயிர் தானாயெண்ணி
சுகிர்தமுடன் தர்மங்க ளீய்ந்துகொண்டால்
வெத்தியுடன் சகலசவு பாக்கியம்பெற்று
விளங்குமடா கிரகஸ்த னாச்சிரமங்காணே. (374)

காணவே கிரகமதி லிருந்துகொண்டு
காசினியில் தர்மவா னாகிமைந்தா
பூணவே சற்குருவின் பாதம்போற்றி
புத்தியுடன் செபிக்கிறதோர் மந்திரங்கேளு
தோணவே தானிருந்து புருவமேவி
சுத்தமுடன் ஓம்றீங் அங்உங்கென்று
பேணவே தானிருந்து செபித்தாயாகில்
பிலக்குமடா கிரகஸ்த னாச்சிரமம்பாரே. (375)

பாரப்பா கிரகஷ்த ளாச்சிரமஞ்சொன்னேன்
பதிவான சன்யாசி ஆச்சிரமங்கேளு
சேரப்பா சிகைநூல்கள் அகற்றிமைந்தா
தேகசுத்தி காயாசம் செய்துகொண்டு
காரப்பா தற்பனஓ மங்கள்செய்து
காலறிந்து சிவயோகக் கருத்தில்நின்று
கோரப்பா பிச்சைகொண்டு அறிவில்நின்றால்
நிலைத்துதடா சன்யாச ஆச்சிரமங்காணே. (376)

தானான சன்யாசம் பெற்றோர்தானும்
தன்மையுட னிம்முறைகள் தவறாமற்றான்
தானான பதிநோக்கித் தானேதானாய்
தன்மையுடன் செபிக்கிறதோர் மந்திரங்கேளு
தானான விஞ்சையடா ஓம்அய்பும்கிலியுஞ்சவ்வும்
தன்மையுடன் தினம்நூறு செபித்தாயாகில்
தானான சன்யாசி யாச்சிரமமைந்தா
தன்மையுடன் தானாகத் திறக்குங்காணே. (377)

காணவே சன்யாச ஆச்சிரமஞ்சொன்னேன்
கருணையுடன் வானப்பிரஷ்த ளாச்சிரமங்கேளு
கோணவே சுகதுக்கம் ரெண்டும்விட்டு
சூழ்காவிற் கிழங்கருந்திச் சுத்தமாக
பூணவே பனிவெயிலிற் பொருந்திமைந்தா
புகழ்பஞ்சாக் கினிநடுவி லிருந்துகொண்டு
பேணவே குருபதியில் பெலமாய்நின்றால்
பிலக்குமடா ஆச்சிரமம் பேணிப்பாரே. (378)

பாரப்பா வானப்பிரஸ்த ளாச்சிரமந்தானும்
பதிவாகி நிற்பதற்கு மந்திரங்கேளு
நேரப்பா தானிருந்து குருவைப்போற்றி
நீமகனே ஓம்அம்சிவ வசியென்றேதான்
காரப்பா புருவமதில் தினம்நூறு மைந்தா
கருணையுட னுருவேறக் காச்சிகானும்
சீர்பெருகும் வானப்பிரஸ்த ளாச்சிரமந்தானும்
சிவசிவா திறமாகுஞ் சிவயோகம்பாரே. (379)

பாரப்பா புலத்தியனே சொன்னவகைநாலும்
பதிவாக அதிலிருந்து மனஞ்செவ்வையானால்
நேரப்பா அதிவர்ணாச்சிரமந்தன்னை
நேர்மையுடன் சொல்லுகிறே னினைவாய்க்கேளு
காரப்பா பிரபஞ்ச மாயைவிட்டு
கனயோக நிஷ்டைதனைக் கடக்கத்தள்ளி
தேரப்பா செவியுடனே விழியுங்கெட்டு
சிவசிவா சின்மயமாய்த் தெளிவார்காணே. (380)

தெளிவற்றுச் சுளியற்றுச் செகமுமற்று
சிவசிவா வென்றதொரு சத்தமற்று
ஒளிவற்று ஆகாச ஓசையற்று
ஒன்றுமுதல் எட்டுரெண்டு உணர்வுமற்று
நெளிவற்று நினைவற்று நேர்மையற்று
நேச்முதல் பாசமற்று நிலையுமற்று
அளிவற்று வெளியொளியில் யெங்குந்தானாய்
அமர்ந்திருந்தா லாதிவர்ணாச் சிரமம்பாரே. (381)

பார்பிரமச் சாரியடா பிர்மாவாகும்
பதிவான கிரகஸ்தன் விஷ்ணுவாகும்
நேர்குருவாஞ் சன்யாசம் ருத்திரனாகும்
நிலைவானப் பிரஷ்தனடா மயேசனாகும்
சீர்பெருகும் ஆதிவர்ணாச் சிரமமைந்தா
சிவசிவா சதாசிவனாய்த் தெளிந்துகொள்ளு
ஆரறிவா ரஞ்சுநிலை விரதம்பெற்று
அமர்ந்திருப்பான் கோடியிலே ஒருவன்றானே. (382)

ஒருவனடா உலகமதில் சிறுவனாகி
உத்தமர்க்குப் புத்திரனா யொடுங்கிவாழ்வான்
சிருவனவன் செகசால மகிமையெல்லாம்
திர்க்கமுடன் தானறிந்து சிவனேயென்பான்
பருவமுடன் பலசமயந் தானேதானாய்
பாருலகெல் லாம்நிறைந்த பரமாய்நிற்பான்
துருவமென்ற மேருவடா அண்டமேரு
சோதியென்ற சோதியைப்போல் துலங்குவானே. (383)

துலங்கிநின்ற சோதியைப்போற் சோதியாகி
சோதிமய மானகே சரியாய்நின்று
விளங்கிநின்ற ஆதார வாசியாகி
மெஞ்ஞான பூரணமுந் தான்தானாகி
களங்கமில்லாக் கற்பூர சோதியாகி
கயிலாச மேருகிரி வாசமாகி
உளங்கனிந்த பூரணத்தே சிகராய்நின்று
உத்ததவ நிஷ்டைசிவ யோகியாமே. (384)

சாமளா மந்திரம்

சிவயோகச் சாமளா அம்பாள் தன்னைத்
தினந்தோறு மவுனமதாய்த் தியானஞ்செய்ய
சிவயோக ரகசியமா மந்திரந்தன்னை
செப்புகிறேன் புலத்தியனே தெளிவாய்க்கேளு
சிவயோக பூரணமாய் வந்தசூட்சம்
சிவசிவா ஓங்கிலி றீங்அங்கென்று
சிவயோக மானதொரு சிந்தையாகி
தினம்நூறு உருச்செபித்துத் திரமாய்நில்லே. (385)

திரமாகத் தினம்நூ றுருச்செபிக்குஞ்செய்கை
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் திருவைநோக்கி
கரமான இடதுகரந் தன்னிலேதான்
கருணையுடன் விபூதியைநீ நிறத்திமைந்தா
பரமான விங்கெழுதி விந்துக்குள்ளே
பாலகனே அறுகோணம் நன்றாய்த்தீர்ந்து
வரமான அறுகோணத் துள்ளோங்கார
மார்க்கமுடன் தானெழுதி வங்குசிங்கே. (386)

வங்கென்றுஞ் சிங்கென்றும் ஓங்காரத்துள்
வணக்கமுடன் தானெழுதி வாசிபூட்டி
அங்கமுடன் கண்டமதி லங்கென்றாணி
ஆதிமனோன் மணியினுட அருட்கண்மேவி
எங்குநிறைந் திருந்தமயேஷ்வரியேயென்று
இன்பமுடன் ஓங்கிலி சிறீங்அங்கென்று
சங்கையுடன் புருவநடு மனக்கண்வைத்துத்
தான்செபித்து விபூதியை நீதரித்துக்கொள்ளே. (387)

கொள்ளடா விபூதிஉத் தளமாய்ப்பூசி
குருபரனைத் தியானித்துப் பணிவிடைதான்சொன்டால்
உள்ளடா வாசியது உறுதியாகி
ஓதுகிற மந்திரமுஞ் சித்தியாகி
அல்லடா தேகவச்சிர காயமாகி
ஆதிமயேஷ் பரியுடைய அருளேதங்கும்
சொல்லடா அபமிருத்து விலகிப்போகும்
சுந்தரமா யென்னாளும் வாழலாமே. (388)

வாழலா மயேஷ்பரியைத் தினமும்நோக்கி
மானதமா யனுதினமும் பூசைசெய்தால்
ஆழலாம் அண்டபகி ரண்டமெல்லாம்
ஆதிமயேஷ் பரியுடைய அருளேகண்டால்
மேனெல்லாங் கற்பூர தீபம்போலே
விளங்குமடா சோதிப்பிர காசங்காணும்
நாளெல்லாஞ் சோதிப்பிர காசங்கண்டால்
நல்லநா ளெந்தநாள் நாடிப்பாரே. (389)

பாரப்பா நாடிமனக் கண்ணாலந்த
பருதிமதி சுடரொளியை நன்றாய்ப்பாரு
நேரப்பா முச்சுடரு மொன்றாய்நின்று
நெடுவானி லுதையமதாய் நேரேகண்டேன்
மேரப்பா மேருநடு உதையம்பார்த்து
விளங்கிநின்ற கண்காச்சி தன்னைப்பார்த்தேன்
சாரப்பா கண்காச்சி பார்க்கும்போது
சந்திரனுஞ் சூரியனு மொன்றாங்காணே. (390)

ஒன்றாகக் காண்பதுவே காச்சிகாச்சி
உற்பனமும் ஒடுங்கினமுஞ் செகசாலந்தான்
நன்றாகச் செகசால வித்தைபார்த்தால்
நன்மைநின்மை யென்றதெல்லா மொன்றுமில்லை
கண்டாயோ ஆதியிலே குமிளிவெள்ளங்
கரையேறிப் பாய்ரதோர் சத்தந்தானும்
உண்டான போதிலது மடிந்துபோச்சு
ஒழுடிந்து போனதுவும் வெளியில்தானே. (391)

தானென்ற வெளிதானே மூலமாகி
தற்பரத்தி னொளியாகிச் சத்தமாகி
நானென்ற சத்தமதாய் விழுந்தசத்தம்
நாடிநின்ற சத்தமதில் சுத்தமாச்சு
ஏனென்ற சுத்தமெல்லாஞ் சத்தமாகி
ஏகாந்த பரவெளியி லெங்குந்தானாய்
ஊனென்ற உலகமெல்லாம் ஆனுமென்று
உளன்றுமிகத் தளன்றுஅது உண்ணும்பாரே, (392)

உண்ணுவது மொடுங்குவது மூன்றிலொன்று
ஓடுவது மாடுவது மூன்றிலொன்று
எண்ணுவது மெழுதுவது மூன்றிலொன்று
ஏங்குவதும் தாங்குவது மூன்றிலொன்று
நண்ணுவதும் நாடுவது மூன்றிலொன்று
நகைப்பதுவும் பகைப்பதுவு மூன்றிலொன்று
கண்ணுமனக் கண்ணதுவு மூன்றிலொன்று
கருணையுடன் மூன்றிலொன்றைக் கருதிப்பாரே. (393)

கருதிமிகப் பார்க்கையிலே கருவொன்றுச்சு
கலந்துநின்ற பூரணமுந் தான்தானுச்சு
உறுதியுள்ள மவுனமதுந் தான்தானுச்சு
உத்தசிவ யோகமதுந் தான்தானுச்சு
பருதிமதி சுடரதுவுந் தான்தானுச்சு
பஞ்சகன மூலமதுந் தான்தானுச்சு
சுருதியுடன் நால்பதமுந் தான்தானுச்சு
சோதியென்ற சுடரொளியும் வெளிதானுச்சே. (394)

வெளியொளியாய் நின்றபர வெளியில்மைந்தா
வேதாந்த உயிர்பயிர்கள் செனித்துநல்ல
வெளியான வெளியொளியி லமர்ந்துபோச்சு
வேதாந்த பரவெளியின் விஞ்சைமூலம்
வெளியான மூலமடா வொளியாய்நின்று
விளங்குதடா திருநடன வேதக்கூத்து
வெளியான முழியதனுல் நன்றுய்ப்பார்த்தால்
விசையான கால்விசைதான் வெளியிலாச்சே. (395)

ஆச்சென்ற ஆசையெல்லாம் வெளிதானாச்சு
அருளான சிவயோகம் வெளிதானாச்சு
மூச்சென்ற சத்தமெல்லாம் வெளிதானாச்சு
மோகமென்ற ஆசையெல்லாம் வெளிதானாச்சு
பேச்சென்ற மந்திரமும் வெளிதானாச்சு
பேசாத மவுனமது வெளிதானாச்சு
நீச்சென்ற அமுர்தரசம் வெளிதானாச்சு
நிசமான பரவெளியும் வெளிதானாச்சே. (396)

ஆச்சப்பா சகலமுமே வெளிதானென்றும்
அடங்கியே போனதுவும் வெளிதானென்றும்
நீச்சப்பா நிலையான கலையிற்பார்த்தேன்
நின்றகலை பருதிமதி சுடர்மூன்றாக
பேச்சப்பா பெருகிநின்ற வெளியில்பாரு
பிலமான மவுனமதா யிருந்துபார்த்தால்
மூச்சப்பா நிலையான சீவாத்துமாவும்
மூர்த்திபரமாத்மாவில் முத்தியாச்சே. (397)

ஜீவாத்மா பரமாத்மா.

முத்தியுள்ள ஜீவாத்மா மூலத்திதான்
முளங்கிநின்ற பரமாத்மா வெளிதானாச்சு
சுத்தமுள்ள வெளிதனிலே வாய்வுந்தியும்
சுகமாக மண்ணுடனே தண்ணீராச்சு
பத்தமுள்ள மண்ணுடனே தண்ணீர்கூடி
பருமணியாய் நின்றதச ஞாதமாச்சு
புத்தியுடன் தசநாதங் காதிற்கேட்டால்
பூரணதே சிகரவர்தான் வாசமாச்சே. (398)

வாசமுள்ள முப்பூவின் வாசந்தன்னை
மார்க்கமுடன் கண்டறிந்து கொண்டாயானால்
கேசமுள்ள வாசியடா வாசமாகி
நிலையான பூரணமுந் தான்தானாகி
பாசமுள்ள பலதொழிலுந் தான்தானாகி
பரைஞான கேசரியில் வாசமாகி
பேசவொண்ணா மவுனமதின் மவுனமாகி
பேரண்ட மானசிவ சூட்சங்கேளே. (399)

கேளடா சூச்சாதி சூச்சந்தன்னை
கிருபையுடன் சொல்லுகிறேன் கேள்வியென்ன
வாளடா அண்டபகி ரண்டமான
மந்திரகலை யானசிவ வாமபீடம்
ஆளடா அந்தரமாய் நின்றபீடம்
அசைவற்று நின்றதொரு ஆதிபீடம்
சூளடா நின்றநவ ரெட்னபீடம்
சுத்தமுள்ள பீடமதின் சுகத்தைக்கேளே. (400)

முப்பூ.

சுகத்தைஅனு பவிப்பதற்கு மைந்தாமைந்தா
சுகமான வெடிபூர மண்டத்தாதி
அகத்தைமிகத் தானறிந்து ஆதிமூன்றும்
ஆதியென்ற அம்பரத்தி ரீராலாட்டி
முகத்தைமிகத் தானறிந்து ரவியிற்காய்ச்சி
முனையான சுழினைநந்தி செந்தீயாலே
செகத்தைதமிகத் தானறிந்து புடமேசெய்ய
திருவாசி வாசியினால் முப்பூவாச்சே. (401)

ஆச்சப்பா முப்பூவே நாதம்நாதம்
ஆச்சரியம் நாதம்விந்து பிரமகற்பம்
பேச்சப்பா பேசாத மவுனகற்பம்
பேருலகெல் லாம்நிறைந்த ஆதிவஸ்து
மூச்சப்பா நிறைந்ததொரு முதலாம்வஸ்து
முத்திதரும் வஸ்துவைநீ பூசைபண்ண
போச்சப்பா அபமிருத்து விலகிப்போச்சு
பூரணமா யென்னாளும் வாழலாமே. (402)

பாரப்பா ஆதிதொடுத் தந்தந்தன்னை.
பத்திமுத்தி யாகவேநீ சுத்தமானால்
நேரப்பா நின்றதொரு சோதிதீபம்
நின்னிடத்தில் நின்றிலங்கும் நினைவாய்ப்பாரு
காரப்பா கருணையினாற் கருவாய்ப்பார்க்க
கண்காச்சி மெத்தவடா கடைக்கண்ணால்பார்
ஆரப்பா கண்ணறிந்து பார்க்கப்போரார்
அங்கமென்ற செங்கதிரை யறிந்துகாணே. (403)

காணடா கண்ணறிந்து கண்ணைக்கொண்டு
கருவான செய்கதிரைக் கண்டாயானால்
ஊணடா கலையறிந்து வாசிதன்னை
உத்தசிவ ஞானதிருப் புருவமீதில்
பேணடா பேணிமனங் கொண்டுநின்றால்
பிசகாது வாசிதிரு மூலத்தேகி
பூணடா பூண்டுகெதி கண்டபோது
போதமய மானபூ ரணமுமாமே. (404)

ஆமப்பா பூரணமே ஆதியாகும்
ஆதிசிவ சோதியடா அமுர்தபோதம்
தாமப்பா தன்னகமாய் வந்தபோதம்
சகலஉயிர் தாபரமாய் நின்றபோதம்
நாமப்பா வென்றதொரு நாதபோதம்
நடுவெழுந்த போதமடா நந்திக்கண்ணு
ஓமப்பா ஒன்றுமறி யாதகண்ணு
ஓமுடிந்த கண்ணதுவை யடக்கம்பண்ணே. (405)

அவையடக்கம்.

அடக்கமென்ற அவையடக்க மொன்றுகேளு
அடிநடுவாய் நின்றதொரு ஆதிபீடம்
முடக்கமில்லாச் சிந்தையதாய்க் கண்டுகொண்டால்
முனையான சுழினையிலே வாசியேறி
நடக்கவிசை யானதிரு வாசியாலே
நந்தியெனுஞ் செந்தீயில் நாட்டமாகி
கடக்கவழி யறியாமல் நடுவில்நின்று
கால்மாறி யாடினதைக் கண்டுபாரே. (406)

கண்டுபார் கமலரச விந்துதன்னை
கைமுறையாய் மெய்யெனவே கமலமேவி
உண்டுபார் கற்பூர தீபந்தன்னை
உன்தேகம் விளக்கொளிபோ லொளியோவீசும்
நின்றுபார் ரந்தவெளி தன்னில்நின்று
நிசமான வெளியொளியும் நன்றாய்ப்பாரு
சென்றுநீ பார்த்ததினால் மைந்தாமைந்தா
திருவேறி உருவேறிச் செங்கண்ணாமே. (407)

செங்கமலக் கண்ணனை உப்புதன்னை
சிவசிவா அமுர்தரசத் தேனினாலே
அங்கமுடன் தானூட்டி உறங்கப்பண்ணி
அதின்பிறகு கமலரசப் பாலையூட்டு
சங்கையுட னந்தரசங் கொண்டபோது
தயக்கமுள்ள மயக்கமது தானேதீர்ந்து
மங்களமாய் மதிபோலே வளர்ந்துதேய்ந்து
மதிகுறைந்த ரவிதனையே கண்டுதேறே. (408)

தேறுவது ரவியான பூரம்பூரம்
சேர்ந்துநின்ற பூரமதில் காரமேறி
நீறுவது யென்னசொல்வே னந்தனீரு
நிசமான திருநீரு நிலையாக்கேணி
ஊறுவது முன்னிலையா யூறுங்கேணி
ஒடுங்காத குமிளியடா சத்தவெள்ளம்
சேரும்விதங் கண்டறிந்து நின்றுகொண்டால்
தெளிவான தங்கமடா தெளிந்துபாரே. (409)

தெளிந்துநின்ற தங்கமடா அஞ்சமங்கம்
திருநிறைந்த அங்கமதின் செயலைக்கண்டு
அழுந்திஅங்கம் புகுந்தேறும் வாசிதன்னை
அடிநடுவின் முடிமேலே யழுந்திப்பாரு
வளிந்துவரு மமுர்தரச மென்னசொல்வேன்
மதியான விந்துவடா மவுனபோதம்
குழிந்துவரும் போதமதைத் தினமுங்கொண்டு
கூர்மையுடன் பூரணமாய்த் தெளிந்துபாரே. (410)

பாரப்பா தெளிந்துநின்ற மாதுமையை
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
நேரப்பா செஞ்சடையோன் சடைமேல்மங்கை
நிலைத்துநின்ற கெங்கையடா மங்கைநாதம்
கூறப்பா குருவான மங்கைநாதம்
குன்றாத சத்தமடா குமுளிவெள்ளம்
பேரப்பா பெருகிநின்ற விந்துநாதம்
பேசாத வாசமதிற் னாதஞ்சேரே. (411)

சேர்த்துமிக நன்மையுடன் சிமிழில்வைத்து
சிவானந்த பூரணத்தைத் தியானம்பண்ணி
பார்த்துமிகப் பூரித்துத் தம்பித்தப்பால்
பத்தியுடன் நெற்றிதனில் திலதம்போட்டு
கார்த்துநன்றாய் ரேசித்துக் கொண்டுநின்றால்
கருணையுடன் உன்சமுகங் கண்டோர்க்கெல்லாம்
மாத்திவிடுஞ் சகலபிணி ரோகமெல்லாம்
மாறாத சூனியமு மாண்டுபோமே. (412)

போமென்று விடுகாமற் தினமுநீயும்
பூரணமாய் ரேசித்து நின்றுகொண்டு
ஓமென்று நெற்றிதனில் திலதம்போட்டு
ஒருமனதாய்ப் பூரித்துக் கொண்டேநின்றால்
காமென்ற வறுமைகள்தான் நாடாதோடும்
நன்மையுட னுன்சமுகம் நாடிப்பார்த்தால்
ஆமென்ற அருளான தீபந்தோன்றி
ஐஸ்வரியம் வளருமடா அறிந்துபாரே. (413)

அறிந்துநிலை கண்டுமன வாசிபூட்டி
அருளான பூரணகே சரத்தில்நின்று
தெரிந்துமனத் திறமதனால் கமலமேவி
சிவசிவா கற்பூர தீபந்தன்னில்
வருந்திஅந்தத் தீபமதால் சோதிகண்டால்
வந்ததடா சிவஞான வாசியோகம்
பொருந்தியந்தச் சிவயோகந் தனிலிருந்து
பூரணமாய் நின்றுபூ ரணத்தைப்பாரே. (414)

கற்பூரச் சுண்ணம்.

பாரப்பா பூரணமாய்ப் பூரச்சுண்ணம்
பத்தியுள்ள புலத்தியனே பகரக்கேளு
காரப்பா நிறைந்தகற் பூரம்வாங்கி
கமலமென்ற அமுர்தமதில் சுத்திபண்ணி
நேரப்பா கல்வமதில் பொடித்துக்கொண்டு
நிசமான துருசுஅடி மூன்றுங்கூட்டி
வாரப்பா அமுர்தரசத் தேனைவிட்டு
வாசமுடன் தானரைத்து வட்டுப்பண்ணே. (415)

பண்ணியதோர் வட்டதனைக் காயப்போட்டு
பதிவாக ஓடுழுத்தி மண்ணுஞ்செய்து
கண்ணிறைந்த சற்குருவைத் தியானம்பண்ணி
கருணையுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரு
விண்ணிறைந்த சோதியுட னிருளையாலே
வேதாந்தக் கற்பூரச் சுண்ணமாச்சு
புண்ணியனே சுண்ணமதைப் பதனம்பண்ணி
புத்தியுடன் தாம்பூலந் தின்றுபாரே. (416)

பாரப்பா தாம்பூலந் தரிக்கும்போது
பத்தியுடன் கற்பூரச் சுண்ணங்கொண்டால்
வீரப்பா கொண்டதொரு தந்தவாய்வு
மேலெரிவு காலெரிவு அஷ்டகுன்மம்
நேரப்பா கற்பூர வாசங்கண்டால்
நெகிழ்ந்துநின்ற தந்தமெல்லா மிறுகும்பாரு
ஆரப்பா அறிவார்கள் பூரச்சுண்ணம்
அரகரா கற்பூர மாதிதானே. (417)

ஆதியென்று மந்தமென்று அடிப்பூரந்தான்
ஆரறிவா ரடிமுடியை யறிந்துகொண்டால்
சோதியென்ற கற்பூரம் பூரச்சுண்ணம்
சோலிவெகு சோலியடா சுண்ணம்பண்ண
நீதியுடன் சற்குருவால் முறைகள்கண்டு
நேர்மையுடன் செய்துகொண்டா லவனேசித்தன்
வாதியென்ற ரசவாதி செய்வான்பாரு
மானிலத்தில் மானிடர்கள் மயங்குவாரே. (418)

கற்பூரச்சுண்ணம்.

மயங்காம லின்னமொரு முறையைக்கேளு
மார்க்கமுடன் கற்பூரக் கட்டிவாங்கி
தியங்காமற் கற்பூரக் கட்டிதன்னை
திருவான சேனீரால் சுருக்குப்போட்டு
நயங்காணச் சுருக்கிட்டு யெடுத்துக்கொண்டு
நாதாந்த வெடியுடனே சத்துக்கூட்டி
செயங்காணக் கல்வமதில் வாய்நீர்விட்டு
செம்மையுடன் மூன்றுகரு வொன்றாயாட்டே. (419)

ஆட்டிகன்றாய் வழித்தருட்டி வட்டுப்பண்ணி
அப்பனே ரவியினிடங் காயவைத்து
தாட்டிகமா யோடமூத்தி மண்ணுஞ்செய்து
தாய்பதத்தில் பூசித்து புடத்திற்போடு
வாட்டிகன்றாய்ப் புடம்போட்டு எடுத்துப்பாரு
மகத்தான சுண்ணமதாய் நீறிநிற்கும்
பூட்டிகன்றாய் நீறினதோர் சுண்ணந்தன்னை
புத்தியுடன் பரணிதனி லடக்கம்பண்ணே. (420)

பண்ணப்பா பதனமதாய்ப் பதனம்பண்ணி,
பக்குவமாய்ப் பணவிடைதான் கொண்டாயானால்
கண்ணப்பா தான்துலங்கு மந்தக்கண்ணால்
கயிலாச மேருதனைக் காணலாகும்
விண்ணப்பா மேருதனைக் கண்டாயானால்
வேதாந்த கற்பூர தீபங்காணும்
நண்ணப்பா அத்தீபந் தன்னைக்கண்டால்
நாதபூ ரணமான தேகமாச்சே. (421)

ஆச்சப்பா தேகமென்ற பாசந்தானும்
ஆதியிலே நாதவிந்தா யமைத்தவாறு
பேச்சப்பா பேசாத நாதவிந்து
பெருகிநின்று ஒன்றாக நின்றபோது
மூச்சப்பா உண்டாகி அதனிலொருஆவி
முத்தியுள்ள சத்தியமா யக்கினியுமாச்சு
நீச்சப்பா நிலையாத அக்கினிதன்னாலே
நிசமாக நால்பதமும் பூரணமாங்காணே. (422)

காணவே பூரணமு மக்கினிதானாச்சு
கருணையுள்ள ஆகாச மக்கினிதானாச்சு
பூணவே வாசியது அக்கினிதானாச்சு
பொருந்திநின்ற அப்பதுவு மக்கினிதானாச்சு
தோணவே பிருதிவியு மக்கினிதானாச்சு
சுகமாக அனலதுவு மக்கினிதானாச்சு
பேணவே சிவயோக மக்கினிதானாச்சு
பெலமான சத்தமது அக்கினிதானாச்சே. (423)

தானான அக்கினியே திருவர்சியாகும்
சதாகோடி மந்திரத்துக் குறுதியதுவாகும்
ஊனான தேகமதுக் காதாரமாகும்
உண்மையுள்ள தீபவொளி நன்மையதுவாகும்
தேனான மதியமுர்த மக்கினிதன்னூரல்
சிவசிவா வென்றதுவு மக்கினிதன்னாவி
மானாகே ளாவியது சிவசிவமயமாய்
மகத்தான மூலமது அக்கினிதன்தேகம். (424)

தேகமென்ற பீடமதில் நாதகீதந்
தினந்தினந்தான் முழங்குதடா அறிவாய்ப்பாரு
ஆகமுட னடிநடுவு முடியொன்றாக
அமர்ந்திருந்து பார்க்கையிலே அந்தநாதம்
ஏகமுட னெங்குமதாய் ஒன்றாய்நின்று
எழுந்தசுத்த ஆவியடா சத்தமாச்சு
தாகமுடன் சத்தமதாய் வந்தசத்தம்
சதானந்தத் திருநடன ஓசையாச்சே. (425)

ஓசையென்ற திருநடனம் பார்ப்பதென்ன
உரிமையுடன் சிவதவங்கள் செய்வதென்ன
நேசமுடன் வாசிநிலை பார்ப்பதென்ன
நிலையறிந்து தீபமதை நேர்வதென்ன
பாசமுடன் சித்துவிளை யாடலென்ன
பத்தியுடன் சிவயோக விபரமென்ன
நாசிமுனை மீதில்வெகு நாட்டமென்ன
நாடிநின்ற நாட்டமெல்லா மாசைதானே. (426)

தானென்ற ஆசையது தான்தானாச்சு
சதானந்த யோகமது தான்தானாச்சு
ஊனென்ற கலைக்கியானந் தான்தானாச்சு
ஓடுவது மாடுவதுந் தான்தானாச்சு
ஏனென்ற சத்தமதுந் தான்தானாச்சு
ஏங்குவதுந் தாங்குவதுந் தான்தானாச்சு
ஊனென்ற உடலுயிருந் தான்தானாச்சு
உகமுடிந்து போனதுவுந் தான்தானாச்சே (427)

தானாகித் தான்முடிந்த சூட்சந்தன்னை
தரணிதனி லறியாமல் தான்தானென்று
ஊனாகி நின்றதொரு உடலைக்காணான்
உடலில்நின்ற அச்சரத்தி னுறுதிகாணான்
பூனாகி நின்றதிரு வாசிகாணான்
பொருந்திநின்ற வாசிதிரு நயனங்காணான்
வானாகி நின்றஅடி முடியுங்காணான்
மதிகெட்டு விதியழிந்து மாழுவானே. (428)

மாழுவது ரெண்டுவித மைந்தாகேளு
மகத்தான சிவகலை மாறும்போது
ஆழுவது பூரணமா யறிவோடய்யா
அடங்குவது பராபரத்தோ டமைப்பேயாகும்
சூழுவது நோயுடனே பாசஞ்சூழ்ந்தால்
சுழிவான மதிமயங்கி அலைவான்பாரு
காலுநிலை யறியாமல் அலைந்துகெட்டு
கானலிலு நீரினிலுங் கரைந்துபோமே. (429)

கரைந்துமதி போகாம லறிவோடேற
கருணையுள்ள சற்குருவைக் கனிந்துதேடி
நிறைந்தபரி பூரணமா யுபசரித்து
நித்தியமு மவர்பாதஞ் சிரமேற்கொண்டு
திறைந்துவரும் பாசமதை யகற்றிநல்ல
தீபவொளி சோதியதைத் தினமுங்காண
குறைந்தமதி நிறைந்தகதிர் கற்பங்காட்டி
குருவான சிவயோக வழிசொல்வேனே. (430)

என்னமுட னவர்பதமே கெதியென்றெண்ணி
இன்பமுட னடிமைதனக் கடிமையானால்
தன்னகமே தானாகத் தான்தானென்று
தன்மையுள்ள கண்மணியே வாவென்றேதான்
உன்னகமே தானாக உண்மைகேளு
உண்மையென்ற அகாரமுட னுகாரம்ரெண்டும்
முன்னகமே தானாகக் கண்டுகொள்ள
முத்தியுள்ள அகாரமதைப் பூசைபண்ணே. (431)

பண்ணப்பா அகாரமதைப் பூசைபண்ணப்
பாலகனே அபயிருத்துப் பாழாய்ப்போச்சு
கண்ணப்பா தான்துலங்கிக் கதிரில்சேரும்
கதிரான சுடரதிலே ஒளிதான்காணும்
விண்ணப்பா நிறைந்தஒளி கண்ணிற்கண்டால்
வேதாந்த தேகமடா மெய்தான்பாரு
நண்ணப்பா தேகமென்ற நடத்தைகாணும்
நன்மையுடன் பாராட்டால் நசிக்குந்தானே. (432)

நசிக்காம லகாரமதை உருவேசெய்து
நன்மையுட னுகாரமதை நாட்டிக்கொண்டால்
பசிக்காம லமுர்தரசங் கொண்டோர்போல
பாலகனே பசியடங்கி வாசியேறும்
பொசிக்காமல் எட்டிரண்டு மறந்தாயாகில்
பொல்லாத தீவினையால் போகுங்காயம்
வசிக்கஒரு வசியமது சொல்லக்கேளு
மந்திரகலை அம்பிகா தேவிதானே. (433)

அம்பிகாதேவி மந்திரம்.

தேவியென்ற அம்பிகா தேவிதன்னை
செம்மையுடன் கண்டுபதஞ் சேவைசெய்ய
ஆவியென்ற மந்திரமாஞ் சூச்சந்தன்னை
அருள்பெருகும் புலத்தியனே சொல்லக்கேளு
தாவிமனங் கொண்டுகேசரத்தில்நின்று
தன்மையுடன் அங்உங்நங் கிலிஓமென்றேதான்
கூவிமன மசையாமல் மவுனமாகக்
கூர்மையுட னந்திசந்தி உருநூற்செய்யே. (434)

செய்யடா உருவறிந்து உருவேசெய்ய
திருஉருவாய் நின்றதொரு மூலமீதில்
மெய்யடா அக்கினிகொண் டுயரயேறி
வேதாந்த பூரணத்தில் தீபங்காணும்
மய்யடா மய்யமதில் தீபங்கண்டால்
மகத்தான அம்பிகா தேவிரூபம்
அய்யனே நன்றாகச் சொல்லக்கேளு
ஆலாத்தி கற்பூர தீபந்தானே. (435)

தானென்ற தீபமதில் மனதைநாட்டி
தன்மையுடன் விபூதியைநீ கையில்வாங்கி
கோனென்ற குருபரனைத் தியானம்பண்ணி
குவலயத்து மானிடர்க்குக் கடாச்சித்தாக்கால்
ஊனென்ற தேகமதில் நின்றநோய்கள்
உத்தமனே அப்போதே விலகிப்போகும்
வீனென்ற பில்லிமுதல் யேவலெல்லாம்
விட்டகன்று போகுமடா மெய்தான்பாரே. (436)

பாரடா அம்பிகா தேவிதானும்
பதிவான அட்டசித்திக் குயிரேயாகும்
ஆரடா அறிவார்கள் தேவிமூலம்
அரகரா குருவருளால் அறிந்தாயானால்
நேரடா குருவருளால் தியானஞ்செய்து
நின்மனமே சாட்சியதாய் நிற்கவேணும்
வீரடா கொண்டதொரு மூடர்க்கீய்ந்தால்
வீணாகிப் போகுமடா தன்னைக்காரே. (437)

தன்னைத்தான் தானறிந்து தன்னைக்கார்க்க
தாரணியில் கோடான கோடிக்கொன்று
விண்ணைத்தா னறிந்துநடு விண்ணில்நின்று
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
மண்ணைத்தா னறிந்துமண்ணுந் தண்ணீர்கொண்டு
வகையுடனே அடிப்படையைப் பிலக்கப்பண்ணி
கண்ணைத்தா னறிந்துமனக் கண்ணுலந்த
கருணைவளர் ஓங்காரக் கம்பம்நாட்டே. (438)

நாட்டுவது ஓங்கார வாசிக்கம்பம்
நடுவீதி முதல்வீதி அந்தவீட்டில்
மூட்டுவது நாசிநுனி வாசிமைந்தா
முனைகண்டு நிருத்தியந்த வாசினாட்டி
பூட்டுவது ரவிமதியு மொன்றாய்ப்பூட்டி
பூரணமாம் புருவநடுக் கமலமீதில்
தாட்டிகமாய் நின்றுஅந்தச் சோதிதன்னை
தன்மனமே சாச்சியதாய்க் கண்டுபாரே. (439)

கண்டுநிதஞ் சோதியைநீ தெரிசித்தாக்கால்
கயிலாச பூரணதே சிகராய்வாழ்வாய்
நின்றுநிலை தனையறிந்து வாழ்ந்துகொண்டால்
நிலையான சோதிபர தேசியாகும்
அண்டர்நிதங் கண்டுதொழும் வாசியாகும்
அருளான வாசிசிவ யோகியாகும்
எண்டிசையுந் தானவனு யோகியாகி
யேகநிரா மயமான குருவாவானே. (440)

குருவான பெரியோரை வணங்கிநித்தம்
கூர்மையுட னடிதொழுது குணமதாக
திரிவதனு லறிவுதனைச் சோதிப்பார்கள்
சிந்தைமன தொன்றாக நின்றாயானால்
தருவான கற்பகமு மவனுக்கீய்ந்து
தன்னைமிகத் தானறியத் தீட்சைசொல்லி
அருவுருவாய் நின்றதொரு சோதிகாட்டி
ஆனந்த மதியமுர்த மீவார்பாரே. (441)

பாரப்பா அமுர்தரச பானமீய்ந்து
பதிவான ஆதார மூலஞ்சொல்லி
நேரப்பா நிலையான வாசிசொல்லி
நிசமான பூரணத்தி நிலையுஞ்சொல்லி
சாரப்பா மேருஅடி முடியுங்காட்டி
சதாபோத நிருவிகற்ப சமாதிசொல்லி
வீரப்பா கொண்டதொரு லகிரிசொல்லி
வேதாந்த சின்மயத்தின் வெளிசொல்வாரே. (442)

வெளியான பரமவெளி தன்னைக்காட்டி
வேதாந்தப் பரமவெளி தன்னிலேதான்
ஒளியான சோதிபரஞ் சோதியான
உத்தகலைக் கியானமிரு நயனங்காட்டி
விழியான நயனமிரு சூட்சங்காட்டி
மேலான அனுக்கிரக வீடுஞ்சொல்லி
தெளிவான சிந்தையதாய் நாட்டமாகி
சிவசிவா சிவயோகத் திருவென்பாரே. (443)

பகவதி தியானம்.

பாரப்பா இன்னமொரு தீச்சைமார்க்கம்
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
கோரப்பா பகவதியாள் தியானந்தன்னை
நேர்மையுடன் சொல்லுகிறேன் நிசமதாக
சாரப்பா தன்சார்பு நிலையில்நின்று
சங்கையுடன் ஓம்றீங்றீங் அங்கென்றேதான்
காரப்பா புருவநடுக் கமலத்தேகி
கருணையுட னாயிரத்தெட் டுருவேசெய்யே. (444)

செய்யடா மானதமா யுருவேசெய்யத்
திருஉருவாய் நின்றபக வதியாள்தானும்
மெய்யடா உனதிடமாய் நிருத்தஞ்செய்வாள்
மெஞ்ஞானக் கருணைவிழிக் கண்ணால்பார்த்து
கையடா கூப்பியடி பணிந்துகொண்டு
கருணைபெறத் தேவதா பகவதிவாவென்று
வையடா அமுர்தரச பானம்வைத்து
மார்க்கமுடன் ராஜரா ஜேஸ்பரியென்னே. (445)

என்னம்மா ராஜரா ஜேஸ்பரியேயென்று
ஏகநிரா மயமாகத் தியானம்பண்ணி
கன்னம்மா கமலாயி மந்திரரூபி
கமலசித்து ரூபசிவ சோதித்தாயே
முன்னம்மா நீயிருந்து தன்னைக்கார்த்து
முத்தியுட னினைத்தபடி சுத்தமாக
பண்ணம்மா யிதுசமய மென்றுநீயும்
பகவதியாள் விபூதியைநீ தரித்துக்கொள்ளே (446)

கொள்ளடா விபூதியைநீ தரித்துக்கொண்டு
குணமாகப் பகவதியைத் தியானம்பண்ணி
நில்லடா உன்முகங்கண் டோர்க்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப்போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிருப் பகவதியாள் சுருக்கினாலே
அல்லடா உன்மனதை நோகப்பண்ணும்
அவர்கள்குடி செந்தீயி லழுந்தும்பாரே. (447)

பாரப்பா பகவதிசென் றிருக்கும்நாடு
பாதாள மலையாளம் நடுநாடாகும்
காரப்பா மலையாள நடுநாடய்யா
கண்மூக்கு மத்தியென்ற உச்சிவட்டம்
நேரப்பா உச்சிவட்ட மலையாளத்தில்
நிலையான பகவதியை யார்தான்காண்பார்
ஆரப்பா அறிவார்க ளாருமில்லை
அந்தமலை உச்சியடி வாரம்பாரே. (448)

பாரப்பா உச்சிஅடி வாரமான
பதிவான மலையாள பகவதிதன்பீசம்
நேரப்பா சொல்லுகிறேம் ஸ்ரீம்ஹ்ரீங்கென்று
நிலையான மலையாளத் துருவமீதில்
சாரப்பா சார்ந்துஅந்த அடிவாரத்தில்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
காரப்பா அக்கினிகொண் டுயரயேறி
கண்ணறியக் கண்ணூரத் தியானம்பண்ணே. (449)

பண்ணப்பா பகவதியைத் தியானம்பண்ண
பரைஞான கேசரியில் பளீரென்றேதான்
முன்னப்பா நிறைந்ததிருக் கண்ணில்தோணும்
முத்திதரு மவ்வொளியில் நின்றுபாரு
மண்ணப்பா குவிந்துமலை யாளந்தன்னில்
மக்களே வெகுநிதிகள் காணலாகும்
விண்ணப்பா அதனில்வெகு சோதிகாணும்
மேல்கீழும் நன்முக நின்றுபாரே. (450)

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தாமைந்தா
நிசமாக அருளோடு பொருளுங்கண்டேன்
அண்டரொடு முனிவர்களும் ரிஷிகள்சித்தர்
அனேகவித விதமாக யங்கேகண்டேன்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
பலவிதமாய் நின்றுவிளை யாடல்கண்டேன்
கண்டதொரு காச்சியெல்லா மங்கேகண்டேன்
கலந்துவெளி வெளியான கருக்கண்டேனே. (451)

கருக்கண்டு கருவறிந்து உண்ணும்போது
கருஉருவாய் நின்றதொரு நாதங்கண்டேன்
உருக்கொண்டு நின்றதொரு நாதந்தானும்
ஒழுடிந்து நின்றவிடம் பார்க்கும்போது
திருக்கண்டு ஆடியது முடிந்ததப்பா
சிவசிவா யென்னசொல்வேன் வெளிதானச்சு
மருக்கொண்டு நின்றவெளி தன்னைக்கேளு
மகத்தான அண்டவெளி உச்சிதானே. (452)

உச்சியென்ற மூலமடாயார்தான்காண்பார்
உண்மையென்ற ரகசியமடா வெளிவிடாதே
பச்சியென்ற பச்சியடா அண்டரெண்டம்
பாய்ந்துநின்ற மத்தியடா புருவமத்தி
குச்சியென்ற கோலாலே யளந்துபார்க்க
கொடுமுடிக்கு மடிப்படைக்கு மிச்சமாச்சு
உச்சமென்ற மாளிகையில் நிருத்திப்பார்த்தால்
ஓங்காரக் கம்பநுனி மிச்சமாச்சே. (453)

ஆச்சப்பா மிச்சமதாய் நின்றமிச்சம்
அண்டமென்ற சுழினையிலே நின்றுபார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம்பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம்போலே
பேச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித்தாயை
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
முனைகண்டு கம்பமதில் யேறினேனே. (454)

யேறினேன் சவுதகிரி வட்டமேறி
ஏகாந்த வெளியொளியைப் பார்த்துமைந்தா
மீறினேன் அகாரமதின் செயல்தன்னாலே
மின்னொளியி னமூர்தரச பானங்கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல்நின்று
தெளிந்துகொண்டு போகாத புனலைக்கண்டு
ஆறினேன் வேகாத தலையைக்கண்டு
அடங்கினேன் முப்பொருளு மடக்கினேனே. (455)

ஆதிகுரு.

அடக்கமென்ற முப்பொருளு மூப்பூவாச்சு
ஆதியென்ற குருவாச்சு அனாதியாச்சு
அடக்கமென்ற ஆதிகுரு முப்பூவாலே
ஆனந்த மானதொரு கதையைக்கேளு
அடக்கமென்ற பிருதிவியு மப்புஉப்பு
மாதியென்ற பூரணமும் ஒன்றாய்க்கூட்டி
அடக்கமென்ற பழச்சாற்றால் நன்றாயாட்டி
அவிபுடத்தில் தானவித்து யெடுத்துக்கொள்ளே. (456)

எடுத்துமிகப் பதனமதா யெடுத்துக்கொண்டு
என்மகனே மண்ணுடனே தண்ணீர்கூட்டி
கடுத்ததொரு குகைதனிலே வைத்துமூடி
கருகவித்த மருந்ததுவுங் கூடச்சேர்த்து
அடுத்ததொரு அக்கினியி லுருக்கிப்பாரு
அடங்கிநின்ற சித்தாகிச் சத்துமாச்சு
முடித்ததொரு சத்தெடுத்து வெள்ளிநாலில்
முனையறிந்து தானுருக்கி யெடுத்துப்பாரே. (457)

எடுத்துமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு
ஏகாந்த வெள்ளியடா தங்கமாச்சு
தொடுத்தவெள்ளி தங்கமய மாகக்கண்டால்
சோதிவெளி யானசிவ சோதிகாணும்
அடுத்தசிவ சோதிமய மாகக்கண்டால்
அஷ்டாங்க யோகமடா திட்டமாச்சு
முடித்ததொரு திட்டமடா அடுத்தபேச்சு
முனையறிந்து இன்னமொரு சத்தங்கேளே. (458)

சத்தமது தானொடுங்கும் மப்புமுப்பும்
சங்கையில்லா விந்துஉடன் மூன்றுங்கூட்டி
சத்தமுள்ள அரிதாரம் காரம்வீரம்
சுகமாக அறுசரக்குங் கல்வத்திட்டு
பத்தமுள்ள பழச்சாற்றால் நன்றாயாட்டி
பாலகனே உருட்டிமிக அவித்தெடுத்து
வித்தான செம்புடனே சிவந்தான்கூட்டி
வேகமுள்ள அவிமருந்து கூடச்சேரே. (459)

சேர்த்துவொன்றாய்க் கூட்டியொரு குகையில்விட்டு
திரையகல ஊதியெடு சத்துமாகும்
பூத்துமிக நின்றசத்தைப் பதனம்பண்ணி
புதுமையுள்ள சத்துடனே வெள்ளிகாலு
காத்துமிக உருக்கியதைப் பார்க்கும்போது
கண்கொள்ளாக் காட்சியடா தங்கமேரு
மாத்ததிக மானதங்க மேரைக்கண்டு
மகத்தான சிவயோக வழியைப்பாரே. (460)

வழியான துறையறிந்து வெளியிலேகி
வந்துவெளி தனிலுளன்று மயக்கமாகி
தெளிவான சோதியைத்தான் அறியாமாண்பர்
செகந்தனிலே மெத்தவடா வேடம்பூண்டு
நெழியான வழிதுறையை அறியமாட்டான்
நிலையான கலையறிந்து யோகஞ்செய்யான்
பழியான பாவமதைத் தினமுஞ்செய்து
பாழ்நரகில் குடியிருந்து பாழாவானே. (461)

பாழான முப்பாலை யறியவேணும்
பரமகயி லாசவரை பார்க்கவேணும்
காலான வாசிநிலை காணவேணும்
கருணைவளர் பூரணத்தைப் பணியவேணும்
மேலான பூரணத்தைப் பணிந்துகொண்டு
மெஞ்ஞான தீபவொளி காணவேணும்
நூலான சாஸ்திரத்தைப் பார்த்துமைந்தா
நுணுக்கமென்ற கருக்கனைநீ நோக்குவாயே. (462)

நோக்குவது தீபமதை நோக்கவேணும்
நொடியான சிவநிலை காணவேணும்
மூக்குநுனி முனையறிந்து முனைமய்யத்தில்
முத்தியுடன் சிவயோக முடிக்கவேணும்
வாக்குமன தொன்றாகி மனக்கண்கொண்டு
மகத்தான சத்திசிவ பூசைவேணும்
தூக்கிறதோர் கெவுனரச வாசிவேணும்
சுகமான யிடமறிந்து தூங்குவாயே. (463)

தூங்குவது பூரணத்திற் தூங்கவேணும்
தூங்கிமன தறிவாலே விழிக்கவேணும்
பாங்குபெற நித்தியகர்ம அனுஷ்டானத்தில்
பலநினைவைத் தானிருத்திப் பதியவேணும்
பூங்கமல உச்சியிலே நயனநாட்டம்
புத்தியுடன் தானிருந்து தீபம்பார்த்து
தாங்குவது என்னவென்றால் மைந்தாகேளு
சற்குருவின் பாதமதைத் தாங்கிப்பாரே. (464)

பாரப்பா இன்னமொரு சூட்சஞ்சொல்வேன்
பதிவான புலத்தியனே நன்றாய்க்கேளு
நேரப்பா நின்றகுரு பாதத்தீபம்
நினைவுகொண்டு மனதறிவால் தாங்கும்போது
மேரப்பா அண்டமொடு புவனமெல்லாம்
மெஞ்ஞான தீபமதின் மேலேகண்டேன்
ஆரப்பா அறிவார்கள் ஞானதீபம்
அறிவான அறிவாளி தீபந்தானே. (465)

நாகசெந்தூரம்.

தானென்ற தீபமதைத் தினமும்நோக்க
சதானந்த தெரிசனத்தைச் சாற்றக்கேளு
வானென்ற நாகமொடு ரசமுந்தங்கம்
மகத்தான கெந்தியொடு தாரஞ்சேர்த்து
கோனென்ற பொற்றலையின் சாத்தாலாட்டி
கூர்மையுடன் தானரைத்து வட்டுப்பண்ணி
தேனென்ற வாலைபதந் தியானம்பண்ணி
தீர்க்கமுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரே. (466)

எடுத்துமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு
என்னசொல்வேன் செந்தூர மதிககாந்தி
தொடுத்தகதிர் காந்தியென்ற செந்தூரத்தை
தொல்லுலகில் கோடியிலே ஒருவர்காண்பார்
அடுத்தமொரு செந்தூரந் தன்னில்மைந்தா
அப்பனே பணவிடைகால் கொண்டுதேர்ந்தால்
முடித்தமொரு தேகமதை யென்னசொல்வேன்
முத்தியுள்ள வாலைவய தாகும்பாரே. (467)

பாரப்பா வாலையை தானுமென்ன
    பதிவான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
மேரப்பா கற்பமதைக் கொண்டாலென்ன
    மெஞ்ஞான சிவயோகத் திருந்தாலென்ன
காரப்பா அண்டமெல்லாம் ஞெடியிற்சுத்தி
    கற்பாந்திர வரையிருந்து கனிந்தாலென்ன
நேரப்பா மனம்நிறுத்தி அறிவோடந்த
    நிலையறிந்து நிற்பதுவே முத்திதானே. (468)

முத்தியுள்ள சற்குருவின் பாதங்காண
    முனையான கருவிலொரு விபரங்கேளு
பத்தியுடன் தான்முடித்த செந்தூரத்தில்
    பாலகனே பணவிடைதா னெடுத்துக்கொண்டு
சுத்தமுள்ள செம்பினிலே பத்துக்கொன்று
    சுருக்கிட்டு உருக்கியதை யெடுத்துப்பாரு
சித்தியுள்ள ஆறுவய தென்னசொல்வேன்
    சிவசிவா தங்கவய தாகுந்தானே. (469)

தானென்ற பூரணமாந் தங்கத்தாயை
    சதானந்த பரப்பிர்ம சோதியென்று
ஊனென்ற சராசரத்துக் குயிர்தானென்றும்
    உத்தசிவ யோகமதுக் காதியென்றும்
மானென்ற வாசிதனக் குயிர்தானென்றும்
    மகத்தான பொருளென்றும் அருளேயென்றும்
தேனென்ற அமுர்தரசத் தெளிவேயென்றும்
    தெளிந்துநின்ற பூரணமே யென்றுபோற்றே. (470)

போற்றியே பூரணமாஞ் செந்தூரத்தை
    பூரணச்சந்திரோ தயமென்ற வெள்ளிதன்னில்
பார்த்திபனே பதினாறுக் கொன்றுபோடு
    பதிவான குகைதனிலே உருக்கிப்பாரு
கார்த்துமன துறுதியினு லுருக்கிப்பார்க்க
    கனகமென்ற கனகரதி வயதென்சொல்வேன்
தேத்தியதோர் வயதறிய முடியாதய்யா
    செகசோதி யானபரஞ் சோதியாமே. (471)

ஆமப்பா ஆதிபரஞ் சோதியான
அருளான செந்தூரந் தன்னைமைந்தா
நாமப்பா சொல்லுகிறோம் நவலோகத்தில்
நாட்டமுட னொன்றுபத்தாய் நாட்டிப்பாரு
ஓமப்பா ஒன்றுபத்தாய் நாட்டிப்பார்க்க
உள்ளெழுந்த சோதியைநா னென்னசொல்வேன்
தாமப்பா தன்மயமாய் நின்றசோதி
சகலகலை பூரணத்தின் சோதிகாணே. (472)

காணாத கண்காட்சி சோதியாகும்
கருணையுள்ள பூரணமுஞ் சோதியாகும்
கோணாத வாசியதுஞ் சோதியாகும்
குருவான பிர்மமதுஞ் சோதியாகும்
மாணாகேள் சிவயோகஞ் சோதியாகும்
மகத்தான அண்டமெல்லாஞ் சோதியாகும்
தோணாத சோதியெல்லாஞ் சோதியாகும்
சோதிமய மாய்விளங்குஞ் சோதிதானே. (473)

சோதியென்ற சோதியைத்தான் கண்ணாற்காணச்
சொல்லுகிறேன் கருமான சூட்சந்தன்னை
ஆதியென்ற இரும்பையொரு கல்வத்திட்டு
ஆதிவிந்து தன்னுடனே வாய்நீர்கூட்டி
சாதியென்ற சம்பழத்தின் சாரராலாட்டி
சாதிலிங்க ரசத்துடனே நாகஞ்சேர்த்து
ஓதியதோர் மந்திரத்தால் பாகம்பண்ணி
உத்தமனே கடலைமணி போலேசெய்யே. (474)

செய்ததொரு மணியெடுத்து மைந்தாமைந்தா
செயமான தங்கமதை உருக்கிக்கொண்டு
கொய்ததொரு மணியெடுத்துக் கொடுத்துப்பாரு
குடுக்கவே வாங்கியது குருவாய்நிற்கும்
உய்தமுள்ள குருவதனை களங்குதன்னை
உத்தமனே வெள்ளிபத்தி லொன்றுதாக்கு
சைதன்ய மாகவேநீ தாக்கிப்பார்க்க
சதாகோடி சோதிப்பிர காசந்தானே. (475)

தானென்ற சோதிப்பிர காசந்தன்னை
 தன்மனமே சாட்சியதாய்த் தானேநின்று
கோனென்ற குருவருளைக் காணுதற்கு
 குறியொன்று சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
ஊனென்ற ஆதார மூலாதாரம்
 உள்ளெழுந்த ஆவியடா ஓங்காரந்தான்
மானென்ற ஓங்காரக் கம்பத்தேகி
 மகத்தான புருவநடு உச்சம்பாரே. (476)

பாரப்பா உச்சமென்ற உச்சிமீதில்
 பரைஞான கேசரியின் சோதிதானும்
நேரப்பா நின்றநிலை தன்னிலேதான்
 நிசமாகத் தோணுதடா நினைவாய்ப்பாரு
ஆரப்பா அறிவாலே பார்க்கப்போறார்
 அறிவான தீபமடா ஆதிசோதி
மேரப்பா மேருகிரி சோதிதானும்
 விண்ணடங்காக் கண்ணொளியின் தீபந்தானே. (477)

தானான கண்ணொளியே பிர்மமாகும்
 தன்னையறிந்த சோதியடா அறிவானந்தம்
தேனான ஆனந்த போதந்தானும்
 திருவான பூரணமாய் நிறைந்துதப்பா
மானாகேள் பூரணமாய் நிறைந்துநின்ற
 மதியமுர்த மாரறிவார் மனமேசாட்சி
ஊனான மனதறிவாய் நின்றகாட்சி
 உத்தமனே செகசாட்சி யாகும்பாரே. (478)

பாரடா செகசாட்சி கண்ணின்கண்ணு
 பதிவான கண்ணதுதான் தெய்வந்தெய்வம்
சாரடா தெய்வமென்ற கண்ணிலேதான்
 தன்மையுள்ள மனக்கண்ணைச் சாரப்பண்ணி
காரடா தேசியென்ற வாசியாலே
 கருணைபெறக் கண்டமதில் அங்கென்றாணி
ஏரடா ஆதார மூலம்பார்த்து
 இருக்கிறதே நிராதார சமாதியாங்காணே. (479)

காணவே இன்னமொரு சூட்சங்கேளு
கருவான பிருதிவியில் பழச்சார்விட்டு
பூணவே கல்வமதில் வெண்ணெய்போலே
பொருந்திமிக அறைக்கையிலே ரசத்தைவாரு
தோணவே இருகருவு மொன்றாய்ப்போகும்
துலங்கிநின்ற அரிதாரம் லிங்கஞ்சேர்த்து
ஊணவே அரைத்துநீரு வட்டுப்பண்ணி
உத்தமனே அவிபுடமாய்ப் புடத்தைப்போடே. (480)

போடப்பா அவிபுடமாய்ப் போட்டுமைந்தா
புத்தியுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
நாடப்பா செம்புதனை உருக்கிமைந்தா
நன்மையுட னதுக்குநிகர் மருந்துசேர்த்து
ஆடப்பா குகையமுக ஊதிப்பார்த்தால்
அப்பனே செம்பதுவும் அந்தமாச்சு
கூடப்பா அந்தமதில் மதியைச்சேர்த்து
குன்றாத ரவியொளிபோல் மிச்சமாச்சே. (481)

மிச்சமென்ற சோதியடா உச்சந்தன்னில்
விளங்கிநின்ற கருணையைநா னென்னசொல்வேன்
மச்சுவென்ற மாளிகையா மாறுதாரம்
மணிமந்திர மேடையடா மவுனபீடம்
உச்சமென்ற பீடமதிற் கண்டகாட்சி
ஒருகோடி சூரியன்போல் ஒளியைக்கண்டேன்
அச்சமறக் கொண்டுநின்று கண்டகாட்சி
அரகரா பூரணத்தி னுண்மைகாணே. (482)

ரேட்னகிரி.

காணவே இன்னமொரு கதையைக்கேளு
கமலமென்ற ரெட்னகிரி மலையில்மைந்தா
ஊணவே அதனிலொரு ராச்சதன்றான்
உண்மையுள்ள தேவாதி ரிஷிகள்தன்னை
பேணவே தவசுகளுக் கிடறுபண்ணி
பெரிதான கொடுமைகளைச் செய்தானப்போ
தோணவே யானறிந்து மைந்தாகேளு
சுருக்கிலே ரெட்னகிரி வலம்வந்தேனே. (483)

வந்துநின்ற பிரமராச் சதனைப்பார்த்து
வணக்கமுடன் பேசையிலே நீயாரென்றான்
அந்தமென்ற பரதேசி யென்றுசொன்னேன்
அறியாமலதட்டியெனைப் பேசும்போது
சொந்தமுட னுதரவாய் நின்றுகொண்டு
சுருக்கிலே அவனுடைய பெலத்தைமைந்தா
பந்தமுடன் உயிரறவே பிலத்தைநன்றாய்
பதிவாக வாசியினால் வாங்கினேனே. (484)

வாங்கியந்த ராச்சதனை சம்மாரம்பண்ணி
வணக்கமுடன் தேவாதி ரிஷிகள்கிட்ட
பாங்குபெறச் சென்றடுத்து நிற்கும்போது
பத்தியுட னருகழைத்து அருட்பாலீய்ந்து
தீங்குசெய்த ராச்சதசங் காரஞ்செய்த
திறமதனை யருளுமென்று தேவரிஷிகேட்டார்
தாங்கிமிகக் கேட்டதினால் மைந்தானும்
தன்மையுட னுபதேசஞ் சாற்றினேனே. (485)

சாற்றியதோ ருபதேசம் நன்றாய்க்கேளு
சங்கையுடன் ரும்றீங் சிம்ராவென்று
போற்றிமிகத் தான்செபித்து பூரணத்தைநோக்கி
புத்தியுடன் தானிருக்கும் போதிலேதான்
தேற்றியதோர் சித்தர்சிவ யோகிதானும்
திருநீறு தானெடுத்துக் கொடுக்கும்போது
பார்த்திபனே மந்திரத்தை நினைத்துவாங்க
பதிலாக அவன்பிலமும் வருகும்பாரே. (486)

பாரப்பா எதிராளி முகத்தைப்பார்த்து
பாங்குடனே ரும்றீங் சிம்ராவென்று
நேரப்பா நின்றுமிக பூரித்தாக்கால்
நிசமான தவமுடனே பிலன்களெல்லாம்
சாரப்பா தன்வசமாய்ச் சார்ந்துநிற்கும்
தன்மையுள்ள மந்திரமிது வெளிவிடாதே
தேரப்பா வேகியர்தான் சொன்னமார்க்கம்
சிவசிவா சூட்சம்வெகு சூட்சமாமே. (487)

எதிரி சங்காரம்.

ஆமப்பா சூட்சம்வெகு சூட்சமான
அருமையுள்ள மந்திரத்தைத் தியானம்பண்ணி
ஓமப்பா நல்லோர்க ளிடமாய்மைந்தா
உத்தமனே விபூதியுட னெதுவானாலும்
தாமப்பா தனதாக வாங்கும்போது
சங்கையுட னவர்கள்செய்யுந் தவமெல்லாந்தான்
வாமப்பால் பூரணத்தின் மகிமையாலே
வந்துவிடும் மனதறிவால் மனதைப்பாரே. (488)

மனதாக நல்லோர்க ளிடத்திலிந்த
மந்திரத்தைத் தானினைத்துப் பூரித்தாக்கால்
மீனதாக அவர்கள்செய்யுந் தவப்பலன்தான்
மந்திரங்கள் தன்னுடனே வந்துசேரும்
மனதாக மூடர்வெகு வஞ்சர்கிட்ட
மணிமந்திர பூதியுட னெதுவானாலும்
மனதாக அவர்களிடம் வாங்கும்போது
மக்களே அவர்கள்குணம் வருகும்பாரே. (489)

பாரப்பா ஆனதினால் மைந்தாமைந்தா
பாலகனே பகுத்தறிவா யிருக்கவேணும்
நேரப்பா மநுநீதி ஔவைசொன்னாள்
நிசமான மூதுரையை நன்றாய்ப்பாரு
சாரப்பா பார்க்கையிலே நல்லோர்தீயோர்
சங்கையுடன் தோணுமடா தனதாய்ப்பாரு
தேரப்பா பகுத்தறிவாய் நின்றுகொண்டு
சிவசிவா ஓரறிவில் திறமாய்நில்லே. (490)

எழுவகைத் தோற்றம்.

திறமாக இன்னமொரு சூட்சங்கேளு
தீர்க்கமுள்ள புலத்தியனே மார்க்கவானே
உறமாக எழுவகை தோற்றந்தானும்
உத்தமனே நாலுவகை யோனியாச்சு
பறமான நாலுவகை யோனிதன்னில்
பக்குவமா யெண்பத்துநாலு நூறாயிரம்
நிறமான முகபேத முண்டாச்சப்பா
நேர்மையுட னிதுவிபரஞ் சொல்லக்கேளே. (491)

நாலுவகை யோனி,

கேளடா நாலுவகை யோனிமார்க்கம்
கிருபையுள்ள உற்பீசம் பையசந்தான்
கேளடா அண்டசந்தான் முட்டையாகும்
கெணிதமுள்ள சுவேதசம் வேர்வையாகும்
கேளடா சராயுசந்தான் வித்துவாகும்
கிருபையுட னிதுநாலு மைந்தாமைந்தா
கேளடா நாலுவகை யோனியென்பார்
கேள்வியென்ன எழுவகையின் பிறப்புக்கேளே. (492)

கேளப்பா தேவர்பதி நூறாயிரம்
கிருபையுள்ள மானிடர்கள் ஒன்பதுநூறாயிரம்
சூழப்பா மிருகமது பத்துநூறாயிரம்
சுருக்கான பட்சியது பத்துநூறாயிரம்
வாளப்பா நீர்வாழுஞ் சாதிமுகபேதம்
வகையுடனே பத்துநூறு யிரமதாகும்
நாளப்பா ஊர்வன சாதிபதினொன்று
நன்மையுள்ள தாபரமு மிருபதுதான்பாரே. (493)

எழுவகைப் பிறப்பு.

பாரப்பா எழுவகையுந் தொகைதான்பார்க்க
பத்தெட்டு நாலுநூறு யிரமுமாச்சு
நேரப்பா எண்பத்து நாலுநூறாயிரம்
நிசமான உயிர்பயிர்கள் அவரவர்செய்தவத்தால்
சாரப்பா பூமிதனில் மானிடராய்வந்து
தான்பிறப்பா ரவர்கள்குண மறியப்போமோ
காரப்பா அவரவர்செய் நடத்தையாலே
காணலா மவர்குலத்தைக் கருதலாமே. (494)

ஆமப்பா தேவர்களு மனிதராவார்
அரகரா மனிதர்களு மனிதராவார்
தாமப்பா மிருகமது மனிதராவார்
சங்கையில்லாப் பட்சிகளு மனிதராவார்
நாமப்பா நீர்வாழுஞ் சாதிமனுவாகும்
நாட்டமுட னூர்வனச் சாதிமனுவாகும்
ஓமப்பா தாபரமு மனிதராவார்
உத்தமனே இனமறிய உண்மைகேளே. (495)

கேளப்பா தேவாதி தேவர்தானும்
கெணிதமுடன் மானிடராய்ப் பிறந்தாராகுல்
கேளப்பா கலைக்கியானம் யோகநிஷ்டை
கிருபையுடன் சிவலிங்கஞ் சத்திபூசை
கேளப்பா அன்னமொடு சொர்னதானம்
கெணிதமுள்ள தடாகமடா பதிகள்செய்வார்
கேளப்பா சதாகாலங் குருவைப்போற்றி
கிருபையுடன் தானிருப்பார் தேவர்தானே. (496)

தானென்ற தேவாதி குலத்தைச்சொன்னேன்
தன்மையுள்ள மானிடர்கள் குலத்தைக்கேளு
கோனென்ற குருவருளைத் தியானம்பண்ணி
குவலயத்தில் பொருமையுடன் தவமேசெய்வான்
நானென்ற அகமதனை விட்டுநீங்கி
நல்லோரைப் பெரியோரை நயந்துகொள்வான்
ஊனென்ற அறுசுவையை அன்பர்க்கீவான்
உத்தகுல மானிடரி னுண்மைதானே. (497)

காணவே மிருகாதி மனிதராகக்
காசினியிற் பிறந்திருந்தாற் குணத்தைக்கேளு
ஊணவே சண்டையிட்டு முரண்டுசெய்து
உளன்றுமிகத் தனையறியா வார்த்தைசொல்லி
பேணவே தானமின்றித் தருமமின்றி
பேய்போலே திரிந்தலைவான் பின்முன்காணுன்
பூணவே விலங்கினங்கள் மனிதராகுல்
புண்ணியனே இக்குணத்தால் கண்டுகொள்ளே (498)

கொள்ளடா விலங்கினத்தின் குணத்தைச்சொன்னேன்
குறிப்புடனே பட்சிகளின் குணத்தைக்கேளு
விள்ளடா அன்னமென்று கேட்டோர்க்கீயான்
வெரும்பேச்சாய்த் தெருத்தோறு மலைவான்மட்டை
நல்லடா நல்வசனஞ் செவியிற்கேளான்
நாட்டமில்லான் வெட்கமில்லான் நன்மையில்லான்
உள்ளடா உள்ளமுவும் பறந்தேநிற்பான்
உத்தமனே இக்குணத்தால் குலத்தைக்காணே. (499)

பாரடா நீர்வாழுஞ் சாதிதானும்
பக்குவமாய் மானிடராய்ப் பிறந்தாரானல்
ஊரடா தெருத்தோறுங் குலைத்துநிற்பான்
உத்தமனே சாடிசொல்லிச் சண்டைசெய்வான்
கூரடா கொலைகளவு சதியேசெய்வான்
குருவான பெரியோரை அழிம்பாய்ச்சொல்வான்
சேரடா நல்லுறவைப் பிறிவேசெய்வான்
நீர்வாழுங் குணத்தினுட நெறிதான்காணே. (500)

காணவே ஊர்வனத்தான் மனிதராகக்
காசினியிற் பிறந்திருந்தால் குணத்தைக்கேளு
ஊணவே பத்தியுடன் புத்திகெட்டு
உழன்றுபர தவித்துமிக உறுதிகெட்டு
நாணவே உடம்பெடுத்து முணுமுணுத்து
நல்வசனம் நாட்டமுள்ள வசனங்கெட்டு
தோணவே நன்மைதின்மை ரெண்டுங்கெட்டு
தோன்றிடுமே யிக்குணத்தால் குலத்தைக்காணே. (501)

குணமான ஊர்வனத்தின் குலத்தைச்சொன்னேன்
குறியில்லா தாபரத்தின் குலத்தைக்கேளு
இணமான இன்பங்கள் செவியிற்கேளான்
இன்பதுன்ப மிரண்டையுமே யறியமாட்டான்
கனமான சிவதவங்கள் செய்யமாட்டான்
காசினியில் வேடமிட்டுப் பொய்யேசொல்வான்
வனமான கானகமே குடியாய்நின்று
வாழுமரக் கர்குலத்தோர் வாழ்க்கைதானே. (502)

தானென்ற எழுவகையின் தோற்றமான
சங்கையுடன் மனுநெறியின் முறைமைசொன்னேன்
கோனென்ற குருவருளா லறிந்துகொண்டு
குணமான அவகுணத்தைத் தள்ளிநல்லோர்
வானென்ற கேசரியை வணங்கிமைந்தா
மகத்தான சிவயோக முத்தராகித்
தேனென்ற அமுர்தரசங் கொண்டுநல்ல
சிவஞான குருவாகித் திரிவார்காணே. (503)

காணப்பா சிலதுபேர் மைந்தாகேளு
கயிலாச வர்க்கமென்று கருணையாவார்
தோணப்பா சிலபேர்கள் மூலவர்க்கத்
துறைதனிலே அழுந்திமிகச் சுகமேயாவார்
வீணப்பா சிலதுபேர் ரெண்டுங்கெட்டு
மேல்வரம்பு கீழ்வரம்பு அறியமாட்டார்
பூணப்பா உலகமதில் கண்டுகொண்டு
புத்தியுடன் தானிருந்து தன்னைப்பாரே. (504)

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும்போது
தயங்காத ஒளிமூலம் வெளியாய்க்கண்டேன்
கண்ணைத்தா னறிந்தஒளி வெளியாய்க்கண்டேன்
கண்கண்ட வெளியில்யெழு வகையுங்கண்டேன்
விண்ணைத்தா னறிந்துஅந்த விண்ணிலேதான்
விதவிதமா யொளிவான தெளிவைக்கண்டேன்
மண்ணைத்தா னறிந்துமண்ணும் விண்ணுமொன்றாய்
மகத்தான ஒளிவெளியாய் வெளியுமாச்சே. (505)

ஆச்சப்பா இன்னமொரு தீச்சைகேளு
அருளான அஞ்சனா தேவிமூலம்
பேச்சப்பா பேசாத மவுனமூலம்
பிலமான புலத்தியனே சொல்லக்கேளு
மூச்சப்பா நிறைந்தவெளி மூலாதாரம்
முத்திதரும் ஆதார முடிவில்நின்று
காச்சப்பா ஓங்கிலியும் ரங்ரங்கென்று
கண்ணாற நூறுருவிற் காணலாமே. (506)

காணுகிற விதமென்ன மைந்தாகேளு
கற்பூர தீபஒளி சோதிபோலே
தோணுகிற போதுமனம் ஒன்றாய்நின்று
சோதியெனு மஞ்சனா தேவியென்று
பேணியவள் பாதமதை சிரமேல்கொண்டு
பிலமாக மானதமாய்ப் பூசைபண்ணி
ஊணிமன மொன்றாக நீறுசாத்தி
உத்தமனே நித்தியமுந் தியானம்பண்ணே. (507)

பண்ணப்பா நித்தியமுந் தியானம்பண்ண
பதிவான இருதயமே வாசமாகி
முண்ணப்பா நிறைந்ததிரு சோதிபோலே
முக்யமுடன் காணுமந்த சோதிதன்னால்
கண்ணப்பா கண்ணுமன மொன்றாய்நின்று
காணுதடா அண்டபதங் கண்ணிநேரே
உண்ணப்பா உன்னியந்த விண்ணுமண்ணும்
ஊடுருவிப் பார்த்ததைநீ ஒண்டிக்கேளே. (508)

ஒண்டுமிடந் தனையறிந்து அண்டத்தேகி
ஊசாடு மஞ்சனு தேவிமூலம்
நின்றுமன தறிவாலே தியானம்பண்ணி
நேமமுடன் விபூதியைநீ தரித்துக்கொண்டு
சென்றுஅந்த ஆகாச வெளியைப்பாரு
திருவான அஞ்சனு தேவிதன்னால்
கண்டுகொள்வாய் பகல்காலம் நட்சேத்திரங்கள்
காணுமடா கண்ணறிந்து கண்ணால்பாரே. (509)

கண்ணாரப் பூமியைநீ நன்றாய்ப்பார்த்து
கருணைவிழிப் பார்வையினால் உண்ணிப்பாரு
பொன்னான பூமிநடுப் பாதாளத்தில்
பொருளான வெகுநிதிகள் பொருந்தக்காணும்
முன்னோர்கள் வைத்தநிதி கண்டாயானால்
மோகமென்ற ஆசையைநீ வைக்கவேண்டாம்
விண்ணோர்கள் செய்தவத்தை நன்றாய்ப்பாரு
மெஞ்ஞான அஞ்சனு தேவிதானே. (510)

தானான அஞ்சனு தேவிதானும்
தன்மையுடன் தானிருக்கும் பதியைக்கேளு
வானான புருவமடா அண்டத்தாதி
மகத்தான பரவெளியில் வாசமாகி
கோனான ரவிமதிபோல் பிரகாசித்து
கொண்டுநின்ற வடிவுதனை என்னசொல்வேன்
ஊனான உலகமெல்லாங் கண்ணாய்நின்று
ஒளிவெளியாய் நின்றதடா உண்மைபாரே. (511)

உண்மையென்ற பூரணமே மவுனபீடம
உத்தகலை ரவிமதிசென் றிருக்கும்வீடு
நன்மையென்ற வீடதிலே நயனநாட்டம்
நாட்டமுட னீயிருந்து நன்றாய்ப்பார்த்தால்
சின்மயமாய் நின்றஓங் காரதீபம்
திருவான கம்பமடா வாசியாச்சு
தன்மையுட னின்றிலங்கும் வாசியாலே
சாயுட்ச பதவியது தான்தானாச்சே. (512)

ஆச்சப்பா சாயுட்ச பதவியான
அருள்பெருகுந் தெரிசனத்தைச் சொல்லக்கேளு
பேச்சப்பா பேசாத பஞ்சபூதம்
பெரிதான பூதமடா வாதத்தந்தம்
காச்சப்பா கருவறிந்து அந்தம்பார்க்க
கருவிபரஞ் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
மூச்சப்பா நிறைந்தஅயக் காந்தத்தோடே
முத்தியுள்ள ரவிமதியுஞ் சுழினைகூட்டே. (513)

கூட்டிநன்றாய் குகைதனிலே உருக்கிப்பார்க்க
குருவான களங்கமடா அயக்களங்கம்
நாட்டமுள்ள களங்கமதை வைத்துக்கொண்டு
நாலாறு வெள்ளியிலே ஒன்றுபோட்டு
வாட்டிமிக உருக்கிநன்றா யெடுத்துப்பாரு
மகத்தான சோதிபரஞ் சோதியாகும்
தேட்டமுடன் சோதிதனைக் கண்டாயானால்
சிவசிவா சிவயோகந் திறந்தான்பாரே. (514)

திறமாக இன்னமொரு செய்திகேளு
தீர்க்கமுள்ள புலத்தியனே செயமதாக
திறமான அயமதனைத் தகடாய்த்தட்டி
செயமாகக் குகைதனிலே சேர்த்துமைந்தா
உறமாகத் தானுருக்க வகையைக்கேளு
உத்தமனே அப்புடனே தேய்வுசேர்த்து
உறமான வாய்வுடனே ஆகாசந்தான்
உண்மையுட னைந்தையுமே ஒன்றாய்க்கூட்டே. (515)

கூட்டிநன்றாய்க் காரமிட்டு உருக்கிப்பார்க்க
குருவான அயமதுவு முருகிமைந்தா
வாட்டமில்லாச் சோதியைப்போல் பிரகாசிக்கும்
மைந்தனே அதுக்குநிகர் ரசமுங்கெந்தி
தேட்டமுடன் கூட்டிநன்றாய்க் கல்வத்திட்டு
திருவான முப்பூவும் பணவிடைதான்போட்டு
நாட்டமுள்ள பொற்றலையின் சாற்றாலாட்டி
நன்மையுடன் ரவிமுகத்திற் காயப்போடே. (516)

போடப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால்
புத்தியுடன் தானெடுத்துப் பத்துக்கொன்று
நாடப்பா செயவீரம் ஒன்றாய்ச்சேர்த்து
நன்மையுடன் தான்பொடித்துக் குப்பிக்கேத்தி
மூடப்பா குப்பிதனக் கங்கிபூட்டி
மூர்க்கமுள்ள தாளியிலே சாம்பலிட்டு
வீடப்பா பிலப்பதற்குக் குப்பிவைத்து
மேலுமந்த மூக்களவு சாம்பல்சாத்தே. (517)

சாத்திமிகப் பாண்டமதை அடுப்பிலேத்தி
சற்குருவைத் தான்தொழுது அனலேமூட்டி
பாத்திபனே சருகுகம்பு விறகுதன்னால்
பக்குவமாய்த் தானெரிப்பா யாவிகாண
போத்திமிக ஆவிதனைக் கண்டபோது
புத்தியுடன் பூரணமே யென்றுபோற்றி
ஆத்துமத்துக் கரசான சோதியென்று
அன்புடனே தானிறக்கிக் குளிரவையே. (518)

வையடா பாண்டமதைக் குளிரவைத்து
மார்க்கமுள்ள குப்பிதனை யெடுத்துப்பாரு
மெய்யடா சொல்லுகிறேன் செந்தூரந்தான்
வேதாந்த அருணகிற மிதுக்கொவ்வாது
அய்யனே புலத்தியனே பதனம்பண்ணி
அந்திசந்தி பணவிடைதான் கொண்டாயானால்
மய்யடா மய்யமென்ற சுழினைதன்னில்
மக்களே செகசோதி காணலாமே. (519)

சோதியென்ற செந்தூரங் கொள்ளும்போது
சுகமாகப் பாலுடனே அன்னங்கொண்டால்
ஆதியென்ற தேகமதுந் தஞ்சாதய்யா
அரகரா வாசியது நிலையில்நிற்கும்
ஓதியதோர் வாசியது நிலையில்நின்றால்
ஒருதீங்கு மில்லையடா உண்மையாகும்
வாதியென்ற ரசவாத முறுதியாகும்
மகத்தான செந்தூர வரிசையாரே. (520)

வரிசையென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு
மகத்தான செந்தூர வளமைதன்னை
உருசையுடன் வெள்ளிசெம்பு தகடுதட்டி
உண்மையுடன் செந்தூரத் திலதமிட்டு
கரிசனமா யோட்டில்வைத்துப் புடமேசெய்தால்
கருணையுள்ள செந்தூரத் தாலேமைந்தா
தெரிசனமாய் நின்றதொரு சோதிபோலே
சிவசிவா தங்கமய மாகுந்தானே. (521)

யாரப்பா தங்கமய சோதித்தாயை
பத்திகொண்டு அவள்மகிமை பெற்றோர்க்கெல்லாம்
பேரப்பா பெற்றசிவ யோகியாகும்
பேரண்டஞ் சித்தண்டம் ரெண்டுங்காண்பான்
நேரப்பா நின்றநிலை தனையறிந்து
நேர்மையுட னஷ்டசித்து நிலையைக்காண்பான்
சாரப்பா யிகபரமுந் தானேதானாய்
சச்சுதா னந்தமயந் தானவானே. (522)

தானான தங்கரதி சோதித்தாயை
தரணிதனிற் கோடியிலே ஒருவனப்பா
கோனான சற்குருவின் கடாச்சம்பெற்று
கூர்மையுடன் பஞ்சகர்த்தா நிலையுங்கண்டு
வானான நிலையறிந்து பஞ்சபூத
வகையறிந்து துகையறிந்து வணக்கம்பெற்று
நானான அகம்போக்கித் தானாய்நின்று
நாதாந்த பூரணத்தில் நாடுவானே. (523)

நாடுவான் நந்திபதங் கெதியென்றெண்ணி
நாதாந்த பூரணத்தை நலமாய்க்கண்டு
பாடுவான் சாஸ்திரங்க ளனேகமார்க்கம்
பருதிமதி நிலைபறிந்து பணிந்துகொண்டு
கூடுவான் நாதாந்தக் குறிகண்டூட்டி
குருவான ரசவாத முறமைபெற்று
தேடுவான் சின்மயத்தின் சோதிபாதம்
சிந்தைமன தொன்றாகத் தெளிவான்பாரே. (524)

பாரப்பா இன்னமொரு பாகஞ்சொல்வேன்
பதிவான பிருதிவியைப் பழச்சாற்றாலே
நேரப்பா மய்யதுபோல் நன்றாயாட்டி
நினைவாக நாகரசம் லிங்கந்தாரம்
சேரப்பா பிருதியில் கூட்டிக்கொண்டு
செம்மையுடன் தானரைத்து உருட்டிமைந்தா
காரப்பா அவிபுடத்திற் பாகம்பண்ணி
கருணையுட னின்னமொரு கருவைக்கேளே. (525)

கருவான வகைவிபர மென்னசொல்வேன்
களிம்பான செம்புதனைக் குகையிலிட்டு
கருவான காரமிட்டு உருகும்போது
கருணையுட னவிபுடத்தின் மருந்தையூட்டு
கருவாக வாங்கியது கட்டும்பாரு
கட்டியது திட்டமுடன் கருத்துநிற்கும்
கருவாகக் கட்டிநின்ற செம்பைமைந்தா
கருத்துறவே யிடைக்கிடைதா னயத்தைச்சேரே. (526)

சேர்த்துநன்றாய்க் காரமிட்டு உருகும்போது
சிவசிவா பருதிமதி சுழினைகூட்டி
பார்த்துமிகப் பத்தியதா யுருக்கிப்பார்த்தால்
பாலகனே பரஞ்சோதி விந்துவாச்சு
கார்த்துநன்றாய்ச் சோதியுட விந்துவாங்கி
கருணையுடன் வெள்ளிதனில் பத்துக்கொன்று
ஆத்துமத்துக் குயிரான வித்துப்போட
அப்பனே கலைபொருந்திச் சோதியாச்சே. (527)

ஆச்சப்பா வெள்ளியது சோதியாச்சு
அண்டகே சரிமாதி னருள்தன்னாலே
மூச்சப்பா நிலையான முக்கோணத்தில்
முளைத்தெழுந்த வாசியடா ஓங்காரந்தான்
பேச்சப்பா பேசாத ஓங்காரந்தான்
பிலமான அகாரமடா மகாரபீடம்
நீச்சப்பா நிலையாத மகாரபீடம்
நிசமான புருவமத்தி உச்சம்பாரே. (528)

உச்சமென்ற ஆகாசந் தன்னில்மைந்தா
உண்மையென்ற மவுனரசச் சுனைதானுண்டு
பச்சமுட னச்சுனையைக் கண்டுமைந்தா
பாலகனே பசியார அமுர்தங்கொண்டு
அச்சமற அமுர்தரசங் கொள்ளும்போது
ஆனந்த போதமடா அறிவானந்தம்
நிச்சயமா யறிவான போதந்தன்னை
நீமகனே மறவாதே நிலையைப்பாரே. (529)

நிலையான அடிவார மூலாதாரம்
நின்றநிலை தனையறிந்து மேலாதாரம்
மலையான மேருவடா அண்டத்துச்சி
மகத்தான கொடுமுடியில் வாசிமூலம்
கலையான பூரணமாய் நிறைந்துதய்யா
கண்ணுமனக் கண்ணதனால் நின்றுபாரு
சிலையான தேகமடா வெளியாய்க்காணும்
சித்திபெறத் தெளிவறிந்து ஒளியைப்பாரே. (530)

பாரப்பா பரமவெளி தன்னிலேதான்
பருதிமதி ஒளிவுதனைப் பார்க்கும்போது
நேரப்பா நிலையான நயனஞ்சூட்சம்
நிசமான சூட்சமடா கமலக்கண்ணு
ஆரப்பா அறிவார்க ளந்தக்கண்ணை
ஆதியிலே வாசிகொண்ட அருமைக்கண்ணை
சாரப்பா தன்னறிவா லந்தக்கண்ணை
சதானந்த பூரணத்தால் கண்டுபாரே. (531)

கண்டுநிதம் பார்க்கையிலே மைந்தாமைந்தா
கமலமென்ற கண்ணதிலே மனக்கண்பாய்ந்து
கொண்டுநின்ற வடிவுதனை யென்னசொல்வேன்
கூர்மையுடன் பார்க்கையிலே யெல்லாந்தானாய்
அண்டமொடு புவனமெல்லாந் தானேதானாய்
ஆதிசிவ சோதிவெளி தானேதானாய்
நின்றநிலை தனையறிந்து நின்றசோதி
நினைவுகொண்டு பார்க்கையிலே வெளிதானாமே. (532)

அயக்காந்த சத்துசெந்தூரம்.

வெளியாக இன்னமொரு கருவைச்சொல்வேன்
வேதாந்த புலத்தியனே நன்றாய்க்கேளு
வெளியான நாகமடா விஷ்ணுவாகும்
விசையான ரசமதுதான் ருத்திரமூர்த்தி
வெளியான தங்கமடா பிரமரூபம்
மேன்மைபெற மூன்றுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
வெளியான அயக்காந்தம் ஒன்றாய்க்கூட்டி
மேன்மைபெற உருகையிலே மூன்றுஞ்சேரே. (533)

சேர்க்கையிலே அயக்காந்தச் சோதிதன்னில்
செம்மையுடன் பாய்ந்துமிகத் தெளியலாச்சு
ஏர்க்கையுட னத்தெளிவை நன்றாய்ப்பார்த்து
யேமரச பூரணத்தை யிடைதான்சேர்க்க
மார்க்கமுள்ள தங்காதி களங்கமாச்சு
மகத்தான களங்கதனைக் கல்வத்திட்டு
தீர்க்கமுள்ள பொற்றலையின் சாற்றாலாட்டி
செயமாக ரவிதனிலே காயப்போடே. (534)

போட்டதொரு மருந்ததனைப் பொடித்தாகல்ல
பூரணமாஞ் செயவீரம் காலுக்கொன்று
நாட்டமுடன் தான்கூட்டிப் பொடித்துமைந்தா
நன்மையுடன் காசியென்ற குப்பிக்கேத்தி
தேட்டமுடன் மண்சீலை திறமாய்ச்செய்து
தீர்க்கமுள்ள பாண்டமதில் சாம்பலிட்டு
தாட்டிகமாய்க் குப்பிநடு மூக்குமட்டும்
சாம்பலிட்டு அடுப்பேத்தித் தாயைப்போற்றே. (535)

போத்திமிக அடுப்பேற்றிப் பதத்தைப்பாரு
புண்ணியனே ஆவியது மேலேகண்டால்
பாத்திபனே மயேஸ்பரியைத் தியானம்பண்ணி
பதிவாக ஆயிரத்தெண் ணுருவேசெய்து
வாத்திமிகப் பாண்டமதை யிறக்கிமைந்தா
மனங்குளிரக் குளிரவைத்து யெடுத்துப்பார்த்தால்
பூத்தமலர் வாசனையா முருக்கம்பூப்போல்
புண்ணியனே செந்தூரக் கட்டியாமே. (536)

கட்டிநின்ற செந்தூரக் கட்டிவாங்கி
கருணையுடன் பணவிடைதான் பாலிற்கொண்டால்
கெட்டிகெட்டி யென்னசொல்வேன் பாண்டத்திட்டம்
கிருபையுள்ள வாசியது கெட்டியாச்சு
சட்டமுடன் வாசியது கெட்டியானல்
சதாசிவனு மனோன்மணியுந் தானேதானய்
இட்டமுட னிருதயமே சோதியாகி
ஏகாந்த பூரணத்தி லிருக்கும்பாரே. (537)

பாரப்பா பூரணத்தி லிருந்துகொண்டு
பத்தியுடன் செந்தூரந் தன்னைவாங்கி
காரடா நவலோகந் தன்னிற்பூசி
கருணையுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நேரடா நீயிருந்து பார்க்கும்போது
நிசமான நவலோகஞ் செந்தீப்பட்டு
வீரடா கொண்டதுவும் சோதியாச்சு
விளங்கிநின்ற சோதிமயத் தங்கமாச்சே. (538)

தங்கத்தாய் பரப்பிரம சோதிதானுப்
சமரசமாய்த் தரணிதனி லார்தான்காண்பார்
அங்கத்தா யாதியிலே மங்கைத்தாயாய்
அரிதரிது அமுர்தரசம் அப்போயீய்ந்தாள்
மங்கைத்தா யமுர்தரசங் கொண்டபோதே
மகத்தான சோதிசிவ சூட்சங்கண்டேன்
கெங்கைத்தா யங்கமுடன் மங்கைத்தாயாய்
கேசரத்திற் கண்டுகெதி கொண்டேன்பாரே. (539)

பாரப்பா கேசரத்தில் மனக்கண்வைத்து
பத்தியுடன் பூரணத்தில் நிற்கும்போதில்
நேரப்பா அண்டவெளி யென்னசொல்வேன்
நிசமான பரவெளியி நேர்மைதன்னை
ஆரடா அறிவார்க ளாருமில்லை
அண்டவெளி தன்னிலொரு அதிசயந்தான்
காரடா கண்ணதனால் பார்க்கும்போது
கமலரச முறைந்திருந்து தயிருமாச்சே. (540)

தயிரான தயிரறிந்து உயிரைக்காக்க
தயிரியமா யத்தயிரைக் கொண்டேனப்போ
உயிரான உயிரதுதான் தயிரியமதாகி
உத்தகலைக் கியானமென்ற வாசியேறி
பயிரான உயிர்பயிரை யெல்லாந்தன்னுள்
பார்க்கையிலே சோதிசிவ மயமுமாச்சு
தயிரான பூரணத்தின் மகிமையாலே
சகலமுமே வெளிமயமாய்த் தான்கண்டேனே. (541)

கண்டதொரு ஆகாச வெளிதானென்றும்
கடந்தகட மாகாச வெளிதானென்றும்
விண்டபொரு ளிருவகையாய்ச் சொல்லும்வார்த்தை
வேதாந்த மயக்கமென அறியார்மூடர்
கொண்டதொரு ஆகாச வெளியினுள்ளே
குறிப்பான வஸ்துவெல்லாம் வெளிதானாச்சு
அண்டர்பிரா னருளதுவும் வெளிதானாச்சு
ஆனஉயிர் பயிர்களெல்லாம் வெளிதான்பாரே. (542)

பாரான ஆகாச மதுதானாச்சு
பதிவான வாய்வுமடா அதுதானாச்சு
நேரான நெருப்பதுவு மதுதானாச்சு
நிலையான சிவமதுவு மதுதானாச்சு
வாரான பிருதிவியு மதுதானாச்சு
மகத்தான பரவெளியு மதுதானாச்சு
பேரான பராபரமு மதுதானாச்சு
பெருகிநின்ற சத்திசிவ மதுதானாச்சே. (543)

ஆச்சென்ற சொன்னதுவு மதுதானுச்சு
ஆனந்த மானதுவு மதுதானுச்சு
பேச்சென்ற சத்தமெல்லா மதுதானுச்சு
பேசாத மவுனமது மதுதானுச்சு
மூச்சென்ற வாசியது மதுதானுச்சு
மோகமென்ற மாய்கையெல்லா மதுதானுச்சு
நீச்சென்ற சாகாமு மதுதானுச்சு
நின்றுவிளை யாடும்வெளி வெளிதானுச்சே. (544)

ஆச்சப்பா சிவஞானஞ் சுத்தஞானம்
அந்தரங்க மானதொரு ஞானந்தன்னை
பேச்சப்பா பேசுதற்கு மூச்சங்கில்லை
பிரணவத்தின் கிருபையினுல் பேசுவேன்கேள்
மூச்சப்பா நிறைந்தவெளி மண்விண்ணப்பா
முத்தியுள்ள கெடமாச்சு கெடத்தினுள்ளே
வீச்சப்பா நிறைந்தஉயிர் பயிர்களெல்லாம்
விளங்கிநின்ற ஆகாச மென்றும்பேரே. (545)

பேரான விண்ணுமண்ணுங் கெடமதாச்சு
பெருகிநின்ற உயிர்பயிரா காசமாச்சு
நேரான கெடமதிலா காசந்தானும்
நிறைந்தபரி பூரணமாய் விளங்குதய்யா
சீரான கெடமதுவும் நசிப்பதில்லை
சிறந்தபயி ருயிரதுவும் நசிப்பதில்லை
கூரான கெடமதிலா காசந்தானும்
கூர்மையுடன் தானறிய வெளிதான்காணே. (546)

வெளியான சோதிதனை விழிதான்கண்டு
விளங்கும்விழி வெளியோடே ஒளியாய்ப்போச்சு
வெளியான சாகரத்தில் மைந்தாகேளு
விளங்கும்ஒளி யானதொரு சுழிதானென்று
வெளியான சுழிதனிலே உயிர்பயிர்கள்
விளைந்துஅந்தச் சுழிதனிலே அமர்ந்துபோச்சு
வெளியான வெளியாச்சு சுழியின்சூட்சம்
வெட்டவெளி சுத்தமறி ஈ நிட்டந்தானே. (547)

திட்டமுடன் பிரபஞ்ச நிலையைப்பார்த்தால்
சிவசிவா செகசால மென்னசொல்வேன்
திட்டமுள்ள சாலமெல்லா மனக்கண்ணாலே
தீர்க்கமுடன் யானறிந்து பார்க்கும்போது
திட்டமுள்ள ரவிமதியின் ஒளிதன்னாலே
திருநடன மானசெக சாலமப்பா
திட்டமுள்ள சாலமெல்லாம் விழிமயக்கம்
தெளிந்துவிழி மயக்கமதை அறிவால்பாரே. (548)

அறிவான தெளிவதுதா நாதவிந்து
ஆதியந்த பூரணமு நாதவிந்து
குறியான நால்பதமு நாதவிந்து
குவிந்தஅண்ட சரா சரமு நாதவிந்து
நெறியான பஞ்சகர்த்தா நாதவிந்து
நிலையான ஆதாரம் நாதவிந்து
சரியான சமரசமு நாதவிந்து
சதானந்த போதமது நாதவிந்தே. (549)

விந்தான நாதவிந்து நிலையைப்பார்த்தால்
விண்ணுக்கு மண்ணுக்கு நடுவிலேதான்
சொந்தமென நின்றுவிளை யாடுதப்பா
சோதியென்ற பருதிமதி சூக்ஷந்தானும்
பந்தமென்ற சூக்ஷமதை யென்னசொல்வேன்
பரவெளியில் ஒளியாகிப் பாய்ந்துபாய்ந்து
அந்தமென்ற வெளியோடே வெளியாய்ச்சேர்ந்து
அந்தவெளி பரவெளியா யமர்ந்தவாறே. (550)

அமர்ந்துநிலை யறியாத மூடருண்டு
ஆதாரந் தெரியாத அசடருண்டு
சுமந்தபிணம் போல்திரிவார் வெகுபேருண்டு
சோதிமய மறியாத சுணங்கருண்டு
குமந்தசெடம் நோய்மிகுந்து வேடம்பூண்டு
குறிநெறியை யறியாமல் குணமில்லாமல்
நமனென கூத்துவன்றன் பாசத்துள்ளே
நடுங்கிமனம் குளன்றவரை நயந்துதள்ளே. (551)

தள்ளுவது யென்னவென்றால் மைந்தாகேளு
தருகாமல் பொய்புரைக்குஞ் சவங்கள்தன்னை
உள்ளுணர்ந்து பாராத வுத்தர்தன்னை
உத்தமரைத் தூசிக்கும் உருப்பேய்தன்னை
கள்ளுடனே அபினரக்குக் கொண்டுமோக
காமவலைக் குள்ளழுந்தும் கழுதைதன்னை
அல்லடா இவர்களைநீ கண்டாயானால்
அவர்கள்முகம் பாராதே அருளைப்பாரே. (552)

அருளான புருவமய்ய மாதிவீடு
ஆதியந்த மானதொரு உச்சிமூலம்
பொருளான அருள்விளங்கும் போதஞானம்
போதமய மானசிவ ஞானதீபம்
இருளான மாய்கையெல்லா மகற்றுமந்த
ஏகநிரா மயமான சோதிதன்னை
மருளாமல் மனதுகந்து மனக்கண்கொண்டு
மாசற்ற பூரணத்தை வணங்கிக்காணே. (553)

வணங்குவது பெரியோரை வணங்கவேணும்
மகத்தான நூல்முறைகள் பார்க்கவேணும்
குணங்களொரு மனதாகக் குவியவேணும்
குருவான சத்திசிவ பூசைவேணும்
இணங்குவது வாசியிலே யிணங்கவேணும்
ஏகாந்த மானசிவ யோகம்வேணும்
மனங்குவிந்து மவுனரசங் கொள்ளவேணும்
மகத்தான கேசரியில் வாசிபூட்டே. (554)

மலையில் குகையுண்டாக்க.

வாசிநிலை கண்டுசிவ யோகஞ்செய்ய
மகத்தான புலத்தியமா ரிஷியேகேளு
பேசவொண்ணா அந்தரங்க உண்மைதன்னை
பெரிதான எக்கியமா முனிதான்சொன்னார்
நேசமுடன் மலைகளிலே குகையுண்டாக்க
நீமகனே மனதுகந்து மலையிற்சென்று
பாசமுட னல்புறமுஞ் சுத்திப்பார்த்து
பதிவான யிடமதிலே குகைதாஞ்செய்யே (555)

குகையறிந்து செய்வதற்கு வகையைக்கேளு
குருவான பூனீறு கல்லுப்போடு
தகையாத கரியுப்பு வெடியுப்புத்தான்
சார்வான நவச்சார மன்னபேதி
பகையான மலைபேதி மாங்கிசபேதி
பத்தியுள்ள கல்நாதம் கல்மதந்தான்
புகையாத அரைபொடியுங் கல்காந்தங்கிட்டம்
புண்ணியனே சாக்குவகை பதிமூன்றுச்சே. (556)

ஆச்சப்பா சாக்குவகை பதிமூன்றுந்தான்
அப்பனே சமபாகம் நிறுத்துக்கொண்டு
பாச்சப்பா கல்வமதில் பொடித்துநன்றாய்
பருசான யிரும்பினுட தாளிசேர்த்து
நீச்சப்பா யானைபரி கத்தம்விட்டு
நிசமான புலிகாடி ரெத்தம்வார்த்து
வாச்சப்பா கொள்ளவித்த தண்ணீர்விட்டு
மார்க்கமுடன் நவ்வலுட கம்பால்கிண்டே. (557)

கிண்டிநன்றாய் ரவியில்வைத்து தெளிவைநன்றாய்
கிருபையுட னத்தெளிவை மலைமேலூத்த
சுண்டிநன்றாய்ச் சுவறியது உவடுபோலே
சுத்தமுடன் பொங்கியது உப்பாம்பாரு
கண்டிதமாய் சீருண்டு கல்லுப்புப்போல்
கசிந்துரிக உருகுமடா அந்தவேளை
தெண்டதுபோல் கூந்தாளஞ் செய்துகொண்டு
திரமாக வெட்டியெடு குகைபோல்தானே. (558)

தானான உவர்நீரைப் பின்னும்விட்டு
தன்மனதுக் கேற்கவே குகைதான்செய்து
மானேகேள் குகையதுவும் நன்றாய்ச்செய்து
மகத்தான உவர்நீக்க வகையைக்கேளு
தேனான மதுஉடனே தண்ணீர்பாலும்
சிறுகரந்தைச் சாத்துடனே சேர்த்துக்கொண்டு
கோனான குகையைநன்றாய்க் கழுவிப்போட்டால்
கொடுமையுள்ள உவர்நீங்கித் திறக்கும்பாரே. (559)

பாரப்பா யிவ்விதமாய்க் குகைதான்செய்து
பத்தியுட னதிலிருந்து தவமேசெய்வாய்
நேரப்பா தனித்திருந்து தவமேசெய்தால்
நினைவதிலே பாய்ந்தாவி யொளிதான்காணும்
சாரப்பா தனித்திருந்து ஒளிதான்பார்க்க
தலைமலைகள் கெவிகள்வனம் தனில்சென்றார்கள்
காரப்பா கண்ணொளியைக் கண்ணால்பார்க்க
கருத்துறவே தனித்திருந்து கண்ணைப்பாரே. (560)

கண்ணைப்பார்த் தந்தஒளி தன்னைப்பார்க்க
கருவாக இன்னமொரு கருவைக்கேளு
நன்னப்பா அரபொடியுங் காந்தங்கிட்டம்
நவச்சாரம் பூனீரு அன்னபேதி
ஊணப்பா பழச்சாற்றால் நன்றாயாட்டி
உத்தமனே பழச்சாற்றில் கலக்கிவைத்து
விண்ணப்பா உயர்ந்ததொரு திட்டுப்பார்த்து
மேன்மைபெறக் குளியடித்து ஊத்திடாயே. (561)

ஊத்தியொரு மண்டலமே சென்றபாரு
உறுதியுள்ள கல்மடிந்து உப்பாய்நிற்கும்
வாத்திநன்றாய் மடிந்தகல்லு உப்பைவாங்கி
மார்க்கமுடன் பழச்சாற்றா லரைத்துருட்டி
போத்திநன்றாய்க் காயவைத்து புடத்தைப்போட்டால்
புண்ணியனே உப்பதுவுஞ் சுண்ணமாகும்
காத்துநன்றாய்ச் சுண்ணமதை வைத்துக்கொண்டு
கனகமென்ற வாதமுறைக் கருவைப்பாரே. (562)

ஆதிக்களங்கு.

கருவான வாதமுறை கருவேதென்றால்
கசிந்துருகு மபூர்தரச வாதமப்பா
உருவான அபூர்தரச வாதந்தானும்
உத்தகெந்தப் பிருதிவியு மப்புமாச்சு
திருவான பிருதிவியு மப்புங்கூட்டி
தீர்க்கமுட னுருகையிலே நாகஞ்சேரு
குருவான நாகமது சேர்ந்தபோது
கூசாமற் சோதியென்ற தங்கஞ்சேரே. (563)

சேர்த்துமிகத் தானுருக்கிப் பார்க்கும்போது
சிவசிவா தங்காதி களங்குமாச்சு
பாத்திபனே தங்காதிக் களங்கைமைந்தா
பத்தியுடன் வெள்ளிதனில் பத்துக்கொன்று
போத்திமிகத் தானுருக்கி யெடுத்துப்பாரு
பூரணமாய்ச் சோதிமயத் தங்கமாமே
மாத்ததிக மானதங்கச் சோதித்தாயை
மார்க்கமுடன் கண்டுசிவ யோகஞ்செய்யே. (564)

செய்யடா சிவயோகத் தவமேசெய்தால்
சிந்தைதனில் நினைத்ததெல்லாம் தீர்க்கமாகும்
மெய்யடா மய்யமதில் திபங்காணும்
வேதாந்தக் கேசரியாள் வசமாய்நிற்பாள்
கையடா கூப்பியவள் பாதம்போற்றி
கருணைபெற மானதமாய்ப் பூசைசெய்து
அய்யனே அவள்பதமே கெதியென்றெண்ணி
அஷ்டசித்து சூட்சமெல்லா மறிவிப்பாளே. (565)

அறிவான பூரணமே ஆதிசோதி
அகண்டபரா பரமான அருள்ஞானத்தீ
குறியான தீயறிந்து நெறியில்நின்றால்
கூடுறுதி யாகுமடா குருவைக்காரு
நெறியறிந்து குருவருளைக் காக்கவென்றால்
நேசமுடன் அஞ்சதிலே மூன்றைப்பாரு
சரியாக மூன்றதிலே ஒன்றைப்பார்க்க
தன்மயமு விண்மயமு மொன்றாய்ப்போச்சே. (566)

ஒன்றான வஸ்துவடா ஆண்பெண்ணாச்சு
உத்தமனே எழுவகையின் தோற்றமாகி
பண்டான பலதொழிலுக் கேதுவாய்நின்று
பாலகனே ஒன்றான வஸ்துக்குள்ளே
நன்றாக அபிக்கமாய் சொர்க்கஞ்சென்று
நாதாந்த பூரணமாம் விழிதன்னோடே
நின்றாடிக் கொண்டதிரு நடனம்பார்க்க
நீயேது நானேது அரூபந்தானே. (567)

தானான ரூபமடா அனுக்கிரகம்
தனையறிந்த நவக்கிரக மொன்பதுக்கும்
கோனான அனுக்கிரக மருபவீட்டில்
குவிந்தெழுந்த சிவஞான போததீபம்
தேனான அமுர்தரசச் சேணைபோட்டி
சிவாயகுரு அஞ்செழுத்தின் திறமுஞ்சொல்லி
ஊனான உயிர்காட்டி வெளியுங்காட்டி
உத்தவெளி வெளியொளியா யொடுக்கமாச்சே. (568)

ஆச்சென்று ஒடுங்குநிலை யறியவேணும்
அறிந்துமன துரிமையினா லேறவேணும்
மூச்சென்ற வாசியினா லேறியந்த
முத்திதருந் தீபமதைக் காணவேணும்
பேச்சென்ற சத்திசிவ சூட்சங்கொண்டு
பெலமான சூட்சமதா லிறக்கவேணும்
ஆச்சென்று யேறுதுறை யிறங்குதுறைகண்டால்
ஆதிசிவ சோதியென அறியலாமே. (569)

அறிவான அறிவெல்லாம் வெளியின்மாய்கை
ஆதியந்த மானதெல்லாம் வெளியின்மாய்கை
நெறியான பொருளெல்லாம் வெளியின்மாய்கை
நிலையான சிவயோகம் வெளியின்மாய்கை
விரிவான வாசியெல்லாம் வெளியின்மாய்கை
வேதாந்த சித்தாந்தம் வெளியின்மாய்கை
சரியான பஞ்சகர்த்தா வெளியின்மாய்கை
சதுர்போத தீபவொளி மாய்கைதானே. (570)

தானான உலகமது பேயானகூத்து
சங்கையுள்ள கூத்துக்குள் கூத்தாய்நின்று
தானான திருநடன மாகுமைந்தா
சச்சுதா னந்தமென்ற அறிவில்நின்று
தானான தன்மயமே விண்மயமாஞ்சோதி
சகலநிரா மயமான சோதிதன்னை
தானாகத் தானவனாய்த் தான்தானாக
சதுர்போத பூரணத்தில் சார்ந்துநில்லே. (571)

நில்லப்பா நிலையறிந்து சார்ந்துகொண்டு
நீமகனே யின்னமொரு கருமானங்கேள்
சொல்லப்பா பழுதல்ல பழுக்கும்வித்தை
சுத்தமுள்ள அயக்காந்தம் நாதவிந்து
கொல்லப்பா நாதவிந்து ஒன்றேடொன்று
கூட்டியல்லோ மனமுருக உருகுமைந்தா
கல்லப்பா உருகுநிலை யறிந்துகொண்டு
கணக்காக ரவிமதியுங் கூடச்சேரே. (572)

சேர்த்துநின்று உருகையிலே யிடைதானுகம்
செம்மையுடன் சீரியங்கே கொத்தும்போது
நேர்ந்துநின்று கலைநாலில் விசந்தான்சென்று
நிர்மலம்போல் சத்திசிவஞ் சுத்தமாச்சு
கூர்ந்துநின்ற சுத்தமதைச் சித்தத்தாலே
குருவான கயிலாச வரையில்தாக்க
சார்ந்துஅந்த சுத்தசித்தத் தாலேமைந்தா
தங்கமய மானமகா மேருபாரே. (573)

பாரான பிருதிவியா மேரைப்பார்க்க
பாய்ந்துநின்ற நாகமதால் கும்பமாச்சு
மேரான கும்பமதில் பிறிந்துஅந்த
மெஞ்ஞான பூரணத்தைக் கண்டுபோற்றி
நேரான நிலையறிந்து வாசிகொண்டு
நிலைதவறுச் சோதியிலே அடுக்கும்போதில்
கூறாத கண்காட்சி யென்னசொல்வேன்
கூர்ந்துநின்று பார்த்ததெல்லாம் வெளிதான்பாரே. (574)

வெளியான சோதிநவ ரெட்னதீபம்
மெஞ்ஞானப் புருவநடு உச்சிமீதில்
வெளியாகி ஒளியாகி யிருளுமாகி
மேலான யிருளதிலே வொளியுங்கண்டேன்
தெளியாமல் நின்றுஅந்த ஒளியினூலே
நேசமுடன் கண்டதெல்லாம் வெளியாய்ப்போச்சு
வெளியான மாய்கைவெளி யென்னசொல்வேன்
மெஞ்ஞான சோதியுட விலாசந்தானே. (575)

தானான சோதியுட விலாசந்தன்னை
        தன்மையுடன் காணவொரு சூட்சங்கேளு
தானான பிருதிவிபாம் உப்புஉப்பு
        சங்கையுள்ள தண்ணிரியென்ற வன்னிகூட்டி
தானான லிங்கமரி தாரம்வீரம்
        சங்கையுடன் கெங்கையிலே சுத்திபண்ணி
தானான அப்புஉப்பு முருகும்போது
        சங்கையுடன் சுத்திசெய்த மருந்தைத்தாக்கே. (576)

தாக்கிமிக உருகையிலே தங்கஞ்சேரு
        தங்கமது சேர்ந்தவுடன் நாகஞ்சேரு
நோக்கிமிக நன்றாய்ச்சேர்ந் துருகும்போது
        நுண்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
பாக்கியமாய் நின்றசிவ சோதியென்று
        பணிந்துமிக அயக்களங்கை யெடுத்துமைந்தா
தாக்கியந்த வெள்ளியிலே பத்துக்கொன்று
        சோதியென்ற அயக்களங்கைக் கொடுத்துப்பாரே. (577)

கொடுத்துமிக உருக்கியதை யெடுத்துப்பார்த்தால்
        குருவான பொற்குருவை யென்னசொல்வேன்
அடுத்துஅந்தக் குறியறிந்து பார்க்கும்போது
        அடங்கார்த சோதியடா அருமைத்தங்கம்
முடித்ததங்கச் சோதியைநீ மைந்தாமைந்தா
        முத்திதரும் பரஞ்சோதி என்றுபோற்றி
தொடுத்தவொரு காரியத்துக் கரசாய்நின்று
        சுயஞ்சோதி யானசிவ யோகமாமே. (578)

ஆமப்பா யோகமென்றால் சிவயோகந்தான்
        அருள்பெருகும் ஞானமென்றால் மவுனஞானம்
சாமப்பா மவுனமென்ற ஞானந்தேகி
        சகலகலை யோகமென்ற வாசியேறி
ஓமப்பா அந்தரங்கச் சுழினைபார்க்க
        உறுதியுள்ள ரவிமதியை யென்னசொல்வேன்
சோமப்பால் பெருகிரவி சுனையிற்சேர்ந்து
        துலங்கியது தெளிந்ததுவும் மிருக்கும்பாரே. (579)

இருக்கிறதோர் மவுனமதின் சமாதிகேளு
யேகாந்த சற்குருவால் சொல்லவேணும்
மூருக்கியதோர் மாய்கைதனை யறுத்துத்தள்ளி
முத்திதருஞ் சிவஞான யோகத்தேகி
சுருக்கியதோர் வாசியினால் சுழினைசென்று
சோதியென்ற சிவஞான தீபம்பார்த்து
இருக்கறவே அமுர்தரசங் கொள்வதற்கு
சிவசிவா சியயோகத் திருந்துபாரே. (580)

பாரப்பா அகாரமது கண்டத்தேநிற்கும்
பறிவான உகாரமது மூலத்தந்தம்
நேரப்பா மகாரமது மவுனபீடம்
நிட்சயமாய் மூன்றுமது ஒன்றாய்க்கண்டால்
மேரப்பா மவுனமது அறிவிற்கூடும்
வேதாந்த அண்டமது அங்கேதோணும்
காரப்பா யிருக்கையிலு நடக்கையிலுமைந்தா
கண்ணறிந்து பார்க்கயெல்லாங் கதையுமாச்சே. (581)

ஆச்சப்பா முன்னுமில்லை பின்னுமில்லை
அரகரா தசனாத மங்கேகேட்கும்
மூச்சப்பா ரவிகோடி வன்னிகோடி
முன்னிறைந்த ரவிகோடி காந்திகாணும்
நீச்சப்பா தினந்தோறும் பார்க்கில்மைந்தா
நிசமான வாசியது நிலைநின்றாடும்
பேச்சப்பா மனமிறந்து மவுனமாகும்
பேச்சறிந்து காயசித்தி பிலமாய்ப்பண்ணே. (582)

பண்ணப்பா காயசித்தி யறிந்துகொண்டால்
பத்தியுடன் மவுனமது சித்தியாகும்
முன்னப்பா மவுனசித்தி யாலேமைந்தா
மூதண்ட ரவியொளியை நன்றாய்ப்பாரு
கண்ணப்பா கொண்டுநிலை பார்க்கும்போது
கற்பூரத் தீபம்போற் சடமேகாணும்
விண்ணப்பா தன்சாய்கை யற்றுப்போச்சு
வேதாந்த அந்தமென்ற தேகமாச்சே. (583)

கலைவிபரம்.

ஆமப்பா தேகமதில் நின்றசூட்சம்
அருளான கண்மணியே சொல்லக்கேளு
தாமப்பா சூரியகலை பனிரெண்டாகும்
சங்கையுள்ள மதிகலைதான் பதினாறாகும்
ஓமப்பா அக்கினியின் கலைதானாலு
உத்தகலை முப்பத்திரெண்டே அங்கம்
சோமப்பால் சொலித்தசிவ அங்கந்தானும்
சூட்சமென்ற மவுனமதின் சூட்சந்தானே. (584)

தானென்ற சூட்சமதால் மூலம்பாரு
தன்னறிவால் நடுப்பாரு முன்பின்பாரு
வானென்ற அண்டகே சரியைப்பாரு
மவுனமென்ற ஞானமடா சோதிபாரு
கோனென்ற சோதியுட கிருபையாலே
குறையற்ற நிருவிகற்பத் துறையைப்பாரு
தேனென்ற நிருவிகற்ப சமாதிகொண்டால்
சிவயோக முத்தரெனச் செப்பலாமே. (585)

செப்பலாஞ் சமாதிவிட்டு நடக்கும்போது
சிவசிவா மவுனமதில் திரமாய்நின்று
தப்பலாம் பிரபஞ்ச மாய்கைவிட்டு
சதாகாலம் பூரணமே தானேயெண்ணி
ஒப்பலாம் ஆமையுட அங்கம்போலே
உலகமதில் தானொடுங்கி உறுதிபெற்று
மூப்பாழே பெரும்பாழாய் வெரும்பாழாகி
முடிவில்லா ஆகாச வெளிதான்பாரே. (586)

பாரப்பா வெளியான சோதிதன்னால்
பாதாள முடிவையெல்லாம் பார்க்கும்போதில்
நேரப்பா யென்னசொல்வேன் வெளியினேர்மை
நேர்ந்துநின்று பார்த்ததெல்லாம் வெளிதானச்சு
சாரப்பா வெளிதனிலே சார்ந்துகொண்டு
தன்னொளிவே பூரணமாய்ச் சார்ந்திராமல்
வேரப்பா யெண்ணியெண்ணி மடிந்துபோனால்
வேதவழி சேராமல் இருள்சேர்வானே. (587)

இருளான மாய்கைவெளிக் குள்ளேமைந்தா
என்னசொல்வேன் ஒளிவெளியி னின்பந்தன்னே
மருளாமல் மனதறிவால் வாசிமேயறி
மகத்தான கண்ணுமனக் கண்ணால்பார்த்தால்
அருளான ரவிமதிசென் றுடுங்கூத்தை
ஆனந்த போதமதா லறிந்துபார்த்தால்
பொருளாகிப் போதநிலை யருளுமாகி
பூரணமாய் நின்றுவொளி வெளியாய்ப்போச்சே. (588)

லிங்கக் கட்டு.

வெளியாக இன்னமொரு கருவைச்சொல்வேன்
வேதாந்தப் பச்சையுடன் பச்சைசேர்த்து
ஒளியான நாகரச லிங்கங்கூட்டி
உத்தமனே அஞ்சுமொன்றாய்ப் பழச்சார்விட்டு
நெளியாமல் தானரைத்து உருட்டிமைந்தா
நேமமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
சளியாமல் புடம்போட்டு யெடுத்துப்பார்த்தால்
சங்கையுடன் கட்டியது திட்டமாமே. (589)

இட்டமுட னயமுடனே வன்னிகூட்டி
சிவசிவா குகைதனிலே உருக்கிமைந்தா
சட்டமுடன் கட்டினதோர் சரக்கைத்தாக்கி
சந்தோஷ மாயெடுத்து வைத்துக்கொண்டு
இட்டமுடன் வெள்ளிசெம்பு நாலார்தன்னில்
இன்பமுட னுருகையிலே ஒன்றுபோட்டு
மட்டமதா யுருக்கிடநல் மட்டமாகும்
மகத்தான மட்டமதில் தங்கஞ்சேரே. (590)

சேரப்பா தங்கமது பத்துக்கொன்று
தீர்க்கமுடன் தான்கொடுத்து உருக்கிப்பாரு
நேரப்பா நின்றதங்கஞ் சோதிபோலே
நிசமாகத் தோணுமடா வசமாய்ப்பாரு
காரப்பா கருணைவிழிக் கமலத்தேகி
கமலமென்ற சகஸ்திரமா மலருக்குள்ளே
பாரப்பா அமுர்தரசச் செந்தேனூறும்
பாலகனே கொண்டுமனம் பதிவாய்நில்லே. (591)

குயவன் செம்பு.

பதிவாக இன்னமொரு கருமானங்கேள்
பதிவான பிருதிவியைப் பழச்சாற்றாலே
கெதியாகத் தானரைத்து மைந்தாகேளு
கெணிதமுடன் துருசுவெடி சாரங்கூட்டி
மதியான சருகுடனே பூரஞ்சேர்த்து
மைந்தனே பழச்சாற்றா லரைத்துருட்டி
விதியான பித்தளையைத் தகடுசெய்து
விரும்பியந்த மருந்ததிலே சேர்த்துமூடே. (592)

சேர்த்துநன்றாய் மூடியபின் மைந்தாகேளு
சிவசிவா நிதானமுடன் புடத்தைப்போடு
பார்த்திபனே புடமாறி யெடுத்துப்பார்த்தால்
பத்தியுள்ள பித்தளைதான் செம்பாய்ப்போச்சு
போற்றியந்தச் செம்பதனைப் பதனம்பண்ணி
புண்ணியனே வெள்ளிதனில் நாலுக்கொன்று
வாத்திமிகத் தான்கொடுத்து உருக்கிப்பார்க்க
மகத்தான மதனரதி பொன்தான்பாரே. (593)

பாரப்பா பத்திகொண்டு சுத்தமாக
பாலகனே கருவறிந்து திருஷவக்காண
ஆரப்பா அறிவார்க ளய்யாகேளு
அசடரவர் சாஸ்திரத்தை யறியாமல்தான்
வீரப்பா கொண்டுஅவன் புலம்பிமைந்தா
வேதாந்த சாஸ்திரத்தைப் பொய்யேயென்பார்
நேரப்பா சாஸ்திரத்தை பொய்யென்போர்கள்
நினைவுகெட்ட புலையரென வறிந்துகாணே. (594)

காணாத காட்சியெல்லாம் காணவென்றால்
கருத்துவைத்து பூரணநூல் தேடிப்பார்த்து
மாணாகேள் மனதுருக ஆதியந்தம்
மனமுருகத் தினந்தோறும் நன்றாய்ப்பாரு
தேனான ருசிபோலே பார்த்தாயாகில்
சிவசிவா சிவசூட்சம் நன்றாய்த்தோணும்
கோனான குருவினுட பதியேகாணும்
கூர்மையுடன் பூரணநூல் கூர்ந்துபாரே. (595)

கூர்ந்துமிகப் பார்ப்பதற்கு குறிகண்ணூட்டி
குறியறிந்து மனக்கண்ணால் கூர்ந்துபார்த்தால்
நேர்ந்துமிகக் கொண்டதுவுஞ் சோதியாச்சு
நிலையாத பூரணமுஞ் சோதியாச்சு
சேர்ந்துநின்ற ரவிமதியுஞ் சோதியாச்சு
சிவசிவா ஆதியந்தம் சோதியாச்சு
சார்ந்துநின்ற வாசியது சோதியாச்சு
சகலகலைக் கியானமெல்லாஞ் சோதிதானே. (596)

சோதியென்ற கண்ணறிந்து சோதிபார்த்தால்
துலங்குமொளிக் குள்ளமைத்த தெல்லாஞ்சோதி
ஆதியென்ற வஸ்துவைநீ யறிந்துகொண்டால்
அப்பவல்லோ சகலநிராமயமாய்த்தோணும்
சாதியென்ற வரம்பெடுத்தால் தோணுதய்யா
சகலவுயிர் தன்மயமாய்த் தானேகாணும்
நீதியென்ற சாஸ்திரமே அறிவானந்தம்
நிசமான கலையறிந்து நிலையில்நில்லே. (597)

நிலையான கலையறிந்து வாசியேறி
நிசமான பூரணமே கெதியென்றெண்ணி
மலையான கொடுமுடியா முச்சிமீதில்
மகத்தான சோதிநவ ரட்னதீபம்
கலையான தீபமடா கலைக்கியானதீபம்
கண்ணிறைந்த சோதியடா புருவமத்தி
அலையாதே புருவமத்தி தலையென்றெண்ணி
அப்பனே மூக்குநுனி அந்தமாச்சே. (598)

அந்தநிலை விந்துவடா விந்தே அந்தம்
ஆதியென்ற நாதமடா சொந்தவீடு
சொந்தமுடன் வீடறிந்து வாசிபூட்டி
சுகமான அனுக்கிரகத் துள்ளேசென்று
பந்தமுள்ள நவக்கிரகந் தன்னைப்பார்த்தால்
பார்க்கையிலே நிராமயமாய் வெளியாய்க்காணும்
வந்தவினை யாடினது வெளிதான்மைந்தா
மனதடங்கிப் போனதுவும் வெளிதான்பாரே. (599)

பாரென்று சொன்னதுவும் வெளிதான்மைந்தா
 பரமான கேசரியும் வெளிதான்மைந்தா
நேரென்ற ரவிமதியும் வெளிதான்மைந்தா
 நிசமான சுழியதுவும் வெளிதான்மைந்தா
சாரென்ற வாசிநிலை வெளிதான்மைந்தா
 சதாபோத பூரணமும் வெளிதான்மைந்தா
ஊரென்ற ஆதாரம் வெளிதான்மைந்தா
 ஒமுடிந்த வெளியொளியின் மயக்கந்தானே. (600)

மயக்கமென்ற திரோதகையை யறிவின்கண்ணால்
 மார்க்கமுடன் தானறிந்து மயக்கந்தீர
நயக்கமலச் சோதியைநீ மனக்கண்ணாலே
 நாடிமனங் கொண்டுநிலை நயந்துபார்த்தால்
தியக்கமென்ற திரோதகையாள் மயக்கந்தீரும்
 சிவசிவா பூரணத்தைத் தினமுநோக்கி
செயக்கமலக் கம்படா ஓங்காரத்திற்
 றிர்க்கமுடன் மனதுறுதி யாகக்காரே. (601)

காரப்பா பலநினைவை மைந்தாதானும்
 கருத்தறவே ஒருநினைவாய்க் கருணைகூர்ந்து
பாரப்பா பத்மா சனத்திருந்து
 பத்தியுடன் சுழிமுனையைப் பதிவாய்ப்பார்த்தால்
நேரப்பா நின்றிலங்குஞ் சோதிதீபம்
 நிலையான தீபமடா அறிவின்கண்ணால்
சாரப்பா அந்தநிலை சார்ந்துகொண்டால்
 சச்சுதா னந்தமென்ற யோகமாச்சே. (602)

யோகமென்ற சிவயோகம் வாசியோகம்
 உற்றகலை வாசியடா சுவாசத்தந்தம்
யேகமென்ற அந்தமடா யென்னசொல்வேன்
 எட்டுரெண்டு மொன்றான யேகமாச்சு
ஆகமுடன் ஏகமென்ற பூரணத்தை
 அப்பனே அனுதினமு மறிந்துகொண்டால்
தாகமென்ற மயக்கமடா தானேதீரும்
 தன்னிலையைத் தானறிந்து தானேபாரே. (603)

பாரப்பா தன்னிலையைத் தானேதானாய்
பதிவான நயனமென்ற சூட்சத்தாலே
காரப்பா சூட்சமென்ற கடைக்கண்தன்னை
கருத்துவைத்துப் பவுத்திரத்தா லழுத்திப்பார்த்து
நேரப்பா நின்றதினால் மைந்தாகேளு
நின்ரூபந் தேவாதி ரூபமாச்சு
பேரப்பா தேவாதி தேவனென்று
பேருபெற்றோர் கோடியிலே ஒருவன்றானே. (604)

தானான ஒருவனடா அண்டந்தன்னில்
சார்ந்துதிரு நடனமதைத் தானேகண்டு
கோனான குருபதியிற் சார்ந்துகொண்டு
குருவான கருவெடுத்துத் தானேசெய்வான்
தேனான கற்பமடா தான்தானென்று
திறமான நிருவிகற்பத் திருந்துகொண்டு
வானான கேசரமே தாரகமாய்நின்று
வாலையென்ற சத்திசிவ பூசைபண்ணே. (605)

பூசையென்ற சத்திசிவ பூசைபண்ண
போக்குவரத் தறியாத புலையர்தன்னை
நாசியென்ற மூக்கதிலே கயிறுகோர்த்து
நாட்டமலாடுகிற செக்கிற்பூட்டி
ஆசையென்ற நாணதினா லடித்துத்தள்ளி
அறிவான நல்லோரை யடுத்துமைந்தா
வாசியென்ற பூரணத்தை வணங்கிக்கொண்டு
மகத்தான அட்டசித்து வரிசைபாரே. (606)

வரிசையுட னின்னமொரு கருவைக்கேளு
வாலைமனோன் மணியினுட கிருபையாலே
உரிசையுடன் மணலிரும்பை வாங்கிமைந்தா
உண்மையுட னுலைதனிலே காய்ச்சிக்காய்ச்சி
கரிசனமாய் வெகுலேசாய்த் தகடடித்து
காடியென்ற நீரதிலே கழுவிமைந்தா
புரிசமுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
பொரிகார மரைத்ததிலே பூசிக்கேளே. (607)

மணல் இரும்பு களங்கு.

கேளப்பா செம்பதனைக் குகையிலிட்டு
கெணிதமுடன் தானுருகும் போதிலேதான்
வாளப்பா மணலிரும்பைப் பத்துக்கொன்று
மார்க்கமுடன் தான்கொடுத்து மடியக்கிண்டி
ஆளப்பா கிண்டையிலே ஒன்றாய்நின்று
அருமையுடன் பொன்போலே உருகும்பாரு
சூளப்பா உருகிநின்ற செம்பைவாங்கி
சுத்தமுள்ள ஓட்டில்வைத்து ஊதிப்போடே. (608)

போடப்பா கசடறவே ஊதிப்போட்டால்
பொன்னொளிவு போலிருக்கும் பொன்னைமைந்தா
நாடப்பா பத்ததிலே ஒன்றுபோட்டு
நாட்டிமிகத் தானுருக்கப் பொன்னேயாச்சு
தேடப்பா யிவ்வேதை யாருஞ்சொல்லார்
தேவிமனோன் மணியெனக்குச் செப்பும்வார்த்தை
கூடப்பா அவ்வார்த்தை நிசமென்றெண்ணி
குருமொழியை மறவாமல் கூர்ந்துபாரே. (609)

கூர்ந்துமனம் நிலைப்பதற்கு யின்னமொன்று
குறியான குறிமகிமை யொன்றுகேளு
சார்ந்துநின்ற அயமுடனே காந்தங்கூட்டி
சங்கையுட னுருகையிலே மைந்தாமைந்தா
நேர்ந்துகொண்டு நாகமதை யிடையேசேர்க்க
நிசமான அய்க்காந்த மொன்றாய்நின்று
சேர்ந்துமிகத் தானுருக்க மைந்தாகேளு
திறமான திருமூர்த்தி களங்கமாச்சே. (610)

ஆச்சப்பா திருமூர்த்தி களங்குதன்னை
அப்பனே சொர்க்கமதிற் சேர்த்தாயாகில்
பேச்சப்பா பேசாத சொர்க்கஞ்சேர்ந்தால்
பெருமையினால் திருமூர்த்தி குருவானார்கள்
மூச்சப்பா மும்மூர்த்தி குருவாய்நின்று
முத்தியுள்ள சற்குருவைத் தியானம்பண்ணி
காச்சப்பா வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
கனகமென்ற தங்கமடா யெங்குமாமே. (611)

எங்குநிறைந் திருந்தசிவ சோதித்தாயை
ஏகமன மாகவேநீ பூசைபண்ணி
சங்கையுடன் தானிருக்கச் சிவயோகந்தான்
தனதாக வளருமடா தன்னைப்பாரு
அங்கமுடன் தனையறிந்து தன்னைப்பார்த்தால்
ஆதிசிவ சோதியென்ற சோதியாகும்
செங்கமலச் சோதிதனை யங்கேகண்டால்
செகராஜ யோகமென்ற செல்வமாமே. (612)

ஆமப்பா யின்னமொரு வேதைமார்க்கம்
அப்பனே புலத்தியமா ரிஷியேகேளு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுடன் அரிதாரக் கட்டிவாங்கி
காமப்பா முப்பூவிற் பச்சைகூட்டி
சங்கையுள்ள சருகதுவுங் கூடச்சேர்த்து
ஓமப்பா பழச்சாற்றில் நன்றாயாட்டி
உத்தமனே தாரமதுக் கங்கிபூட்டே. (613)

பூட்டிநன்றாய்க் காயவைத்து மண்ணுஞ்செய்து
புத்தியுட னிதானமதாய்ப் புடத்தைப்போட
காட்டிநின்ற தாரமது யிறுகிக்கட்டி
நன்மையுட னிருக்குமடா உண்மையாக
தாட்டிகமாய்க் கட்டினதோர் தாரந்தன்னை
தானெடுத்து வேதைமுகஞ் சங்கைகேளு
சூட்டியதோ ரயமுடனே வெள்ளிசெம்பு
சொந்தமுடன் தானுருக்கிச் சுகத்தைக்கேளே. (614)

கேளடா சுகத்தையனு பவிப்பதற்கு
கிருபையுடன் வெள்ளிசெம்பு அயமூன்றொன்றாய்
சூளடா உருக்குமுகந் தன்னிலேதான்
சுத்தமுள்ள தாரமதை யிடையேதாக்கு
ஆளடா தாக்கியதை யெடுத்துக்கொண்டு
அப்பனே பத்துவெள்ளி ஒன்றுபோட்டால்
பாளடா போகாது பத்துமாத்தாய்
பத்தியுடன் காணுமடா பரத்தைநோக்கே. (615)

பரத்தைமிகத் தானறிந்து பரத்தைநோக்கி
பத்தியுடன் சிவயோகத் திருந்துமைந்தா
நிறத்தைமிகக் கண்டறிந்து யார்தான்சொல்வார்
நிசமான பரரூபம் வெளிதானாச்சு
சரத்தைமிகத் தானறிந்து வாசியேறி
சச்சிதா னந்தமென்ற வெளியைப்பார்த்தேன்
உறத்துமிக அவ்வெளியைப் பார்த்தேனப்போ
உள்வெளியும் பரவெளியு மொன்றாங்காணே. (616)

ஒன்றாகக் கண்டுநின்ற காட்சிஒன்று
உத்தமனே அந்தமொன்று யெங்குந்தானாய்
நின்றாடி நிரந்தரமாய்த் தானேநின்று
நிச்சயமாய் நின்றதொன்று ரெண்டுமாகி
கொண்டுநின்ற ரெண்டதுவு மூன்றுமாகி
குவிந்துநின்ற மூன்றதுவும் நாலுமாச்சு
கண்டதொரு நாலதுவு மஞ்சுமாச்சு
கலந்துநின்ற அஞ்சதுவு மாறும்பாரே. (617)

பாரப்பா ஆறாகி நின்றஆறும்
பத்திகொண்டு எழுவகையின் தோற்றமாச்சு
சேரப்பா எழுவகையின் தோற்றமாகி
சிவசிவா தோற்றமது எட்டுமாச்சு
காரப்பா கருணையுள்ள யெட்டிலப்பா
கண்கண்ட நவக்கிரக மொன்பதாச்சு
வீரப்பா கொண்டநவக் கிரகமய்யா
மெய்யான அனுக்கிரகம் பத்துமாச்சே. (618)

பத்தான பரவெளியில் நின்றசூட்சம்
பருதிமதி சுடரொளியி லொளிதானாச்சு
வித்தான வித்திஞெளி மூலந்தானும்
விளங்கிநின்ற சோதியைநா னென்னசொல்வேன்
முத்தான சோதியைநான் முன்னேகண்டேன்
முன்னிறைந்த கண்காட்சி கண்டபோது
சித்தான தசதீச்சை முத்திபெற்ற
சிவயோக பூரணத்திற் சென்றேன்பாரே. (619)

பாரப்பா பூரணத்திற் சென்றபோது
பார்த்தவிட மெல்லாந்தான் சோதியாச்சு
நேரப்பா நின்றநிலை சோதியாச்சு
நிறைந்துநின்ற சோதியைநான் பார்க்கும்போதில்
சேரப்பா சகலமுமே வெளியாய்ப்போச்சு
சிவசிவா பரவெளியை யென்னசொல்வேன்
காரப்பா பரமவெளி கயிலாசமாச்சு
கயிலாச பரமவெளி யண்டமாச்சே. (620)

அண்டமென்று லாரறிவார் மைந்தாமைந்தா
ஆகாசம் பூமியொரு அண்டமாச்சு
விண்டதொரு அண்டமதில் கண்டதெல்லாம்
விழிமயக்க மல்லாது வேறேயில்லை
கண்டதொரு காட்சியெல்லாங் காணக்காண
கனவாக நின்றுதடா கருத்தின்மாய்கை
கொண்டதொரு மாய்கைநீ குருவால்கண்டு
குருவான அம்பரத்திற் குறிகண்ணூட்டே. (621)

கர்ப்ப அயக்காந்த செந்தூரம்.

நாட்டமுட னின்னமொரு கருமானங்கேள்
நாதாந்த நாதமடா சோதிப்பாலில்
தேட்டமுடன் கெந்தியரி தாரம்லிங்கம்
தெளிவான வீரமொடு பாசாணம்பச்சை
வாட்டமில்லா நாகமொடு ரசமோடெட்டும்
மகத்தான சோதியுட பால்தன்னாலே
ஆட்டமென்ற கல்வமதில் நன்றாயாட்டி
அதின்பிறகு அயமுடனே காந்தங்கூட்டே. (622)

கூட்டிரெண்டுங் கல்வமதில் நன்றாயாட்டி
குணமாக முன்மருந்துங் கூடச்சேர்த்து
ஆட்டிநன்று யெட்டிரண்டும் பத்துமொன்றாய்
அப்பனே தானாட்டி வட்டுப்பண்ணி
சூட்டிநின்ற ரவிதனிலே காயவைத்து
சுகமாக ஓடமூத்தி மண்ணும்பூசி
தாட்டிகமா யெருவடுக்கிப் புடத்தைப்போட்டு
சங்கையுடன் சற்குருவைத் தியானம்பண்ணே. (623

பண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
பதிவான கவசமதை யெடுத்துப்பார்த்தால்
விண்ணப்பா நிறைந்துநின்ற சோதிபோலே
விளங்குமடா செந்தூரமென்னசொல்வேன்
நன்னப்பா செந்தூரம் பதனம்பண்ணி
நாதாந்த புருவமதில் நயனம்நாட்டி
உண்ணப்பா பணவிடைதான் அந்திசந்தி
உறுதிகொண்டு மண்டலந்தா னுண்டுபாரே. (624)

உண்டுநிதம் பார்க்கையிலே மைந்தாமைந்தா
உறுதியுடன் வாசியது நிலையில்நிற்கும்
கண்டதொரு வாசியது நிலையில்நின்றால்
கற்பூர தீபமதைக் காணலாகும்
அண்டர்தொழுங் கற்பூர தீபங்கண்டால்
அரகரா சிவயோக மதுதானுண்மை
கொண்டதொரு உண்மைதனைப் பார்க்கும்போதில்
கூறினசொல் சத்தமடா வெளியுமாச்சே. (625)

ஆச்சப்பா வெளியான செந்தூரத்தை
அப்பனே கமலரசந் தன்னிற்கொண்டால்
மூச்சப்பா முன்னிலைவிட் டசையாதய்யா
முத்தியுள்ள தேகமது சித்தியாகும்
பேச்சப்பா சத்தமது மவுனமாகும்
பெலமாகக் கெவுனமதிற் கெதியுண்டாகும்
காச்சப்பா செந்தூரத் தியால்தேகம்
கசடற்று ஊழிவரை காணலாமே. (626)

காணலாஞ் செந்தூரந் தன்னைமைந்தா
கருணையுடன் முலைப்பாலுந் தேனுங்கூட்டி
தோணவே மண்டலந்தான் கொள்ளும்போது
தூரதிஷ்டி காரியங்கள் துலங்கும்பாரு
பேணவே சகலவுயிர் வசியமாகும்
பேரண்டந் தன்னில்வெகு காட்சிகாணும்
ஊணவே உறுதிகொண்டு நின்றாயானால்
உத்தமனே நிருவிகற்ப சமாதாம்பாரே. (627)

பாரப்பா செந்தூரந் தன்னைமைந்தா
பாச்சடா வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
நேரப்பா தான்கொடுத்து உருக்கிப்பாரு
நிசமான தங்கமடா அதிகவேதை
ஆரப்பா அறிவார்கள் வேதைரூபம்
ஆதியந்த பூரணத்தா லறியவேணும்
சாரப்பா பூரணத்தி லிருந்துகொண்டு
சத்திசிவந் தனையறிந்து பூசைபண்ணே. (628)

பூசையென்ற பூரணமே தெய்வந்தெய்வம்
புத்தியுடன் பூரணத்திற் போதமாக
நேசமுடன் தானிருந்து மைந்தாநீயும்
நிசமான வாசிமலர் நினைவாய்ச்சாத்தி
ஆசையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
அந்தரங்க நாதவொலி கீதத்தாலே
வாசமுடன் தோத்திரங்கள் செய்தாயாகில்
வந்துதடா அஷ்டாங்க வரிசைகாணே. (629)

அஷ்டாங்கம்.

வரிசையுட னஷ்டாங்கம் நன்றாய்ச்சொல்வேன்
மகத்தான புலத்தியமா ரிஷியேகேளு
உரிசையுடன் புவனையி தன்னைமைந்தா
உண்மையுடன் தியானிக்க வுறுதிகேளு
புரிசமுட னிருதயமாங் கமலமீதில்
பொன்னொளிவு போலவுமே தியானஞ்செய்து
கரிசனமாய்ப் புருவமதில் மலர்க்கண்சாத்தி
கருணையுடன் ஓம்றீங் டங்டம்மென்னே. (630)

எண்ணியே நூற்றெட்டு உருவேசெய்ய
என்னசொல்வே னஷ்டகர்ம மெதிரில்நின்றுடும்
வன்னியென்ற அக்கினிதான் சோதிமூலம்
மகத்தான மூலமடா கெற்றிக்கண்ணில்
புண்ணியனே யென்னசொல்வேன் கமலம்போலே
பூரணச்சந் திரோதயம்போல் சோதிகாணும்
கண்ணிறைந்த சோதியிலே மனக்கண்வைத்து
கருணையுட னஷ்டாங்கந் தன்னைப்பாரே. (631)

கபாலரோகத்துக்கு புவனை சக்கரம் எழுதிக்கட்ட.

பாரப்பா இன்னமொரு சூட்சங்கேளு
 பதிவாக அஞ்சுவரை நேரேகீறி
காரப்பா அஞ்சுவரை குருக்கேகீறி
 கருணையுடன் பதினாறு அரையுமாச்சு
நேரப்பா அரைதனிலே மைந்தாகேளு
 நினைவாக ஓம்றீங் அங்உங்கென்று
சாரப்பா தானெழுதிக் கால்தலையாய்மாறி
 சங்கையுடன் மஞ்சளதிற் சாத்திக்கேளே. (632)

கேளடா யெந்திரத்தை நூலாற்கட்டி
 கிருபையுடன் கணபதிக்குப் பூசைபண்ணி
கேளடா மானிடர்க்குச் சிரசில்கட்ட
 கேள்வியென்ன சிரசிலுள்ள நோய்கள்தீரும்
கேளடா கபாலவலி கபாலக்குத்து
 கேடான பீனிசமும் கெதிகெட்டோடும்
கேளடா சிரசிலுள்ள வியாதிக்கெல்லாம்
 கெட்டிகெட்டி எந்திரத்தைத் திட்டம்பண்ணே. (633)

திட்டமுள்ள எந்திரமடா மைந்தாமைந்தா
 சிவசிவா புவனையுட தீர்க்கம்பாரு
சட்டமுள்ள புவனையடா மயானருத்திரி
 சங்கையுட னவள்பதத்தைக் கண்டாயானால்
அட்டாங்க யோகமது தானேதானாய்
 அமர்ந்துவினை யாடுமடா அதுவேமூலம்
இட்டமுடன் புவனையுட சித்துரெம்ப
 இன்னமுமே சொல்லுகிறே னிருந்துகேளே. (634)

சந்தானம் உண்டாக.

இருந்துகொண்டு குருபரனைத் தியானம்பண்ணி
 இன்பமுடன் ஓம்றீங் அங்உங்கென்று
வருந்திமனக் கனிவதனால் தேனில்மைந்தா
 மார்க்கமுடன் நூற்றெட்டு உருவேசெய்து
அருந்தவமாய் தலைமுழுகும் போதில்மைந்தா
 அன்புடனே பெண்களுக்கு யீய்ந்தாயானால்
திருந்தியந்த மங்கையர்க்குக் கெற்பமுண்டாம்
 திட்டமுடன் கண்மணியைக் காண்பாய்பாரே. (635)

பாரப்பா மலடாகி யிருந்தாலென்ன
பக்குவமாய் யண்பதுக்குள் கெர்ப்பமுண்டாம்
நேரப்பா மணிமந்திர மிதுதானுகும்
நேர்மையுள்ள ரகசியமது சந்தானவித்தை
ஆரப்பா அறிவார்கள் சந்தானகரணி
அறிந்துமன தரிமையினு லடக்கம்பண்ணி
சாரப்பா சாகரத்திற் தவசுபண்ணி
சதாகாலம் பூரணத்தில் சார்ந்துவாழே. (636)

சார்ந்துநிலை தானறிந்து தவமேசெய்தால்
தன்மயமும் விண்மயமு மொன்றுய்நிற்கும்
சேர்ந்தந்த விண்மயமே சிவமென்றெண்ணு
திருவான பூரணமே சோதிசோதி
பாந்திபமாஞ் சோதிதனைக் காணப்போமோ
பத்திகொண்டு ஆதாரம் பூந்துபார்த்தால்
காந்தியென்ற காந்தியடா சூரியகாந்தி
கண்கொள்ளாக் காந்தியைநீ கனிந்துபாரே. (637)

கனிந்துமனங் கனியவொரு கருவைக்கேளு
கருவான ஆகாசந் தன்னிலேதான்
துணிந்துபச்சை சரிசேர்த்துப் பொடித்துக்கொண்டு
சுகமாக ராகியைநீ யுருக்கிக்கொண்டு
பஸிந்துநின்ற பொடியைமெள்ளத் தூவிக்கிண்டிப்
பார்க்கையிலே ராகியது பசுமையாகும்
அணிந்துநின்ற பசுமைதனை யார்தான்காண்பார்
அரகரா வெடிதருசு சத்தந்தானே. (638)

தானென்ற சத்தமடா வெடிதான்சுட்டால்
தப்பாது சுழினையிலே தாக்கியேறும்
வானென்ற சுழினையிலே சூடுதைத்தால்
மக்களே கண்திறந்து அமுர்தம்பாயும்
தேனென்ற அமுர்தமது மதியாம்விந்து
தெளிவான விந்துவடா நாதத்தந்தம்
ஊனென்ற அந்தமடா விந்தேதஅந்தம்
உத்தவிந்து தனிலொடுங்கும் நாதந்தானே. (639)

நாதமென்ற சோதியடா லிங்கம்பச்சை
நடுவான பச்சையடா நாவிலொன்று
பேதமென்று நினையாம லொன்றாய்க்கூட்டி
பிலமாக அரைத்துருட்டி ஓட்டில்வைத்து
நீதமென்ற கவசமது நன்றாய்ச்செய்து
நிதானமுடன் புடம்போட்டு எடுத்துமைந்தா
போதமென்ற செம்புதனிற் பத்துக்கொன்று
புத்தியுடன் தான்கொடுத்துப் புதுமைபாரே. (640)

பாரப்பா புதுமையென்ன சொல்லக்கேளு
பதிவான ராசியடா கன்னிகன்னி
நேரப்பா ஆறுவய தானகன்னி
நிட்சயமாய்த் தன்மனதில் நிலைநின்றாடும்
காரப்பா கருணையினாற் கன்னிமூலம்
கன்னியென்ற வன்னியடா சோதிசோதி
மேரப்பா மேருநடுச் சோதிகண்டால்
வேதாந்த முத்தனடா சித்துத்தானே. (641)

தானென்ற சித்ததுதான் யோகமார்க்கந்
தனையறிந்த மூலமடா பிரமஞானம்
வானென்ற ஞானமடா கேசரியின்தீபம்
மவுனத்தீ யானதுவு மூலத்தீதான்
ஊனென்ற தீயதுதா னுந்திவுந்தி
ஒமுடிந்த ஆவியடா பிராணநாதம்
தேனென்ற நாதமடா சிலம்பினோசை
தீக்கடங்கா ஓசையைநீ செவியிற்கேளே. (642)

செவியான ஆகாச ஓசைமைந்தா
தீர்க்கமென்ற மூலமதி னாவிதன்னால்
தவியாத ஆவியடா மேகமாச்சு
சங்கையுள்ள மேகமது ரவியினாவி
குவியாத ஆவியுடன் மேகஞ்சேர்ந்து
குமிர்தலைவி சத்தமுமாய் சலமுமாச்சு
அவியாத மேகசலந் தன்னால்மைந்தா
அண்டசரா சரங்களெல்லா மாண்மையாச்சே. (643)

ஆச்சப்பா ஆண்மையென்ற விந்துநீரை
ஆரறிந்து கரையேறி நீஞ்சப்போருர்
நீச்சப்பா வெகுநீச்சு கரைகாண்பதில்லை
நிலையறிந்து நீஞ்சியந்த நிலையில்நின்ருல்
பேச்சப்பா தாஞெடுங்கி மவுனமாகும்
பிலமான மவுனமடா ஞானபோதம்
மூச்சப்பா அகலாத போதந்தன்னை
முத்தியுடன் சுத்தமதாய் நித்தம்பாரே. (644)

நித்தமுமே சுத்தம்தாய்க் கண்டகாட்சி
நிசமாகப் பார்க்கையிலே சுத்தப்பாழாய்
சுத்தமுடன் முப்பாழாய் முடிந்துதய்யா
சொல்லிறந்த முப்பாழை யென்னசொல்வேன்
சுத்தமுள்ள ஆகாச வெளிதாஞச்சு
சாகாத காலதுவும் வெளிதாஞச்சு
வெத்தியுடன் வேகாத தலையுமாச்சு
வேகமுடன் போகாத புனல்தான்பாரே. (645)

பாரப்பா சாகாத கால்தான்மைந்தா
பதிவான வாசியடா வாயுவாச்சு
நேரப்பா வேகாத தலையேதென்ருல்
நிசமான ஆகாச வெளிதான்பாரு
காரப்பா போகாத புனல்தானப்பா
கனிவான ஆவியடா வன்னிவன்னி
ஆரப்பா அறிவார்கள் மூன்றினேர்மை
அரிதரிது காணவென்ருல் ரெண்டைக்கேளே. (646)

கேளப்பா ரெண்டான கருவேதென்ருல்
கேள்வியென்ன மண்ணுடனே தண்ணீராச்சு
ஆளப்பா மண்ணீரும் விந்துவாச்சு
அடங்கிநின்ற முப்பாழே நாதமாச்சு
கோளப்பா யில்லாமல் மூன்றுரெண்டுங்
கூடியொன்ருய்ச் சேர்ந்ததிறற் பிண்டமாச்சு
காலப்பா வலுவான பிண்டந்தானும்
கதித்தெழுந்த தேகபஞ்ச பூதமாச்சே. (647)

ஆச்சப்பா பூதமென்ற பஞ்சபூதம்
அடங்காத பிர்மமுமாய் விஷ்ணுவாகி
காச்சப்பா ருத்திரனும் வாய்வுமாகி
கருணையுட னாகாச மஞ்சுமாகி
நீச்சப்பா உலகமுமா யெங்குமாகி
நிறைந்துநின்ற பொருளாகி நேசமாகி
மூச்சப்பா ஒதுங்கிவெகு கட்டுமாகி
முத்திபஞ்ச லோகமுமாய் சரக்குமாச்சே. (648)

பஞ்சபூதச் சரக்குவிபரம்.

சரக்காகி லோகபஞ்ச நவலோகமாகி
சாகரத்தி லெங்குமதாய் நின்றமார்க்கம்
திறக்கும்வகை சொல்லுகிறேன் மைந்தாகேளு
சிவசிவா பிருதிவிதான் அயமுமாச்சு
உறக்கமில்லாச் செம்பதுவுந் தண்ணீராச்சு
உண்மையென்ற தேய்வதுவுந் தங்கமாச்சு
பறக்குகின்ற நாகமது வாயுவாச்சு
பாஞ்சுநின்ற ரசமதுவு மாகாசமாச்சே. (649)

ஆச்சப்பா சொன்னவகை அஞ்சுங்கூடி
அடங்கிஉருத் திரண்டதுவுங் குருவாய்ப்போச்சு
மூச்சப்பா ஒடுங்கியுருத் திரண்டவாசி
முத்திகொண்ட ரவிமதியிற் பாய்ந்துதானால்
பேச்சப்பா சொல்லுதற்கு நாவுமுண்டோ
பேருலகெல் லாம்நிறைந்த சோதியாச்சு
காச்சப்பா சோதியென்ற செந்தீதன்னில்
கசடான கருவிகளைச் சுத்திபண்ணே. (650)

சுத்தமுள்ள பூதமடா பஞ்சபூதஞ்
சுருதியுள்ள பாஷாணக் கருவைக்கேளு
வெத்தியுள்ள பிருதிவிதான் தாரமாகும்
விசையான அப்பதுதான் வீரமாச்சு
பத்தமுள்ள தேய்வதுதான் கெவுரியாச்சு
பாலகனே பாஷாணம் வாயுவாச்சு
முத்தியுள்ள ஆகாசம் லிங்கமாச்சு
முதலான ஐந்துபஞ்ச பூதமாச்சே. (651)

பூதமென்ற ஐந்தையுமே ஒன்றாய்க்கூட்டி
புத்தியுட னாதநீர் தன்னாலாட்டி
நீதமுடன் வழித்துருட்டி வட்டுப்பண்ணி
நீமகனே காயவைத்துப் புடத்தைப்போடு
பேதமன்றி ஒன்றாகக் கட்டிமைந்தா
பெலமான பற்பமதாய் நீறிநிற்கும்
சூதமுட னாகமதைக் கூட்டிநன்றாய்
சுகமான பற்பமதைக் கூடச்சேரே. (652)

சேர்த்துமிகத் தானரைப்பாய் நாதநீரால்
திறமாக நெட்டடங்க அரைத்துக்கொண்டு
பார்த்திபனே செம்புவெள்ளி தகடுசெய்து
பதிவான அரைமருந்தை யதிலேபூசி
கார்த்துநன்றாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
கருணையுடன் புடம்போட்டு யெடுத்துப்பார்த்தால்
மாத்ததிக மானதொரு மங்கைமாது
மார்க்கமுட னெட்டுவய தாகும்பாரே. (653)

பாரப்பா பதியறிந்து கெதியைக்காண
பத்தான யெட்டுரெண்டுஞ் சுத்தமாக
நேரப்பா நின்றுமனக் கனிவால்நீயும்
நிலைதவறா உருவாக உறுதிகொண்டால்
ஆரப்பா உனக்கீடு யாருமில்லை
அச்சரத்தை உச்சரித்த அருமையாலே
மேரப்பா கிரிநடுவி லாதிசோதி
விளங்குதடா விளக்கொளிபோ லறிவாற்காணே. (654)

பாம்புத்தடை.

காணவே யின்னமொரு மந்திரசித்தி
கண்காணச் சொல்லுகிறேன் கசிந்துகேளு
ஊணவே ஓம்கிலிசிங் அம்மென்றாக்கால்
ஓடுகின்ற அரவமது உடனேநிற்கும்
பேணவே சற்குருவைத் தியானம்பண்ணி
பெருமையுட னாயிரத்தெண் ணுருவேசெய்து
தோணவே நல்லறிவாய் நின்றாயானால்
தொல்லுலகில் சித்துவிளை யாடலாமே. (655)

கூடவே அரவமது நன்றாயாட்ட
அப்பனே இன்னமொரு சூட்சங்கேளு
சூடவே அங்சிங் கிலிறீங்கென்ன
சேர்ந்துநின்ற அரவமது ஆடிநிற்கும்
நாடவே சுழினையிலே மனக்கண்வைத்து
நன்மையுட னாயிரத்தெட் டுருவேசெய்தால்
வாடவே வேண்டாங்காண் மனக்கண்ணாலே
மகத்தான மந்திரத்தை மகிழ்ந்துபாரே. (656)

மகிழ்ந்துமன தறியார்க்கு மனமங்கேது
வாசிநிலை யறியார்க்கு யோகமேது
அகந்தெளிந்து அகமதனை யறியாதார்க்கு
அனுக்கிரக மோட்சநிலை யறிவதேது
செகந்தெளிந்த மாய்கைநிலை யறியாதார்க்கு
சிவமேது சத்தியென்ற தீர்க்கமேது
முகந்தெளிந்து முகமறிந்து முகத்தின்கண்ணை
முக்கால்கொண் டென்காலா யூணிப்பாரே. (657)

பாம்புவாய் கட்ட.

ஊணிப்பா ரரவமது வாய்தான்கட்ட
உண்மையுள்ள மந்திரமது ஒன்றுகேளு
பேணிப்பார் நங்கிலிசீ ஓமென்றாக்கால்
பெரிதான நாகமது வாய்தான்கட்டும்
பூணிப்பார் தன்னகமே சாக்ஷியாகப்
புத்தியுட னாயிரத்தெட் டுருவேசெய்தால்
ஆணிமாத் தந்தமதி னொளிபோல்மைந்தா
ஆதிதொடுத் தந்தமதின் சித்தியாமே. (658)

சித்தியுள்ள நாகமதின் வித்தையப்பா
தெளிந்துகொண்டு மனதுறுதி யாகப்பாரு
புத்தியுடன் பார்த்ததினால் மைந்தாகேளு
பொல்லாத மிருகங்கட் கெல்லாந்தானும்
பத்தியுட னின்றாடு மந்திரசித்து
பரமகுரு தன்னருளாற் பணிந்துபாரு
சத்தியமாய்ப் பார்த்ததினால் எல்லாமுண்டு
தவறாதே சத்தியமாய்த் தானேநில்லே. (659)

நில்லென்ற நிலைதனிலே வாசிகொண்டு
நிசமான வாசுகியா மஷ்டநாகம்
கொல்லென்ற கூத்துவனார் லபியினாலே
கொடுமையென்ற விஷந்தீண்டித் தலைமேற்கொண்டால்
சொல்லென்ற சொல்லதினால் மைந்தாமைந்தா
சுகமாகத் தீருதற்கு மந்திரங்கேளு
வில்லென்ற விசைபோலே விஷத்திற்பாயும்
விசையாக அங்கிலிசிங் நசிநசியென்னே. (660)

யெண்ணியுரு அறுபதிலே விஷந்தான்தீரும்
யென்மகனே உறுதிகொண்டு இருந்துபாரு
முன்னமே கஞ்சமூர்த மரனார்கொண்டார்
மோசமென்று பார்பதியா ளுடனே அந்தச்
சென்னிதனைக் கையாலே தொட்டாளப்போ
சிவன்றனக்கு கஞ்சமூர்தந் தெளிந்துநல்ல
உன்னியந்த மனைதனிலே ஒடுங்கிநல்ல
உற்றவிஷந் தானிறங்கிச் சுத்தமாச்சே. (661)

சுத்தமுடன் தானிருந்து நித்யகற்பம்
சுகமாகத் தான்முடித்துச் சுருதிபார்த்து
முத்தியுள்ள தீபமடா மோட்சதீபம்
முதலான தீபமதில் வாசிகொண்டு
பத்தியுடன் ரேசகபூ ரகமூம்பண்ணி
பதிவான கும்பகமே தானாய்நின்றால்
சித்தமது தான்குளிர மோட்சதீபம்
சிவசிவா நாடுமுன்னே தெரிசிப்பாயே. (662)

புவனைச்சித்து.

தெரிசிக்க இன்னமொரு கருவைக்கேளு
சிவசிவா புவனைபதி னறுவீட்டில்
தெரிசிக்க வேணுமென்று லந்தவீட்டில்
செம்மையுடன் ஓம்கிலி சிறிறீங்கென்று
தெரிசிக்கப் பதினாறு வீட்டிலேதான்
சிந்தையுடன் கால்தலையாய் மாறிக்கொண்டு
தெரிசிக்க மானதமாய்ப் பூசைசெய்து
திருவேற நூற்றெட்டு உருவேசெய்யே. (663)

உருவேத்திப் புவனையுட சக்கரத்தை
உண்மையுடன் மானிடர்க்குக் கட்டினாக்கால்
கருவொத்து நின்றபல வியாதியெல்லாம்
கண்காணா தோடுமடா கருத்தாய்ப்பாரு
வருவித்த வஞ்சனைகள் பில்லியேவல்
மகத்தான பிசாசுகளு மதிகெட்டோடும்
திருவுத்த குருவருளால் புவனைதானும்
தீர்க்கமுட னினைத்தபடி செய்வாள்பாரே. (664)

பாரப்பா புவனையுட தீர்க்கங்கேளு
பதிவான புவனமெல்லாம் நிறைந்துநின்று
நேரப்பா நிறைந்தபரஞ் சோதியாகி
நிசமான பொருளாகி ஆத்மாவாகி
சாரப்பா ஆத்மாவுஞ் சத்திசிவமாகி
தன்மையுள்ள ஐம்பூத மாதாரமாகி
காரப்பா ஐம்பூத ஆதாரமொன்றாய்
கண்டுங்கா ணாமலெங்கும் பிர்மமாச்சே. (665)

5475

ஆச்சப்பா பிர்மமய மல்லால்வேறே
அப்பனே சொல்லுதற்கு நாவுமுண்டோ
பேச்சப்பா பேசினதும் பிர்மமாச்சு
பெருமைகொண்டு நின்றதுவும் பிர்மமாச்சு
மூச்சப்பா கொண்டுநின்ற அண்டபிண்டம்
முழுதுமடா பிர்மமல்லால் வேறேயில்லை
ஆச்சப்பா ஆனதினால் மைந்தாமைந்தா
ஆடினது மடங்கினதும் பிர்மங்காணே (666)

ஓமம்.

காணவே இன்னமொரு கருமானங்கேள்
கருணைவளர் புலத்தியனே கருணைகூர்ந்து
பேணவே ஓமகுண்டம் நன்றாய்ச்செய்து
பிலமான அக்கினியா லரசால்செய்து
பூணவே புவனையுட மந்திரந்தன்னால்
புத்தியுடன் எள்ப்பொரிகொண் டோமம்பண்ணி
தோணவே கிரகமதில் நின்றதோஷஞ்
சுத்தமுட நீங்குமடா நித்தம்பாரே. (667)

பாரப்பா யின்னமொரு பாகங்கேளு
பத்தியுடன் கோதுமைகொண் டோமம்பண்ண
வீரப்பா கொண்டதொரு அபமிருத்து
மெஞ்ஞான பூரணத்தால் விலகும்பாரு
நேரப்பா அபமிருத்து விலகித்தானால்
நினைத்தபடி முடிக்கவண்ணம் நிசந்தான்பாரு
காரப்பா கருணைவளர் புவனைதன்னால்
கண்காண இன்னம்வெகு கடாட்சமாமே (668)

ஆமப்பா நெற்பொரியுந் தேனுங்கூட்டி
ஆயிரத்தெட் டோமமது அன்பாய்ச்செய்தால்
நாமப்பா சொல்லுகிறே மூன்னூறுண்டு
நன்மையுடன் தானிருப்பாய் நயனம்பாரு
தாமப்பா நயனமென்ற தீபந்தன்னை
சதாகாலம் பூரணமாய்த் தானேகண்டால்
வாமப்பால் மந்திரகலை வாமபோதம்
வாமம்வளர் புவனையைநீ மகிழ்ந்துகாணே. (669)

காணப்பா புவனையைநீ மைந்தாமைந்தா
கண்மூக்கு மத்தியிலே கருத்தாய்நீயும்
ஊணப்பா ஆவியென்ற வாசிதன்னை
ஊறுதியுடன் காலறிந்து ஊணிப்பார்த்தால்
பூணப்பா மரகதம்போற் புவனைதானும்
பொற்கமல உச்சியிலே நிற்கச்செய்வாள்
பேணப்பா அவள்பதத்தைப் பூசைபண்ணி
பிரியமுட னனுதினமுஞ் சித்தப்பாரே. (670)

சித்தான சித்துகளுக் குறுதியான
சிவசிவா புவனைதிரு மந்திரந்தன்னை
பத்தாசை வைத்துமன துறுதிகொண்டு
பாலிரசந் தன்னுடனே தேனுங்கூட்டி
சுத்தான மனம்நிறுத்தி யோகமாகி
சுருதியுட னாயிரமா குதிகள்செய்தால்
வத்தாத பாக்கியசந் தானபாக்கியம்
வளருமடா ஒன்றுபத்தாய் மனக்கண்பாரே. (671)

கண்ணப்பா கண்ணதுதான் மனக்கண்ணப்பா
கண்ணறிந்து கண்பார்க்கக் கண்தான்வேணும்
உண்ணப்பா கண்ணான மனக்கண்தன்னை
உற்றுணர்ந்து பார்ப்பதற்கு உறுதிகேளு
விண்ணப்பா தானோக்கி ஆகாரவாசி
விரும்பிமனக் கனிவதனா லுறுதிசெய்தால்
முன்னப்பா நிறைந்ததிரு மனக்கண்தானும்
மூதண்டச் சோதிவரை முழிக்கும்பாரே. (672)

பாரப்பா முழிக்கும்நிமை மூடுமுன்னே
பாலகனே ஒளியறிந்து வெளியிலேறு
நேரப்பா வெளியறிந்து ஒளியைப்பார்க்க
நின்ரூபஞ் சோதியுட சோதியாச்சு
மேரப்பா மேருகிரி சோதிதானும்
வெளியோடே ஒளிவெளியாய் வெளியுமாச்சு
ஆரப்பா வெளியறிந்து வெளியைச்சேர்ப்பார்
அரிதரிது கோடியிலே ஒருவன்றானே. (673)

ஒருவனவ னுலகமெல்லாந் தானேதானாய்
ஓமுடிந்த பட்டணத்தி லுறுதிகொண்டு
பருவமுடன் பார்விசும்புந் தானேதானாய்
பருதிமதி சுழினையெனப் பருவங்கொண்டு
திருஉருவாய் நின்றசெய லார்தான்காண்பார்
சீவன்முத்தர் சிவயோகி சித்தன்காண்பான்
அருவுருவாய் நின்றபொரு ளொன்றேசூட்சம்
ஆதியென்று மனாதியென்று மறிந்துகொள்ளே. (674)

அறிந்துகொண்டு புவனையுட மந்திரந்தன்னால்
அப்பனே நெய்தனிலே அருகுதோய்த்து
தெரிந்தந்த ஓமகுண்டந் தன்னில்மைந்தா
தினம்நூறு ஓமமது தீர்க்கமாக
வருந்திநன்றாய் மண்டலமே செய்தாயாகில்
மகத்தான பிரமபயு மாவாய்பாரு
யிருந்துரெண்டு மண்டலமே ஓமஞ்செய்தால்
என்னசொல்வேன் முன்னூரு வயதாம்பாரே. (675)

பாரப்பா பார்தனிலே யிருக்குமட்டும்
பத்திகொண்டு தினந்தோறு மோமஞ்செய்தால்
நேரப்பா பருதிமதி யுள்ளமட்டும்
நீமகனே பூரணமாய் வாழ்வாயப்பா
காரப்பா நித்தியகர்ம அனுஷ்டானங்கள்
கருணையுடன் செய்துகொண்டு கனிவாய்மைந்தா
தேரப்பா தினம்நூறு ஓமஞ்செய்து
சிவசிவா சிவயோகத் திறத்தைக்காணே. (676)

பாவங்கள் விலக்க.

காணவே யின்னமொரு சூட்சங்கேளு
கருணையுட னுலகத்தோ டிருக்கும்போது
பூணவே கண்ணாரக் கண்டபாவம்
புத்தியுடன் மனதாரச் செய்தபாவம்
பேணவே காதாரக் கேட்டபாவம்
பெண்வதைகள் கோவதைகள் செய்தபாவம்
ஊணவே பலவுயிரைக் கொன்றபாவம்
ஒருகோடி பாவமெல்லா மொழியக்கேளே. (677)

ஒழியாத பாவமெல்லா மொழியமைந்தா
உனக்குறுதி சொல்லுகிறே னுண்மையாக
வழியாக ஓமகுண்டம் நன்றாய்ச்செய்து
மார்க்கமுடன் மேல்புரத்தித்திற் கும்பம்வைத்து
சுழிவாக ஆலரசு சமுத்துதன்னால்
சுத்தமுட னக்கினியை வளர்த்துமைந்தா
தெளிவாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சிவசிவா நவதானியங்கொண் டோமஞ்செய்யே. (678)

செய்யடா தினம்நூறு ஓமஞ்செய்தால்
தீராத பாவமெல்லாந் தீருந்தீரும்
மெய்யடா பிரமையொடு சகலரோகம்
விட்டுவிடும் யெக்கியஓ மங்கள்செய்தால்
மய்யமென்ற புருவநடு உச்சிமீதில்
மகத்தான கற்பூர தீபந்தன்னால்
அய்யனே உனதுடைய சமுகங்கண்டால்
அநுதினமுஞ் செல்வபதி யாவான்பாரே. (679)

பாரப்பா யின்னமொரு மந்திரசூட்சம்
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
காரப்பா கருணைவிழி மனக்கண்ணாலே
காலறிந்து யோகமதால் அங்கலக்கென்று
நேரப்பா நிலையறிந்து நிலையில்நின்று
நீமகனே நூற்றெட்டு உருவேசெய்தால்
வீரப்பா கொண்டுயிரைக் கொண்டபாவம்
வெகுகோடி பாவமெல்லாம் விலகுந்தானே. (680)

தானாகத் தானிருந்து புருவமேவி
சகலநிரா மயமான சோதிதன்னை
வானான கேசரியிற் கண்டுகொண்டு
மகத்தான பூரணமா யோகஞ்செய்தால்
ஊனான ஆதார பீடமைந்தா
உத்தகலை அமுர்தரச தேகமாகும்
தேனான அமுர்தரசத் தேகமாகும்
தீர்க்கமுள்ள பஞ்சகர்த்தாள் திறமாம்பாரே. (681)

திறமாகத் தானவனைத் தன்னைக்காக்கத்
தெகிட்டாத அமுர்தரச கற்பங்கேளு
உறமான காரமுடன் சாரஞ்சேர்த்து
உற்றகலை ரவிநாத முப்பூசேர்த்து
பரமான பூரணமுஞ் சரியாய்க்கூட்டி
பாலகனே கரைத்திருத்து ரவியில்வைத்து
நிறமாக ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால்
நிசமான மெழுகாகும் வசமாய்ப்பாரே. (682)

வசமாக நீர்வத்தி நன்றாய்க்காய்ந்தால்
மார்க்கமுடன் முன்போலே நன்றாய்ச்செய்து
நிசமான மெழுகுடனே பாகம்பண்ணி
நேர்மையுடன் ரவிதனிலே நவநாள்போட்டு
பிசகாமற் தசநாள்கொண் டெடுத்துப்பாரு
பிலமான கற்பமடா அமுர்தபோதம்
திசமான திட்சையுட போதந்தன்னை
சிந்தையுட னந்திசந்தி கொண்டுதேரே. (683)

தேருவதாற் தேகமதில் நின்றநோய்கள்
சீக்கிரத்தி லேதெளிந்து தெளிவுண்டாகும்
கூறுகிற மந்திரமுஞ் சித்தியாகும்
குவிந்துமன தொன்றாக அறிவிற்சேரும்
நேருகிற அறிவான அறிவானந்தம்
நின்றிலங்குங் கற்பூர தீபம்போலாம்
மாறும்வித மறிந்துசர மாறிக்கொண்டால்
மந்திரபஞ் சாட்சரத்தின் சோதிதானே. (684)

சோதிமய மாவதற்கு இன்னமொன்று
சுளுவிலே சொல்லுகிறேன் சுகமாய்க்கேளு
ஆதியாள் தன்னுடனே முப்பூசுண்ணம்
அறிந்துகரு வொன்றாக்கி யரைத்துநன்றாய்
நீதியுள்ள தாரமதுக் கங்கிபூட்டி
நேர்மையுடன் காயவைத்து ஆடைசாத்தி
வீதியுடன் புடம்போட வுருகிப்போகும்
விபரமுடன் தானெடுத்துக் குளிரவையே. (685)

வைத்துநன்றாய்க் குளிர்ந்தபின்பு கவசம்நீக்கி
மார்க்கமுடன் தாரமதை யெடுத்துப்பாரு
மெய்த்ததொரு தாரமது உருகிக்கட்டி
வேதாந்த செந்தூரம் போலேமைந்தா
கைத்துநின்ற தாரசெந் தூரம்வாங்கி
கருணையுடன் வெள்ளிசெம்பு யிடைக்கிடையேசேர்த்து
நைத்துமிகத் தானுருக்கித் தங்கம்போலாம்
நாதாந்தத் தங்காதி குருவைப்போற்றே. (686)

போற்றிநன்றாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
புத்தியுடன் வெள்ளிதனிற் பத்துக்கொன்று
சேர்த்துமிகத் தானுருக்கிப் பார்க்கும்போது
சிவசிவா கயிலாசத் தங்கமாச்சு
பார்த்திபனே தங்காதி மாதுத்தாயை
பார்த்துமன மகிழாமல் வாசிகொண்டு
கார்த்துஅந்தக் கருணைவிழி தன்னால்மைந்தா
கர்பூர தீபமதைக் கனிந்துபாரே. (687)

நாகக்கட்டு.

கனிந்துநின்ற நாகமதைக் கட்டக்கேளு
காரசா ரத்தினுட செயநீர்வாங்கி
பணிந்துகொண்டு துருசுநவச் சாரங்கூட்டி
பத்தியுடன் செயநீரில் கரைத்துநன்றாய்
அணிந்துகொள்ள நாகமதை உருக்கிச்சாய்த்தால்
அடங்காத கண்ணடங்கி அழுந்திக்கட்டும்
துணிந்துமிகக் கட்டினதோர் நாகந்தன்னில்
சுத்தமுள்ள தங்கமதில் சரியாய்ச்சேரே. (688)

சரியாகச் சேர்த்துமிகக் குகையிலிட்டு
சங்கையுட னுருக்கிடவே மணியாய்நிற்கும்
குறியான நாகமணி தன்னைவாங்கி
குணமாக வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்,
பரியான தங்கமடா மங்காத்தங்கம்
பாலகனே சுத்தமுடன் கண்டாயானால்
நெறியான வாசியடா தன்னுள்ளேதான்
நேர்மையுட னின்றுசிவ யோகமாமே. (689)

ஆமப்பா சிவயோகஞ் செய்துகொண்டு
அப்பனே யின்னமொரு பாகங்கேளு
காமப்பா லானதொரு செயநீர்வாங்கி
கருவான துருசுநவச் சாரங்காரம்
தாமப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு
சங்கையுடன் மையதுபோல் நன்றாயாட்டி
ஓமப்பா நாகமதிற் கவசம்போட்டு
உறுதியுடன் புடம்போடக் கட்டும்பாரே. (690)

கட்டிநின்ற நாகமது சுருக்குரெம்பக்
கைமுறையாச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
திட்டமுடன் மாதுரந்தி தங்கநாதம்
செயமான நாகமது கூடச்சேர்த்து
இட்டமுடன் தானுருக்கிப் பார்க்கும்போது
ஏகாந்த மானசுரு மணிபோலாகும்
சட்டமுட னந்தமணி யெடுத்துமைந்தா
சார்வான வெள்ளிபத்தி லொன்றுதாக்கே (691)

தாக்கிதன்றாய்க் கண்துலங்க உருக்கிப்பாரு
சங்கையுள்ள வெள்ளியடா தங்கமாச்சு
பாக்கியமாய் நின்றதங்க மார்தான்காண்பார்
பத்தியுடன் கோடியிலே ஒருவன்காண்பான்
வாக்குமன மொன்றாகிக் கண்டகாட்சி
மகத்தான சோதியடா யென்னசொல்வேன்
தீர்க்கமுள்ள சோதியிலே மனக்கண்வைத்து
தெளிந்துசிவ யோகமதைத் திறமாய்க்காணே. (692)

திறமான வாசியிலே உறமாய்நின்றால்
தீர்க்கமுள்ள கேசரியாம் புருவமீதில்
பரமான தீபஒளி கண்ணிற்காணும்
பத்திகொண்டு சுத்தமுடன் சோதிகண்டால்
நிறமான சோதியைப்போற் சோதியாவாய்
நித்தியமுஞ் சத்தியமாய் நினவாய்ப்பாரு
உறமாகப் பார்த்ததினால் மைந்தாமைந்தா
உன்றூபஞ் சோதிசிவ றூபமாச்சே. (693)

ஆச்சப்பா சிவரூப மரூபமாகும்
ஆதியந்த மிகநிறைந்த சோதியாகும்
மூச்சப்பா நிறைந்தவெளி சோதியாலே
மோட்சமென்ற சூட்சமதிற் காட்சிகாணும்
பேச்சப்பா மவுனமென்ற காட்சிகண்டால்
பிலமாகு மாதார மூலவன்னி
நீச்சப்பா மூலவன்னி யதிககாந்தி
நிசமான காந்தியடா செந்தீதானே. (694)

செந்தீயென்ற உந்தியிலே மைந்தாகேளு
சிவசிவா கெங்கைசிவ கெங்கையுண்டு
சொந்தமுட னந்தநிலை யறிந்துகொண்டு
சுத்தமுள்ள கெங்கைதனை சுகமாய்நீயும்
அந்திசந்தி கொண்டதினா லையாகேளு
ஆதார மானசிவ மூலாதாரம்
எந்தவித மென்றறிந்து சொல்லப்போறேன்
எகநிரா மயமான மூலந்தானே. (695)

தானென்ற ஆதார மூலம்பார்க்க
சாதகத்தைச் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
கோனென்ற குருவருளா லகாரதீட்சை
கொண்டபின்பு உகாரமடா சத்திதீட்சை
வானென்ற மகாரமடா மவுனதீட்சை
மார்க்கமுட னுருவறிந்து தீட்சைபெற்றால்
தேனென்ற அமுர்தரச பானத்தாலே
திருவான மூலமடா தோணும்பாரே. (696)

தோணுமடா ஆதார மூலாதாரஞ்
சுத்தமுள்ள கண்ணறிந்து பார்க்கும்போது
காணுமடா கண்ணொளியின் சூட்சத்தாலே
கண்டதென்ன ஆதியந்த மெல்லாந்தன்னுள்
உண்ணுவது உந்தியென்ற செந்தீதன்னை
உள்ளுணர்ந்து ஊதிமனக் கண்ணால்நீயும்
பூணுவதாற் சராசரங்க ளெல்லாந்தன்னுள்
புத்தியுடன் காணுமடா நித்தம்பாரே. (697)

பாரப்பா நித்தமுமே சோதிகாண
பக்குவமா யின்னமொரு கருவைக்கேளு
காரப்பா அரைபொடியும் ராகிகூட்டி
கல்வமதில் பழச்சாற்றால் நன்றாயாட்டி
சேரப்பா மருந்துவகை சொல்லக்கேளு
திருவான தாரமுடன் லிங்கம்வீரம்
தேரப்பா கெவுரியுடன் வெள்ளைகூட்டி
திறமாகப் பழச்சாற்றால் நன்றாயாட்டே. (698)

ஆட்டிநன்றாய் மைபோலே வளித்துருட்டி
அப்பனே சட்டிநடு நன்றாய்வைத்து
தாட்டிகமாய்த் தாம்பூரக் கிண்ணிமூடி
சங்கையுடன் கொளிமணலே மேலேயிட்டு
பூட்டிநன்றா யடுப்பேத்தித் தியானம்பண்ணி
புத்தியுடன் மணல்கருகும் பருவந்தன்னில்
தேட்டுடனே சற்குருவைத் தியானம்பண்ணி
செம்மையுடன் தானிறக்கி யாரவையே. (699)

ஆரவைத்து அவிமருந்தை யெடுத்துக்கொண்டு
அந்திடைக்கிச் செம்புருக்கி யதிலேதாக்கு
சேரவைத்துத் தானுருக்கிப் பார்க்கும்போது
சிவசிவா செம்பதிலே காரமேறி
பேருபெற்ற செம்புலிங்கஞ் சோதியாகும்
பிலமான சோதிதனை மைந்தாகேளு
சாரவைத்த வெள்ளியிலே நாலுக்கொன்று
தங்கமயச் செம்புதனி லொன்றுதாக்கே. (700)

தாக்கிநன்று யுருக்கியதைப் பார்க்கும்போது
தன்மையுள்ள பொன்னுனியை யென்னசொல்வேன்
பாக்கியமாய்க் கண்டுநிதந் தெரிசித்தாக்கால்
பத்திமுத்தி சித்தமடா சுத்தமாகும்
வாக்குமன தொன்றுன சுத்தங்கண்டால்
வந்துதடா சிவயோக வாழ்வுமைந்தா
நோக்கிமன வாசியினுல் புருவத்தேகி
நுண்மையுடன் சிவயோக தீபம்பாரே. (701)

கணபதி மந்திரம்.

பாரப்பா சிவயோகம் பூரணமேயாகும்
பத்திகொண்டு பூரணமே கெதியென்றெண்ணி
நேரப்பா தானிருந்து அட்டாங்கயோகம்
நேர்மையுடன் பார்ப்பதற்குக் கருவைக்கேளு
காரப்பா கருணைவளர் கணபதியின் தியானம்
கருணையுள்ள வட்டமதில் ஓங்காரஞ்சாத்தி
சேரப்பா ஓங்காரந் தன்னிலேதான்
ஸ்ரீயென்று கணபதியின் பீசஞ்சாத்தே. (702)

சாத்தியதோர் சக்கரத்தை முன்னேவைத்து
சகலஉப சாரமதாய்ப் பூசைபண்ணி
போத்திநன்றாய்ப் பூரணத்தில் மனதைநாட்டி
புத்தியுடன் செபிக்கிறதோர் மந்திரங்கேளு (ன்று
பார்த்திபனே ஓம்நமோ குருகிலியும் ஸ்ரீகுருகணபதிசுவாகாவெ
புத்தியுடன் பதினுறு உருவேசெய்தால்
நேத்திரத்தின் பேரொளிபோல் மூலநாயன்
நிச்சயமா யுனதுவசம் வசியமாமே. (703)

ஆமப்பா கணபதியை வசியம்பண்ணி
அதன்பிறகு அஷ்டாங்க யோகம்பார்த்தால்
தாமப்பா தன்வசமா யஷ்டகர்மம்
சச்சிதா னந்தபூ ரணத்தினாலே
ஓமப்பா அறுபத்து நாலுசித்தும்
உண்மையுடன் தானவனாய்த் தானேசெய்வாய்
வாமப்பா பூரணத்தின் மகிமையாலே
வரிசையுட னட்டாங்க வரிசைகேளே. (704)

வசியம்எட்டுக்கும் மந்திரம்.

கேளடா வசியமென்ற யெட்டுக்குந்தான்
கிருபையுள்ள மந்திரமிது சொல்லக்கேளு
வாளடா ஓம்றீங்அங் அங்டங்ஸ்ரீயும் கிலியும்சுவாகாவென்று
வளமையுடன் செபிக்கிறதோர் வரிசைகேளு
காலடா முக்கோணம் நடுவில்விந்து
கருவாக லங்கெனவே சந்திரபீஷம்
ஆளடா தானெழுதிப் பூசைபண்ணி
அன்புடனே மந்திரத்தை உருவேசெய்யே. (705)

செய்யடா தினம்நூறு உருவேசெய்தால்
செம்மையுடன் வசியமெட்டுஞ் சித்தியாகும்
மெய்யடா வசியமது சித்தியானால்
மேன்மைபெற நினைத்ததெல்லாஞ் சித்தியாகும்
அய்யனே புலத்தியனே உனக்காய்ச்சொன்னேன்
அருளான பூரணத்தை யடக்கம்பண்ணு
கையடா அடக்கமது மெய்யாய்ச்சொன்ன
கருணைவளர் வசியமதைக் கனிவாய்ப்பாரே. (706)

மோகனம் எட்டுக்கும் மந்திரம்.

பாரப்பா வசியமென்ற யெட்டுஞ்சொன்னேன்
பத்திகொண்டு மோகனத்தைப் பகரக்கேளு
நேரப்பா மோகனந்தா னெட்டும்நன்றாய்
நேர்மையுடன் நின்றாட மந்திரங்கேளு
காரப்பா ஓம்கிலிசங் அங்றீங்ஸ்ரீசிவ சுவாகாவென்று
கண்ணாரச் செபிக்கிறதோர் வகையைக்கேளு
சாரப்பா நாற்கோணம் நடுவில்விந்து
தானெழுதி றீங்கென்று சாத்திடாயே. (707)

சாத்தியதோர் சக்கரத்தை முன்னேவைத்து
தன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
போத்தியிந்த மந்திரத்தைத் தினம்நூறப்பா
புத்தியுடன் தான்செபித்து நின்றாயானால்
பார்த்திபனே மோகனந்தா னெட்டும்நன்றாய்
பத்தியுட னுன்வசமாய்ப் பதிவதாகும்
கார்த்துநன்றாய்க் கருணைபெறச் சித்திபெற்றால்
கண்கண்ட தெல்லாமோ கனமாம்பாரே. (708)

பாரடா மோகனத்திற் பதிவாய்நின்று
பத்தியுடன் தான்செபித்துச் சுத்தமானால்
நேரடா சகலசெந்து மிருகமெல்லாம்
நேர்மையுட னுன்சமுகங் கண்டபோது
வீரடா தானொடுங்கி மோகமாகும்
வேதாந்த பூரணமே தான்தானால்
ஆரடா உனக்குநிக ரொருவருண்டோ
அப்பனே மோகனத்தை யறிந்துதேரே. (709)

தம்பனம் எட்டேக்கும் மந்திரம்

அறிந்துகொண்டு மோகனத்தை நன்றாய்ப்பார்த்து
அதின்பிறகு தம்பனத்தை யருளக்கேளு
வருந்திமன தூரிமையினால் வாசிகொண்டு
மகத்தான கேசரியில் மனக்கண்சாத்தி
தெரிந்துஓம் ஐயுங்கிலியும்ஸ்ரீயும் ரீயும்சுகசுகசுவாகாவென்று
திறமாக உருச்செபிக்கச் செயலைக்கேளு
விரிந்துபஞ்ச கோணமதில் நடுவேவிந்து
விந்துநடு ஸ்ரீயும் நன்றாய்ச்சாத்தே. (710)

நன்றாகக் கேசரியில் மனதைவைத்து
நன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
குன்றாமல் மந்திரத்தைத் தினம்நூறப்பா
குவியமன முருவேறக் குணத்தைக்கேளு
விண்டதொரு எட்டுவகைத் தம்பனந்தான்
விபரமுட னின்றுவிளை யாடும்பாரு
மண்டலத்திற் சென்றுவிளை யாடுதற்கு
மகத்தான வித்தையடா மகிழ்ந்துபாரே. (711)

பாரப்பா மனங்குவிந்து பதியில்நின்றால்
பத்தியுடன் சகலசித்து மாடலாகும்
சாரப்பா தன்மனமே சாக்ஷியாக
சங்கையுட னேமநிஷ்டை தவறாமல்தான்
காரப்பா பூரணமே கெதியென் றெண்ணி
கண்ணாலங்க விண்ணாலங்கக் காலையூணி
தேரப்பா ஆதாரம் நன்றாய்ப்பார்த்து
திக்குவிசை யந்தனிலே திறமாய்க்காணே. (712)

உச்சாடனம் எட்டுக்கும் மந்திரம்.

காணவே தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
கண்காண உச்சாடனத்தைக் கருதிக்கேளு
பூணவே உச்சாடனந்தானெட்டுங்கேள் (டங்டங்சுவாகாவென்று
பூரணமாய் ஓம்சவ் வுங்கிலியும் தாக்குதாக்குதூக்குதூக்கு
தோணவே செபிக்கிறதோர் வகையைக்கேளு
துருவமுள்ள அறுகோணம் நடுவேவிந்து
பேணவே விந்தெழுதி விந்துக்குள்ளே
பிலமாக டங்கென்று பிலமாய்நாட்டே. (713)

நாட்டமுடன் சக்கரத்தை முன்னேவைத்து
நன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
தேட்டமுள்ள மந்திரத்தைத் தினம்நூறப்பா
சிந்தைமனங் கோணாம லுருவேசெய்தால்
வாட்டமென்ன உச்சாடனந்தான் சித்தியாகும்
மகத்தான புருவமதில் மனதைநாட்டி
பூட்டறிந்து வாசியினாற் திறந்துமைந்தா
பொன்னுலகில் நின்றுவிளை யாடுவாயே. (714)

ஆடுவதும் பாடுவதும் வாசியாலே
அடங்கிவிளை யாடுவதும் வாசியாலே
கூடிமனங் குவிந்துதிரு வாசியேறி
குருவான கேசரமே கெதியென்றெண்ணி
நாடியந்தப் பூரணத்தைப் பூசைபண்ணி
நாட்டமுடன் தீபமதை நன்றாய்ப்பார்த்து
தேடுவது அட்டாங்கந் தேடவேணும்
திருவிருந்த பட்டணத்தைத் தினமும்நோக்கே. (715)

ஆக்கிருஷணம் எட்டுக்கும் மந்திரம்.

நோக்கமுடன் உச்சாடனத்தைச் சொன்னேன் மைந்தா
நுண்மையுடன் ஆக்கிருஷணத்தி னுண்மைகேளு
பார்க்கமனக் கண்ணாலே நோக்கமாகி (டங்டங்சுவாகாவென்று
பதிவாகஓம்கிலியும்சவ்வும்றீயும்ஐயும்நமோபகவதேவிரிவிரி
தீர்க்கமுட னுருவேறக் கருவைக்கேளு
சிவசிவா நவகோணந் தீர்க்கம்பண்ணி
மார்க்கமுடன் நவகோண நடுவில்விந்து
மகத்தான விந்துநடு ஓமென்றாணே. (716)

ஊணிமனங் கொண்டுநவ கோணந்தன்னை
உண்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
பேணியந்த மந்திரத்தைத் தினம்நூறப்பா
பிரியமுடன் தினம்நூறு உருவேசெய்தால்
காணுமந்த ஆக்கிருஷணந்தான் சித்தியாகும்
கருணையுட னினைத்ததெல்லாங் காணுங்காணும்
வேணுமிந்தஆக் கிருஷணந்தான் உலகத்தோர்க்கு
வேண்டிமிகச் சொன்னதிந்த விபரம்பாரே. (717)

பாரப்பா விபரமுட னாறுதாரம்
பதிவான புருவமடா உச்சிமீதில்
நேரப்பா வாசியினா லங்கேசென்று
நிசமான சோதியைநீ நன்றாய்ப்பாரு
காரப்பா கண்குளிரப் பார்த்தாயானால்
காலனென்ற எமதூதாள் காணுதோடும்
சாரப்பா தன்னகமே கோயிலாகச்
சங்கையுடன் தினந்தோறும் பூசைபண்ணே. (718)

வித்துவேஷணம்.

பூசையென்ன மானதமாய்ப் பூசைபண்ணி
புத்தியுடன் ஆக்கிருஷணத்தைப் போதமாக
நேசமுடன் தானிருந்து பார்க்கும்போது
நிசமாக நின்றுவிளை யாடுமப்பா
பாசமுடன் வித்துவே ஷணத்தைக்கேளு
பதிவான மந்திரமிது சுத்தவித்தை
வாசமுள்ள வித்தையடா நேசமான (சுவாகாவென்னே. ()
மந்திரமிது ஓம்ஸ்ரீயும்றீயும்கிலியும் சர்வயிந்திராணிபகவதே

எண்ணமுடன் மந்திரத்தைச் செபிக்குமார்க்கம்
இன்பமுடன் விபூதியிலே முக்கோணமிட்டு
கண்ணிறைந்த முக்கோண நடுவேவிந்து
கருணைவளர் விந்துநடு ஓங்காரஞ்சாத்தி
முன்னிறைந்த ஓங்கார நடுவிலேதான்
முத்தியுடன் சுத்தமதாய் சிங்கென்றிட்டு
சன்னதியை நோக்கிமனத் தன்மையாலே
சங்கையுடன் மானதமாய்ப் பூசைசெய்யே. (720)

செய்யடா மானதமாய்ப் பூசைபண்ண
சிந்தைமன தொன்றாகச் சிவனைநோக்கி
மெய்யடா மந்திரமிது தினம்நூறப்பா
விரும்பிமன மொன்றாக உருவேசெய்தால்
அய்யனே வித்துவே ஷணந்தானெட்டும்
அரகரா தன்வசமா யடங்கியாடும்
மய்யமென்ற சுழினையிலே அடங்கியாட
வரிசையுட னினைத்தபடி வாய்க்குந்தானே. (721)

தானேதான் தானாக வாய்த்ததென்று
தலைகாலாய் விழுநாமல் தன்னைப்பாரு
வீணேதான் திரியாதே தன்னைப்பார்த்து
மெஞ்ஞான பூரணமே கெதியென்றெண்ணி
ஊணேநீ வாசிதனைப் புருவத்தேத்தி
உள்ளெழுந்த சோதியைநீ உற்றுப்பாரு
பூணேநீ பொற்கமலச் சோதிகண்டால்
புத்தியுடன் அஷ்டாங்கம் வளரும்பாரே. (722)

பேதனம்.

பாரப்பா வித்துவே ஷணத்தைச்சொன்னேன்
பத்தியுடன் பேதனத்தைப் பகரக்கேளு
மாரப்பா பேதனந்தா னீதவித்தை
மக்களே ஓம்றீயுஞ்சவ்வும் ஸ்ரீயுங்கிலியு அங்அங்நசிநசிசுவா
நேரப்பா நேர்மையுடன் செபிக்கக்கேளு (காவென்று
நிசமான யெண்கோணம் நன்றாய்க்கீறி
காரப்பா கோணம்நடு விந்துபோட்டு
கமலநடு டங்கெனவே கனிவாய்ப்போடே. (723)

போட்டெடுத்துச் சக்கரத்தை முன்னே வைத்து
புத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
நாட்டமுடன் மந்திரத்தைத் தினம்நூறப்பா
நன்மையுட னுருச்செபித்து நயனங்கண்டு
வாட்டமில்லா வாசியிலே நின்றாயானால்
மகத்தான பேதனந்தான் மார்க்கமாக
காட்டுமுன்னே பேதலிக்கு மந்திரசித்து
கைகண்ட வித்தையடா கனிந்துபாரே. (724)

கனிந்துமிகக் கண்ணறிந்து கமலக்கண்ணை
கருணைவளர் புருவநடு உச்சிமீதில்
துணிந்துகொண்டு வாசியினா லங்கேசென்றால்
சோதிமய மானசிவ ஞானதீபம்
பணிந்தந்தத் தீபமதைத் தினமுந்நோக்க
பாதாதி கேசமுதற் சோதியாகும்
அணிந்துகொண்ட தேகமது சோதியானால்
அண்டர்பதந் தன்னில்விளை யாடலாமே. (725)

மாரணம்

ஆமப்பா பேதனத்தை நன்றாய்ச்சொன்னேன்
அரகரா மாரணத்தி னருமைகேளு
தாமப்பா சொல்லுகிறே மந்திரசித்து
தனதாக ஓம்அம்றீங்றீங்சிம்றீங் கிலிறீங்பிறீங் பிறீங்பிறீங்
ஓமப்பா ஒருமனதாய்ச் செபிக்கக்கேளு (சுவாகாவென்று
உறுதியுடன் சூலமிட்டு அடியிலேதான்
நாமப்பா சொல்லுகிறோங் கம்மென்றேதான்
நாட்டமுடன் தானெழுதி நயனம்பாரே. (726)

பாரப்பா நயனமென்ற சூலந்தன்னை
பத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
காரப்பா மந்திரத்தைத் தினம்நூறாக
கண்ணார உருச்செபித்துக் கருணையானால்
நேரப்பா மாரணந்தா னிமிஷத்துள்ளே
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
தேரப்பா மனந்தேறி யறிவில்நின்று
சிவசிவா மாரணத்தைத் தீர்க்கம்பண்ணே. (727)

தீர்க்கமுடன் மாரணந்தான் சித்தியானால்
 தெளிந்துகொண்டு தன்னுயிர்போல் செகத்தைப்பார்த்து
மார்க்கமுடன் சிவயோக வாழ்வில்நின்று
 மைந்தனே பூரணத்தைத் தினமும்நோக்கி
ஏர்க்கையுடன் தானிருக்க வேண்டுமானால்
 இடும்பாக மாரணத்தைச் செய்யவேண்டாம்
ஆர்க்கும்வெகு கொடுமைகளைச் செய்தபேரை
 யப்போதே மாரணிக்க அந்தந்தானே. (728)

அந்தநிலை தானறிந்து அந்தஞ்சென்று
 ஆதிசிவ சோதியிலே அருள்கண்வைத்து
சொந்தமென்று அந்தமதிற் சொக்கினாக்கால்
 சொல்லவொண்ணா அதிசயங்கள் மெத்தவுண்டு
பந்தமுடன் தானறிந்து தானேதானாய்ப்
 பார்த்தனடா அதிசயங்க ளென்னசொல்வேன்
வந்தவிதம் போனவிதம் ரெண்டுமல்லால்
 மற்றதெல்லாம் விழிமயக்க மானவாறே. (729)

வாறான விழிமயக்க மென்னசொல்வேன்
 மகத்தான பரவெளியின் மாய்கைமாய்கை
நேரான மாய்கையது வெளிதானாச்சு
 நினைப்பதுவு மறப்பதுவும் வெளிதானாச்சு
பேரான அண்டபிண்டம் வெளிதானாச்சு
 பேசுகிற மந்திரமும் வெளிதானாச்சு
ஆறான ஆதாரம் வெளிதானாச்சு
 அடங்கிநின்ற நாதவிந்து வெளிதான்பாரே. (730)

பாரப்பா பரவெளியே பரசொரூபம்
 பத்தியுட னவ்வெளியிற் கண்டதெல்லாம்
நேரப்பா நிலையாத மாய்கைமாய்கை
 நின்றுகொண்டு ஆண்டதெல்லா மாய்கையாச்சு
தேரப்பா மாய்கையென்ற மயக்கங்கண்டு
 சின்மயமே தன்மயமாய்த் தெளிந்துபார்த்தால்
ஆரப்பா வென்பதற்கு யாருமில்லை
 அடங்கிநின்ற நாதமதின் ஆசைவுதானே. (731)

அசைவான வாசியைநீ அழுத்திமைந்தா
அருள்பெருகும் புருவநடுச் சுழினைமேவி
பிசகாமற் றானிருந்து அஷ்டாங்கயோகம்
பிரியமுடன் மவுனமதாய் நன்றாய்ப்பாரு
நிசமாகப் பார்த்ததினா லெல்லாஞ்சித்தி
நேசமுட னிலையறிந்து கலையில்நின்று
வசமாகக் கலையறிந்து நிலையில்நின்றால்
மந்திரத்தா லட்டசித்து வாய்க்குந்தானே. (732)

புவனைச்சக்கரம்.

தானான புவனையுட சித்துக்கேளு
சார்பான புலத்தியமா ரிஷியேஅய்யா
நானான நானென்கு பதினாற்வீட்டில்
நன்மையுடன் ஓம்ரீம் அங்உங்கென்று
ஊனான உடலுயிர்போல் லெக்கம்நூறு
உண்மையுடன் பதினாறு வீட்டில்மைந்தா
கோனான குருவருளால் நன்றாய்மாறி
குருவான கணபதிக்குப் பூசைபண்ணே. (733)

பண்ணப்பா கணபதிக்குப் பூசைபண்ணி
பத்தியுடன் மந்திரத்தை யுருவேசெய்து
நண்ணப்பா எந்திரத்தில் நூலணிந்து
நன்மையுடன் மானிடர்க்குக் கட்டினாக்கால்
விண்ணப்பா தான்துலங்கிச் சவுபாக்கியங்கள்
மென்மேலும் வளருமடா விஞ்சைமூலம்
கண்ணப்பா தானறிந்து தன்னைப்பார்க்க
கைகண்ட வித்தையடா கண்ணைநோக்கே. (734)

நோக்குவது கண்ணறிந்து விண்ணைநோக்கி
நுண்மையுள்ள புவனையைநீ பூசைபண்ணி
வாக்குமன மொன்றாகி மனக்கண்கொண்டு
மகத்தான பூரணத்தை வணங்கிநல்ல
நாக்குநுனி யமுர்தமதை நாவால்வாங்கி
நற்கமல பீடமதைச் சுத்திபண்ணி
மூக்குநுனி காலறிந்து தீபம்பார்க்க
முத்திதரும் புவனைபதங் காணலாமே. (735)

காணவே புவனைபதி ஞறுவீட்டில்
கருணைவளர் அச்சரத்தைக் கருவாய்ப்போட்டு
பூணவே தொண்ணூறு லெக்கந்தன்னை
புத்தியுடன் தானடைத்துப் பூசைபண்ணி
தோணவே மந்திரத்தை யுருச்செபித்து
சுத்தமுடன் மானிடர்க்குக் கட்டினுக்கால்
பேணவே நின்றபல நோய்களெல்லாம்
பிலங்குறைந்து போகுமடா பின்முன்பாரே. (736)

பின்னறிந்து முன்னறிந்து நடுவில்நின்று
பெலமான மவுனமென்ற பீடமீதில்
கண்ணறிந்து நின்றுதவஞ் செய்தவற்கு
கற்பமென்ற நிருவிகற்ப மார்தான்காண்பார்
முன்னறிந்து முன்னிலையாய் விண்ணைக்கண்டு
முதலான முப்பாழுக் கப்பாற்சென்று
விண்ணறிந்து மண்ணறிந்து நடுவிற்கண்ட
வேதாந்த பரமவெளி சோதிதானே. (737)

சோதியென்ற புவனைபதி ஞறுவீட்டில்
சுத்தமுடன் அட்சரத்தைத் துலங்கப்பண்ணி
நீதியுடன் எண்பதுந்தா னதிலேமாறி
நிசமான எந்திரத்தை முன்னேவைத்து
ஆதியெனு மானதமாய்ப் பூசைபண்ணி
அப்பனே மானிடர்க்குக் கட்டினுக்கால்
பேதியென்ற சூனியமும் பில்லிதோசம்
பிலமான பயித்தியமுந் தீரும்பாரே. (738)

பாரப்பா புவனையி பதம்பெற்றோர்க்குப்
பார்தனிலே சகலசவு பாக்கியம்பெற்று
நேரப்பா தானிருந்து நீடூழிகாலம்
நேர்மையுடன் பூரணமாய் வாழ்வாரய்யா
மேரப்பா மேருகிரி தீபம்போலே
மேதினியிற் றானவனுய் விளங்குவான்பார்
காரப்பா கமலமல ரமுதங்கொண்டு
கருத்துவைத்துப் பூரணத்திற் கால்கொண்டேனே. (739)

ஊணுவது புவனைபதி னுறுவீட்டில்
உண்மையென்ற மந்திரத்தை மாறிக்கொண்டு
பேணுவது எழுபதுந்தா னதிலடைத்து
பிலமாக மானதமாய்ப் பூசைபண்ணி
காணுவது யென்னவென்றால் மானிடர்க்குக்
கருணையுட னேந்திரத்தைக் கட்டினுக்கால்
தோணுகின்ற சகலமுமே வசியமாகும்
சுத்தமுள்ள எந்திரத்தின் சுருக்குத்தானே. (740)

சுருக்கான வித்தையடா யாருங்காணார்
சுருதியுள்ள புவனையி சக்கரத்தை
திருக்கருத்துக் கருணையினற் காணவேணும்
செபதபத்தில் மனதுறுதி யாகவேணும்
உருக்கமுட னூலெடுத்துப் பார்க்கவேணும்
உண்மையென்ற மவுனரசங் கொள்ளவேணும்
கருத்தறிந்து கருக்குருவாய்க் கண்டாலுந்தான்
கருணைவளர் நிஷ்டையிலே கண்ணைப்பாரே. (741)

கண்ணான பூரணமே யென்பார்மாண்பர்
கருணைவளர் பூரணத்தைக் காணமாட்டார்
ஒண்ணான பூரணத்தைக் கண்டாலுந்தான்
உறுதியுட னதில்மனதை ஒடுக்கமாட்டார்
முன்னான கண்ணதுதா னுதவிந்து
முனையறிந்து ஒன்றாகி நின்றமார்க்கம்
பண்ணான பூரணமாய் நின்றுதையா
பார்க்கவென்று லென்னசொல்வேன் மவுனமாமே. (742)

ஆமப்பா மவுனமென்ற புவனைவீட்டில்
அப்பனே அட்சரத்தை யதிலேநாட்டி
நாமப்பா அறுபதென்ற லெக்கந்தன்னை
நன்மையுடன் தானடைத்து நயனமேவி
தாமப்பா தன்னிலையை நன்றாய்ப்பார்த்துத்
தன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
வாமப்பால் பூரணத்தி னன்மையாலே
மானிலத்தில் மானிடர்க்குக் கட்டிப்பாரே. (743)

கட்டிமிசை பார்க்கையிலே மைந்தாமைந்தா
கருணையுடன் சகலசவு பாக்கியமெல்லாம்
இட்டமுடன் தானவனைப் பெற்றுவாழ்வான்
சிவசிவா சிவஞான யோகியாவான்
சட்டமுள்ள புவனையுட தீர்க்கத்தாலே
சகலவுயிர் பயிர்களெல்லாம் வசியமாகும்
இட்டமுடன் சற்குருவே கெதியென்றெண்ணி
இருந்துமனக் கண்ணதனால் விண்ணைப்பாரே. (744)

விண்ணிறைந்த சோதியடா கமலமாது
வேதாந்த சின்மயமாய் நின்றமாது
உண்ணிவிளை யாடுகின்ற வாசிமாது
உற்றகலைக் கியானசிவ யோகமாது
வண்ணியென நின்றுவிளை யாடுமாது
வாலைவய தானசிறு மாதுதன்னை
கண்ணிமையாற் கண்டுபதம் பணிந்துகொண்டால்
கண்டதெல்லாஞ் சோதிமய மாகும்பாரே. (745)

சோதிமய மானசிவ புவனைதானும்
சுத்தமுடன் தானிருக்கும் பதியிலேதான்
நீதியுடன் மந்திரத்தை யதிலேமாறி
நிலையான ஐம்பதென்ற லெக்கந்தன்னை
வீதியுடன் தானடைத்து முன்னேவைத்து
விபரமுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
ஆதியென்ற பூரணத்தை மனதிற்கொண்டு
அப்பனே மானிடர்க்குக் கட்டிப்பாரே (746)

பாரப்பா யெந்திரத்தைச் சிரசிற்கட்டி
பத்தியுடன் சற்குருவைப் பணிந்துகொண்டால்
நேரப்பா மனதுகந்து நினைத்ததெல்லாம்
நினைத்தபடி காரியங்கள் சித்தியாகும்
சாரப்பா பெண்களுக்குக் கட்டினக்கால்
சங்கையுள்ள நோய்களெல்லாந் தானேதீர்ந்து
வீரப்பா கொண்டவிந்து தானேதங்கி
வேதாந்த பூரணமாய்க் கெற்பமாமே. (747)

ஆமப்பா ஐம்பதென்ற அட்சரந்தான்
அரகரா ஆதார யிதழ்களாச்சு
ஓமப்பா உண்மையுள்ள ஒன்றேதென்றால்
உத்தமனே அறிவான சோதியாச்சு
தாமப்பா தன்னருளும் பொருளுமொன்றாய்
சார்ந்ததினா லன்பத்தோ ரச்சரமுமாச்சு
நாமப்பா சொன்னஐம்பத் தொன்றினாலே
நாலான காரியமுஞ் சித்தியாமே. (748)

சித்தியுள்ள புவனாபி மந்திரத்தை
தீர்க்கமுள்ள பதினாறு வீட்டிலேதான்
பத்தியுட னாற்பதென்ற லெக்கத்தோடே
பக்குவமா யரைதோரு மாறிநன்றாய்
புத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
புனிதமுடன் சிகைதனிலே கட்டினாக்கால்
சுத்தமுடன் காசனேவு கெஞ்சடைப்பு
சோர்வான அபமிருத்துத் துலைந்துபோமே. (749)

துலைந்துபோம் சக்கரத்தைக் கண்டபோதே
சுகமாகுந் தேகவச்சிர காயமாகும்
கலைந்துநின்ற வாசியது கண்டத்தேகி
கண்மூக்கு மத்தியிலே கருணை தங்கும்
விளைந்துமதி குறைந்துகதிர் வளர்ந்துநிற்கும்
வேதநிரா மயமான சோதிகாணும்
அலைந்துமதி போகாமற் புவனை தன்னை
அன்புவைத்து அனுதினமும் பூசைபண்ணே. (750)

பண்ணப்பா பூசைநெறி தவறாமல்தான்
பரமகயி லாசமதிற் பதிவாய்நின்று
நண்ணப்பா ரேஷகபூ ரகமும்பண்ணி
நாட்டமுடன் கும்பகத்தில் நயனமேவி
கண்ணப்பா கண்ணுமனக் கண்ணாலந்தக்
காலறிந்து வாசியினால் யோகம்பார்த்து
விண்ணப்பா தானாக நின்றாயானால்
வினைகளற்றுச் சுகமாக விளங்குவாயே. (751)

விளங்கிமனங் குவிந்துஅந்தச் சுழியில்நின்று
வேதாந்தப் புவனையுட வீட்டிலேதான்
கலங்குவிந்து மூப்பதென்ற லக்கத்தோடே
நாதாந்த மந்திரத்தை மாறிமைந்தா
இலங்குமணி மண்டபத்தில் மனக்கண்வைத்து
இன்பமுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
தலங்குவிந்து சிகைதனிலே கட்டினுக்கால்
தன்மையுட னதின்குணத்தைச் சாற்றக்கேளே. (752)

சாற்றக்கேள் தலைவலியும் பீனிஷங்கள்
சண்டாளக் கபாலயிடி தானேபோகும்
போற்றக்கேள் கண்ணோவு தந்தவாய்வு
போகுமடா சிரசிலுள்ள வியாதியெல்லாம்
மாற்றக்கேள் புவனையினுல் மாற்றவேணும்
மகத்தான புவனையடா மந்திரரூபி
பார்த்தாக்கா லவளுடைய மந்திரசித்து
பத்துகின்ற அக்கினிபோற் பாயும்பாரே. (753)

பாரப்பா அக்கினியே தெய்வந்தெய்வம்
பதிவான அக்கினிதா னவிந்துதானுல்
நேரப்பா மண்ணுடனே தண்ணீர்வாய்வு
நிலைமறந்து ஓடுமடா வெளியிலேதான்
காரப்பா நிலைமறந்து போகாமல்தான்
கனிவாக அக்கினியைக் கால்கொண்டூதி
தேரப்பா அக்கினியே சோதியாகச்
சிந்தைகொண்டு தினந்தினமுந் தெளிந்துகாணே. (754)

தெளிவான கண்ணறிந்து தெளிந்துகொண்டு
தெளிவான அமுர்தரசங் கொண்டாயானுல்
நெளியாமல் வாசியது நேரேநின்று
நெத்தியென்ற மத்தியிலே நேரேபாயும்
சுழியாமற் சுழியதிலே பாய்ந்துதானுல்
சுருதிமுடி வானதொரு உச்சிமீதில்
ஒளிவான பிரகாசந் தானேதோற்றும்
உத்தமனே பத்தியுட னுண்ணிப்பாரே. (755)

உண்ணிவிளை யாடுகவக் கிரகந்தன்னில்
உத்தமனே அனுக்கிரகம் பத்தாம்வீடு
விண்ணிறைந்த வீடுபத்தாம் வீட்டுக்குள்ளே
விளங்குகின்ற சோதியைநா னென்னசொல்வேன்
கண்ணிறைந்த சோதியது வெங்குந்தானாய்
காணுதடா மனக்கண்ணால் நன்றாய்ப்பாரு
சென்னிமையைத் தானோக்கிப் பார்க்கவென்றால்
சிவசிவா கற்பமது ஒன்றுகேளே. (756)

மிளகு கற்பம்.

கேளடா கற்பமொன்று சொல்வேன்மைந்தா
கிருபையுள்ள மாதுரதி யமுர்தந்தன்னை
கேளடா வாங்கியொரு கரகத்திட்டு
கெணிதமுடன் பருமிளகாய் யெடுத்துக்கொண்டு
சேளடா அமுர்தரசத் தேனில்நன்றாய்க்
கெட்டியுடன் சட்டமதா யூறவைத்து
கேளடா நீரறவே யூறிற்றானால்
கேள்வியென்ன அந்திசந்தி ஐந்துகொள்ளே. (757)

கொள்ளையிலே கபமகலும் வாசியேறும்
குருவான பதிதனிலே தீபங்காணும்
கள்ளையிலே யகப்பட்ட பாண்டம்போலே
சேர்வான தத்துவங்கள் சுத்தமாகும்
பிள்ளையிலே உங்களைப்போல் பிள்ளையுண்டோ
பிலமான அமுர்தரசங் கொண்டதாலே
உள்ளெழுந்த மந்திரத்தின் சித்தியாலே
உத்தமனே சக்கரம்நின் றுடும்பாரே. (758)

பாரென்று சொன்னமொழி பெற்றுக்கொண்டேன்
பரமகுரு யெக்கியமா முனியேஅய்யா
நேரென்ற மந்திரங்கள் செபிப்பதற்கு
நிலையான சக்கரந்தா னென்றுசொல்லும்
சீரென்ற வாசியுட திறமுஞ்சொல்லும்
திறமாகப் பூரணத்தின் செயலுஞ்சொல்லும்
கூரென்று சொன்னதைநீ கூறக்கேளு
குணமுடைய கண்மணியின் மன்னுகேளே (759)

ஏகச்சக்கரம்.

மன்னர்குலத் தரசுபதி யாகவந்த
மகத்தான புலத்தியமா ரிஷியேகேளு
கண்ணிறைந்த மந்திரங்க ளனந்தமுண்டு
கருவான சக்கரங்க ளனந்தமுண்டு
மூன்னிறைந்த சக்கரங்கள் சகலத்துக்கும்
முதலான சக்கரந்தா னேதென்றக்கால்
விண்ணிறைந்த சோதியடா விந்துவட்டம்
மேலாக முக்கோணந் தீர்க்கம்பண்ணே. (760)

தீர்க்கமுள்ள முக்கோண நடுவில்மைந்தா
சிவசிவா ஓங்காரக் கம்பங்காட்டி
மார்க்கமுள்ள கம்பநடுச் சிறீங்காரமிட்டு
மக்களே மனதுகந்த மந்திரந்தன்னை
ஏர்க்கையுடன் தானிருந்து செபித்தால்மைந்தா
என்னசொல்வேன் மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
ஆர்க்குமிதை உறையாதே தனதாய்ப்பாரு
அட்டசித்துங் கைவசமா யாடலாமே. (761)

ஆமப்பா விந்ததுவுஞ் செடமுமாச்சு
அதிலமர்ந்த முக்கோண நடுவுமாச்சு
ஓமப்பா ஓங்கார மறிவுமாச்சு
உத்தமனே சிறீங்காரந் தீபமாச்சு
வாமப்பால் பூரணமே மந்திரமாச்சு
மகாமந்திர சொரூபமதே யோகமாச்சு
தாமப்பா தானவனே வெளியுமாச்சு
சதாசிவமுந் தானாச்சு தன்னைப்பாரே. (762)

தன்னைத்தான் தானறிந்து தன்னைக்காண
சாதகத்தைச் சொல்லுகிறேன் தனதாய்க்கேளு
விண்ணைத்தா னேக்கிமன தறிவாலந்த
வேதாந்த அகாரமுட னுகாரங்கூட்டி
உண்ணத்தான் ரவிநாதங் கூடச்சேர்த்து
உரிசையுள்ள மாதுரதி தேனுங்கூட்டி
கண்ணைத்தான் தானறிந்து ரவியில்வைக்கக்
கருணையுள்ள மெழுகாகுங் கருவாய்பாரே. (763)

கருவான மெழுகெடுத்துப் பதனம்பண்ணி
கண்துலங்கச் சற்குருவைத் தியானம்பண்ணி
உருவான செயலறிந்து மைந்தாநீயும்
உதையமதிற் பணவிடைதா னுள்ளேகொண்டால்
திருவான உருவாரந் தன்னிலேதான்
தீர்க்கமுள்ள சோதியடா ஞானதீபம்
குருவான பதிதனிலே தோணும்பாரு
கூர்மையுடன் கண்டதைநீ தானென்றெண்ணே. (764)

எண்ணமுடன் கண்ணறிந்து விண்ணைநோக்கி
எங்குமடா தன்மயமா யங்கேகண்டேன்
வண்ணமுடன் கண்டதெல்லாங் கண்ணேயாச்சு
வாழ்ந்ததுவுந் தாழ்ந்ததுவுங் கண்ணேயாச்சு
சொன்னதொரு சாஸ்திரமுங் கண்ணேயாச்சு
சுகமான சீவனிலே கண்ணேயாச்சு
மண்ணதுவும் விண்ணதுவுங் கண்ணேயாச்சு
மக்களே கண்மறைந்தா லெல்லாம்போச்சே. (765)

உப்புக்கட்டு.

போச்சென்று விடுகாதே இன்னமொன்று
புத்தியுடன் கரியுப்புக் கட்டுக்கேளு
மூச்சென்ற சாரத்தா லுப்புக்கட்டும்
மூனையான சீனத்தா லுப்புக்கட்டும்
பேச்சென்ற வெடியுப்பா லுப்புக்கட்டும்
பேசாதே காரத்தா லுப்புக்கட்டும்
காச்சென்ற சூடத்தா லுப்புக்கட்டும்
கண்டருக்குங் கட்டுமடா உப்புத்தானே. (766)

தானென்ற உப்புதனைக் கட்டிக்கொண்டு
சங்கையுட னின்விபரம் சாற்றக்கேளு
ஊனென்ற உப்புடனே லிங்கஞ்சேர்த்து
உத்தமனே நாலிலொன்று காரஞ்சேர்த்து
தேனென்ற நாதநீர் தன்னாலாட்டி
தீர்க்கமுட னுருட்டியதை வட்டுப்பண்ணி
கோனென்ற குருவருளால் புடத்தைப்போடு
குருவான லிங்கமது கட்டும்பாரே. (767)

பாரப்பா கட்டிநின்ற லிங்கந்தன்னை
பத்தியுடன் வெள்ளிசெம்பு பத்துக்கொன்று
நேரப்பா தான்கொடுத்து உருக்கிப்பாரு
நிசமான பொன்னொளியை யென்னசொல்வேன்
காரப்பா கண்ணொளிபோ லொளியைக்கண்டால்
கண்காட்சி ரெம்பவடா காணலாகும்
தேரப்பா கொண்டதொரு காட்சியாலே
சிவசிவா சிவயோகந் திறக்குங்காணே. (768)

திறக்குமடா வாசியது அண்டத்தேகி
திருவான கேசரியாம் புருவமத்தி
உறக்குமடா வாசிகொண்டு ஊதிப்பாரு
உள்ளானந்த ஊதையிலே சோதிகாணும்
பெருக்கமுள்ள சோதியைநீ கண்டபோது
பின்னேது முன்னேது யெங்குந்தானும்
நிறக்கவெங்குந் தானாகி நின்றதாலே
நின்றுப பிரமமடா நீதான்பாரே. (769)

ரசமணி

பாரப்பா யின்னமொரு குளிகைகேளு
பதிவான வாலைரச மார்தான்காண்பார்
காரப்பா வாலைரசக் குளிகைகேளு
கருவாகக் கட்டினதோ ருப்புவாங்கி
நேரப்பா துருசதுவுங் கூடச்சேர்த்து
நினைவாக வாலைரசம் ரெட்டிகூட்டி
சாரப்பா சம்பழத்தின் சாற்றாலாட்டி
தண்ணீரை விட்டுநன்றாய்க் கழுவிப்பாரே. (770)

கழுவிமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு
கைலாச விந்துரசங் கட்டிப்போகும்
கழுவாமற் கட்டிநின்ற ரசத்தில்மைந்தா
காதாந்தத் தங்காதி சோதிசேர்த்து
பழுதில்லாக் கமலரசந் தன்னாலாட்டி
பார்க்கையிலே யிருகருவு மொன்றாய்ச்சேர்ந்து
தொழுதுமனங் குவிந்தாப்போற் கெட்டியாகும்
சோதிமணி போலவுமே மணிதான்செய்யே. (771)

செய்யடா மனோன்மணிபோல் மணிதான்செய்து
திர்க்கமுடன் சம்பழத்தி னுள்ளேவைத்து
பய்யடா மறுநாள்தா னெடுத்துப்பாரு
பத்தியுடன் மணியதுவுங் கெட்டியாகும்
மெய்யடா அம்மணியைப் பதனம்பண்ணி
வேதாந்தச் சிவயோகத் திருக்கும்போது
கய்யடா தவறாமல் மணியைவாங்கி
கருணையுடன் சற்குருவைத் தியானம்பண்ணே. (772)

பண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
பக்குவமா யம்மணியை வாயிற்போட்டு
நண்ணப்பா ரேசகபூ ரகமும்பண்ணி
நாட்டமுடன் கும்பகத்தில் நின்றாயானால்
விண்ணப்பா தானோக்கி யந்தவிண்ணில்
மெய்யான தீபமடா கண்ணிற்காணும்
முண்ணப்பா காணுமந்தக் கண்ணின்தீபம்
முத்தியுள்ள தீபமதைத் தினமும்நோக்கே. (773)

நோக்கியந்த வாசியதைத் தினமும்நோக்கி
நுண்மையுள்ள அம்மணியின் ரசத்தைக்கொள்ள
வாக்குமன தொன்றாகித் தானேதானாய்
வளமையுள்ள சிவயோக வாழ்க்கையுண்டாம்
பாக்கியமாய் நின்றசிவ வாழ்க்கைகண்டால்
பரமகுரு ஞானசிவ யோகியாவாய்
ஆர்க்குமரி தானசிவ யோகியானால்
அண்டபகி ரண்டமெல்லாம் ஆழ்வாய்பாரே. (774)

வசீகரமணி.

பாரப்பா வசிகரமாங் குளிகையொன்று
பத்தியுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
காரப்பா வாலைரசந் தன்னைவாங்கி
கருவான ரவிம்தியுங் கூடச்சேர்த்து
நேரப்பா கமலரசந் தன்னாலாட்டி
நேர்மையுடன் நவநீதம்போற் பாகம்பண்ணி
தேரப்பா கருஞானி அண்டத்திட்டு
திட்டமுடன் மண்சீலை கவசம்பண்ணே. (775)

பண்ணப்பா கவசமது நன்றாய்ச்செய்து
பாலகனே புடம்போடக் கருவைக்கேளு
நண்ணப்பா நிதானமாய்ப் புடத்தைப்போடு
நலமான கவசமது கருகிற்றானால்
கண்ணப்பா தவறாமல் நன்றாய்ப்பார்த்து
கருகுபதந் தனையறிந்து யெடுத்துக்கொண்டு
முன்னப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
முத்தியுள்ள கவசமதை யெடுத்துப்பாரே. (776)

எடுத்துமிகப் பார்க்கையிலே அண்டத்துள்ளே
என்னசொல்வேன் வசீகரத்தின் குளிகைமார்க்கம்
அடுத்தந்தக் குளிகைதனைப் பதனம்பண்ணி
ஆதியென்ற பூரணத்தில் மனதைவைத்து
தொடுத்துநின்ற வாசியிலே மலர்க்கண்சாத்தி
சுத்தமுள்ள மணியெடுத்துத் தியானம்பண்ணி
நடுத்தரமாய் நாவடக்கஞ் செய்துகொண்டு
நாட்டமுடன் தானிருக்க நன்மைகேளே. (777)

நன்மையென்ன உன்சமுகங் கண்டோரெல்லாம்
நயந்துமிக உனதுபதப் பணிவாரையா
வன்மையுள்ள மிருகாதி வசியமாகும்
மகத்தான பூதகெணம் வசியமாகும்
தன்மையுள்ள தாபரமும் வசியமாகும்
சராசரங்கள் முழுதுமடா வசியமாகும்
உண்மையுள்ள தேவதைகள் வசியமாகும்
உத்தமனே முச்சுடரி னுட்சந்தானே (778)

உச்சமென்ற உச்சமதில் மவுனம்வைத்து
உறுதியுள்ள மந்திரங்கள் செபித்தாயானால்
நிச்சயமாய் மந்திரங்கள் சித்தியாகும்
நேர்மையுட னஷ்டகர்மஞ் சித்தியாகும்
பச்சமுள்ள கற்பமெல்லாஞ் சித்தியாகும்
பதிவான வாசியடா சித்தியாகும்
மிச்சமுள்ள தேவதைகள் சித்தியாகும்
வேதமென்ற சாஸ்திரமுஞ் சித்தியாகும். (779)

ஆமப்பா சகலமுமே சித்தியாகும்
ஆதியென்ற சோதியிலே அன்புவைத்தால்
போமப்பா சகலகர்மம் பாவமெல்லாம்
புத்தியுள்ள சித்தமதாய்த் தன்னைப்பார்த்தால்
வாமப்பா பூரணமுந் தான்தானாகும்
மதிரவி யானதுவுந் தான்தானாகும்
தாமப்பா சகலமுமே தான்தானாகும்
சகலவுயிர் பிராணனிலே தான்தான்காணே. (780)

அஞ்சனம்,

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருவான மையுறுதி மெய்யானவித்தை
நாணவே சொல்லுகிறேன் நங்கைகண்ட
நன்மையடா நல்மலரி னுண்மைதன்னை
தோணவே உண்மையென்ற சோதிதன்னை
சுந்தரியாள் தன்னிடமே உதிரம்வாங்கி
பூணவே பத்தியுள்ள உதிரந்தன்னில்
புத்தியுடன் கருக்குருவிப் பித்துச்சேரே. (781)

பித்துடனே மந்திரகலை சவாதுசேர்த்து
பிரணவத்தைத் தியானித்துச் சிமிழில்வைத்து
புத்தியுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
பூரணமாய் மையெடுத்துத் திலதம்போட்டு
சுத்தமுடன் ரேஷகபூ ரகமும்பண்ணி
சுருதியுடன் கும்பகத்தில் நின்றாயானால்
சித்தமுட னாதார மூலமெல்லாம்
சிவசிவா விளக்கொளிபோல் தெரிசிப்பாயே. (782)

தெரிசிக்க இன்னமொரு கருவைக்கேளு
சிவசிவா கரந்தனிலே நெய்யைத்தேய்த்து
தெரிசிக்க மையெடுத்து உள்ளங்கையில்
தீர்க்கமுடன் பணவிடைதான் பொட்டுப்போட்டுத்
தெரிசிக்கக் கண்ணிமையாய்ப் பார்க்கும்போது
செம்மையுடன் பாதாளந் துலைதானோடும்
தெரிசிக்கப் பாதாளந் தன்னிலேதான்
செம்மையுடன் வெகுநிதிகள் காணலாமே. (783)

ஆமப்பா வெகுநீதிகள் கண்டாலென்ன
அனுசரித்துப் பாராதே அடசிகில்லு
தாமப்பா அடசுவது யேதென்றக்கால்
சராசரத்துக் கொவ்வாமற் றரையிற்போச்சு
போமப்பா தரையுண்டு போனதாலே
பொருந்திமனம் வைத்ததனை யெடுத்தாயானல்
ஓமப்பா வெகுபாவஞ் சூழ்ந்துகொள்ளும்
உண்மையென்ற பூரணத்தைத் தேடிப்பாரே. (784)

கருவுமை

பாரப்பா யின்னமொரு மையைக்கேளு
பருதிமலர் பூவாத மூன்றுந்திங்கள்
காரப்பா அந்தநிலை தன்னைக்கண்டு
கருவான முப்பூவைக் கன்னிக்கியந்தால்
வீரப்பா கொண்டுஅந்தப் பிஞ்சுதானும்
வெதும்பிநின்ற வேகமதாற் கக்கும்பாரு
நேரப்பா கண்டவுட னெடுத்துமைந்தா
நேர்மையுடன் கருவறிந்து கருக்கிடாயே. (785)

கருக்கிநின்ற கருவதனைக் கல்வத்திட்டு
கருசலென்ற உரிசையுட தயிலத்தாலே
பெருக்கமுட னரைக்கையிலே சிமிட்டுப்பித்து
பிலமான வேங்கையுடன் கழுகின்பித்து
உருக்கமுடன் கூட்டிநன்று யரைக்கும்போது
உறுதியுள்ள சவாதுநிகர் கூடச்சேர்த்து
திருக்கறவே ஆட்டியொரு சிமிழில்வைத்து
சிவாயகுரு தேசிகனைத் தியானம்பண்ணே. (786)

பண்ணப்பா குருபரனைத் தியானம்பண்ணி
பத்தியுடன் நெற்றிதனில் திலதம்போட்டு
உண்ணப்பா மனக்கண்ணால் மண்விண்பார்க்க
உத்தமனே அண்டரண்ட பதங்கள்தோணும்
முன்னப்பா முன்தோணும் பின்னுந்தோணும்
முத்தியுட னாதாரம் நன்றாய்த்தோணும்
விண்ணப்பா நயனவெளி சூட்சத்தாலே
வேணபடி கண்டுகெதி காணலாமே. (787)

காணிநெய்.

காணவே யின்னமொரு சூட்சங்கேளு
கருவான காணியடா பொன்னுங்காணி
தோணவே கொண்டுவந்து சாருவாங்கிச்
சுத்தமுடன் பசுவின்பால் சரியாய்ச்சேர்த்து
பூணவே காய்ச்சியுறைக் குத்திவைத்து
புத்தியுடன் மறுநாள்தான் தயிர்சிலுப்பி
ஊணவே சிலுப்பிவெண்ணை தனையெடுத்து
உத்தமனே தானுருக்கி நெய்யைவாங்கே. (788)

வாங்கியந்த நெய்யதனைப் பதனம்பண்ணி
வரிசையுடன் விரலதனால் தொட்டுக்கொண்டு
பாங்குடனே கண்ணதனிற் றடவிமைந்தா
பத்தியுடன் தான்பார்க்கத் துலைதானோடும்
தாங்கியந்த நெய்யதனைத் தலையிற்றேய்த்து
தலைமுழுகி யாகாசம் பார்த்தாயானால்
சாங்கமாய்ப் பகல்காலம் நட்சேத்திரங்கள்
தடையறவே தோணுமடா தன்னைப்பாரே. (789)

பூரணநெய்.

பாரப்பா யின்னமொரு அதிகசூட்சம்
பதிவான புலத்தியனே சொல்லக்கேளு
காரப்பா கமலைப்பால் படிதான்ரெண்டு
கருணையுடன் வாங்கியது காய்ச்சும்போது
நேரப்பா நிலையறிந்து நிலையிலந்த
நிலையான பூரணத்தை நிசமாய்வாங்கி
சாரப்பா பால்தனிலே சேர்த்துமைந்தா
சங்கையுடன் காய்ச்சியுறைக் குத்துவாயே. (790)

உறைக்குத்தி வைத்ததொரு தயிரைவாங்கி
உத்தமனே தயிர்கடைந்த வெண்ணைதன்னை
நிறைக்குறியா யுருக்கியந்த நெய்யைத்தானும்
நீமகனே குப்பிதனில் பதனம்பண்ணி
அறைக்சுகின்ற பஞ்சதனைத் திரித்துமைந்தா
அன்புடனே சற்குருவைத் தியானம்பண்ணி
மறைக்குருவாய் நின்றபூ ரணத்திநெய்யிற்
றோய்த்து நன்றாய்த் தீபமதிலேற்றுவாயே. (791)

ஏத்திநன்றாய்த் தீபமதைப் பார்க்கும்போது
என்னசொல்வே னந்தவொளி தன்னிலேதான்
பார்த்திபனே மனந்தனிலே நினைந்ததெய்வம்
பத்தியுடன் காணுமடா சுத்தமாக
காத்துமனக் கனிவதனால் நின்றுபாரு
கலங்காமற் தேவதைகள் கண்ணிற்காணும்
நேத்திரத்திற் தேவசபை நிசமாய்க்காணும்
நின்றிலங்கும் பூரணத்தி நேர்மைதானே. (792)

கேசரி நெய்.

நேர்மையுட னின்னமொரு பாகங்கேளு
நிசமான கேசரியில் பால்தன்னோடே
கூர்மையுடன் கலசப்பால் கமலைப்பாலும்
குணமாக மூன்றுவகைப் பாலுமொன்றாய்
கார்மையுள்ள பாண்டமதி விட்டுமைந்தா
கருணையுள்ள நாதமுடன் பூரணமுஞ்சேர்த்து
நேர்மையுட னன்றாக அடுப்பில்வைத்து
செம்மையுடன் காய்ச்சியுறை யிட்டுப்பாரே. (793)

பாரப்பா உறையிட்டு வைத்துப்பார்க்க
பத்தியுடன் தானுறைந்து தயிராய்நிற்கும்
நேரப்பா தயிரான தயிரைமைந்தா
நிலையறிந்து சிலுப்பியதின் ரசத்தைவாங்கி
காரப்பா கலசமென்ற குகையில்வைத்து
கருவறிந்து உருக்கிடநெய் யுருகிப்போகும்
சேரப்பா உருகிநின்ற நெய்யைமைந்தா
செம்மையுடன் பீங்கானில் பதனம்பண்ணே. (794)

பண்ணியதோர் நெய்யதின்பே ரென்னவென்றால்
பரைஞான கேசரியின் தயிலமென்பார்
நண்ணியதோர் தயிலமதில் மைந்தாகேளு
நாலான சீலையைநீ திரியாய்ச்செய்து
உண்ணியதோர் திரியதனைத் தயிலத்தூட்டி
உத்தமனே விளக்கொளியிற் தீபமேற்றி
புண்ணியனே சற்குருவைத் தியானம்பண்ணி
புத்தியுடன் ராவழியில் நடந்துபாரே. (795)

நடந்துநிலே தனையறிந்து நடந்துபார்க்க
நாதாந்தச் சோதியுட கிருபையாலே
தொடந்துவரும் பூதகண மேவல்கேட்குஞ்
சுகமாகத் தேவதைகள் வசனஞ்சொல்வார்
அடர்ந்ததொரு தேவசபை யங்கேகாணும்
ஆகாசம் பூமிவரை அருகேதோற்றும்
படர்ந்துவருந் தேவகண நடனங்காணும்
பரைஞான கேசரியின் வாசந்தானே. (706)

அஞ்சனம்.

வாசமுள்ள கேசரியின் மகிமையாலே
மைந்தனே யின்னமொரு மார்க்கங்கேளு
நேசமுள்ள கன்னியுட குடநீர்வாங்கி
நின்றநிறை கமலேயுட பாலுஞ்சேர்த்து
பாசமுள்ள பூரணமும் பட்சிப்பித்தும்
பத்தியுடன் தான்கரைத்துப் பதமாய்நீயும்
தோசமென்று நினையாம லடுப்பில்வைத்து
சுத்தமுடன் காய்ச்சியுறை யிட்டுக்கேளே. (797)

கேளப்பா உறையிட்ட தயிரைநன்றாய்
கிருபையுடன் தான்கடைந்து சத்துவாங்கி
கேளப்பா அயமான பாத்திரத்தில்
கெணிதமுடன் தானுருக்கித் தெளிவைமைந்தா
கேளப்பா தெளிவறிந்து தெளிவுதன்னை
கெட்டியுள்ள பீங்கானிற் றிட்டம்பண்ணி
கேளப்பா சிவந்தபட்டுத் திரியிலூட்டி
கேள்வியென்ன விளக்கொளிபோல் தீபமேற்றே. (798)

ஏற்றியதோர் தீபமதை யெதிரேவைத்து
என்மகனே விளக்கொளிவை நன்றாய்ப்பார்த்தால்
பார்த்திபனே விளக்கொளியின் பிரகாசத்தில்
பரமகயி லாசவரை நன்றாய்த்தோணும்
நேர்த்தியுடன் கோவில்களும் ரதங்கள்சேனை
நிலையான நிலையதனில் நிசமாய்க்காணும்
தோற்றியதோர் அதிசயங்கள் வெகுவாய்க்காணும்
சுகமாகப் பூரணமாய் நின்றுபாரே. (799)

பாரப்பா நின்றுமிக நன்றாய்ப்பார்க்க
பத்தியுடன் தெளிவான நெய்யைமைந்தா
சேரப்பா கிண்ணியென்ற பீங்கான் தன்னில்
செம்மையுடன் விட்டுநன்றாய் நிலத்தில்வைத்து
காரப்பா விளக்கொளிவு நெய்யில்பாய
கால்நிறுத்தி மேலாகத் தீபம்வைத்து
நேரப்பா தானிருந்து நெய்யில்சோதி
நிசமான சோதியைநீ நிசமாய்ப்பாரே. (800)

நிலையறிந்து நெய்யில்நின்ற சோதிதன்னை
நிமையாடா துறுதியுட நின்றுபார்த்தால்
துலையாத பூமிபா தாளமட்டும்
தோணுமடா அருகிருந்து பார்க்கப்போமோ
கலையான வாசியினால் நின்றுபார்த்தால்
காணுகிற அதிசயங்கள் சற்றேகேளு
சிலையான சிலைகளுடன் கனகரெட்னம்
சிவசிவா சமாதிகளுஞ் செம்மையாமே. (801)

செம்மையுள்ள சமாதிகளுஞ் சிவதலங்கள்
சிகரமுள்ள கோபுரமு மடபதிகள்
உண்மையுட னுகாந்தமதில் மணல்மேடிட்டு
ஒற்றதரை யாய்நின்ற உண்மைதன்னை
நன்மையுள்ள பூரணத்தி னொளிதன்னாலே
நாட்டமுள்ள பூமியைநீ திறந்துபார்க்க
தன்மையுடன் தனையறிந்த யோகவான்கள்
தரைமறந்த வதிசயத்தைத் தான்காண்பாரே. (802)

காணவே தெளிவான நெய்யைமைந்தா
கண்ணிமையில் தான்பூசிக் கால்மேற்கொண்டு
தோணவே பகல்காலம் விண்ணைப்பார்க்கச்
சோதியென்ற நட்சேத்திரந் தோணும்பாரு
பூணவே மனக்கண்ணால் நன்றாய்ப்பார்க்க
புவனமென்ற பூலோக வாழ்க்கைமைந்தா
பேணவே தன்வசமாய்க் காணலாகும்
பிலமான பூரணத்தைப் பேணிக்காணே, (803)

காயகற்பத் தைலம்.

காணவே யின்னமொரு கருவைக்கேளு
    கருவான தேகவச்சிர காயமாக
பூணவே சொல்லுகிறேன் சிவனார்வேம்பு
    புத்தியுடன் தலைசுருளி குளிமீட்டானும்
ஊணவே மூன்றுகரு வொன்றாய்க்கூட்டி
    உறுதியுள்ள பாண்டமதில் நன்றாய்ச்சேர்த்து
தோணவே குளித்தயிலம் நன்றாய்வாங்கி
    சுகமாகப் பீங்கானிற் பதனம்பண்ணே. (804)

பண்ணப்பா தயிலமதைப் பதனம்பண்ணி
    பாலகனே அந்திசந்தி கொள்ளும்போது
பொன்னப்பா போலவுமே தேகமாகும்
    பூரணமாய் வாசியது புருவத்தேகி
கண்ணப்பா தான்துலங்கி விண்ணிலேதான்
    கற்பூர தேகமடா விண்ணிற்காணும்
உண்ணப்பா கற்பூர தீபத்தாலே
    உண்மையுள்ள மந்திரங்கள் சித்தியாமே. (805)

அஞ்சனம்.

சித்தியுள்ள அஞ்சனந்தா னென்றுகேளு
    திறமான தேவாங்கு காமரூபி
பத்தியுள்ள கருக்குருவி மூன்றுமொன்றாய்
    பாலகனே கருவறிந்து கருக்கிக்கொள்ளு
சுத்தமுள்ள முட்டோட்டி விட்டுக்கொண்டு
    சூதுகப டில்லாமல் வருக்கும்போது
பத்தியுடல் தானுருகி மையாய்நிற்கும்
    மார்க்கமுடன் கல்வமதில் வைத்துக்காணே. (806)

காணவே பேரண்டத் தயிலம்விட்டு
    கடைந்தெடுக்கும் போதிலுருக் கண்ணிற்காணும்
ஊணவே ஓம்கிலி ரங்ரங்கென்றேதான்
    உத்தமனே தான்செபித்து வழித்துக்கொண்டு
பேணவே மதகரியின் கொம்பில்வைத்து
    பிலமான சிமிழதனைப் பதனம்பண்ணி
பூணவே குருபதியில் மனதைவைத்து
    புத்தியுடன் ரேசகபூ ரகமும்பண்ணே. (807)

பண்ணியந்தக் கும்பகத்தில் மனக்கண்சாத்தி
பாலகனே மையெடுத்துத் திலதம்போட்டு
கண்ணிறைந்த காட்சியிலே நின்றால்மைந்தா
காசினியி லுனதுருவைக் காணமாட்டார்
புண்ணியனே மனதுகந்த யிடத்தில்நின்று
போதமுடன் ஞானநெறி தன்னைப்பாரு
தன்னருளைத் தனதாகப் பார்த்துப்பின்பு
சங்கையுடன் திலதமதை யெடுத்துப்பாரே, (808)

எடுத்துநிலை தனையறிந்து பார்க்கும்போது
என்னசொல்வேன் சொரூபநிலை கண்ணிற்காணும்
தொடுத்துஅந்த நிலையதனைக் கண்டபோது
சோதியென்ற மாத்தமதைப் பதனம்பண்ணி
நடுத்தரமாய் நின்றுசிவ யோகஞ்செய்து
நாடறிந்து சென்றுவலந் தானேவந்து
அடுத்தமனை தனையறிந்து வாழ்ந்துகொண்டால்
ஆதிசிவ சோதியென அறிவார்காணே. (809)

அறிவாலே காணுவது என்னவென்றால்
ஆதியந்த மானகே ஷரியின்மூலம்
குறியான மூலமதில் மனதைவைத்து
கூர்மையுடன் காண்பதுவே காட்சியாகும்
நெறியான காட்சியிலே நின்றாயானால்
நீடூழி காலமடா நிலைக்குஞ்சித்து
விரிவான பரவெளியே மோட்சமாகும்
வேதாந்த மோட்சமடா ஞானத்தீயே. (810)

தீயான அக்கினியே ஞானக்கண்ணு
திருவான முக்கோணஞ் சேர்ந்தவீடு
மாயான மாயமென்ற வீட்டிலேதான்
மார்க்கமுடன் காலறிந்து வணங்கிக்கொண்டு
காயான காயறிந்து கனியைத்தின்று
கமலமென்ற அமுர்தரச பானமுண்டு
தாயான வீடதிலே ஒடுக்கமானால்
தன்மயமும் விண்மயமு யந்தமாச்சே. (811)

ஆதியந்தம்.

அந்தமென்ற தேகமது விந்தேஅந்தம்
ஆதியென்ற நாதமதே சோதிமூலம்
சொந்தமென்ற மூலஅனல் வாசியாச்சு
சொரூபமென்ற ஞானமதே சோதியாச்சு
பந்தமென்ற சோதியடா வெளியுமாச்சு
பரமவெளி யானதுவுஞ் சாட்சியாச்சு
எந்தவித மானாலுஞ் சாட்சியாக
இருக்கிறதே சிவயோக வியல்புதானே. (812)

புத்தி

தானென் சத்தியமா யிருக்கவேணும்
சகலவுயிர் தன்னுயிர்போ லெண்ணவேணும்
கோனேதான் தானவனைக் குறிகண்ணூட்டி
குவிந்தெழுந்த வாசியிலே குணமாய்நின்று
வானேதான் அண்டமதே கெதியென்றெண்ணி
மகத்தான பூரணத்தில் வளர்ந்துகொண்டு
ஊனேதா னுண்மையெனக் கொண்டால்மைந்தா
உன்னுடம்பு விளக்கொளிபோ லுண்மைகாணே. (813)

உண்மையெனக் கண்டதெல்லாம் வெளிதான்மைந்தா
உற்றகலைக் கியானமெல்லாம் வெளிதான்மைந்தா
தன்மையென்ற சராசரமும் வெளிதான்மைந்தா
சங்கையில்லா மந்திரமும் வெளிதான்மைந்தா
வெண்மையென்ற விந்ததுவும் வெளிதான்மைந்தா
வேதாந்த நாதமதும் வெளிதான்மைந்தா
சின்மயமாய் நின்றதெல்லாம் வெளிதான்மைந்தா
தெளிந்துநின்று அழிந்ததுவும் வெளிதான்பாரே. (814)

அமுர்தரச கற்பம்.

பாரப்பா வெளியறிந்து வெளியிலேற
பதிவான கற்பமொன்று சொல்லக்கேளு
நேரப்பா வெளியேறி வந்தசூட்சம்
நீடுலகில் மானிடரோ காணப்போறார்
பேரப்பா பெற்றதொரு தவப்பேராலே
பிலமான சத்திசிவ பூசைபண்ணி
காரப்பா கருணையினாற் கமலமேவி
கமலரச பூரணத்தைக் கனிவாய்வாங்கே (815)

வாங்கியந்தப் பூரணத்தில் மைந்தாகேளு
மகத்தான ரவிரதம் பூதஞ்சேர்த்து
பாங்குபெற ரவியினிடம் நவநாள்வைத்து
பதிவான சருகுடனே பூரத்தண்டம்
தாங்கியொரு பாண்டமதி விட்டுமைந்தா
தன்மையுடன் குளித்தயிலந் தானேவாங்கி
தீங்கில்லா அமுர்தரச வெண்ணை தன்னில்
திருவான தயிலமதைக் கூடச்சேரே. (816)

சேர்த்துமிக வுறவுசெய்து பீங்கான்தன்னில்
செம்மையுடன் பதனமதாய் வைத்துக்கொண்டு
பார்த்திபனே சற்குருவைத் தியானம்பண்ணி
பணவிடைதா னமுர்தரசங் கொண்டாயானால்
தேத்தியதோர் தேகமது தளராதய்யா
சிவசிவா வாசியது கழறுதய்யா
பூத்தமலர் வாசனைபோல் வாசிதானும்
புருவமய்ய மானவெளி காணும்பாரே. (817)

காணவே அமுர்தரசக் கற்பந்தன்னை
கருணையுடன் மண்டலமே கொண்டாயானால்
பூணவே மனந்தனிலே நினைந்தகாட்சி
புத்தியுடன் காணுமடா சுத்தமாக
தோணவே வாசியது கெவுனத்தேகும்
சோதியென்ற சோதியிலே சுகமாய்நிற்கும்
பேணவே பூரணத்தி னன்மையாலே
பேரொளியா லண்டபதங் காணலாமே. (818)

ஆமப்பா அண்டபத முச்சிவட்டம்
அருளான வட்டமடா விந்துமேரு
தாமப்பா விந்துவென்ற மேரிலேதான்
தன்மையுடன் ஓங்காரக் கம்பம்நாட்டி
வாமப்பா நிறைந்ததொரு ரீங்காரத்தில்
மார்க்கமுடன் கருக்குருவா யுருவேயேற
சோமப்பால் தானொழுகு மந்தப்பாலை
சுத்தமுட னித்தியமுங் கொண்டுபாரே. (819)

கொண்டுநிதம் நின்றுகெதி பார்க்கும்போது
கூர்மையுடன் மூலமதி லனலோமீறி
அண்டர்பதங் கொண்டுதொழு முக்கோணத்தில்
அந்தஅனல் சோதியென அடங்கிநின்று
எண்டிசைக்கு முதலான புருவத்தந்தம்
ஏகாந்த அந்தமென்ற சோதிதன்னில்
கண்டுநிலை தனையறிந்து ஒடுங்கித்தய்யா
கற்பூர தீபமென்ற சோதிதானே. (820)

சோதியென்ற முச்சுடரின் சூட்சந்தன்னை
சொல்லுகிறேன் கண்மணியே நன்றாய்க்கேளு
ஆதியென்ற மூலமடா ரவியாஞ்சோதி
அருள்பெருகு முச்சியடா மதியாஞ்சோதி
நீதியென்ற முக்கோண மார்தான்காண்பார்
நிலையான அக்கினியாஞ் சோதியந்தம்
வீதியென்ற அந்தமடா சொந்தமாக
மெஞ்ஞான கேசரியில் விரும்பிநில்லே. (821)

விரும்பிநிலை தனையறிந்து யோகஞ்செய்ய
வேதமென்ற நீதமடா வாதத்தந்தம்
விரும்பியந்த வாதமென்ற அந்தமார்க்கம்
வேதாந்த அண்டமடா கெவுரிலிங்கம்
விரும்பிநின்ற கெந்தியுடன் அரிதாரந்தான்
மேலான மிருதரா சிங்கிதானும்
விரும்பிமனங் கொண்டரசம் நாகமேழும்
வேண்டிமனக் கனிவதனால் விரும்பிலாங்கே. (822)

வாங்கிமிகக் கல்வமதி விட்டுமைந்தா
மகத்தான நாதநீர் தன்னாலாட்டி
ஓங்கிமிகத் தானரைத்து ரவியில்வைத்து
உத்தமனே காய்ந்தபின்பு பொடித்துக்கொண்டு
பாங்குடனே காசியென்ற குப்பிக்கேத்தி
பத்தியுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து
தாங்கிநன்றாய் பர்ண்டமரைச் சாம்பலிட்டு
சங்கையுடன் குப்பிநடு வைத்துக்காரே. (823)

வைத்தகுப்பி மூக்களவு சாம்பல்கொட்டி
மார்க்கமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
கைக்குள்வச மாகவென்று தீயைமூட்டி
கருணையுட னெரிக்கையிலே பதத்தைக்கேளு
மெய்க்குளது அனலேறி ஆவிகண்டால்
விரும்பிமிகப் பாண்டமதை யிறக்கிவைத்து
தய்த்தஅனல் மாறியபின் குப்பிவாங்கி
சங்கையுடன் கவசமதை யெடுத்துப்பாரே. (824)

எடுத்துமிகப் பார்க்கையிலே சரக்கேழுந்தான்
என்னசொல்வேன் உருகியது கட்டிப்போகும்
நடுத்தரமாய்க் கட்டிநின்ற பாசாணத்தை
நாதாந்த தங்கமதில் நாலுக்கொன்று
தொடுத்துமிக வாய்நீரு லரைத்துப்பூசி
சுகமாக ஓட்டில்வைத்துப் புடத்தைப்போடு
கடுத்துமிக அனலேறிப் புடத்தைப்போட்டால்
கனகாதி யானதங்கங் குருவாங்காணே. (825)

காணவே கனகமென்ற குருவைவாங்கி
கருணையுடன் வெள்ளியிலே பத்துக்கொன்று
பேணவே தான்கொடுத்து உருக்கிப்பாரு
பிலமான வெள்ளியடா தங்கமாகும்
தோணவே கண்கண்ட தங்கந்தன்னை
சோதிமய மானசிவ சூட்சமென்று
பூணவே மனதடக்கஞ் செய்துகொண்டு
புத்தியுடன் சிவயோகம் பூண்டுபாரே. (826)

பாரப்பா மனம்பூண்டு சிவயோகத்தில்
பத்திமனங் கொண்டுதவஞ் செய்தாயாகில்
வீரப்பா கொண்டசெடஞ் சித்தியாகும்
விசையான வாசியது அசையாதய்யா
நேரப்பா வாசியது நிலையில்நின்று
நிலையான புருவநடு உச்சிமீதில்
மேரப்பா மேருகிரி தீயம்போலே
மெஞ்ஞான கேசரியில் விளங்குங்காணே. (827)

காணப்பா கமலமென்ற கண்ணினாலே
காலறிந்து மேலான கருணைக்கண்ணை
பேணப்பா மனதுறுதி யாலேகண்டு
பிசகாம லனுக்கிரக வீட்டிலேதான்
பூணப்பா பூண்டுமனங் கொண்டுநின்றால்
பூரணமாய் நவக்கிரகஞ் சித்தியாகும்
வீணப்பா கிரகமென்று நின்றாயானால்
விண்ணிடியால் கிரகமது வீழ்ந்துபோமே. (828)

வீழ்ந்துநிலை போகாமல் மனதுகொண்டு
வேதாந்த அகாரமதைப் பூசைபண்ணி
வாழ்ந்துகொண்டு உகாரமதைத் தியானஞ்செய்து
வகாரமென்ற பூரணத்தை மருவிப்பார்த்தால்
சூழ்ந்துநின்ற பாசவினை துலைந்துபோகும்
சுத்தமுடன் தேகமது சோதியாகும்
தாழ்ந்துநின்ற வாசியடா தலைமேற்கொண்டு
தளராது தேகமது தகராதென்னே. (829)

எண்ணப்பா தேகமது தளராதென்ன
எட்டுரெண்டு மொன்றான இன்பத்தாலே
கண்ணப்பா கலங்காது மனக்கண்கண்டால்
கசிந்துமனக் கண்ணறிந்து கால்கொண்டூணி
விண்ணப்பா வூடுருவி அண்டந்தாண்டி
வேதாந்த அண்டமதி னமுர்தங்கொண்டால்
மண்ணப்பா பொன்னாகு மென்னாளுந்தான்
மகத்தான அண்டபத வடிவில்நில்லே. (830)

எமன்விலக.

நில்லடா அண்டபத நிலையைக்கண்டு
நிலைபறிந்து பூரணத்தை நிதமுமைந்தா
கொள்ளடா பசியாற உண்டாயானால்
கொடுமையுள்ள கூத்துவனார் குடிலம்நீங்கும்
உள்ளடா குடிலமது நீங்கித்தானால்
உலகமதில் நீயுமொரு முனிநானுச்சு
கல்லடா கோட்டையது தகராதய்யா
காலறிந்து கொண்டதினாற் கருணையாச்சே. (831)

ஆச்சப்பா கருணைவளர் ஆருதாரம்
அகண்டபரி பூரணமா மேலாதாரம்
மூச்சப்பா நின்றிலங்கு மாதாரத்தில்
முழங்கிநின்ற நாதமடா வாசிமூலம்
பேச்சப்பா அடங்கிநின்ற வாசிமூலம்
பேரண்டத் துள்மூல மார்தான்காண்பார்
நீச்சப்பா நிலையறிந்து காணப்போகா
நிலையறிந்து கொண்டவனே நிசவான்காணே. (832)

சோதிகாண

காணடா நிசமான வசனங்காணக்
கருணையுடன் மூலமதில் ஓம்றீங்கென்று
பூணடா நடுவான முக்கோணத்தில்
புத்தியுடன் பூரணமாய் மனக்கண்ணூட்டி
ஊணடா சுழியறிந்து கால்மேற்கொண்டால்
உத்தமனே நிசமான சோதிகாணும்
பேணடா சோதியைநீ அந்திசந்தி
பேணிமனங் கொண்டுகரை யேறயேறே. (833)

ஏறுவது வாசியினு லேறவேணும்
ஏகாந்த அமுர்தரசங் கொள்ளவேணும்
தேறுவது மனதறிவால் தேறவேணும்
திறமாக வாசிசிவ யோகம்வேணும்
நேறுவது சிவயோகத் திருந்துகொண்டு
நெற்றியென்ற மத்தியிலே நினைவைவைத்து
சேறுவது அந்தரமே கெதியென்றெண்ணித்
தீர்க்கமுடன் சோதியைநீ திறமாய்ப்பாரே. (834)

கற்பம்.

திறமாக நிற்பதற்குக் கற்பமொன்று
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் திறமாய்க்கேளு
உறமான காயமடா பெருங்காயந்தான்
உத்தமனே உலகமதி லார்தான்காண்பார்
பரமான காயமடா சோமனுதி
பத்தியுட னுதியென்ற காயம்வாங்கி
அரமான கரமதனுற் பாகம்பண்ணி
அதுக்குநிகர் காரமுடன் பூரஞ்சேரே. (835)

சேரப்பா மூன்றுகரு வொன்றாய்ச்சேர்த்து
திறமான பாண்டமதி லிட்டுமூடி
காரப்பா சமாதியிலே வைத்துமைந்தா
கருணையுடன் மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
வீரப்பா கொண்டதுவும் நீருவற்றி
விசையான மெழுகதுபோல் நிற்கும்பாரு
தேரப்பா மனதறிவால் மெழுகெடுத்து
சிவசிவா கல்வமதில் நன்றாயாட்டே. (836)

ஆட்டிநன்றாய்ப் பின்னுமந்தப் பாண்டத்திட்டு
அப்பனே கற்பூரப் பொடிமேற்றூவிப்
பூட்டியந்த வாய்மூடிச் சமாதுவைத்து
புண்ணியனே ஆதியந்தத் தயிலம்வாங்கி
சூட்டியந்தத் தயிலமதை மெழுகிற்சேர்த்து
சுத்தமென்ற பீங்கான்றன் பரணிக்குள்ளே
தாட்டிகமாய்த் தானடைத்துப் பதனம்பண்ணிச்
சற்குருவைப் பூரணமாய்த் தியானஞ்செய்யே. (837)

செய்யடா பூரணமே தெய்வமென்று
தீர்க்கமுடன் நித்தியமுந் தியானம்பண்ணி
மெய்யடா தவறாமல் மெய்யாய்நின்று
மெஞ்ஞான பூரணலே கியத்தைமைந்தா
கையடா தவறாமல் மைந்தாநீயும்
கருணையுடன் பணவிடைதான் கையில்வாங்கி
மையடா மூலநந்திக் கறிவித்தேதான்
மார்க்கமுட னந்திசந்தி கொண்டுதேறே. (838)

தேறுவதுக் கேதுவான மார்க்கங்கொண்டு
திடசித்த மானதுவே யோகமார்க்கம்
நேறுவது சிவயோக மார்க்கத்தேகி
நிலையான பூரணத்தைக் கொள்ளும்போது
ஏறுவதுக் கேதுவான வாசிதானும்
இருதயமே குடியாக யிருந்துவாழும்
சேருவது இடமறிந்து சேர்ந்துகொண்டால்
சிவசிவா தேகமது திறக்கும்பாரே. (839)

திறப்பதென்ன தேகமடா மாயவாழ்வு
 தீர்க்கமில்லா வாழ்வதுவைச் சிலதுபேர்கள்
பார்ப்பதற்கு வேதாந்த நூலைப்பார்த்து
 பாவிகள்தா னறுசுவையோ டன்னங்கொண்டு
மறப்புடனே உறக்கமதால் மாண்டுபோனார்
 மாண்டகுறி யறியாத மக்காள்கேளு
சிறப்புடனே கல்நகண்டால் கல்லைமாட்டு
 சிவசிவா மற்றதெல்லாம் திறமாகாதே. (840)

திறமான வீடதுதான் சாயும்போது
 சிவசிவா அதற்குமொரு முட்டுக்கால்தான்
உறமாகத் தான்கொடுத்து நிறுத்தும்போது
 உத்தமனே அந்தமனை திறமாம்பாரு
அறமான வாக்கியமடா முன்னோர்சொன்ன
 அப்பனே யினத்தோடே யினஞ்சேருமென்று
பறமான வாக்கியமடா வேதவாக்கியம்
 பகுத்தறிவாற் சொல்லுவது பதிவாய்க்காணே. (841)

காணவே மண்ணுடனே மண்ணுசேரும்
 கசிவான தண்ணியுடன் தண்ணீர்சேரும்
பேணவே தீயுடனே தீதான்சேரும்
 பிலமான வாயுவிலே வாய்வுசேரும்
ஊணவே ஆகாசமித் தனைக்குஞ்சாட்சி
 உத்தமனே மனதறிவால் கண்டுகொண்டு
தோணவே நின்றதினால் மைந்தாகேளு
 சுகமாகுஞ் சுகமாகுஞ் சுகத்தைப்பாரே. (842)

பாரப்பா லோகாதி லோகமெல்லாம்
 பதிவான பரமசுக மறியாமல்தான்
வீரப்பா கொண்டதொரு பயிரைமைந்தா
 வேசைமக னைசைகொண்டு நின்றுநின்று
நேரப்பா நின்றவழி யறியாமல்தான்
 நிலைமறந்து போகுதடா உலகவாழ்வு
ஆரப்பா அறிவார்கள் உலகவாழ்க்கை
 அறிவாளி கோடியிலே ஒருவன்றானே. (843)

ஒருவனவன் உலகமெல்லாந் தானாய்நின்று
உத்தமர்க்கு உற்றதுணை யாவானப்பா
சிறுவனவன் செகசாலந் திறமாய்ச்செய்வான்
சிற்றின்பம் பேரின்பம் ரெண்டுங்காண்பான்
குருவசன மறவாம லருளைக்காண்பான்
குணமாகும் வேதைமுறை யதிகஞ்செய்வான்
பருவமுடன் சகலசரா சரங்களெல்லாம்
பத்தியுடன் தன்னுயிர்போல் பார்ப்பான்பாரே. (844)

அயக்களங்கு செந்தூரம்.

பாரப்பா பரமகுரு செந்தூரந்தான்
பாலகனே சொல்லுகிறேன் பதிவாய்க்கேளு
நேரப்பா அயமுடனே பூரஞ்சேர்த்து
நிசமான வெள்ளிதங்க மொன்றாய்க்கூட்டி
சேரப்பா குகைதனிலே யடைத்துமைந்தா
திருவான காரமிட்டு உருக்கும்போது
காரப்பா உருக்குமுகந் தன்னைப்பார்த்து
கருணையுடன் தானெடுத்துக் குளிரவையே (845)

வைத்ததொரு அயக்களங்கைக் கல்வத்திட்டு
மார்க்கமுட னதற்குநிகர் கெந்திவீரம்
மெய்த்ததொரு தாரமுடன் கெவுரிலிங்கம்
விபரமுடன் தான்கூட்டிப் பொடித்துமைந்தா
தைத்ததொரு காசியென்ற குப்பிக்கேத்தி
தன்மையுடன் சீலைமண்ணுந் தயவாய்ச்செய்து
உத்ததொரு பாண்டமதைச் சாம்பலிட்டு
உண்மையுடன் குப்பிதனை நடுவில்வையே. (846)

வையப்பா குப்பிதனை நடுவேவைத்து
மார்க்கமுடன் மேலுமந்தச் சாம்பலிட்டு
கையப்பா தவறாம லடுப்பிலேற்றி
கருணையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
மெய்யப்பா சருகம்பு விரகாலந்த
மேன்மைபெற யிருசாமந் தீயைமூட்டி
பொய்யப்பா போகாமற் பதத்தைப்பாரு
புத்தியுட னாறவிட்டா லிறக்கிப்போடே. (847)

இறக்கிமிகக் குப்பிதனை யெடுத்துப்பாரு
இன்பமுட னுருகியொரு வட்டாய்நிற்கும்
திறக்கஅந்த வட்டதனை யெடுத்துமைந்தா
தீர்க்கமுட னுகாசம் நாலிலொன்று
நிறக்கஅந்தச் சரக்குடனே கெந்திகூட்டி
நேமமுடன் கல்வமதில் பொடித்துமைந்தா
உறக்கவொரு குப்பிதனி லடைத்துக்கொண்டு
உத்தமனே முன்போலே மண்தான்செய்யே. (848)

செய்யடா மண்சீலை சிறக்கச்செய்து
செம்மையுடன் சிவாயகுரு பதமேபோற்றி
மெய்யடா முன்போலே பாண்டத்திட்டு
மேன்மைபெற அடுப்பேற்றித் தீயைமூட்டி
கையடா பதறாமல் நாலுசாமம்
கமலங்கா டாக்கினியா யெரித்துப்பார்க்க
பொய்யடா போகாது மைந்தர்கேளு
பூரணமாய்ச் சமைந்துசெந் தூரமாச்சே. (849)

ஆச்சப்பா செந்தூர மென்னசொல்வேன்
அரகரா ஆதியந்த அருமையாலே
மூச்சப்பா தானொடுங்கி அருணன்போலே
முடிந்திருந்த செந்தூரம் பதனம்பண்ணி
பாச்சப்பா தேகமதில் செந்தூரத்தை
பத்திகொண்டு பணவிடைதா னித்தங்கொண்டால்
போச்சப்பா பொல்லாத நோய்களெல்லாம்
பொன்னிறம்போற் தேகமது புனிதமாமே. (850)

புனிதமுள்ள செந்தூரந் தன்னைமைந்தா
போதமய மானகுரு தன்னைப்போற்றி
அனிதமுள்ள செம்பினிலே நூற்றுக்கொண்டு
அப்பனே தான்கொடுத்து உருக்கிப்பார்க்க
கெனிதமுள்ள தங்கமடா யென்னசொல்வேன்
கேள்வியென்ன பதினாறு வயதேயாகும்
மணிகரண நாதமடா மங்காத்தங்கம்
மகத்தான தங்கமதை மகிழ்ந்துபோற்றே. (851)

போற்றிமனங் கொண்டுநின்ற செந்தூரத்தை
புத்தியுடன் வெள்ளியிலே நாற்றுக்கொண்டு
பார்த்திபனே தான்கொடுத்து உருக்கிப்பாரு
பசுமையுள்ள தங்கமடா அதிகக்காந்தி
கார்த்துமனக் கண்ணாலே காந்திதன்னை
கண்குளிரப் பார்த்துமனங் கனிந்துகொண்டால்
நேத்திரத்திற் பேரொளிபோல் சிவயோகத்தில்
நின்றநிலை தவறாது அண்டத்தேறே. (852)

அண்டமதைக் கண்டுகரை யேறுதற்கு
அகாரமுட னுகாரமதை யறிந்துகொண்டு
கண்டபடி கண்குளிரக் கொண்டாயானால்
கருவான வாசியடா உருவிற்றங்கும்
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நின்றஅண்டம்
வகையுடனே கண்டுகரை யேறலாகும்
விண்டபடி அண்டமதி லேறிக்கொண்டு
மெஞ்ஞான பூரணத்தில் விரும்பியுண்ணே. (853)

உண்ணுவது வாசியினா லுண்ணவேணும்
உறங்குவது பூரணத்தி லுறங்கவேணும்
எண்ணுவது சடாட்சரத்தை யெண்ணவேணும்
ஏகாந்த மானசிவ யோகம்வேணும்
விண்ணுலகந் தன்மயமாய்க் காணவேணும்
வேதாந்த சாஸ்திரத்தைப் பார்க்கவேணும்
கண்ணுமன மொன்றாக நிற்கவேணும்
கற்பூர தீபமதைக் கலந்துகொள்ளே. (853)

கொள்ளடா அகாரமொடு உகாரம்ரெண்டும்
கொண்டுகரை யேறினபின் மகாரந்தன்னை.
நில்லடா பூரணமே கெதியென்றெண்ணி
நிசமான மவுனமென்ற பீடந்தன்னில்
செல்லடா மூலமென்ற வாசியாலே
சென்றுசிவ யோகமதில் தீர்க்கமானால்
உள்ளடா விளக்கொளிபோல் சோதியாச்சு
உற்றகலைக் கியானமென்ற தீபந்தானே. (855)

தானென்ற உலகமெல்லாந் தான்தாகுகி
தன்மயமாய் நின்றதொரு தீபந்தன்னை
வானென்ற அண்டமதில் நின்றுகாண
வகையுனக்குத் தெரியாட்டா லென்னசெய்வோம்
ஊனென்ற காயமதை உறுதியாக
உண்மையுடன் கண்டுகொண்டு நின்றாயானால்
கோனென்ற குருபதியிற் தீபந்தானும்
கொழுந்துவிட்டு யெரியுதடா கூர்ந்துபாரே. (856)

பாரப்பா மனக்கண்ணால் கூர்ந்துபார்க்க
பத்தியுனக் கில்லையடா பகரக்கேளு
நேரப்பா நின்றநிலை கண்டுஅந்த
நிலையறிந்து வாசியைநீ நிருத்திக்கொண்டு
வீரப்பா தாமொடுங்கக் கனலையூத
வெகுசுருக்காய் முத்தியு மொன்றாய்நின்று
ஊரப்பா ஒருநொடியில் முத்தீபாய்ந்து
ஓமுடியும் போதுமுடி யடியைப்பாரே. (857)

பாரடா அடிநடுவு முடியொன்றாக
பத்திகொண்டு ஊடுருவிப் பார்க்கும்போது
நேரடா கண்டதொரு வெளியுமாச்சு
நிசமான பூரணமும் வெளியுமாச்சு
சாரடா வாசிநிலை வெளியுமாச்சு
சத்தமென்ற நாதவிந்து வெளியுமாச்சு
மேரடா அண்டரண்டம் வெளியுமாச்சு
வேதாந்த தீபநிலை வெளிதான்காணே. (858)

காணவே கண்கண்ட வெளியினுள்ளே
காட்சியென்ற சூட்சமொன்று கருதக்கேளு
பூணவே மலைப்புடவு வனங்கள்தன்னில்
பொருந்திமனங் கொண்டுதவஞ் செய்யும்போது
பேணவே வியாக்கிரம ரிஷிதானப்பா
பெரிதான வியாக்கிரமந் தன்னிலேறி
தோணவே விளையாடி வரும்போதய்யா
சுகமாகக் கண்டுமிக அடுத்தேன்பாரே. (859)

வியாக்கிரம ரிஷி.

அடுத்துமிக இருவருஞ்சென் றிருக்கும்போது
அருள்பெருகும் வியாக்கிரம ரிஷியைப்பார்த்து
கடுத்ததொரு மிருகமதை யடக்கிநீரும்
கருணையுட னேறிவந்த கதைதானென்ன
விடுத்துமிகச் சொல்லுமென்று கேட்டபோது
வியாக்கிரமர் மனமகிழ்ந்து விண்ணைநோக்கி
தொடுத்தகும்பந் தனிற்பிறந்த அகத்தியாகேள்
சொல்லுகிறேன் மந்திரத்தின் சூட்சந்தானே. (860)

மிருகம் வாய்கட்ட.

தானென்ற சூட்சமதைச் சொல்லக்கேளு
தன்மையுடன் ஓம்றீங் அம்மென்றேதான்
வானென்ற கேசரியில் மனதைவைத்து
மார்க்கமுடன் தானினைத்து முன்னேயூது
ஊனென்ற வல்மிருகம் அலகுகட்டி
உத்தமனே உனதிடமா யொடுங்கிநிற்கும்
கோனென்ற குருவருளால் கம்சிம்மென்று
குறித்துமிகத் தானேறி யிருந்துகாணே. (861)

இருந்துமனங் கொண்டுவிளை யாடிமைந்தா
இறங்கிமிக ரும்சீயென் றதட்டிச்சொல்லு
முறிந்துமிகத் தானோடிப் போகுமைந்தா
முத்தியுடன் தன்பதியிற் றானேசென்று
அருந்தவமாய்த் தவசிருந்து தவமேகொண்டால்
அடங்காத சித்துவெகு உறுதியாகும்
தெரிந்துகொள்ளு அகத்தியமா முனியேயென்று
சீக்கிரத்தில் வியாக்கிரமற் சென்றார்காணே. (862)

காணவே புலத்தியமா ரிஷியேஅய்யா
கருணையுட னீயுமிந்தப் படியேபார்த்து
பேணவே ஆனந்த விளையாட்டாடி
பெரிதான புத்தியினாற் றன்னைக்கண்டு
தோணவே வாசியென்ற சர்ப்பமேறி
சுத்தமுட னட்டதிசை சுத்திப்பின்பு
பூணவே மனதுகந்த யிடத்திற்சென்று
புத்தியுடனாதார மூலம்பாரே. (863)

பாரப்பா ஆதார மூலமான
பத்தியுள்ள மந்திரமிது வெளிவிடாதே
காரப்பா மூலமென்ற யிடத்திலேதான்
கண்ணான கண்ணுமனக் கண்ணுங்கொண்டு
நேரப்பா நின்றயிடந் தன்னைப்பார்த்து
நிலையறிந்து வாசியையே நிருத்தினுக்கால்
மேரப்பா மேருகிரி அண்டந்தன்னில்
வேதாந்தச் சோதிவெகு விலாசங்காணே. (864)

காணப்பா விலாசமென்ற கருணைதன்னை
கண்குளிரச் சொல்லுகிறேன் கண்தான்மைந்தா
பூணப்பா கண்ணுமனக் கண்ணுங்கொண்டு
பூமிமுத லாகாசம் நன்றாய்ப்பாரு
தோணப்பா கண்ணடங்கா விண்ணைப்பார்க்க
தொல்லுலகம் மேலுலகம் நன்றாய்த்தோணும்
பேணப்பா கண்மறைந்தால் விலாசம்போச்சு
பெரிதான பூரணத்தி லிருந்துபாரே. (865)

நாகரசவேதை.

பாரப்பா யிருந்துமிக யோகஞ்செய்யப்
பரிவான நாகரச வேதைகேளு
வீரப்பா வெடியுப்புச் சுண்ணநீரில்
வேகமாய் நாகமதை யுருக்கிச்சாய்க்க
சீரப்பா ஐந்துதர முருக்கிச்சாய்த்தால்
சிவசிவா சீறடங்கிக் கட்டும்பாரு
காரப்பா சுண்ணடங்கிக் கட்டிநின்ற
கருவான நாகமதை உருக்கிக்காணே. (866)

காணவே ரசமதனைப் பழச்சாற்றுள்ளே
கருணையுடன் விட்டுநன்றா யடுப்பிலேற்றி
பேணவே தீயெரித்து வற்றினுக்கால்
பேசாத மவுனரசங் கட்டிப்போகும்
தோணவே நாகமுடன் ரசத்தைச்சேர்த்து
சுத்தமுடன் தானுருக்கி யெடுத்துக்கொண்டு
ஊணவே அயமுடனே பூரஞ்சேர்த்து
உறுதியுடன் குகையிலிட்டு உருக்கிக்கேளே. (867)

கேளப்பா அபமுருகும் போதிலேதான்
கிருபையுள்ள நாகரசங் கூடச்சேர்த்து
வாளப்பா நாகரசங் கூடச்சேர்த்து
வரிசையுட னுருகையிலே தங்கஞ்சேரு
ஆளப்பா தங்கமுட னெல்லாங்கூட்டி
அப்பனே வீரடங்கி உருகிநல்ல
காலப்பா கொண்டுகலே யேறிநல்ல
கருவான களங்கமதைக் கண்ணால்காணே. (868)

கண்ணான களங்கமதை யெடுத்துமைந்தா
கருவான வெள்ளிசெம்பு பத்துக்கொன்று
ஒன்றான களங்கமதை யொன்றுகூட்டி
உத்தமனே ஒருமனதா யுருக்கிப்பாரு
பொன்னான பொன்வயதை என்னசொல்வேன்
புத்தியுட னெட்டுரெண்டும் பத்தாய்நிற்கும்
விண்ணான தசதீட்சை பெற்றதாயை
விரும்பியவள் பாதமதைப் பூசைபண்ணே. (869)

பண்ணப்பா பூஷைமுறை யார்தான்காண்பார்
பாரிலே பலசாதிப் பயல்கள்கூடி
கண்ணப்பா கண்ணொளியைக் கண்டோர்போல
கள்ளறக்கு மீனிறைச்சி கதிக்கவைத்து
உண்ணப்பா உண்டுசதை பெருக்கவேதான்
உடையாளி வந்தாப்போற் கண்ணைமூடி
எண்ணமப்பா பலநினைவை யெண்ணியெண்ணி
இருந்தயிடந் தெரியாமல் மயங்குவானே. (870)

மயங்குவான் மனநிலையை யறியாமற்தான்
மாண்டிறந்த கள்ளிறச்சி மயக்கத்தாலே
தியங்குவான் தெருத்தோறும் நாய்போல்மைந்தா
திறமறியாப் பாவிகள்தான் மெத்தவுண்டு
நயங்குவிந்து அவர்களிடம் பேசவேண்டாம்
நாதாந்த பூரணத்தை நயந்துகொண்டு
இயங்குகின்ற வாசியிலே மனதைவைத்து
இருசுடரு மொன்றான இடத்தைப்பாரே. (871)

பாரப்பா மனங்குவிந்த இடத்தைநன்றாய்
பத்திகொண்டு பூரணமாய்ப் பார்க்கும்போது
நேரப்பா நின்றநிலை தன்னிலேதான்
நின்றிலங்கும் அறிவான தீபந்தீபம்
காரப்பா கமலவிழிக் கண்ணால்பார்க்க
கருவுனக்கு யில்லையடா காலைப்பாரு
தேரப்பா காலறிந்து நிலையில்நின்றால்
செடத்தோடே பூரணத்திற் சேரலாமே. (872)

கருநெல்லி வெண்சாரை.

சேரப்பா பூரணத்திற் சேர்ந்துகொள்ளத்
திறமுனக்குச் சொல்லுகிறேன் செம்மையாக
மேரப்பா சதுரகிரி யடிவாரத்தில்
வேதரிஷி மடபதிக்கு மேலதாக
சாரப்பா அங்கேயொரு குகைதானுண்டு
சங்கையுடன் அக்குகையில் தானேசென்றால்
பேரப்பா பெற்றகரு நெல்லியுண்டு
பிலமான சயிலமென்ற சுனைதான்காணே. (873)

காணவே கொண்டுமன மங்கேசென்று
கருநெல்லிப் பழமருந்திச் சுனைநீர்கொண்டால்
பேணவே வாசியது பிலமாய்நிற்கும்
பிறளாமற் தேகவச்சிர காயமாகும்
ஊணவே தேகவச்சிர காயமானால்
உண்மையுடன் ரவிமதியு மொன்றாய்நின்று
பூணவே சுழினையென்ற கமலமீதில்
புத்தியுடன் பூரணமாய் வாழலாமே. (874)

வங்கரசக்குரு.

வாழ்வதற்கு இன்னமொரு கருவைக்கேளு
மார்க்கமுடன் வங்கரச மொன்றாய்ச்சேர்த்து
ஆழ்வதற்கு அந்தநிரை சாரங்காரம்
அப்பனே நால்சரக்குங் கல்வத்திட்டு
மாழ்வதற்குப் பழச்சாற்றால் மைபோலாட்டி
மார்க்கமுடன் நாகமதிற் கங்கிபூட்டி
சூழ்வதற்கு மண்சீலை வலுவாய்ச்செய்து
சுகமாக நிதானமதாய்ப் புடத்தைப்போடே. (875)

போடப்பா நிறையறிந்து புடத்தைப்போட்டால்
போட்டபுட மாறினபின் னெடுத்துப்பாரு
சூடப்பா தானேறி நாகங்கட்டி
சுத்தமுடன் கண்ணடங்கி நிற்கும்பாரு
தேடப்பா வெள்ளிசெம்பு தங்கமூன்றும்
செம்மையுடன் குகையில்நின்று உருகும்போது
நாடப்பா கட்டிநின்ற நாகந்தன்னை
நன்மையுட னந்தயிடை சேர்த்துக்காணே. (876)

சேர்த்துநன்றாய்க் காரமிட்டு உருக்கிப்பார்க்க
திருவான நால்பதமு மொன்றாய்க்கூடி
ஆத்துமத்துக் குயிரான குருவாய்நிற்கும்
அப்பனே நாதகுரு தன்னைவாங்கி
மாத்ததிக மாவதற்கு வெள்ளிசெம்பு
மக்களே ரெண்டுமொன்றாய்ப் பத்துக்கொன்று
கார்த்துநன்றாய் நாககுரு வொன்றுபோட்டால்
கண்ணான சோதிவெகு தங்கமாமே. (877)

தங்கமென்ற மாதுஅப ரஞ்சித்தாயைச்
சங்கையுடன் பொற்கமலந் தன்னில்வைத்து
அங்கமுடன் மானதமாய்ப் பூசைசெய்து
அவள்பதமே கெதியெனவே அருட்கண்மேவி
எங்குநிரா மயமான சோதியென்று
இன்பமுடன் சிவயோகத் திருந்தாயானால்
மங்காது வாசியது யெங்குந்தானாய்
மகத்தான கேசரியில் வாழலாமே. (878)

ஆமப்பா கேசரியே ஆதிபீடம்
அடங்காத வாசிநிறைந் திருக்கும்பீடம்
வாமப்பால் பூரணமாய் நின்றபீடம்
மகாமந்திர மானதொரு மவுனபீடந்
தாமப்பா தானவனாய் நின்றபீடம்
சச்சுதா னந்தமய மானபீடம்
சேரமப்பால் வெளியொளியாய் நின்றபீடம்
சுத்தமய மானசிவ பீடந்தானே. (879)

பீடமென்ற மந்திரமாம் பீடந்தன்னில்
பிரணவமாய் நின்றதொரு தீபந்தானும்
மாடமென்ற மேருகிரி தீபம்போலே
வரிசையுடன் காணுதடா மவுனஞானம்
கூடமென்ற ஆதாரந் தன்னிலேதான்
குவிந்துமனங் கோணுமல் நின்றுபாரு
ஆடமென்ற சக்கரங்க ளாறுமொன்றாய்
அசையாம லாடுதடா அங்கேபாரே. (880)

அங்கேபா ரென்றமொழி யெங்கேயென்றால்
அடிமுடிக்கும் நடுவான ஆதாரத்தில்
எங்குநிரா மயமான சோதிமூலம்
ஏகாந்தமூலமடா முக்கோணத்தில்
சங்கையில்லாச் சோதிவெகு சூட்சந்தன்னை
தன்மயமாய் நின்றதிரு நயனத்தாலே
மங்களமாய் நின்றகுறி தன்னைப்பார்க்க
மகாமந்திர பூரணத்தின் வரிசைதானே. (881)

துருசுச் சுண்ணம்

வரிசையுட னின்னமொரு வேதைமார்க்கம்
வகையுடனே சொல்லுகிறேன் வணங்கிக்கேளு
உரிசையென்ற லவணமடா உப்பதொன்று
உருகிநின்ற வங்கரசந் துருசுவீரம்
கரிசலென்ற உப்புடனே ஒன்றாய்க்கூட்டி
கல்வமதில் காமசலம் விட்டுஆட்டி
புரிஷமுட னுருட்டியதை வட்டுப்பண்ணி
புத்தியுடன் ரவிதனிலே காயப்போடே. (882)

போடப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால்
புனிதமுட னோட்டில்வைத்து மண்ணுஞ்செய்து
சூடப்பா பிலப்பதற்குப் புடத்தைப்போடு
சுண்டிமிகக் கட்டியது சுண்ணமாகும்
நாடப்பா சுண்ணமதை வைத்துக்கொண்டு
நன்மையுடன் வாய்நீரா லரைத்துக்கொண்டு
தேடப்பா பச்சையென்ற துருசுதன்னை
திறமான கட்டியொன்று வாங்கிக்கேளே. (883)

கேளப்பா வாங்கினதோர் துருசுமேலே
கேள்வியென்ன சுண்ணமதைக் கவசம்பண்ணி
சூளப்பா அதின்மேலே மண்ணுஞ்செய்து
சுத்தமுடன் சற்றுருவைத் தியானம்பண்ணி
ஆளப்பா நிதானமதாய்ப் புடத்தைப்போட்டு
ஆதிகுரு பூரணமென் றடிபணிந்து
வாளப்பா புடமாறி யெடுத்துப்பாரு
வாக்கடங்காக் காரமடா சுண்ணந்தானே. (884)

சுண்ணமென்ற கவசத்தோ டெடுத்துநல்ல
துப்பறவா யோட்டில்வைத்து நீரைக்குத்து
நன்னயமாய்க் கவசமது பொங்கிநீறி
நாதாந்த துருசுவெகு காரமாகும்
என்னசொல்வேன் காரமென்றால் வாய்தான்வேகும்
என்மகனே பாஷாண முழுதும்நீரும்
மண்ணுமுதல் விண்ணுவரை நன்றாய்நீரும்
மகத்தான துருசுசுண்ண வேகந்தானே. (885)

வேகமென்ற துருசுசுண்ணந் தன்னைவாங்கி
வேதாந்த ரசமதிலே பத்துக்கொன்று
பாகமென்ற சுண்ணமதை மேலேபோட்டு
பத்தியுடன் தண்ணீரைக் குத்திப்பாரு
ஆகமென்ற சுண்ணமதின் வேகத்தாலே
அடங்காத ரசமதுவுங் கட்டிநீறும்
ஏகமென்ற அமுர்தரசச் சுண்ணந்தன்னை
இன்பமுட னதற்கிரட்டி ரசத்தைக்கூட்டே. (886)

ரசமணி.

கூட்டிரெண்டு மொன்றாக அமுர்தம்விட்டு
கூர்மையுடன் மத்திக்கும் போதிலேதான்
ஆட்டிநின்ற ரசமதுவு மடங்குமைந்தா
அருமையுள்ள மெழுகதுபோ லிருக்கிற்கும்
சூட்டியந்த ரசமெழுகைக் கையில்வாங்கி
சுத்தமுட னுருட்டியொரு மணிபோற்செய்து
தாட்டிமா யம்மணியை மைந்தாகேளு
சம்பழத்தி னுள்ளழுத்தித் தன்னைப்பாரே. (887)

தன்னைத்தா னறிந்துமனக் கண்ணால்பார்க்க
சம்பழத்தி னுள்ளிருந்த மணிதானப்பா
விண்ணைத்தா னோக்கும்வெளி சோதிபோலே
வேதாந்த ரசமணிதா னிருகிப்போகும்
உண்ணத்தான் மனமிருகு மணியையப்பா
உண்மையுடன் சிவயோகத் திருக்கும்போது
கண்ணைத்தா னோக்கிமனக் கனிவால்மைந்தா
கருணையுட னுவடக்கஞ் செய்துகொள்ளே. (888)

கொள்ளப்பா நாவடக்கஞ் செய்துகொண்டு
குருவான பதிநோக்கி யிருந்தால்மைந்தா
மெள்ளப்பா சடத்தோடே வாசிதூக்கி
வேகமென்ற லகிரிவெகு போதையாகும்
சொல்லப்பா தவறாத போதையாகும்
சொக்கிமனந் தளராத அறிவானந்தம்
நல்லொப்பாய் நின்றஅரி வானந்தத்தில்
நன்மையுட னினைத்தபடி நாடலாமே. (889)

நாடெல்லாஞ் சென்றுவலம் வந்தாலென்ன
நாதாந்த ரசமணிதா னில்லாவிட்டால்
வீடெல்லாந் தளன்றுகுரு காணாதப்பா
வேதாந்த வாசியது நிலைநில்லாது
சூடெல்லா மங்கியந்தச் சுழியிற்சென்று
சுழன்றுமன மலைவாகித் தூங்கலாகி
காடெல்லாஞ் செத்தசவம் போற்றிரிந்து
கண்மணியைக் காணாமல் அலைவான்பாரே. (890)

பாரப்பா மனமலைந்து போகாமற்தான்
பதிவான துருசுரசச் சுண்ணத்தாலே
சாரப்பா யேமரசஞ் சுண்ணமாச்சு
சதாகோடி வேதைமுகங் காணலாச்சு
காரப்பா வேதைமுகங் கண்டதாலே
காரணமாய்ச் சித்துமெம்ப ஆடலாகும்
சீரப்பா சகலசித்துந் தானேயாடிச்
சிவஞான பூரணத்திற் றெளிவாய்நில்லே. (891)

தெளிவான தெளிவதுதான் மைந்தாகேளு
தெளிவான கண்ணுமனக் கண்ணேயாகும்
நெளியாமல் கண்ணுமனக் கண்ணினாலே
நேர்ந்தபடி தான்றிரிந்து நிலைபிற்பத்தும்
அளியாத நிலையில்மனம் பத்தும்போது
ஆனந்த அதிசயங்கள் மெத்தவுண்டு
வழியான துறையறிந்து கடந்துகொண்டால்
வந்தவழி மார்க்கமது மாயவாழ்வே. (892)

மாயமென்ற வாழ்க்கையடா உலகவாழ்க்கை
மகாமாய்கை யென்றகூறி யறியாமல்தான்
காயமென்ற கருவறியாக் கர்மிகள்தான்
காசினியிற் தபோதனர்கள் வாக்கியந்தன்னை
நேயமுடன் தாயகமாய்ப் பாடம்பண்ணி
நிலையறியாப் பாவிகள்தான் கூடிக்கொண்டு
தாயகமாய் நல்லோரைப் பெரியோரைத்தான்
தர்க்கமிட்டு உக்கியவன் தலைகாணரே. (893)

தலைகாணாப் பாவிகள்தான் தலைகாலாகத்
தன்னிலையைத் தானறியாச் சவங்கமாடு
நிலைகாணாப் பதருகள்தான் மெத்தவுண்டு
நேசமில்லா மூடருட னிணங்கவேண்டாம்
கலையான மந்திரகலை வாசியாச்சு
கமலரச பூரணமே ஆத்மாவாச்சு
அலையாமல் மந்திரகலை வாசியேறி
ஆத்மாவாம் பூரணத்தி லழுந்திக்காணே. (894)

அழுந்திமனங் கொண்டுறுதி பூண்டுநித்தம்
அருள்பெருகும் வாலைபத மன்பாய்ப்போற்றி
நெளிந்துமனம் போகாமல் நிதானங்கண்டு
நிலையறிந்து கலையறிந்து நேமமாக
வளிந்தொழுகும் அமுர்தரச பாணந்தன்னை
வகையறிந்து வழிதுறையாய்ப் பூசைபண்ணி
தெளிந்துகொண்டு மனத்தெளிவாய்த் தெளிந்தாயானால்
தெளிவான மாவெழுத்து மகாரந்தானே. (895)

மகாரமென்ற மவுனமடா விந்துவாச்சு
மகத்தான விந்துநிலை யறிந்துகொண்டு
சிகாரமென்ற வன்னியடா செந்தீயப்பா
சிவசிவா செந்தீயை விந்திற்சேர்த்து
வகாரமென்ற வாசிதனைச் செந்தீப்பற்ற
மார்க்கமுடன் தானாத மகிழ்ந்துபொங்கி
நகாரமென்ற பிருதிவியில் மடிந்துபோச்சு
நடுவாகி வன்னிரெண்டு மேலுமாச்சே. (896)

ஆச்சப்பா மென்மேலும் வாலையாகி
அமர்ந்துநிலை தனையறிந்த நாதவிந்து
மூச்சப்பா முடிவான சத்தமாகி
மூவுலகுந் தானறிந்த அமுர்தமாகி
நீச்சப்பா நிலையாத அமுர்தகெங்கை
நிலையறிந்து கரையேறி நிலையைப்பற்றி
பேச்சப்பா சுத்தவெள்ளங் கரைகொள்ளாது
பேச்சடக்குஞ் சூட்சமதை பேணிப்பாரே. (897)

பாரப்பா பேணிமனங் கோணமற்றான்
பாய்ந்துநின்ற கெங்கையடா அமுர்ததாரை
நேரப்பா வழிந்தொழுகும் அப்போதய்யா
நின்றநிலை பேருமற் கொண்டாயானால்
ஊரப்பா ஆறாறு யெல்கையொன்று
உத்தமனே அந்தயெல்கை முப்பாழப்பா
பேரப்பா முப்பாழுக் கப்பால்நின்று
பெரும்பாழாய் நின்றதுவும் வெரும்பாழாச்சே. (898)

ஆச்சப்பா வெரும்பாழா யமர்ந்தபேச்சு
அகாரமுட னுகாரம்ரெண்டும் அறியாதாலே
பேச்சப்பா மூலவன்னி வாசிகொண்டு
போனவிடந் தெரியாமற் புருவத்தேகி
காச்சப்பா ஆதார முத்தியாலே
கனலெழும்ப ஊதிவிடு வாசியாலே
மூச்சப்பா பேச்சாகி வந்தசத்தம்
முனையறிந்த புருவநடு உச்சம்பாரே. (899)

பாரப்பா உச்சமென்ற உச்சிதானும்
பதிவான அடிநடுவு முடியுமாச்சு
நேரப்பா அடியதுவும் வாய்வதாச்சு
நிசமான நடுவதுவும் தீயுமாச்சு
மேரப்பா ஆகாசந் தண்ணீராச்சு
மேல்கிழுந் தானுச்சு வேதமாச்சு
காரப்பா வேதமென்ற நாதாந்தத்தை
கருத்துவைத்துக் கண்ணதனால் நன்றாய்க்காணே. (900)

நன்றாகக் காண்பதிது நாதாந்தத்தி
நாலான பூரணமே வேதாந்தத்தி
ஒன்றான காந்திமதி காந்தியான
உண்மையென்ற சித்தாந்தி யுந்தியாச்சு
கண்டதொரு உந்தியிலே செந்தீப்பற்றி
கர்மவினை தாமெரிந்து கண்முன்னாகி
அண்டகே சரிமாது நின்றசூட்சம்
அகண்டபரி பூரணமா யாதியாச்சே. (901)

வேடியுப்புச் செயநீர் கட்டும்வகை.

ஆதியென்ற லவணமடா யார்தான்காண்பார்
அப்பனே வளித்துருட்டி வட்டுப்பண்ணி
சோதியென்ற நீலமாங் கம்பியுப்பு
சுத்தமென்ற அமுர்தரச மானஉப்பு
நீதியென்ற அமுர்தரச உப்புவாங்கி
நிசமான நாகரச மொன்றுசேர்த்து
சாதியென்ற சீனமுடன் பூரங்கூட்டி
சங்கையுடன் பழச்சாற்றில் நன்றாயாட்டே. (992)

ஆட்டுவாய் கல்வமதில் மைபோலாட்டி
அப்பனே வளித்துருட்டி வட்டுப்பண்ணி
நாட்டுவாய் ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால்
நன்மையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து
பூட்டுவாய் நிதானமதாய்ப் புடத்தைப்போட்டால்
புண்ணியனே வெந்ததுவுஞ் சுண்ணமாச்சு
தாட்டிகமாய்ச் சுண்ணமதை வாங்கிமைந்தா
சங்கையுடன் நாவிலொன்று சாரஞ்சேரே. (903)

சேர்த்துமிகப் பிங்கானில் வைத்துநல்ல
சிவசிவா பனியில்வைக்கச் செயநீராச்சு
போர்த்தியந்தச் செயநீரை வாங்கிமைந்தா
புண்ணியனே வீரமதைப் பொடித்துத்தூவ
பார்த்திபனே நீரதுவுஞ் சிவந்துபோகும்
பக்குவமாய் அந்நீரைப் பதனம்பண்ணி
கார்த்துநன்றாய்ச் சரக்குகளிற் சுருக்குப்போட்டால்
கனகமது போலதுவுங் கட்டும்பாரே. (904)

மெழுகுவகைச் செயநீர்.

பாரப்பா கட்டும்வகைச் செயநீர்சொன்னேன்
பதிவான மெழுகுவகைச் செயநீர்கேளு
காரப்பா கம்பியுப்பு துருசுகூடன்
கருவான துத்தமுடன் அன்னபேதி
நேரப்பா சரக்குவகை அஞ்சுங்கூட்டி
நிசமான கல்வமதில் பழச்சார்விட்டு
தேரப்பா மையதுபோல் நன்றாயாட்டி
திறமாக உருட்டியதை வட்டுப்பண்ணே (905)

பண்ணப்பா ரவியதனை வட்டுப்பண்ணி
பத்தியுடன் புடம்போட்டு யெடுத்துப்பார்க்க
விண்ணப்பா நிறைந்ததொரு சுண்ணமாச்சு
வேதாந்தச் சுண்ணமதைப் பதனம்பண்ணி
முன்னப்பா நிறைந்தசுண்ணத் திடைதான்சாரம்
முத்தியுடன் கூட்டிநன்றாய்ப் பொடித்துக்கொண்டு
உண்ணப்பா பிங்கானி லிட்டுமைந்தா
உறுதியுடன் பனியில்வைக்கச் செயநீராச்சே. (906)

ஆச்சப்பா செயநீரை வாங்கிமைந்தா
அறுபத்து நாலுவகைச் சரக்குக்கெல்லாம்
மூச்சப்பா தானடங்கச் சுருக்குப்போட்டால்
முத்தியுள்ள பாஷாண மெழுகாய்நிற்கும்
நீச்சப்பா சரக்குவகை மெழுகேயானால்
நிமிஷமென்ற வேதையடா கண்கொள்ளாது
பேச்சப்பா அடங்கிநின்ற தலத்தைப்பாரு
பெலமாகப் பூரணத்தைக் கண்டுகொள்ளே. (907)

பூரணச்செயநீர்

கண்டுகொள்ளப் பூரணத்தின் செயநீர்கேளு
கம்பியுடன் கூடனது சரியாய்ச்சேர்த்து
கொண்டுமிக அதுக்குநிகர் துருசுசேர்த்து
கூர்மையுட னதுக்குநிகர் சாரஞ்சேர்த்து
விண்டபடி கொண்டதனைப் பொடித்துமைந்தா
விபரமுட னின்னமொரு கருவைக்கேளு
அண்டரச பூரணமுங் கொடியுங்கூட்டி
அப்பனே பீங்கானி லமர்த்திக்கொள்ளே. (908)

அமர்த்திவைத்த கருவதற்கு அடிமேலப்பா
அன்புடனே சரக்குவகைப் பொடியைத்தூவி
சுமர்த்திநன்றாய்ப் பொடிதூவிச் சீலைசெய்து
சுத்தமுடன் சமாதுதனில் வைத்துப்பாரு
சமர்த்துடனே மண்டலஞ்சென் றெடுத்தாயானால்
சங்கையுள்ள கருவுடனே சரக்கெல்லாந்தான்
குமர்த்திமிகத் தான்கரைந்து தண்ணீராச்சு
குருவான பூரணநீ ரிதுதான்பாரே. (909)

பாரப்பா பூரணநீர் தன்னையப்பா
பத்தியுடன் குப்பிதனிற் பதனம்பண்ணி
நேரப்பா பாஷாணங் காரசாரம்
நிசமான பூரணநீர் கண்டபோது
வீரப்பா கொண்டதொரு பாஷாணமெல்லாம்
விபரமுடன் கட்டியது திட்டமாகும்
தேரப்பா சொல்லுகிறேன் காரசாரம்
திருவான பூரணத்தால் மெழுகுமாச்சே. (910)

ஆச்சப்பா கட்டுவகைச் சரக்கெல்லாந்தான்
அப்பனே வேதையிடப் பத்துமாத்தாம்
காச்சப்பா மெழுகுவகைச் சரக்கெல்லாந்தான்
கருணையுடன் வேதையிடப் பதினாறாகும்
நீச்சப்பா நிலையறிந்து வேதைபார்க்க
நிலையான பூரணத்தைக் காணவேணும்
மூச்சப்பா முன்னிலையாய் நிறுத்தவேணும்
முத்திகொண்ட சிவஞான யோகம்பாரே. (911)

பாரப்பா யோகியென்றால் பூசைவேணும்
பதிவான சிவமுடனே தியானம்வேணும்
நேரப்பா வாசிசிவ யோகம்வேணும்
நேர்மையுடன் பூரணத்தில் நிற்கவேணும்
சாரப்பா அமுர்தரச முண்ணவேணும்
சங்கையுடன் அகண்டவெளி காணுங்காணும்
காரப்பா குருபதத்திற் கருணைவைத்து
கண்ணுமனக் கண்ணதனால் கனிந்துபோற்றே. (912

போற்றுவது பூரணத்தால் வழலைச்சுண்ணம்
புத்தியுடன் கண்டறிந்தால் உப்புக்கட்டும்
தேற்றியதோ ருப்பைவிட்டா லொன்றுமில்லை
திருவான பொன்னுருக்கு உப்பேயாதி
பாத்திபனே ஆதியென்ற வழலைவாங்கி
பத்தியுடன் சுத்தமதாய்ப் பாகம்பண்ணி
நேத்தியுடன் சரக்குவகை யறிந்துகொண்டு
நிலையான நிலைநிருத்திக் கட்டுவாயே. (913)

கட்டுவாய் நிலையறிந்து வாசியான
கருவான உப்படங்கக் கட்டினக்கால்
திட்டமுடன் சரக்குகளை யதட்டிக்கட்டும்
தேகமதுக் காதாரக் கற்பமாகும்
இட்டமுடன் நவலோக இருளைநீக்கும்
ஏகாந்தச் சோதியுட இன்பங்காட்டும்
சட்டமுடன் சாயுட்ச பதவியான
சதுரகிரி யடிவார முடியுமாச்சே. (914)

ஆச்சப்பா முடிபூர மடிதான்காரம்
ஆதியந்த மானதொரு அருளைக்கேளு
நீச்சப்பா நிலையாத சாரஞ்சாரம்
நின்றநிலை தவறாத வீரம்வீரம்
காச்சப்பா யிதுநாலும் பூரணத்துக்காதி
கைமுறையாய்க் கண்டறிந்தோ னவனேவாதி
மூச்சப்பா நிலையறிந்து பூரணத்தைக்கண்டால்
முத்தியுள்ள ரசவாதி யென்றும்பேரே. (915)

பெரியோர் மகிமை.

பேரப்பா ஆதிரச வாதியென்று
பேர்பெரிய பேரெடுக்க வருமோசும்மா
வீரப்பா கொண்டதொரு மனம்நிறுத்தி
வேதாந்த சற்குருவைத் தேடிக்கண்டு
நேரப்பா நின்றுபதம் பணிந்துகொண்டால்
நிசமான பிள்ளையென்று நிலையைக்காட்டி
பாரப்பா வென்றுரச வமுர்தமீய்ந்து
பசைந்தமண்ணுந் தண்ணீருங் காட்டுவாரே. (916)

காட்டிநிமை மூடுமுன்னே வாதந்தங்கும்
கருவான வாசியினல் நயனங்காணும்
நாட்டிநின்ற நயனமதால் சோதிகாணும்
நாதாந்த பூரணத்தின் விலாசந்தோணும்
பூட்டிநின்ற பூரணத்தின் விலாசத்தாலே
போதமய மானசிவ யோகங்காணும்
சூட்டிநின்ற சிவயோக தீபத்தாலே
சூட்சமென்ற தேகமது சோதியாச்சே. (917)

சோதிமய மானசிவ சூட்சங்கண்டால்
சுயஞ்சோதியானசிவ சூட்சத்தாலே
ஆதிரச வாதியென்ற பேருமாச்சு
ஆனந்த மானசிவ யோகியாச்சு
சாதியென்ற சராசரமுந் தான்தானுச்சு
சகலகலை பூரணமுந் தன்னுள்ளாச்சு
ஓதியதோர் மந்திரகலை பீடமாச்சு
ஓம்நமசி வாயமென்ற குருவுமாச்சே. (618)

பாசாண்டிகுணம்.

ஆச்சப்பா பொற்குருவைக் கண்டோர்க்கெல்லாம்
அமுர்தரச வாதியென்றே பேருமாச்சு
பேச்சப்பா பேசரியா வம்பர்தானும்
பேருலகில் ரசவாதஞ் செய்வேனென்று
காச்சப்பா வென்றுகடைச் சரக்கைவாங்கி
கட்டுமுறை திட்டமென்று கரியில்வைத்து
மூச்சப்பா தானடக்கி ஊதிப்பார்ப்பான்
மூலவன்னி அக்கினியாற் புகைந்துபோமே. (919)

போமப்பா புகைக்குவெகு புகையாய்ப்போகும்
போனவித மென்னவென்று புலம்பிவாடி
தாயப்பா தனையறியாப் பேயர்கூடி
சாஸ்திரத்தைப் பொய்யென்பான் சவங்கல்மாடு
காமப்பால் கானற்பால் அறியாமற்தான்
கடிதான பாஷாணப் புகையிற்சென்று
ஓமப்பா வென்றதொரு நயனங்கெட்டு
ஊதுகின்ற பாசாண்டி தன்னைத்தள்ளே. (920)

தள்ளுவது ஆரையென்றால் மைந்தாகேளு
சத்திசிவ மறியாரைத் தள்ளவேணும்
கள்ளுடனே மீனிறைச்சி யபினாக்கு
கதிகெட்ட எண்ணையொடு புளிதாம்பூலம்
மல்லுடனே கோபமொடு உறக்கஞ்சோம்பு
மருதாரந் தனைவிரும்பல் வஞ்சனைகள்கொடுமை
எள்ளளவு மனந்தனிலே நினையாமற்தான்
ஏகாந்த பூரணத்தி லிருக்கநன்றே. (921)

நன்றாகத் தானிருந்து நன்மையாக
நல்லவழி துறைதனிலே நாட்டமானால்
அண்டர்தொழும் ரசவாதி யவனேயாகும்
ஆதிசிவ யோகியென்ற ரூபமாச்சு
சென்றுடுங் கெவுனியென்ற மவுனியாகும்
செகராச ராசகிரி முடியுமாகும்
உண்டரசந் தனையறிந்து கண்டுகொண்ட
உரிசையென்ற ரசவாதம் உரிசைதானே. (922)

உரிசையுள்ள உப்பறிந்தால் வாதமாச்சு
உத்தமனே மனமடங்க ஞானமாச்சு
வரிசையுள்ள ரசமெடுத்தால் கெவுனமாச்சு
மார்க்கமுடன் கற்பமுண்டாற் சாவுபோச்சு
சரிதைவழி நடவாட்டா லறிவுபோச்சு
தன்னுணர்வு யில்லாட்டால் யோகம்போச்சு
திருவுருவாய் நின்றதொரு தேசிதன்னை
தினந்தோறும் பாராட்டால் திரையுண்டாச்சே. (923)

மூலாதாரம்.

நிறைந்துநின்ற தேகமெல்லாம் வெளியுமாச்சு
தீர்க்கமுள்ள சிவனெல்லாம் வெளியுமாச்சு
உறைந்துநின்ற வாசியெல்லாம் வெளியுமாச்சு
உற்றகலைக் கியானமெல்லாம் வெளியுமாச்சு
மறைந்துநின்ற மாய்கையெல்லாம் வெளியுமாச்சு
மகத்தான போதமெல்லாம் வெளியுமாச்சு
நிறைந்துநின்ற தீபமெல்லாம் வெளியுமாச்சு
நீநானு மென்றதெல்லாம் வெளிதான்பாரே. (924)

பிர்மா விஷ்ணு.

வெளியான பரமவெளி தன்னைப்பார்க்க
வேதாந்த ஆதியென்ற பூமிதன்மேல்
தெளியாமற் தானிருந்து மனதுகூர்ந்து
நேர்மையுடன் மால்பதியில் நின்றால்மைந்தா
துலையாத ஆகாசம் பூமிமட்டும்
சொலித்துநின்ற சிவமயமாய்த் தோற்றும்பாரு
மலையாமல் தானிருந்து பார்த்தாயானால்
மாயமென்ற மாயமெல்லாங் காணலாமே. (925)

ருத்திரன்.

காணப்பா ருத்திரனார் மலையில்மைந்தா
கால்வாசி வாசியென்ற காலையூணி
பூணவே மனமுருக நின்றுபார்த்தால்
பூமிமுத லாகாச வரைக்குமைந்தா
தோணவே அக்கினியாய்ச் சொலித்துநிற்கும்
சொலித்துநின்ற அக்கினியிற் சுகமாய்நின்றால்
பேணவே சகலசித்துந் தானேயாடப்
பிலயான சோதிமய மாகுந்தானே. (926)

மயமான சோதிமயந் தானேகண்டால்
மார்க்கமுடன் அஷ்டசித்து மாடலாகும்
செயமான அஷ்டசித்து மகிமைபெற்று
சிவசிவா மயேஷ்பரனார் மனையில்மைந்தா
நயமான வாசிதிரு வாசிநாட்டி
நகாரமுதல் வகாரவரை நன்றாய்ப்பார்த்தால்
சுயமான வாய்வுபிர சண்டமாகச்
சூழ்ந்தஅண்டந் தெரியாமற் சுழற்றும்பாரே. (927)

பாரப்பா சுழன்றுநின்ற வாய்வுதன்னில்
பத்தியுடன் நின்றுமனங் கொண்டாயானால்
நேரப்பா நின்றதொரு வாசியாலே
நிலையான சிவயோகம் நிசமாமைந்தா
மேரப்பா மேருகிரி வசியமாகும்
வேதாந்தஞ் சித்தாந்தம் வசியமாகும்
காரப்பா சகலமுமே வசியமாகும்
கடாட்சமுள்ள மயேஷ்பரத்தின் கருணைதானே. (928)

கருணையுள்ள மயேஷ்பரத்தி லிருந்துகொண்டு
கடாட்சமுள்ள மனோன்மணியாள் மனையிற்சென்று
உருமையுட னின்றுமன தறிவால்பார்த்தால்
உத்தமனே என்னசொல்வேன் ஒளியின்கண்ணு
அருமையுடன் கண்டதெல்லாம் வெளியுமாச்சு
அண்டசரா சரங்களெல்லாம் வெளியுமாச்சு
வருமையென்ற வருமையெல்லாம் வெளியுமாச்சு
மகிழ்ந்துகொண்ட மகிழ்ச்சியெல்லாம் வெளிதானாச்சே. ()

வெளியான விழிமயக்கந் தீர்ந்துதானால்
வெளியறிந்த சட்டமடா திட்டமாகும்
தெளியாமல் திட்டமதின் படியேநின்றால்
நினைத்தபடி முடிக்கும்வகை யறியலாகும்
அளியாத பேரின்ப வீடேவாய்க்கும்
அவ்வீட்டி லானந்த அமுர்தங்காணும்
தெளிவான ஆனந்த அமுர்தங்கொண்டு
தெளிந்துதெளி வானஉள்ளத் தெளிவில்நில்லே. (930)

உப்புதீட்சை கட்டு.

நில்லப்பா தெளிவறிந்து தெளிவில்மைந்தா
நிசமான உப்பறிந்து யெடுத்துக்கொண்டு
கல்லப்பா தான்கரையத் தெளிவிற்போட்டு
கட்டுமுறை திட்டமதாய்க் காய்ச்சுகாய்ச்சு
மெல்லப்பா யிப்படியே பத்துமுறைகாய்ச்சு
வேதாந்த உப்பதுவுங் கட்டிப்போகும்
உள்ளப்பா உள்ளன்பாய்க் கட்டுமுப்பை
உருக்கும்வகை யுருக்கமுட னுருக்கக்கேளே. (931)

உருக்கமுடன் கட்டுமுப்பை யுருக்கக்கேளு
உத்தமனே அதுக்குநிகர் வீரம்பூரம்
பெருக்கமுடன் கட்டுதற்குக் காரங்கூட்டி
பேசாமற் குகையிலிட்டு உருக்கிப்பாரு
திருக்கறவே உருகியது தெளிவாய்நிற்கும்
தெளிந்தமனங் குளிர்ந்தவுடன் மணிபோலாகும்
சுருக்கமுள்ள மணியெடுத்து மைந்தாகேளு
சுகசீவ மானதங்கக் களையைப்பாரே. (932)

பாரப்பா களைபொருந்துந் தங்கம்வாங்கி
பக்குவமாய்க் குகையிலிட்டு உருகும்போது
நேரப்பா அதுக்குநிகர் மைந்தாகேளு
நிசமாக உப்புருகு மணியைப்போட்டு
வீரப்பா கொண்டதுவு மொன்றாய்ச்சேர்ந்து
வேதாந்தத் தங்கமது குருவாய்ப்போச்சு
காரப்பா தங்காதிக் குருவைமைந்தா
கார்த்துநின்று அதினுடைய களையைக்காணே. (933)

காணப்பா களைபொருந்துங் களையைக்காணக்
கருவிபரஞ் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
பேணப்பா வெள்ளியிலே பத்துக்கொன்று
பிலமான தங்காதி குருவைச்சேர்த்து
பூணப்பா பொரிகாரந் தன்னால்மைந்தா
புத்தியுடன் சித்தமதா லுருக்கிப்பார்த்தால்
வீணப்பா போகாது வெள்ளிதானும்
வேதாந்த தங்கமயச் சோதியாச்சே. (934)

ஆச்சப்பா சோதியென்ற தங்கம்வாங்கி
அப்பனே செம்பிலிட்டுப் பத்துக்கொன்று
காச்சப்பா குகையிலிட்டு உருக்கிப்பாரு
கழும்பான செம்பதுவுங் கருணையாகும்
மூச்சப்பா தானடங்கிக் கருணையான
முத்தியுள்ள தங்கமடா பத்துமாத்தாம்
நீச்சப்பா நிலையான பத்தைப்பார்த்து
நிலையான எட்டுரெண்டுங் கண்டுதேரே. (935)

கண்டுகொண்ட யெட்டுரெண்டு மொன்றாய்நின்ற
கருணைவளர் பூரணத்தைக் கனிவாய்மைந்தா
கொண்டுமிக நின்றதினால் வாதஞ்சித்தி
குருவான ஞானமுடன் யோகஞ்சித்தி
அண்டர்பதங் காணுதற்குக் குளிகைசித்தி
ஆனந்த போதமுள்ள அமுர்தஞ்சித்தி
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்துநின்ற
மகத்தான சோதிபூ ரணஞ்சித்தாமே. (936)

சித்தான சித்துகளும் பூரணத்தினாட்டு
திறமான வாசியதும் பூரணத்தினாட்டு
முத்தான சிவயோகம் பூரணத்தினாட்டு
மோகமென்ற ஆசையெல்லாம் பூரணத்தினாட்டு
வித்தான சராசரமும் பூரணத்தினாட்டு
விளைவதுவு மளிவதுவும் பூரணத்தினாட்டு
சுத்தான சுழியதுவும் பூரணத்தினாட்டு
சோதிமய மானதெல்லாம் பூரணத்தினாட்டே. (937)

ஆட்டமென்ற சக்கரந்தான் விந்துவட்டம்
அடங்கிநின்ற நாதமடா ரவியானந்தம்
வாட்டமில்லா ரவிதனிலே வாசிபூட்டி
மகத்தான கேசரியை வணங்கிமைந்தா
தேட்டமுட னீயிருந்து யோகஞ்செய்யத்
திறமுனக்கு யில்லாட்டாற் செப்பக்கேளு
நாட்டமுடன் நந்தியிலே விந்தைப்பாய்ச்சி
நாதாந்த முத்திரையில் நாடிநில்லே. (938)

ஞானயோகம்.

நாடிநின்ற நயனமதை மைந்தாகேளு
நந்திகொலு வானதொரு மய்யமீதில்
கூடிநின்ற சூட்சமதை நன்றாய்ப்பாரு
தொடுகுறியும் வழிதுறையும் நன்றாய்க்காணும்
ஆடிநின்று வழிதுறையும் அறிந்துகொண்டால்
அனுதினமும் போகமரை அறிவுண்டாகும்
தேடிநின்று அலையாதே அறிவானந்தம்
தெவிட்டாத அமுர்தமடா சத்தியுப்பே. (939)

சத்தியுப்பு மெழுகு.

உப்பான உப்பதுதான் சத்தியுப்பு
உத்தமனே அமுர்தரச உப்புவாங்கி
அப்பான தண்ணீரும் உப்புமொன்ருய்
அறிந்துமிகக் கரைக்கையிலே பூரஞ்சேரு
செப்பாதே பூரணமு நாதஞ்சேரு
சேகரமா யொன்ருக ரவியிற்போடு
துப்பறவாய் ரவியனலிற் காய்ந்துதானல்
சுகமான மெழுகாகி யிருக்கும்பாரே. (940)

பாரப்பா மெழுகதனைப் பதனம்பண்ணி
பாருன பிருதிவியு முடியுங்கூட்டி
சேரப்பா பூரமொடு கெந்திகூட்டி
செம்மையுட னொன்ருக்கிப் பாண்டத்திட்டு
காரப்பா குளித்தயிலம் நன்ருய்வாங்கி
கருவான மெழுகிலிதை விட்டுக்கிண்டி
நேரப்பா பீங்கானிற் பதனம்பண்ணி
நேமமுட னந்திசந்தி பணவிடைதான்கொள்ளே. (941)

கொள்ளடா பணவிடைதான் மண்டலமேகொண்டால்
குவிந்தெழுந்த தேகமதில் நின்றநோய்கள்
அல்லடா அப்போதே விலகிப்போகும்
ஆனந்த மதியமுர்தம் அமுர்தந்தன்னல்
உள்ளடா வாசியது உறுதியாகும்
உத்தமனே தேகமது இறுகும்பாரு
செல்லடா தேகமது சித்தியானல்
சிவசிவா சிவயோகத் திறந்தான்பாரே. (942)

இல்லறப் பெரியோர்.

திறமாக இல்லறத்தே யிருந்துகொண்டு
சிவபூசை குருபூசை செய்துமைந்தா
பரமான பராபரமே கெதியென்றெண்ணி
பலகாலம் பூரணத்திற் பதிவாய்நின்று
உரமாக அவனவன்செய் நடத்தைபார்த்து
உறுதியுடன் கண்காட்சி நன்ருய்ப்பெற்று
அரமான யில்லறத்தோ டொத்துவாழ்ந்து
அமர்ந்திருப்பார் சிவனில யறிந்தோர்தானே. (943)

தானென்ற சீவனிலை யறிந்தோர்தானுஞ்
சதாபோத மார்க்கமுள்ள தவசிதானும்
ஊனென்ற உள்ளுணர்ந்த யோகிதானும்
உற்றகலைக் கியானமுள்ள ஞானிதானும்
பானென்ற பலசமயத் தோர்கள்தானும்
பரராச மகுடபதி யானபேரும்
கோனென்ற குருமகிமை பெற்றோர்தானும்
குவலயத்திற் பலவுயிர்கள் பயிர்கள்காணே. (944)

காணவே சொன்னவுயிர் பயிர்களெல்லாம்
கதித்துமிகச் செனித்ததெல்லாம் வெளிதானப்பா
பேணவே செனித்துமிக ஆடிப்பாடி
பிரண்டுருண்டு போனதுவும் வெளிதானப்பா
தோணவே அண்டபிண்டம் வெளிதானப்பா
துலங்குகின்ற ரவிமதியும் வெளிதானப்பா
ஊணவே வெளியதுவும் வெளிதானப்பா
உத்தவெளிக் கப்பாலே யேதோயேதோ. (945)

ஏதென்று சொன்னதப்பா வெளிதான்மைந்தா
ஏகபர ரூபமென வேதமோதும்
ஊதென்ற கால்தலைதான் மண்விண்ணாச்சு
உத்தமனே தண்ணீரும் வாய்வுதீயும்
மாதென்ற உடலுயிரு மறிவதாச்சு
மகத்தான பஞ்சகர்த்தா வழியிதாச்சு
வாதென்ற பஞ்சகர்த்தா வழியைப்பார்த்தால்
மவுனமென்ற நாதவிந்து வழிதான்பாரே. (946)

பாரப்பா நாதவிந்து வழிதப்பாமல்
பாலகனே நீயறிந்து பணிந்தாயானால்
நேரப்பா வாதமது நிலைநின்றாடும்
நிலையான தீபமது நேரதாகும்
காரப்பா காயாதி கற்பமாகும்
கருணைவளர் வாசிசிவ யோகமாகும்
மேரப்பா கெவுனமதுக் குறியாகும்
வேதாந்த மதுவாகும் வெளிதானுமே. (947)

ஆமப்பா வெளியான நாதவிந்து
அடங்கியுருத் தரித்துவொரு மணியுமாச்சு
தாமப்பா அம்மணிக்குக் கலசப்பாலைத்
தான்புகட்டிப் பார்க்கையிலே கலையுண்டாச்சு
ஓமப்பா கலைபொருந்து மணிக்கிதல்ல
உத்தமனே காரமுடன் சாரம்ரெண்டும்
நாமப்பா சொல்லுகின்ற மணிக்குப்பூசி
நந்தியொளி செந்தியிலே வாட்டிக்காணே. (948)

வாட்டிமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு
மணியான மனோன்மணியாள் கிருபையாலே
தாட்டிகமாய் நின்றமணி குருவுமாச்சு
சமத்தான வாதமதுக் குறுதியாச்சு
நாட்டியதோர் வாசியதுக் குயிருமாச்சு
நாதாந்த சிவயோக மதுதானாச்சு
பூட்டியதோ ராதாரந் தனக்குமைந்தா
பொருந்திநின்ற உயிராச்சு போதமாச்சே. (949)

சிங்கி சுண்ணம்.

போதமய மானசிவ யோகம்பார்க்க
புண்ணியனே பூமியுட நாதம்வாங்கி
நீதமுள்ள வெடியுப்பு துருசுசாரம்
நிசமான பூரமுட னஞ்சுங்கூட்டி
சூதமென்ற நீரலே யரைத்துமைந்தா
சுத்தமென்ற மிருதார சிங்கிக்கப்பி
பேதமொன்று நினையாமல் கவசம்பண்ணி
பேரறிந்து கருவறிந்து புடத்தைப்போடே. (950)

போட்டபுட மாறினபின் னெடுத்துப்பார்த்தால்
புண்ணியனே மிருதார சிங்கிதானும்
தேட்டமுட னுருகியது கட்டிமைந்தா
செம்மையுட னீரியது சுண்ணம்பாச்சு
நாட்டமுள்ள சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
நஞ்சான துருசதற்குக் கவசம்பண்ணி
தாட்டிகமாய் மண்சீலை யணிந்துமைந்தா
தாய்பதத்தை யர்ச்சித்துப் புடத்திற்சேரே. (951)

சேரப்பா புடமறிந்து புடத்திற்சேர்க்க
சிவசிவா பச்சையென்ற துருசுதானும்
நேரப்பா நின்றதுவுஞ் சுண்ணமாச்சு
நேர்மையுள்ள சுண்ணமதைப் பதனம்பண்ணி
சாரப்பா சுண்ணமதுக் கிடைதான்சாரம்
சங்கையுடன் தான்பொடித்துப் பனியில்வைக்க
நீரப்பா தான்பெருகிச் செயனீராச்சு
நிசமான நீரதிலே வீரஞ்சேரே. (952)

சேரடா வீரமது சேர்ந்தபோது
சிவந்துசெய னீரதுவுங் காரமாச்சு
காரடா காரமுள்ள செயனீர்வாங்கி
கருவான பாஷாணந் தனக்குமைந்தா
வீரடா தானடங்கச் சுருக்குப்போட
வேகமுள்ள பாஷாண மடங்கிக்கட்டும்
பாரடா பாஷாணக் கட்டினாலே
பரிசமுள்ள சந்தான வேதையாமே. (953)

வேதைவெகு துருசான துருசுச்சுண்ணம்
வேகமுள்ள ரசமதுக்கு நாலிலொன்று
சூதையறிந் தென்மகனே சுண்ணம்போட்டு
சுத்தமுள்ள காமசெலந் தன்னாலாட்டி
வாதையென்று யெண்ணாமல் வளித்துருட்டி
வரிசையுடன் புடம்போட மகிழ்ந்துநீரும்
போதைவெகு ஞானமென்ற ரசநீர்தன்னை
பூரணமாய்த் தானெடுத்து வைத்துக்காணே. (954)

காணவே அமுர்தரசச் சுண்ணந்தன்னை
கைமுறையாய்த் தானெடுத்து காசிற்பூசிப்
பூணவே வோட்டில்வைத்துப் புடத்தைப்போட்டுப்
புண்ணியனே தானெடுத்துப் பார்த்தாயானால்
தோணவே செம்புகளிம் பற்றுநல்ல
சோதிவடி வானதொரு தங்கந்தானும்
பேணவே உலகமதுக் குயிராய்நின்று
பிரபலமாய் நின்றுவிளை யாடுந்தானே. (955)

தானென்ற சிங்கிதனை யார்தான்காண்பார்
சங்கையுள்ள வங்காதி சிங்கிதன்னை
ஊனென்ற கருவறிந்து சுண்ணம்பண்ண
உற்பரச வாதியெல்லா மயங்கினார்கள்
கோனென்ற குருவருளாற் குருவெடுத்து
கோடிவித்தை நிமிஷமதில் கூர்ந்துபார்த்து
தேனென்ற அமுர்தரச பூரணத்தினாலே
தெளிந்தனடா சிங்கிவித்தை திறந்தான்பாரே. (956)

சித்தர் கூட்டம்.

பாரப்பா சித்தாதி பதினெண்பேரும்
பதிவான சதுரகிரி மலையிற்கூடி
நேரப்பா நின்றுதவஞ்செய்யும்போது
நேர்மையுள்ள யெக்கியமா முனிதான்வந்து
தேரப்பா வென்றுசிங்கி வித்தைதன்னைச்
செம்மையுடன் யெந்தனுக்கு உபதேசித்தார்
வீரப்பா கொண்டதொரு சிங்கிதன்னை
வேணவிதங் குருமுடித்து விசைகண்டேனே. (957)

கருவூரார் நிலை.

கண்டதொரு காட்சிதனைச் சித்தர்க்கெல்லாம்
கைமுறையாய்ச் சொன்னதிலே கருவூரான்றான்
விண்டபடி தனையறிந்து சிங்கிவித்தை
விபரமுடன் கைமுறையாய் வேதைபார்த்து
அண்டகே சரிமாது கெதியென்றெண்ணி
அடங்கிநிலை தனையறிந்து யோகம்பார்த்து
மண்டலங்கள் மூன்றினுட வளமைகண்டு
மார்க்கமுடன் பூரணத்தில் மகிழ்ந்தான்பாரே. (958)

கோங்கணர் நிலை.

பாரப்பா கொங்கணவன் வீரத்தாலே
பத்திகொண்டு ஆறுவரைக் கப்பாலேகி
நேரப்பா நின்றுஅந்த நிலையைப்பத்தி
நிலைதவறாப் பூரணமாய் நிஷ்டைகூடி
சாரப்பா வெகுகோடி காலமட்டும்
சார்ந்துசிவ யோகமதில் தானேநின்று
மேரப்பா மேருகிரி வாசமாகி
வேதாந்த பூரணத்தி லொடுங்கினாரே. (959)

ஒடுங்கிமனந் தனைநிறுத்தி யருபமாகி
உற்றதொரு பஞ்சகர்த்தா நிலையைப்பார்த்து
அடங்கியவர் மண்ணுடனே மண்ணைச்சேர்த்தார்
அப்பனே செலத்தோடே செலத்தைச்சேர்த்தார்
துடங்கியந்த நெருப்போடே நெருப்பைச்சேர்த்தார்
சுகமான வாய்வுடனே வாய்வைச்சேர்த்தார்
இடங்குவிந்து தன்னறிவாற் சேர்த்தபின்பு
எழும்பினார் ஆகாச இடத்திற்தானே. (960)

தானென்ற ஆகாசந் தன்னில்சென்று
தன்மயமும் விண்மயமு மொன்றாய்ப்பார்த்து
கோனென்ற குருபதமே கெதியென்றெண்ணி
குவிந்தமனம் விரியாமல் கூர்மையாகி
வானென்ற வெளியோடே வெளியாய்நின்று
மாசற்ற சோதியிலே சேர்ந்தார்பாரு
தேனென்ற கொங்கணவன் வீரத்தாலே
சிவசிவா வெளியொளியாய் சேர்ந்தார்காணே. (961)

போகர்நிலை.

காணப்பா கயிலாச போகர்தானும்
கருவான யமரசந் தன்னால்மைந்தா
பேணப்பா அந்தரச முண்டுகொண்டு
பேரான அண்டமெல்லாஞ் சுத்திப்பார்த்து
ஊணப்பா உள்ளுணர்வா யுணர்ந்துகொண்டு
ஒருகோடி காலம்வரை ஒடுக்கஞ்சென்று
பூணப்பா மனம்பூண்டு யோகஞ்செய்து
பூரணத்தின் பதவியிலே நின்றார்பாரே. (962)

பாரப்பா கேசரியில் மனதைவைத்து
பரமான சிவயோக சிவயோகத்தில்
நேரப்பா உகாந்தவரை நிலையில்நின்று
நிலையான நிருவிகற்ப சமாதியாகி
வீரப்பா கொண்டுமனம் போகாமல்தான்
வெளியான பரமவெளி வெளிதன்னோடே
சாரப்பா யென்றவரும் மாயமானார்
தன்னறிவே தானாகத் தனித்துக்காணே. (963)

காணுகிற காட்சியெல்லா மாயாமாயம்
கனயோக நிஷ்டையெல்லா மாயாமாயம்
பூணுகிற ஆசையெல்லா மாயாமாயம்
பொருந்துகின்ற அஷ்டசித்து மாயாமாயம்
பேணுகிற பூசையெல்லாம் மாயாமாயம்
பேசாத மவுனமது மாயாமாயம்
ஆணுவமாய்க் கொண்டசத்தம் மாயாமாயம்
அண்டமொடு புவனமெல்லாம் மாயமாச்சே. (964)

மாயமென்ற வாழ்க்கையடா உலகவாழ்க்கை
மனுநீதி யில்லாத வாழ்க்கைதன்னை
நேயமுடன் அனுசரித்து உபாயமாக
நீமகனே விட்டகன்று அண்டமேவி
தாயகமாய் வாசியுட நிலையைப்பற்றி
சதாகாலம் பூரணத்திற் சேர்ந்துகொண்டு
காயமென்ற கருவிகளை வசியஞ்செய்து
கருணையுடன் அம்சிவா உம்மென்றோதே. (965)

ஓதிமன மொன்றாக நிலையைப்பற்றி
உண்மையென்ற மவுனரச பானங்கொண்டு
சோதிமய மாகவேதான் தன்னைப்பார்த்தால்
சுழன்றுநின்ற மாயமெல்லாந் துலைந்துபோகும்
நீதியுடன் மாய்கையெல்லாந் துலைந்துதானால்
நிசமான வாழ்க்கைசிவ யோகவாழ்க்கை
ஆதிமனோன் மணியினுட கிருபையாலே
அஷ்டாங்க யோகமதி லறிவாய்நில்லே (966)

சட்டைமுனி

அறிவான சட்டைமுனி அய்யர்தானும்
ஆதியென்ற சவுக்காரச் சுண்ணத்தாலே
குறியான குறியறிந்து அண்டமேவி
கோடிகற்ப காலவரை யிருந்துகொண்டு
நெறியான பூரணத்தை அனுசரித்து
நேமமுடன் பூசைசிவ யோகமெல்லாம்
சரியாகக் கண்டுமன துறுதியாலே
சாலோக பதவியிலே சார்ந்தார்பாரே. (967)

சார்ந்துகொண்டு சட்டைமுனி சட்டைநின்று
சந்திரபுஷ் கரணியிலே ஸ்தானம்பண்ணி
தேர்ந்துகொண்டு வெளியோடே வெளியாய்நின்று
திறமாக யிருளோடே யிருளாய்நின்று
கூர்ந்துஅந்த ஒளியோடே ஒளியாய்நின்று
குணமான அண்டபதந் தானாய்நின்று
நேர்ந்துவெகு மாயமென்ற மாயமாகி
நிச்சயத்தில் பூரணமாய் நின்றார்பாரே. (968)

கமலமுனி.

பாரப்பா கமலமுனி அண்டச்சத்து
பத்தியுடன் தானெடுத்து மெழுகுபண்ணி
நேரப்பா நின்றவரும் வேதைபார்த்து
நிலையான கமலமலர்த் தமுர்தங்கொண்டு
சாரப்பா மேருவிலே தவசுபண்ணி
சதாகோடி யுகாந்தம்வரை தானேநின்று
காரப்பா யென்றவருங் கமலத்தேகி
கண்ணிறைந்த பரவெளியிற் கலந்தார்காணே. (969)

மச்சமுனி

கலந்திருந்த மச்சமுனி கெந்திச்சத்து
கருவாகத் தானெடுத்துக் கருணையாக
மலர்ந்துநின்ற முருக்கமலர் போலேமைந்தா
மாசற்ற செந்தூரந் தானேசெய்து
வளர்ந்துமிகத் தானவனாய் வேதைபார்த்து
வாழ்ந்தாரே கோடியுகம் வரிசையாக
தளர்ந்துசெடம் போகாமல் சிவயோகத்தில்
தானாகத் தானவனாய் தானானாரே. (970)

தானாகத் தானிருந்து தானேதானாய்
சச்சுதா னந்தமய மாகவேதான்
ஊனாக உள்ளுணர்ந்து தன்னைப்பார்த்து
ஓமுடிந்த காட்சியிலே உறுதிவைத்து
வானாக நின்றவெளி தன்னிலேதான்
வந்தவழி செல்லாமல் மனக்கண்ணாலே
கோனாகி நின்றபர வெளியில்மைந்தா
குருவான ஒளியோடே ஒளியானாரே. (971)

திருமூலர்.

ஒளியான திருமூலர் கெவுரிசத்து
உண்மையுடன் தானெடுத்துச் செந்தூரித்து
வழியான துறையறிந்து வேதைபார்த்து
மார்க்கமுடன் கோடான கோடிகாலம்
தெளியாமல் மனம்நிறுத்தி நேமமாக
நிலைதவறுப் பூரணமாய் நிஷ்டைகூடி
அளியாத மணிமகுட முடியிற்சென்று
அரகரா பூரணத்தி லடங்கினாரே. (972)

அடங்குநிலை தனையறிந்து அடங்கிநல்ல
ஆகாசம் பரமவெளி யருளைக்கண்டு
துடங்கியந்த அருள்பெருகும் ஒளியிலேதான்
சுகசிவப் பிராணனொளி தன்னைச்சேர்த்து
இடங்குவிந்து தானாகிச் சோதியாகி
ஏகாந்த செகசோதி யின்பமாகி
மடங்குவிந்த ஆகாச வெளியிலேதான்
மாசற்ற பூரணமா யொளியானாரே. (973)

நந்தீசர்

ஒளியாகி நின்றதொரு நந்திதானும்
உண்மையென்ற அயக்காந்தச் சத்துவாங்கி
தெளிவான கருவதனால் செந்தூரித்து
செகசால மோட்சகெதி வேதைபார்த்து
வெளியான பூரணமே கெதியென்றெண்ணி
வெகுகோடி யுகாந்தம்வரை தவமேசெய்து
வழியான மோட்சமென்ற அண்டத்தேகி
மகத்தான சோதியிலே மகிழ்ந்தார்பாரே. (974)

பாரப்பா மகிழ்ந்ததெல்லாஞ் சோதியென்றும்
பஞ்சசபை யானதெல்லாம் சோதியென்றும்
நேரப்பா கண்டதெல்லாஞ் சோதியென்றும்
நிஷ்டைமுதல் சமாதியெல்லாஞ் சோதியென்றும்
காரப்பா கண்காட்சி சோதியென்றும்
கருவான அண்டபிண்டஞ் சோதியென்றும்
பேரப்பா கொண்டதெல்லாஞ் சோதியென்றும்
பேரண்டச் சோதிமய மானார்காணே. (975)

சுந்தரானந்தர்.

காணவே சுந்தரா னந்தர்தானும்
கருவான களியுப்பு தன்னைவாங்கி
பேணவே தானீத்திச் சுண்ணும்பாக்கி
பேருன நவலோக வேதைபார்த்து
பூணவே தன்னிலையைத் தானறிந்து
பொற்கமல மீதேறிப் புனிதமாகத்
தோணவே தவசிருந்தா ரனந்தகாலஞ்
சுத்தமுடன் பூரணத்திற் சொக்கிஞரே. (976)

சொக்கிஅந்த அறிவோடே நின்றுபார்த்து
சுகமான அண்டபத முடிவிலேகி
திக்குமுதற் திசைகளெல்லாம் பார்க்கப்பார்க்க
சிவசிவா சிவமயமாய்ச் சோதியாச்சு
மெய்க்குமிந்தச் சோதியிலே சோதியாகி
வேதாந்தச் சோதியினில் சூட்சமாகி
ஐக்கியமாய்ச் சூட்சாதி சூட்சமாகி
அகண்டவெளி பூரணமா யானூர்பாரே. (977)

கோரக்கர் நிலே.

பாரப்பா கோரக்க நாதர்தானும்
பதிவான நவக்கிரக பூசைபண்ணி
நேரப்பா பூரணத்திற் சொக்கிநின்று
நிசமாகக் கோடிவரை நிஷ்டையாகி
பேரப்பா பெற்றகயி லாசமேவி
பேசாத மவுனமதில் மவுனங்கொண்டு
சேரப்பா பூரணத்திற் சேர்ந்துகொண்டு
சிவசிவா பரமபதஞ் சேர்ந்தார்பாரே. (978)

காலாங்கி புண்ணக்கீசர் நிலமடபதி.

பாரான காலாங்கி புண்ணக்கீசர்
பதிவான வியாக்கிரமர் கூனக்கண்ணர்
நேரான சிவவாக்கியர் சண்டிகேஷர்
நிசமான இடைக்காட்டா ரேழுபேரும்
போரான சத்திசிவ பூசைபண்ணி
பெருகிநின்ற வாசியினுல் மவுனங்கொண்டு
மேரான மேருகிரி உச்சிமீதில்
விளக்கொளியின் சோதியிலே மேவினூரே. (979)

மேவியந்தச் சோதியிலே மனதைநாட்டி
வேதாந்த பூரணமே கெதியென்றெண்ணி
தாவியந்தப் பூரணத்தைக் கண்டுகொண்டு
சதாகோடி யுகாந்தவரை தவமேசெய்து
கூவியந்தச் சத்தமடா சுத்தமாக
குருவோடு மடபதியுங் குருவைக்காண
ஆவியந்தச் சோதியிலே சூட்சமாகி
அரகரா பரவெளியி லயிக்கியமாச்சே. (980)

ஆச்சப்பா மடபதிக ளறுபத்துநாலில்
அருமையுள்ள சமையகுரு பேரேதென்றால்
மூச்சப்பா நிலையறிந்த சின்மயானந்தர்
முத்தியுள்ள மோட்சகெதி பூரணானந்தர்
நீச்சப்பா நிலையறிந்து அமூர்தவானந்தர்
நிசமான குருவறிந்த சிசுவானந்தர்
பேச்சப்பா மவுனமுள்ள சித்தானந்தர்
பேருலகில் நிறைந்தசிவா னந்தர்தானே. (981)

தானென்ற சச்சுதா னந்தர்தானும்
சங்கையுள்ள சமையவா னந்தர்தானும்
ஊனென்ற கருணையா னந்தர்தானும்
உற்றகம லானந்தர் முத்தானந்தர்
வானென்ற சூரியா னந்தரோடு
மகத்தான சுந்தரா னந்தர்தானும்
கோனென்ற துருவா னந்தமூர்த்தி
குணமான கருவானந் தரும்நீபாரே. (982)

பாரப்பா சதானந்தர் சருகானந்தர்
பரமான குருவான குருவானந்தர்
நேரப்பா நிசமான திருவானந்தர்
நின்றநிலை தவறாத வாலையானந்தர்
மேரப்பா மேருகிரி பரமானந்தர்
விசையான வாசியென்ற கூர்மானந்தர்
சாரப்பா சார்வான லோகவானந்தர்
சத்தியமுள்ள சத்தியா னந்தர்தானே. (983)

தானான கெதியறிந்த விசுவானந்தர்
தன்மயமாய் நின்றிலங்குஞ் சறுவானந்தர்
வானான கேசரியாம் பிரமானந்தர்
மகத்தான சித்தான சுத்தானந்தர்
தேனான அமுர்தரச வித்தானந்தர்
செகமெல்லாங் கண்டதொரு காலானந்தர்
ஊனான உயிரறிந்த நந்தியானந்தர்
உண்மையென்ற பூரணவா னந்தர்தானே. (984)

காணப்பா கண்குளிரக் கருணைசிவமுனியும்
கண்ணான கண்மணியாம் பதஞ்சலிமாமுனியும்
பேணப்பா பிரமமுனி விஷ்ணுமுனிதானும்
பேரண்ட மானதொரு சதாசிவமாமுனியும்
ஊணப்பா உண்மையுள்ள சவுண்டிகமாமுனியும்
உண்மையென்ற மச்சமுனி ராசமுனிதானும்
பூணப்பா அகோரமுனி விசுவமுனிமைந்தா
பூரணமா மவுனமுனி வாசமுனிதானே. (985)

தானென்ற ஆதிமுனி சைதன்யமுனியும்
தன்மயமாய் நின்றதொரு அகத்தியமாமுனியும்
தேனென்ற அமுர்தரச ஆனந்தமுனியும்
திருவிருந்த குருவான கோரக்கமுனியும்
ஊனென்ற சட்டைமுனி யதீதமுனிதானும்
உற்றசிவ சுக்கிரமுனி கெவுதமுனிதானும்
வானென்ற மகாமுனியும் புலத்தியமாரிஷியும்
வளமையுள்ள பிரமரிஷி சித்தரிஷிபாரே. (986)

பாரப்பா பரமான யேகரிஷிஅய்யா
பதிவான யோகரிஷி ருத்திரரிஷிதானும்
நேரப்பா நின்றதொரு மூலரிஷிதானும்
நிசமான விசுவரிஷி வியாசரிஷிதானும்
காரப்பா சுகரிஷியோ டறுபதிகாலும்
காசினியிற் சமயகுரு மடபதிகள்தானும்
தேரப்பா கண்டுமௌனம் நின்றுகொண்டு
தெளிந்துநின்ற சமையகுரு தீர்க்கங்கேளே. (987)

தீர்க்கமுட னின்றுமனந் தீர்க்கமாகி
சிவசிவா திருவான அமுர்தநாதம்
மார்க்கமுடன் மனதறிவால் அமுர்தநாதம்
வாங்கிமனப் பூரணமாய் பூசைபண்ணி
ஏர்க்கையுடன் தவசிருந்தா ரனந்தகாலம்
ஏகாந்த மானரச வமுர்தத்தாலே
சேர்க்கையுள்ள திருவுருவைத் திறமாய்க்கண்டு
திருவுருவை அருபமதாய்த் தெளிந்தார்பாரே. (988)

பாரப்பா வுருவறிந்து தெளிந்துகொண்டு
பரைஞான கேசரியில் வாசமாகி
நேரப்பா நின்றபர வெளியைப்பார்த்து
நிசமான அவ்வெளியி லொளியைக்கண்டு
சாரப்பா வென்றவரும் ஒளியிற்சார்ந்து
தன்னொளியும் விண்ணொளியும் தானேதானாய்
சேரப்பா யென்றவரும் பூரணத்திற்சேர்ந்து
சிவாக்கினியி லயிக்கியமாய்த் தெளிந்தார்தானே. (989)

தானென்ற சித்தரிஷி முனிவர்தேவர்
தன்மயமே தானாகத் தவமேசெய்து
ஊனென்ற உடல்வெருத்துப் பசியடக்கி
உற்றகலை வாசியென்ற அகாரத்தைக்கொண்டு
வானென்ற ஆகாச வெளியிற்சென்று
மகத்தான சோதியுடன் சோதியானார்
ஏனென்று வந்ததுவுஞ் சோதிசோதி
எங்குஞ்சிவ மயமான சோதிதானே. (990)

சோதியென்ற சோதியுடன் சோதியானார்
சூழ்ந்துநின்ற அண்டமதில் நன்றாய்ப்பாரு
ஊதியமேதோர் மந்திரங்கள் சோதியெல்லாம்
ஒளிவிளக்காய் நின்றுதடா அங்கேபாரு
நீதியுடன் பார்க்கையிலே அண்டந்தன்னில்
நிறைந்துநின்ற நட்சேத்திரச் சோதியெல்லாம்
ஆதியென்ற நாதாக்கள் காந்திகாந்தி
அண்டமதில் சூழ்ந்துதடா அறிந்துகாணே. (991)

அறிந்துகொண்ட தேவாதி தேவரெல்லாம்
அவர்கள்செய்யுந் தவமதைத்தா னென்னசொல்வேன்
தெரிந்துகொண்ட வெக்கியமா முனிதான்சொன்னார்
சிவசிவா தேவாதி தேவாரூபம்
விரிந்துஅந்த அரூபமதா யிருந்துகொண்டு
மகத்தான பிராணத்தா ரகமேசெய்து
இருந்துபர வெளியோடே வெளியுமாகி
யேகபரா பரமாகி யிருந்தார்பாரே. (992)

பாரப்பா பரமதுவும் பராபரமாய்நின்று
பார்விசும்பு நிராதரமாய் நிர்மலநிற்குணமாய்
நேரப்பா நித்தியமாய் நிஷ்களமுமாகி
நிராமயமாய் நின்றபூ ரணமுமாகி
மேரப்பா வெளியாகி யிருளுமாகி
மெஞ்ஞான சூட்சாதி சூட்சமாகி
சாரப்பா சராசரத்தின் சூட்சமாகி
தனிமையாய் நின்றபரந் தன்மைதானே. (993)

தன்மயமாய் நின்றபரந் தானேதானாய்
தாளுடி யாடியது தாண்டிமேலே
உண்மையுட னின்றதுவும் பரந்தானப்பா
ஒடுங்கிமிகப் போனதுவும் பரந்தானப்பா
சின்மயமாய் நின்றதுவும் பரந்தானப்பா
தெளிந்தசெக சோதியது பரந்தானப்பா
நன்மைநின்மை யானதுவும் பரந்தானப்பா
நாதாந்த பூரணத்தை நாட்டிப்பாரே. (994)

பாரப்பா பராபரத்தைப் பதிவாய்ப்பார்க்க
பதிவான ஆதார மூலத்தேகி
நேரப்பா நின்றதொரு வாசிதன்னை
நிலையறிந்து ரேஷகபூ ரகமுஞ்செய்து
காரப்பா கருணைவிழிக் கண்ணாலந்த
கடாட்சமதால் கும்பகத்தைக் கருத்தில்வைத்து
சேரப்பா ஒட்டியான பெந்தம்பண்ணி
திருவான கேசரத்தில் தெளிவைகாணே. (905)

ஒட்டியான யோகத் தெண்டு.

காணவே யோகமதுக் காதாரமான
கருணையுள்ள யோகமென்ற ஒட்டியானந்தான்
பூணவே அளவதுதான சொல்லக்கேளு
புத்தியுடன் அகலமது அணிவிரல்நாலாகும்
பேணவே நீளமது யென்னவென்றால்
பெருவிரலி னளவதுக்கு அன்பத்தொன்று
தோணவே கடைதலையு மொன்றாய்ச்சேர்த்து
சுத்தமுள்ள ஒட்டியான பெந்தஞ்செய்யே. (996)

செய்யப்பா யிவ்விதமொட்டி யானஞ்செய்து
செம்மையுடன் சிவயோகத் திருந்தாயானால்
மெய்யப்பா வாசியது அகலாதய்யா
விசையான கண்டத்தில் நன்றாய்நிற்கும்
மய்யப்பா மய்யமதில் நின்றுபாயும்
மகத்தான புருவமதில் தீபங்காணும்
பய்யப்பா தசவாய்வு பகையாதய்யா
பாலகனே ஒட்டியானப் பலன்தான்காணே. (997)

காணப்பா ஒட்டியானந் தனக்குமைந்தா
கருவான ஆதாரம் யோகத்தெண்டு
பூணப்பா யோகமென்ற தெண்டுதன்னை
புத்தியுடன் அளவிடைகள் சொல்லக்கேளு
பேணப்பா ஆதாரந் தனக்குமைந்தா
பெருமையுட னிருபுறமுஞ் சிங்கஞ்செய்து
தோணப்பா அஞ்சுவிரல் பெருமன்தன்னில்
சுகமான சந்தனத்தாற் கம்புசேரே. (998)

சேரப்பா கம்பதுவை நன்றாய்ச்சேர்த்து
சேர்த்தகம்பு நீளமதைச் செப்பக்கேளு
காரப்பா அணிவிரலால் முப்பத்திரண்டு
கணக்கறிந்து யோகதெண்டு கருவாய்ச்செய்து
நேரப்பா சந்தனங்கற் பூரஞ்சேர்த்து
நிலையான யோகதெண்டுக் கங்கிபூட்டி
பாரப்பா யெதிராக முன்னேவைத்து
பத்தியுடன் சடாட்சரத்தைப் பதிவாயோதே. (699)

ஓதியொரு மனதாகக் கையில்வாங்கி
உத்தமனே கையறிந்து உள்க்கைகொண்டு
நீதியுடன் தானிருந்து மைந்தாமைந்தா
நேர்மையுடன் வாசியைநீ புருவத்தேத்தி
வாதியென்று நினையாமற் சோதிபார்த்து
வலசாரி யிடசாரி வகையாய்க்கொண்டால்
சோதியென்ற வாசியடா புருவத்தேகி
சுயஞ்சோதி யானதொரு தீபங்காணே. (1000)

காணவே தீபமதைக் கண்ணால்பார்த்து
கருணையுடன் மேலோகங் கீளோகம்ரெண்டும்
பூணவே தானறிந்து லோகவாழ்க்கை
புத்தியுடன் சொல்லுகிற புதுமைகேளு
தோணவே நடுவான முக்கோணத்தில்
சுத்தமுடன் தன்னறிவால் மனக்கண்வைத்து
பேணவே உம்கிலி டம்மென்றேதான்
பெருமையுடன் தினம்நூறு உருவேசெய்யே. (1001)

செய்யடா உருவறிந்து தினந்தான்மைந்தா
செம்மையுடன் செய்ததினாற் பலத்தைக்கேளு
மெய்யடா சொல்லுகிறேன் தேகந்தன்னில்
வினையான வல்பிணிகள் வெந்துதீரும்
கையடா வுதவுவது போலேமக்காள்
காசினியில் நடத்தையெல்லாங் காணலாகும்
வையடா மூலமதில் மனதைமைந்தா
வைத்துஅந்த அட்சரத்தை பருவியோதே. (1002)

ஓதியே இகலோகந் தன்னில்வாழ்க
உண்மையென்ற மந்திரத்தை உரைத்தேனப்பா
சோதியென்ற பரலோகந் தன்னிலப்பா
சுகமாகத் தானிருந்து சுகத்தைப்பார்க்க
ஆதியென்ற அட்சரந்தான் சிவ்வங்கிம்மென்று
அப்பனே ஓங்காரக் கம்பத்தேகி
நீதியென்ற புருவமதில் மனதைவைத்து
நேமமுட னுருவறிந்து உருவைக்காணே. (1003)

காணவே வுருவறிந்து தினம்நூறப்பா
கண்மூக்கு மத்தியிலே கருத்தைவைத்து
தோணவே செபித்திடவே மைந்தாகேளு
சூழ்ந்ததிரை தானகற்றிச் சோதிகாணும்
பேணவே சோதியிலே மனதைவைத்து
பிரியமுடன் பரலோகந் தன்னைப்பார்த்தால்
தோணவே நினைத்ததெல்லா மங்கேகாணும்
சுகமான பரவெளியின் சூட்சந்தானே. (1004)

தானென்ற இகலோக மூலமப்பா
தருவான மேலோக மண்டத்துச்சி
கோனென்ற மூலமதை முன்னேபார்த்துக்
குவிர்தமன துருமையினு லுச்சிபார்த்து
வானென்ற உச்சிதனைப் பார்த்துமைந்தா
மார்க்கமுட னின்றதினல் வளமைகேளு
ஊனென்ற தேகமது சோதிபோலே
ஒளிவிளக்காய்த் தோணுமடா உண்மைதானே. (1005)

உண்மையுள்ள யெக்கியமா முனிதான்மைந்தா
உறுதியுடன் யெக்கியத்திற் பிறந்ததாலே
நன்மையுள்ள பஞ்சகர்த்தாள் வசியமாச்சு
நாதாந்த பூரணமும் வசியமாச்சு
தன்மையுடன் சகலகலை வசியமாச்சு
சராசரங்கள் சகலமுமே வசியமாச்சு
நுண்மையுள்ள வாதமுதல் சகலசித்தும்
நொடிக்குமுன்னே விளையாட வசியமாச்சே. (1006)

ஆச்சப்பா வசியமுத லெட்டெட்டுந்தான்
அருளான வேதியன்பேர் சொன்னபோதே
மூச்சப்பா தானடங்கி முன்னேநின்று
முத்தியுட னடிபணிந்து நிலைநின்றாடும்
பாச்சப்பா மெழுகுமுதற் சந்தானவேதை
பதிவான பற்பமொடு செந்தூரங்கள்
காச்சப்பா கட்டுமுதற் சரக்குவைப்பு
கருவாக நிமிஷமதிற் கரைகண்டாரே. (1007)

புருஷாமிருக யோகி

கரைகண்ட காட்சியிலே யின்னமொன்று
கற்பூர தீபகிரி யடிவாரத்தில்
வரைகண்ட புருஷாதி மிருகயோகி
வாழ்ந்திருக்கும் ஆச்சிரமந் தன்னில்மைந்தா
நிறைகின்ற பூரணமாய்ச் சென்றுநின்றேன்
நீமகனே யாரெனவே யென்றாரப்போ
திரைகண்டு திரையகற்றித் தீபங்கண்ட
சிவாயகுரு கும்பமுனி யென்றேன்பாரே. (1008)

பாரப்பா கும்பமுனி யென்றபோது
பதிவாக வாவெனவே அருகிருத்தி
நேரப்பா அமூர்தரச வர்க்கமீய்ந்து
நீமகனே வந்தவகை யென்னவென்றார்
காரப்பா கற்பூர தீபகிரிநடுவிற்
கருணைவளர் யோகிமகா யோகிகேளும்
ஆரப்பா அறியாத சித்துவித்தை
அறியலா மென்றுமிக வந்தேன்பாரே. (1009)

வந்தவகை சொல்லுமுன்னே அறிந்துகொண்டு
மனமகிழ்ந்து சொல்லுகிறேன் வகையாய்க்கேளு
சொந்தமுடன் சகலசித்துந் தானேதானாய்
துலங்குதற்கு அந்தமடா மந்திரமூலம்
அந்தமுள்ள மூலமடா சிறீங்அம்மென்று
அசைவற்று மவுனமதா யருட்கண்மேவி
பந்தமுடன் கம்பமதாய் நின்றாயானால்
பலனான தவப்பலத்தைப் பகுந்துகேளே. (1010)

சகல ரூபமுண்டாக.

கேளப்பா தவப்பலத்தைச் சொல்லக்கேளு
கிருபையுடன் சிவயோகத் திருக்கும்போது
சூளப்பா மனிதர்கண்டால் மனிதர்போலாம்
சுகமான பெண்கள்கண்டால் பெண்கள்போலாம்
மேலப்பா யோகிகண்டால் யோகிபோலாம்
விசையான மிருகங்கள் கண்டுதானால்
காலப்பா அந்தந்த வகைபோற்றோணும்
கருணையுடன் தவசிருந்து கருத்தைப்பாரே. (1011

கருத்தாக வாசியைநீ வாங்கவேணும்
கருணையுடன் சிவயோகத் திருக்கவேணும்
உருத்தாகச் சிவயோகத் திருந்துகொண்டு
உனதுதிரு நயனமதை உச்சத்தேத்தி
திருத்தமுடன் சிவஞான யோகத்தீபந்
தீர்க்கமுடன் தானிருந்து பார்க்கவேணும்
விருத்தராய்ப் போனபின்பு யென்னஞானம்
வெகுகடினம் வெகுகடினம் விரசுபோச்சே. (1012)

விரசுகொண்டு ஆடுகிற சக்கரத்தை
வினையமுற்றுப் பாருமல் வீணாய்ப்போன
பிரசைதனைக் கண்டறிந்து லேதுண்டப்பா
பிலமாக மூலமதில் மனதைவைத்து
உரமான வாசியினால் மைந்தாமைந்தா
உள்ளாடுஞ் சக்கரத்தை உன்னியாட்ட
திறமாகச் சிவகலை கெதிகொண்டாடும்
தீர்க்கமுடன் கேசரியி லிருந்துபாரே. (1013)

நாககிரி

இருந்துநிலை தனையறிந்து செவுனங்கொண்டு
யேகாந்த நாதகிரி மலையிற்சென்று
வருந்திமிக நால்புறமும் பார்க்கும்போது
மகத்தான அகோரமதாய் நாககன்னி
அருந்தவசு செய்துமிக யோகங்கொண்டு
அமர்ந்திருக்கும் பதிதனிலே அருகில்நின்று
திருந்தியவள் முகம்பார்த்துப் பேசும்போது
சீரியவள் கோபமதாய்ப் பார்த்தாள்பாரே. (1014)

பாரப்பா சீரியவள் பார்க்கும்போது
பதிவான வணக்கமதாய் வணங்கிநின்றேன்
நேரப்பா வணங்கிநின்ற நிலையைப்பார்த்து
நீமகனே யாருடைய வர்க்கமென்றாள்
மேரப்பா கயிலாச வர்க்கத்தோர்க்கு
மேலான மூலவர்க்க மானபேர்க்கும்
தேரப்பா வென்றுதச தீட்சைசொன்ன
திறமான வேதியர்க்கு மடுமைகாணே. (1015)

காணவே அடிமையென்று சொன்னசத்தம்
காதிலே கேட்டவுடன் கருணைகூர்ந்து
பேணவே கண்மணியே வாவாவென்று
பிரியமுட ஞகரெட்ன மாலைசாத்தி
தோணவே அமுர்தரச பானமீய்ந்து
சித்தமுள்ள சித்தாநீ வந்ததென்ன
பூணவே சொல்லுமென்று நாககன்னி
பொருந்திமனக் கனிவாலே கேட்டாள்பாரே. (1016)

கேட்டவுடன் வந்தவகை சொல்வேனம்மா
கெம்பீர மானதொரு நாகந்தானும்
காட்டமுடன் கண்டவுடன் பணிந்துநிற்க
நல்வசன மானதொரு மந்திரந்தான்
தேட்டமுடன் சொல்லுமென்று கேட்டேனப்போ
திருவான முகமலர்ந்து தீர்க்கமாக
தாட்டிகமாய் நறீசிங் மறீசிங்கென்று
தன்னிலையிற் தானிருந்து உருவேசெய்யே. (1017)

பாம்புத்தடை கட்ட-ஓட்ட.

செய்யடா உறுதியுட னுருவேசெய்ய
தீர்க்கமுடன் மந்திரந்தான் சித்தியாகும்
மெய்யடா பத்தியுடன் சித்தியானல்
வெருண்டெழுந்த நாகமடா அரண்டேநிற்கும்
தொய்யவே அரண்டதொரு நாகந்தன்னை
சுத்தமுடன் பார்த்துநீ சீஊவென்றால்
பய்யடா அந்தரவு நகண்டுநல்ல
பத்தியுட னேடிவிடும் பாருபாரே. (1018)

விஷத்துக்கு

பாரப்பா விஷந்தீண்டித் தலைமேற்கொண்டால்
பாலகனே மந்திரத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
நிமிஷமதில் விஷமதுவும் நீங்கிப்போகும்
வீரப்பா கொண்டதொரு சிலந்திப்புண்கள்
மெய்நிறைந்த சுரதோஷ வியாதிக்கெல்லாம்
நீரப்பா தானெடுத்துத் தியானம்பண்ணி
நேர்மையுடன் தான்கொடுக்க விலகும்பாரே. (1019)

விலகிப்போ முனதுதிரு முகங்கண்டோர்க்கு
வினையான பில்லிமுதற் சூனியங்கள்
விலகிப்போங் கண்ணேறு நாவேறுந்தான்
மெய்நிறைந்த பயித்தியங்கள் தோசமெல்லாம்
விலகிப்போ மவனுடைய கலிகளெல்லாம்
வேதாந்தச் சுருதியுட திருநீர்கண்டால்
விலகிப்போம் சருவாங்க சாபமெல்லாம்
விபரமுடன் பூரணத்தில் விரும்பிநில்லே. (1020)

விரும்பிமிகப் பூரணத்தில் நில்லென்றேதான்
வேதபூ ரணமான நாககன்னி
விரும்பியவள் சொல்வசனம் பெற்றுக்கொண்டு
மேலான நாககிரி மலையைவிட்டு
விரும்பிமனங் கொண்டேகிப் பொதிகைதன்னில்
வேதியர்முன் நடந்தகதை விள்ளும்போது
விரும்பியந்த வேதியருஞ் சந்தோஷித்து
மேன்மைபெற்று வந்ததுதா னருமைகாணே. (1021)

தானென்ற நாககிரி மலையிற்சென்று
சங்கையுடன் திரும்பினபே ராருமில்லை
ஊனென்ற நாககன்னி மூச்சுப்பட்டால்
உத்தமனே அப்போதே வெந்துநீறும்
வானென்ற கெவுனிகள்தான் மலையைக்கண்டால்
வணங்கிமிகத் தான்பயந்து வலஞ்செல்வார்கள்
தேனென்ற கண்மணியே திரும்பிவந்த
திறமதுதான் கும்பமதின் செயல்தான்பாரே. (1022)

பாரப்பா யெக்கியமாங் கும்பந்தன்னில்
பாய்ந்துவந்த கருணையினால் மைந்தாநீயும்
நேரப்பா மனந்தேறி வந்தாயென்று
நேர்மையுடன் திருநீற்றுக் காப்பணிந்து
பேரப்பா பெற்றுவந்த மந்திரந்தன்னை
பேருலகி லறிந்தவர்க ளாருமில்லை
காரப்பா மனதடங்கிக் கருத்தாய்நீயும்
கருத்துடனே வாழுமென்று கடாட்சித்தாரே, (1023)

கடாட்சமுள்ள புலத்தியனே யோகவானே
காலகண்ட மானதொரு அஷ்டநாகம்
படாட்சரமாய் முன்னேறிப் பாய்ந்துவந்தால்
பாலகனே மந்திரத்தைப் பணிந்துஓது
சடாட்சரத்தின் வலுவாலே தம்பித்தேதான்
தானடங்கிப் போகுமடா தனதாய்ப்பார்த்தால்
விடாச்சுரமும் வல்விஷமும் விலகிப்போகும்
வேதாந்தக் கருணையிலே விரும்பினில்லே. (1024)

மருத்துமா மலைவனம்.

விரும்பிமனம் தனைநிறுத்திக் கெவுனங்கொண்டு
மேலான அண்டவரை சுத்தும்போது
திரும்பிமனங் கோணாமல் நேரேநின்று
செல்கையிலே மருத்துவமா மலையைக்கண்டு
அருந்தவமாய் விரும்பியந்த மலையிற்சென்று
ஆசைகொண்டு நாற்புறமும் பார்க்கும்போது
பொருந்திநின்ற கெந்தருவ ரிஷியைக்கண்டு
பூரணமா யவர்களிடஞ் சென்றேன்பாரே. (1025)

பாரப்பா அவர்களிடஞ் செல்லும்போது
பதிவாகக் கெந்தருவ ரிஷிதான்பார்த்து
ஆரப்பா யென்றவரு மழுத்திப்பார்த்தார்
அப்போது கும்பமுனி யென்றுசொன்னேன்
நேரப்பா நிறைந்தகும்ப முனிவாவென்று
நேர்மையுட னருகிருத்தி அமுர்தமீய்ந்து
கூறப்பா இம்மலைக்கி வந்தகாரியம்
கூறுமென்று கெந்தருவ ரிஷிசொன்னாரே. (1026)

சொன்னதொரு கெந்தருவ ரிஷியைப்பார்த்துச்
சுகமாகக் கெவுனமதா யண்டஞ்சுத்தி
முன்னேறி வருகையிலே கண்டேனிந்த
முத்தியுள்ள மலைவளத்தைப் பார்ப்போமென்று
உன்னிமிகத் தானிறங்கி வந்தேனய்யா
உற்றமலை யதிசயத்தை யுரைக்கவேணும்
என்னயமாய்க் கேட்டவுடன் நல்லதென்று
நாடிநின்று மலைமுடிவிற் சென்றோம்பாரே. (1027)

பாரப்பா நால்புறமுஞ் சுத்திப்பார்த்து
பதிவான கெந்தருவ ரிஷிதான்மைந்தா
நேரப்பா மூலிகையின் விபரமெல்லாம்
நேர்மையுடன் சொன்னதைநான் பெற்றுக்கொண்டு
வீரப்பா பதிவான லகிரிமூட்டி
விசையான மனவேகக் கெவுனங்கொண்டு
மேரப்பா சதுரகிரி நிதானங்கண்டு
மேலான கொடுமுடிசென் றிருந்தேன்காணே. (1028)

காணவே மருத்துவமா மலையிற்சென்று
கண்டதைநான் சொல்லுகிறேன் புலத்தியாகேள்
பூணவே கெந்தருவ ரிஷியைக்கண்டு
பொருந்திநின்ற மூலிகையின் திரங்கள்பெற்று
தோணவே வந்ததொரு திரங்கள்தன்னை
சுத்தமுடன் சொல்லுகிறேன் சுகமாய்க்கேளு
பூணவே தன்னகத்தைத் தானேகண்டால்
பொருந்திநின்ற மூலிகையைக் காணலாமே. (1029)

கருநெல்லி

காணவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
கருநெல்லிப் பழத்தினுட சாருவாங்கி
பேணவே அதுக்குநிகர் தேனுங்கூட்டி
பிரியமுடன் அந்திசந்தி கொண்டாயானால்
பூணவே வாசியது பொருந்திநின்று
பூரணமாய்த் தேகமது சித்தியாகும்
ஊணவே தேகமது சித்தியானால்
ஒருதீங்கு மில்லையடா சோதியாச்சே. (1030)

ஆச்சப்பா அந்தரசந் தன்னைமைந்தா
அரகரா விஷரோகஞ் சகலத்துக்கும்
நீச்சப்பா நிலையறிந்து கடாச்சித்தாக்கால்
நீங்காத விஷரோகம் நீங்கிப்போகும்
பாச்சப்பா பதியறிந்து கெதியைக்கண்டு
பதியான கெதிதனிலே பார்வையாகி
பேச்சப்பா பேசாத மவுனங்கொண்டு
பெருமையுட னின்னமொரு பாகங்கேளே. (1031)

கருநெல்லித் தயிலம்

பர்கமுள்ள கருநெல்லிப் பழத்தைமைந்தா
பதமாகத் தானுலர்த்திப் பாண்டத்திட்டு
ஏகமுள்ள மூலிகையாங் கடுக்காய்சேர்த்து
இன்பமுடன் கற்பூரதீபங்கூட்டி
ஆகமுடன் குளித்தயிலம் நன்றாய்வாங்கி
அரிபூசை சிவபூசை அன்பாய்ச்செய்து
தாகமுடன் பரணிதனில் பதனம்பண்ணி
சதானந்த பூரணமாய்த் தன்னைப்பாரே. (1032)

தன்னைத்தான் தானறிந்து தயிலந்தன்னை
சங்கையுடன் பணவிடைதான் தனதாய்க்கொண்டால்
விண்ணைத்தா னேகுதற்குக் கெவுனமுண்டாம்
மேலான அண்டமதில் தீபந்தோற்றும்
கண்ணைத்தான் கண்டுமன தறிவினாலே
கற்பூர தீபமதைக் கண்டாயானால்
உண்ணத்தான் வாசியது ஒதுங்காதய்யா
உறுதியுள்ள தயிலமடா வுண்டுதேரே. (1033)

தேரடா தயிலமதைத் தினந்தான்கொண்டு
சிவசிவா பூரணத்தில் திறமாய்நின்று
வீரடா கொண்டதொரு லோகத்தோர்க்கு
வேதாந்த அமுர்தரசத் தயிலந்தன்னை
நேரடா பணவிடைதா னந்திசந்தி
நேர்மையுடன் மூன்றுநாள் குடிக்கும்போது
பாரடா சயரோகம் பாண்டுகுன்மம்
பகையான மகோதரங்கள் பறந்துபோமே. (1034)

போமடா திரிகடுகு பொடித்துக்கொண்டு
பூரணமாய்த் தயிலமதில் சேர்த்துக்கிண்டி
ஆமப்பா லேகியம்போற் பாகம்பண்ணி
அப்பனே அந்திசந்தி பணவிடைதான்கொண்டால்
ஓமடா தேகமதில் வாதபித்தம்
ஒடுங்காத சேத்துமத்தா லெடுத்தநோய்கள்
தாமடா யிருமூன்று நாளிலேதான்
தன்மையுடன் தீர்ந்துவச்சிர தேகமாமே. (1035

வல்லாரைக் கற்பம்

காயமென்ற காயாதி கற்பந்தன்னை
காசினியிற் கண்டவர்கள் கோடிக்கொன்று
நேயமுட னின்னமொரு கற்பங்கேளு
நிசமான ஆரையடா வல்லாரைதான்
தாயகமாய்க் கொண்டுவந்து நிழலுலர்த்தி
சங்கையுடன் சூரணமாய்த் தானேசெய்து
மாயமென்ற சந்திரகலைத் தயிலஞ்சேர்த்து
மக்களே லேகியம்போற் பாகஞ்செய்யே. (1036)

செய்தவொரு லேகியத்தைப் பதனம்பண்ணி
சிந்தைமனந் தான்குளிரத் திருவைநோக்கி
மெய்தவறு பூரணமா யந்திசந்தி
மேன்மைபெற மண்டலமே கொண்டாயானால்
கொய்தவொரு தேகமதிற் காந்திமீறி
கோடிரவி உதையமது போலாந்தேகம்
சைதன்ய மானவொரு வாசிதானுஞ்
சதாபோதை பூரணமாய்த் தான்தானுமே. (1037)

ஆமப்பா வல்லாரை லேகியத்தில்
அப்பனே ஆதியுப்புச் சுண்ணஞ்சேர்த்து
ஆமப்பா அந்திசந்தி இருபோதய்யா
அரகரா நோயாளர் தனக்குயீய்ந்தால்
ஆமப்பா அஷ்டகுன்ம மஷ்டகாசம்
அடங்காத மூலமொடு பவுந்திரங்கள்
ஆமப்பா லேகியத்தைக் கொண்டபோது
அப்போதே தீர்ந்துவிடு மருளைப்பாரே. (1038)

பூரணலேகியம்.

அருளான பூரணமா மூலிதன்னை
அறியிரது அரிதரிது அறிந்துகொண்டால்
திருவான மூலிதன்னை நன்றாய்வாங்கிச்
செயமான தயிலமதால் மைபோலாட்டிக்
கருவான பூரணமே கெதியென்றெண்ணி
காலைசந்தி யிருபோது கருணைவைத்து
உருவான தேகமதில் மைந்தாகேளு
உறுதியுடன் பணவிடைதா னுண்மைபாரே. (1039)

உண்மையுடன் பணவிடைதான் கொள்ளும்போது
உத்தமனே வாசியது சுத்தமாகி
நன்மையுள்ள நவக்கிரகங் கெட்டியாகி
நாதாந்த அனுக்கிரகந் தன்னிலேதான்
தன்மையுள்ள நாதமடா காதிற்கேட்கும்
தன்பதியாஞ் சுழினையிலே தீபங்காணும்
உண்மையுட னாகாச கெவுனந்தொட்டு
நோக்குமுன்னே அண்டபதங் காணலாமே. (1040)

ஆமப்பா அண்டபதங் காணுதற்கு
அருளான லேகியந்தா னென்றுகேளு
காமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
காதர்ந்த மானதொரு சோதிமூலம்
தாமப்பா மூலமென்ற மூலிதன்னை
சங்கையுடன் கொண்டுவந்து சடைமேலாக
வாமப்பால் பூரணத்தை விட்டுநல்ல
மார்க்கமுடன் சுத்திமுறை நன்றாய்ச்செய்யே. (1041)

செய்யப்பா சுத்திமுறை நன்றாய்ச்செய்து
தீர்க்கமுடன் தானுலர்த்தித் தானேசெய்து
மெய்யப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி
மேலான கிறாம்புடனே யேலஞ்சுக்கு
வையப்பா வால்மிளகு தன்னோடொக்க
மார்க்கமுள்ள சூரணமே செய்துகொண்டு
நெய்யப்பா யிருபொடியு மொன்றாய்க்கூட்டி
நாதாந்த பூரணமு மொன்றாய்ச்சேரே. (1042)

சேர்த்துநன்றா யொன்றாக ரேகித்தப்பா
தீர்க்கமுட னதற்குநிகர் பஞ்சதாரை
பார்த்திபனே வெல்லமுடன் பனைவெல்லந்தான்
பத்தியுடன் சூரணத்தில் பதிவாய்க்கூட்டி
கார்த்துநன்றா யாதியந்தத் தயிலத்தாலே
கலந்துவொன்றாய்க் கல்வமதில் நன்றாயாட்டி
நேர்த்தியாய் மைபோலே நன்றாயாட்டி
நேர்மையுடன் பீங்கான்றன் பரணிசேரே. (1043)

சேரப்பா பிங்கான்றன் பரணிதன்னில்
செம்மையுடன் தான்சேர்த்துப் பதனம்பண்ணி
நேரப்பா நிலையறிந்து குருவைப்போற்றி
நிசமான பூரணலே கியத்தைமைந்தா
காரப்பா பணவிடைதான் தினமுங்கொண்டு
கருத்துறவே பூரணமாய் நின்றாயானால்
வீரப்பா கொண்டதொரு தேகந்தானும்
வேதாந்தத் தேகமது விளங்கும்பாரே. (1044)

பாரடா தேகமதிற் காந்திமீறி
பரியான வாசியது சுழினைக்கேறி
நேரடா நிலைதனிலே தீபங்காணும்
நிசமான பூரணத்தி னேர்மையாலே
காரடா கருணையுடன் சிவயோகத்தை
கருவான மூலமதி னுவியாலே
தேரடா தேறிமனங் கொண்டாயானால்
தேகவச்சிர காயமடா சித்திதானே. (1045)

சித்தியுள்ள பூரணலே கியத்தைமைந்தா
தீர்க்கமில்லா மாந்தருக்குச் செய்யவேண்டாம்
புத்தியுடன் தானிருந்து புருவமேவி
பூரணமாம் லேகியத்தைப் புத்தியாக
பத்தியுட னுண்டொன்று கொள்ளும்போது
பாய்ந்தேறித் திரும்பிவரக் கெவுனமுண்டாம்
சுத்தமுடன் தூரதிஷ்டி நடத்தைகாணும்
சுருதியுள்ள அண்டமது தோணும்பாரே. (1046)

பூரணகற்பம்.

பாரப்பா யின்னமொரு பாகங்கேளு
பரமான பூரணமுஞ் சத்தியுப்பும்
நேரப்பா விநாதமொன்றாய்க் கூட்டி
நிலையான செயநீரில் கரைத்துமைந்தா
காரப்பா ரவிதனிலே காயப்போட்டு
கசடறவே காய்ந்தபின்பு யெடுத்துநீயும்
சேரப்பா அமுர்தரச நாதநீரைச்
சேர்த்துநன்றா யாட்டியதைச் சிமிழில்வைய்யே. (1047)

வையப்பா சிமிழ்தனிலே பதனம்பண்ணி
வரிசையுடன் சற்குருவைத் தியானஞ்செய்து
மெய்யப்பா மெய்நிறைந்த கற்பந்தன்னை
மேன்மையுடன் பணவிடைதான் கொண்டாயானால்
அய்யப்பா வென்றதொரு கபங்களெல்லாம்
அப்போதே அகன்றுவிடும் அபானத்தாலே
செய்யப்பா சிவபூசை சத்திபூசை
தீர்க்கமுள்ள வாலையுட பூசைதானே. (1048)

தானென்ற வாலையுட பூசைசெய்து
தன்மையுட னாதார மூலத்தேகி
மானென்ற கேசரியில் மனக்கண்வைத்து
மகத்தான பூரணத்தைப் பூசைபண்ணி
கோனென்ற குருவருளால் தன்னைப்பார்த்து
குருவான பதிதனிலே தீபங்கண்டு
தேனென்ற பூரணமாய் நின்றாயானால்
தேகமடா திவ்யரசத் தேகமாச்சே. (1049)

ஆச்சப்பா தேகமது தேவரூபம்
அடங்காத வாசியது அசைவானந்தம்
மூச்சப்பா சொலித்துநின்ற முக்கோணத்தில்
முத்தியுட னந்திடத்திற் சித்தம்வைத்து
பேச்சப்பா பேசாத மவுனங்கொண்டு
பிலமாக நின்றுஅடி முடியைப்பார்த்தால்
நீச்சப்பா நிலையாத அண்டந்தோற்றம்
நிசமான அண்டமெல்லாம் நீதானமே. (1050)

ஆமப்பா அண்டமெல்லாம் நீதானாகும்
அருளான பரமவெளி நீதானாகும்
வாமப்பா பூரணமு நீதானாகும்
மதிரவி யானதுவும் நீதானாகும்
போமப்பா வாசியது நீதானாகும்
பொருந்திநின்ற சிவயோகம் நீதானாகும்
தாமப்பா சகலமுமே நீதானாகும்
சதாபோத மானபரம் நீதானமே. (1051)

தயிலம்.

ஆமப்பா பொடுதலையுஞ் சவுரிகூட்டி
அப்பனே யிடைசரியாய்ச் சாருவாங்கி
நாமப்பா சொல்லுகிறேன் சாருவிதம்
நல்லெண்ணை தான்கலந்து நயமதாக
தாமப்பா எண்ணைபடி யொன்றுக்குத்தான்
தன்மையுள்ள மிளகுபலஞ் சாற்றுலாட்டி
ஓமப்பா எண்ணைதனில் கரைத்துமைந்தா
உத்தமனே மெழுகுபதந் தன்னில்வாங்கே. (1052)

வாங்கியந்த எண்ணைதன்னை வாரந்தோறும்
வரிசையாய் முழுகிவரக் குணத்தைக்கேளு
தாங்கிநின்ற கபாலவலி கபாலக்குத்து
சளமான பீனிசங்கள் தானேதீரும்
தூங்கலாய் நின்றதொரு சோம்புதீரும்
துன்பமுள்ள நீர்க்கடுப்பு துலைந்துபோகும்
ஏங்கியதோர் வறச்சியெல்லா மோடிப்போகும்
என்மகனே ராசாங்க வயித்தியங்காணே. (1053)

காணவே யின்னமொரு பாகங்கேளு
கருவான பொடுதலையுஞ் சவுரிக்கொத்தும்
பூணவே யிருவகையி னிலையிரண்டே
புத்தியுடன் மிளகதுவுந் தானேசேர்த்து
பேணவே பசுவின்பால் தன்னிலாட்டி
பிரியமுடன் பால்தனிலே கரைத்துக்கொண்டு
தோணவே மெழுகுபதம் போலேகாய்ச்சி
சுகமாக யிளஞ்சூடாய் தலையிற்பூசே. (1054)

பூசிநன்றாய்த் தான்தேய்த்து வெந்நீர்விட்டு
புத்தியுடன் தான்முழுகி வந்தாயானால்
நேசமுடன் நாலஞ்சு தினத்தில்மைந்தா
நீங்காத பீனிஷங்கள் நீங்கிப்போகும்
பாசமுள்ள கபாலஇடி கபாலக்குத்து
பறக்குமடா யிம்முறையை வெளிவிடாதே
காசமுள்ள பலகாசந் தீர்ந்துபோகும்
கருவான வயித்தியமடா கண்ணைப்பாரே. (1055)

யாரப்பா தேகமென்ற வெண்சாணுக்கும்
பதிவான பிரதானஞ் சிரசேயாகும்
நேரப்பா சிரசிலுள்ள வியாதிக்கெல்லாம்
நிசமான பொடுதலையுஞ் சவுரிக்கொத்தும்
காரப்பா மிளகுடனே மூன்றுமல்லால்
காசினியில் வேறேயொரு மருந்துமில்லை
சாரப்பா யிம்முறையிற் சார்ந்துகொண்டு
தலையிலுள்ள வியாதியெல்லாஞ் சன்னியாடே. (1056

ஆடென்று சொன்னமுறை மைந்தாகேளு
அப்பனே யெண்ணெயிலே பாகம்பண்ணி
வீடென்ற உலகத்தோர் தனக்குமைந்தா
விபரமுடன் முழுகிவர மெத்தநன்று
தேடென்ற சிவயோகி கற்பத்தோர்க்கு
சிவசிவா பாலதனாற் செம்மையாகும்
மேடென்றும் பள்ளமென்று மறிந்துகொண்டு
வினையமுடன் வயித்தியத்தை விரும்பிப்பாரே. (1057)

நூல்விபரம்.

விரும்பியப்பா வயித்தியங்கள் நன்றாய்ச்சொன்னேன்
விபரமுள்ள ஆயிரத்தி அறுநூறும்பாரு
விரும்பிப்பா ரன்பதிலே ஆறுஞ்சொன்னோம்
மேன்மைபெற முன்னூறி லஞ்சுசொன்னோம்
விரும்பிப்பார் சூஸ்திரநூ றாறுஞ்சொன்னோம்
வினையமுடன் அறுநூறு ஆறுசொன்னோம்
விரும்பிப்பா ருயிரமா யஞ்சுசொன்னோம்
வேகமடா அஞ்னூறு ஆறும்பாரே. (1058)

யாரப்பா வயித்தியத்திற் கோடாகோடி
பாடினோம் வயித்தியத்தி லக்கோயில்லை
நேரப்பா மாந்தரீக மனந்தஞ்சொன்னோம்
நிலையில்லா மானிடர்க்கு மனுவிக்கியானம்
சேரப்பா ஆயிரத்தில் நன்றாய்ச் சொன்னோம்
சிவசிவா தத்துவமப் படியேசொன்னோம்
தேரப்பா வினோதவகை மோடியங்கம்
தெரிந்துபதி னாயிரமாய்ச் செப்பினோமே. (1059)

செப்பினேம் பூரணத்திற் றிறமாய்நின்று
சிவசர ராசியெல்லாந் திறமாய்க்காண
ஒப்பிமனங் கொண்டுவெகு கோடாகோடி
உண்மையென்ற சாஸ்திரங்க ளனந்தஞ்சொன்னேம்
துப்பறவாய்ச் சொன்ன சாஸ்திரங்களெல்லாம்
துகையறிந்து தேடுதற்கு வயதோகொஞ்சம்
இப்புவியில் கொஞ்சவய தானுலென்ன
என்மகனே இருந்தெழுந்த யிடத்தைப்பாரே. (1060)

பாரப்பா இருந்தெழுந்த யிடத்தைப்பார்த்து
பதிவான சத்திசிவ பூசைபண்ணி
நேரப்பா நின்றநிலை தன்னைப்பார்த்து
நிசமான திவ்யரச வமுர்தமுண்டு
காரப்பா கலைக்கியானங் கமலமேவிக்
கற்பூர தீபமென்ற கடாட்சம்பெற்று
மேரப்பா மேருகிரி வாசமானுல்
வேதாந்தத் தேகமது சித்தியாச்சே. (1061)

சித்தியுள்ள தேகமடா பிரமரூபஞ்
சிவசிவா மந்திரகலைக் கியானதேகஞ்
சுத்தமுள்ள தேகமதைத் தியானம்பண்ண
சோர்வொருநா ளில்லையடா சோதிதன்னை
நித்தமுமே கண்ணுமனக் கண்ணுல்நீயும்
நின்றெழுந்த வாசியினுற் றன்னைப்பாரு
பத்தியுள்ள மனதாலே பார்த்தாயானுல்
பரமகயி லாசமென்ற தேகங்காணே. (1062)

சதுரகிரி போதிகை விபரம்.

காணவே தேகமிது சதுரகிரிமைந்தா
கருணைவளர் சிரசதுதான் பொதிகைக்கும்பம்
தோணவே அக்கினிதான் மறையோனுகும்
சுகமான வாசிஅகத் தீசராகும்
ஊணவே நின்றமனக் கண்தான்மைந்தா
உற்றகலைக் கியானமென்ற சோதியாகும்
பேணவே நின்றதொரு ஆருதாரம்
பெருகிநின்ற பரந்தானே மாய்கையாச்சே. (1063)

மாயமென்ற தேகமதை யறிந்துகொண்டு
மகத்தான சிவரூப மிதுவென்றெண்ணி
தாயகமா யனதினமுந் தன்னைப்பார்த்து
சதாபோத வாசிமலர் தன்னைவாங்கி
நேயமுடன் நிட்சயமாய்ப் பூசைபண்ணி
நின்றோர்கள் தேவரிஷி யனந்தகாலம்
காயமென்ற காயமதைக் கண்டுகொண்டால்
கயிலாச வாசமதாய் வாழலாமே. (1064)

கட்டுவகை.

ஆமப்பா வாழ்வதற்குச் சூட்சங்கேளு
ஆதிநில வுப்பறிந்து உப்பைவாங்கி
ஓமப்பா யிஞ்சிமஞ்சள் தேனோடொக்க
உப்பறிந்து துப்பரவா யரைத்துக்கொண்டு
காமப்பா வாயுவென்ற சரக்குக்கெல்லாம்
தான்பூசிப் புடம்போடத் தானேகட்டும்
போமப்பா தேயுவென்ற சரக்கெல்லாந்தான்
புத்தியுட னீறியது பற்பமாச்சே. (1065)

பற்பமொடு கட்டுவகைத் திட்டங்கண்டால்
பதிவான வாசிகே சரியிற்சேரும்
உற்பனமாய் வாசிகே சரியாய்ச்சென்றால்
உண்மையென்ற மவுனபூ ரணநீரூறும்
கற்பமென்ற பூரணநீர் கொண்டாயானால்
காலனென்ற கபமகலுங் கண்துலங்கும்
விற்பனவி தட்சனமால்க் கண்ணைக்கண்டால்
மேல்கீழுந் தன்வசமாய்க் காண்பாய்பாரே. (1066)

ஆத்மதத்துவம்.

பாரப்பா தன்வசமாய்த் தன்னைக்காணத்
பதிவான பூதவகை யஞ்சும்பாரு
நேரப்பா ஞானமென்ற இந்திரியமஞ்சு
நிலையான பொரியஞ்சு புல்னைந்துதான்
காரப்பா கர்மமென்ற இந்திரியமஞ்சு
கருவான அந்தமென்ற கரணம்நாலு
தேரப்பா யிதுவெல்லாம் ஆத்துமதத்துவம்
தெரிந்துகொண்டு இன்னமுமே செப்பக்கேளே. (1067)

கேளப்பா வித்தியா தத்துவந்தானேழு
கிருபையுள்ள சிவதத் துவமுமைந்து
மேலப்பா உள்க்கருவி முப்பத்தாறு
விபரமுடன் கண்டுகொண்டு விண்ணைப்பற்றி
காலப்பா புறக்கருவி அறுபதுந்தான்
கண்டுகொள்ளு தொண்ணூற்றுர் தத்துவமாச்சு
சூழப்பா தத்துவத்தை நன்றாய்ப்பார்த்து
சுருக்கமுள்ள அனுக்கிரகத் துறையில்நில்லே. (1068)

துறையான அனுக்கிரகத் துறையில்நின்றால்
சுத்தமுள்ள தத்துதங்கள் செந்தீப்பட்டு
திரையான திரையகன்று சோதிகாணும்
தீபமென்ற போதநெறி யறிவானந்தம்
நிறையான அறிவான போதங்கண்டால்
நிலையான சிவயோக மதுதானப்பா
வரையான வரைகடந்து திரையைநீக்கி
மாசற்ற சோதியிலே மகிழ்ந்துகாணே. (1069)

வேண்சாரை கருநெல்லி விபரம்

காணவே கயிலாச மேருகிரிக்கப்பால்
கமலமென்ற கண்ணாடிச் சுனையிலேதான்
பேணவே அச்சுனைக்கு மேலதாக
பிலமாகச் சோதியென்ற விருட்சமுண்டு
தோணவே அவ்விருட்சந் தன்னில்நின்று
சுகமான கண்ணாடிச் சுனையைப்பார்த்தால்
ஊணவே அச்சுனையில் நின்றவாழும்
உறுதியுள்ள நீர்ச்சாரை காணலாமே. (1070)

காணலாம் நீர்ச்சாரை மாயாரூபம்
கண்டவுடன் வசிவசியென் றுருவேசெய்தால்
பூணவே அச்சாரை கையில்தங்கும்
பிரியமுடன் சாரைவளை ரிடத்தில்மைந்தா
ஊணவே அந்தயிட மறிந்துகொண்டு
உறுதியுடன் சாரையைநீ செலுத்தினக்கால்
பேணவே சாரைவளை ரிடந்தான்மைந்தா
பிலமாக நின்றிலங்கும் வீடுதானே. (1071)

வீடான வீடறிந்து சாரைதன்னை
விபரமுடன் கண்டுமனங் கொண்டபின்பு
சோடான கருஞ்சாரை சுனைக்குங்கீழே
சுத்தமுடன் தான்புடைத்து வளமாய்க்காணும்
வாடாம விடம்வலமாய்க் கண்டால்மைந்தா
மார்க்கமுட னிடமறிந்து கொண்டாயானால்
சூடான மூலஅனல் சொலித்துமைந்தா
துன்பமென்ற தீவினைகள் சுத்தமாமே. (1072)

சுத்தமுடன் கருநெல்லிப் பழத்தைமைந்தா
சுகமாக உண்டுருசி காண்பதற்கு
வித்தான விந்துநீர் தன்னைவாங்கி
விபரமுடன் தான்பொசிக்க ருசியுண்டாகும்
சித்தான சித்தனையே கண்டபோது
சேர்ந்துநின்ற நாதவிந்தால் தேகஞ்சித்தி
சத்தான சித்துதனைத் தானேகண்டு
சாயுச்சமோட்சகெதி தன்னைக்காணே. (1073)

புரியட்டகம்.

காணவே புரியட்ட மெட்டுங்கேளு
கதித்தெழுந்த பூதமைந்து நாதமொன்று
தோணவே விந்தொன்று சத்தியொன்று
தொகையான புரியட்ட மெட்டுமாச்சு
பேணவே புரியட்ட மெட்டும்பார்த்தால்
பெலமான சீவகளை நாலுந்தோற்றும்
ஊணவே சீவகளை கண்டாயானால்
உத்தமனே சகலசித்துந் தானுய்ப்பாரே. (1074)

சீவகளை விபரம்.

பாரப்பா சீவகளை நாலுதானும்
பரிவான பூரணமாய் நின்றுதப்பா
நேரப்பா பூரணத்தைச் சொல்லக்கேளு
நிசமான ஒளிப்பாழாய் நின்றதொன்று
காரப்பா வெளிப்பாழாய் நின்றதொன்று
கருவான வெளியொளிப்பா ழானதொன்று
சாரப்பா நிற்குணப்பா ழொன்றுமாச்சு
சரியான சீவகளை நாலுங்காணே. (1075)

காணவே சீவகலை நாலும்பார்த்து
கருணையுடன் பூரணமாய் நின்றாயானால்
ஊணவே ஆதார மாறாதாரம்
உண்மையுடன் தானறிந்த மேலாதாரம்
பேணவே ஆதார மீராருக்கும்
பெலமான வாசியடா சுவாசத்தந்தம்
தோணவே அந்தமென்ற ஆதியந்தம்
தொடுகுறிபோற் சொல்லுகிறேன் தேகமாச்சே. (1076)

ஆச்சப்பா தேகமென்ற ஆதாரத்தில்
அவத்தையென்ற அஞ்சையுமே சொல்லக்கேளு
மூச்சப்பா லாடத்திற் சாக்கிரந்தானென்று
முனையான கண்டத்திற் சொற்பனந்தானென்று
நீச்சப்பா மார்பின்கீழ் சுழுத்தியொன்று
நிசமான உந்தியிலே துரியமொன்று
வீச்சப்பா விந்தின்மேற் துரியாதீதம்
விளங்கிநின்ற அவத்தைஅஞ்சுங் கண்டுகொள்ளே. (1077)

கொள்ளப்பா அவஸ்தையஞ்சுங் கண்டுகொண்டு
குறியறியச் சாகரத்தில் மனதைவைத்து
விள்ளப்பா உந்தியிலே துரியம்பார்த்து
வேதாந்த விந்தின்மேற் துரியாதீதம்
நில்லப்பா அந்தநிலை தன்னிலேதான்
நீமகனே மூன்றையுமே நன்றாய்ப்பார்த்து
தள்ளப்பா சொற்பனமுஞ் சுழுத்திரெண்டும்
சங்கையுடன் பாராதே தன்னைப்பாரே. (1078)

தன்னைமிகத் தானறிந்து வாசியேறித்
தானவனாய்த் துரியாதீ தத்தில்நின்று
கண்ணைமிகத் தானறிந்து உந்திபார்த்து
கருணைவளர் துரியமதில் காலையூணி
நன்னயமாய்ச் சொற்பனமுஞ் சுழுத்திநீக்கி
நாட்டமுடன் சாக்கிரத்தில் நயமாய்நின்றால்
விண்ணைமிகத் தான்கடந்த சோதிபாதம்
வேதாந்த உச்சியிலே விளங்கும்பாரே, (1079)

விளங்கிநின்ற உச்சியிலே மனதைநாட்டி
வேதாந்த நயனமதாற் பார்க்கும்போது
களங்கமற்ற சோதியடா கண்ணிற்காணும்
கற்பூர தீபவொளிக் காட்சியாலே
உளங்கனிந்து ஆதாரம் நன்றாய்க்காணும்
உத்தமனே வாசியது உறுதியாகும்
முளங்கிநின்ற நாதவொலி காதிற்கேட்கும்
மூச்சறிந்த பேச்சதினாற் சத்தம்பாரே. (1080)

வேதைத்துகை.

சத்தமுள்ள வேதையுட துகையேதென்றால்
சங்கையில்லாக் களங்குவகை யென்னசொல்வேன்
பத்தமுடன் ஐநூற்றி யன்பத்தொன்று
பதிவான களங்குவகை யறிந்துகொள்ளு
சுத்தமுடன் களங்குவகை யறிந்துகொண்டால்
சுகமான வேதைமுகங் காணலாகும்
புத்தியுடன் வேதைமுகங் கண்ணிற்கண்டால்
பூரணமாய்ச் சிவயோகம் புனிதம்பாரே. (1081)

சேந்தூரத் துகை.

பாரப்பா செந்தூர வகையேதென்றால்
பத்தியுட னாயிரமும் பத்துமாச்சு
நேரப்பா ஆயிரமும் பத்துமாக
நின்றிலங்குஞ் செந்தூரந் தன்னைப்பார்த்தால்
காரப்பா கல்மலைகள் வேதையாகும்
கருவான கற்பமது உறுதியாகும்
பேரப்பா சொன்னவகை ஆயிரத்துப்பத்தும்
பெரிதான புத்தியினா லறிந்துபாரே. (1082)

பற்பவகை.

அறிந்துபார் குருபற்ப வகையேதென்றால்
அப்பனே சொல்லுகிறேன் எழுநூற்றஞ்சு
விரிந்துநின்ற பற்பவகை யெழுநூற்றஞ்சு
மெஞ்ஞான குருதேசி தன்னாற்கண்டால்
தெரிந்துகொண்ட வேதைமுகந் தெளிவாய்க்காணும்
தெளிந்தமன துறுதியினாற் தேகஞ்சித்தாம்
வருந்திமனங் குவிந்தெழுந்த வாசியாலே
மகத்தான சிவயோகம் வருந்திக்காணே. (1083)

காணவே வருந்திமனங் கொண்டுமைந்தா
கருவான உலகமதில் வாழும்போது
ஊணவே உலகமதுக் குறுதியான
உத்தமனே பொருளோடே அருளும்வேணும்
பூணவே செபம்வேணுந் தவமும்வேணும்
பொருந்திநின்ற வாசியுட திறமும்வேணும்
தோணவே வாசியுட திறத்தால்மைந்தா
சுத்தமுடன் சமாதியஞ்சுஞ் சுத்தமாமே. (1084)

மெழுகுவகை.

சுத்தமுள்ள மெழுகுவகை சொல்லக்கேளு
சொல்லுகிறேன் முன்னூத்தி யேழுமாச்சு
சித்தமுள்ள சித்தமதாய் முன்னூத்தியேழும்
செம்மையுடன் வகைதெரிந்து செய்துகொண்டால்
பத்தமுள்ள நவலோகந் தன்னிலேதான்
பதமான மெழுகுசத்தே பட்டுதானால்
வெத்தியுள்ள வேதையடா கண்கொள்ளாது
விஞ்சையென்ற மெழுகினுட வேகந்தானே. (1085)

வேகமென்ற வாசியைத்தான் கார்க்கவேணும்
வேதமொடு சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
ஆகமுடன் சிவதபங்கள் செய்யவேணும்
அறிவான போதசிவ யோகம்வேணும்
பாகமுடன் பலசமயந் தானேதானாய்
பதிவான மனதுருமை யாகவேணும்
ஏகமுடன் எங்குமதாய் நிறைந்தசோதி
யிருதயமே தானாக யிருந்துபாரே. (1086)

செயநீர்வகை.

பாரப்பா செயநீரின் வகையைக்கேளு
பாலகனே யென்னசொல்வே னூத்தஞ்சப்பா
காரப்பா நூத்தஞ்சு வகையைநீயும்
கருவான செயநீரைக் காணும்போது
வீரப்பா கொண்டதொரு பாஷாணங்கள்
மெய்யான காரசா ரங்களெல்லாம்
நேரப்பா கட்டாகு மெழுகுமாகும்
நிலையான வேதையுமாய் நிசமுமாமே. (1087)

கிசமான நிசமதிலே நின்றால்மைந்தா
நினைத்தபடி முடிக்கும்வகை சும்மாபோமோ
திசமான கேசரியே கெதியென்றெண்ணி
தீர்க்கமுடன் பூரணமாய் நின்றாயானால்
பிசகாமல் வாசியது பிலனாய்நிற்கும்
பிராணமய மானசிவ சோதிகாணும்
வசமான சோதியிலே மனக்கண்வைத்து
மனமகிழ்ந்து மனக்கண்ணால் காட்சிபாரே. (1088)

திருவக வகை.

காட்சியென்ற காட்சியிலே மைந்தாகேளு
கருவான திருவகந்தா னென்னசொல்வேன்
நீச்சென்ற திருவகத்தின் வகைதான்பார்த்தால்
நிசமான வகையதுவும் அறுபத்தாறு
ஆச்சப்பா அறுபத்து ஆறுவகைதன்னை
அறிந்துநீ திருவகத்தை யன்பாய்ச்செய்தால்
மூச்சென்ற பாஷாண மறுபத்தினாலும்
முக்கியமாய் முன்னடங்கிக் கட்டும்பாரே. (1089)

பாரப்பா பாஷாண நவலோகங்கள்
பதிவான உபரசங்கள் காரசாரம்
நேரப்பா இனமறிந்து தோய்த்துவாட்டில்
நின்றிலங்குந் திருவகத்தால் நிசமாய்க்கட்டும்
வீரப்பா கொண்டதொரு நவலோகத்தில்
விதவிதமாய் நின்றஉப ரசங்களெல்லாம்
பேரப்பா கொண்டுநின்ற திருவகத்தால்
பிறட்டியதைப் புடம்போட நீறுங்காணே. (1090)

காணவே காரசா ரங்கள்தன்னைக்
கருவாகத் திருவகத்தால் தோய்த்துமைந்தா
ஊணவே ரவிதனிலே வைத்துப்பார்த்தால்
உறுதியுள்ள ரவியனலில் மெழுகாய்ப்போகும்
பேணவே கருவிபரம் நன்றாய்ப்பார்த்து
பிரியமுடன் திருவகத்தைச் செய்துகொண்டு
தோணவே நினைத்தபடி வேதைபாரு
சுகமாகத் தேகமதைச் சுத்திபண்ணே. (1091)

பண்ணப்பா தேகமென்ற ஆலயத்தை
பதிவாகச் சுத்திபண்ணி யிருந்தாயானால்
பொன்னப்பா பொன்னதுபோற் புனிதமாகும்
புனிதமுடன் நின்றதினாற் கலையுண்டாகும்
எண்ணப்பா வென்றுஅந்த ஆலயத்தை
எண்ணாமல் வேற்றுமையா யிருந்தாயானால்
மண்ணப்பா தான்மீறித் தூசிசெத்தை
மண்டியது தான்தகர்ந்து மடிந்துபோமே. (1092)

மடியாம விடியாமல் மனதுகூர்ந்து
மார்க்கமுடன் தன்னகத்தைச் சுத்திபண்ணி
யிடியாமல் நீயிருந்து வாழ்ந்துகொண்டால்
ஏகநிரு மயமான சோதிகாணும்
அடியான மூலமதில் மனதைநாட்டி
ஆனந்த மதியமுர்தம் அனுப்போலுண்டு
முடியான கேசரியில் நின்றாயானால்
முத்தியுள்ள சித்தமதாய் வாழலாமே. (1093)

நவலோக நீறு

ஆமப்பா நவலோக நீற்றுவகைதானும்
அப்பனே அன்பத்து ஒன்றுமாச்சு
ஓமப்பா நீற்றுவகை அன்பத்தொன்றும்
உண்மையுள்ள கருவகைக ளறிந்துகொண்டு
தாமப்பா தன்னிலையே போதமென்று
தன்மையுடன் தானீத்திக் கொள்வாயானால்
வாமப்பால் பூரணத்தின் மகிமையாலே
மகத்தான வேதையடா கண்கொள்ளாதே. (1094)

கண்கொள்ளாக் காட்சியைப்போற் சோதிகாணும்
கருவாக நவலோக நீற்றினாலே
விண்காணும் அண்டமெல்லாந் தானேகாணும்
வேதாந்த வாசியது நிலைநின்றாடும்
முன்காணும் பின்காணும் யெல்லாங்காணும்
முத்திதரு மணிவாசல் மோட்சங்காணும்
தன்காலைத் தானறியா மடையர்தன்னை
தன்னறிவால் தானகற்றி விண்ணைப்பாரே. (1095)

விண்ணைப்பார் மண்ணைப்பார் தன்னைப்பாரு
வேதமென்ற வாசிநிலை வேகம்பாரு
கண்ணைப்பார் மனக்கண்ணால் தன்னைப்பாரு
கருவுருவாய் நின்றதொரு காலைப்பாரு
தன்னைப்பார் காலறிந்து தலைமேற்கொள்ளத்
தன்னிலையை யறியாத சவங்கல்மாடு
பெண்ணைப்பார்த் தேங்கியவன் பிலமுங்கெட்டு
பேய்முனியும் நாய்முகமாய்ப் பேசுவானே. (1096)

பேசுமொழி தனையறிந்து பேசவேணும்
பிசகாமல் வாசிதனை நிறுத்தவேணும்
நேசமுடன் வாசிதனை நிறுத்திக்கொண்டு
நேர்மையுடன் சிவயோகத் திருக்கவேணும்
பாசமுடன் சிவயோகத் திருந்துகொண்டு
பதியான கேசரியில் மனக்கண்வைத்து
வாசமுட னாகாச உச்சிமீதில்
மகத்தான சோதிதனை வணங்கிப்பாரே. (1097)

சிங்கிவகை.

பாரப்பா சிங்கியென்ற சிங்கிதன்னை
பதிவான சிங்கிவகை யேழுமாகும்
நேரப்பா சிங்கிவகை யேழுஞ்செய்தால்
நிலையான கல்மரங்க ளெல்லாந்தங்கம்
காரப்பா கருவகைகள் கருவாய்க்கண்டு
கருணையுடன் சிங்கிவகை கருவாய்ச்செய்தால்
பேரப்பா சிங்கியுட வாசம்பட்டால்
பெரிதான நவலோகந் தங்கமாச்சே. (1098)

தங்கரதி மாதுதன்னை யங்கமாகத்
தன்னறிவாற் றானிருந்து பூசைசெய்தால்
எங்குமடா தங்கமய மாகக்காணும்
என்னசொல்வேன் சிங்கியுட வியல்புதன்னால்
மங்காது சிவகலை சோதிபோலே
மார்க்கமுட னின்றிலங்கு மனதாய்ப்பாரு
சங்கையுடன் தன்னறிவாற் றானேபாரு
சதாகோடி வேதைமுகங் காணலாமே. (1099)

காணலாங் கண்குளிரத் தங்கத்தாயை
    கண்டுமன மகிழ்ச்சியினால் வாசித்தாயை
பேணலாம் வாசியினால் யோகத்தாயை
    பிலமான அறிவதனால் தீபத்தாயை
தோணலா மனங்குவிந்து சொன்னகாட்சி
    சொன்னமொழி தனையறிந்து சோதிபார்த்தால்
வானெல்லாஞ் சென்றுவரக் கெவுனமுண்டாம்
    மகத்தான சிங்கியைநீ வணங்கிப்பாரே. (1100)

தயிலவகை

வணங்கிமன துறுதியினால் சிங்கிபார்த்து
    மார்க்கமுடன் தயிலவகை சொல்லக்கேளு
இணங்கிநின்ற தயிலமதின் வகைதான்யேழு
    இன்பமுடன் கருவறிந்து தயிலஞ்செய்தால்
பணங்களென்ற பாஷாண முழுதுங்கட்டும்
    பதிவான நவலோகம் வேதையாகும்
குணங்களொரு மனதாகித் தயிலந்தன்னை
    கூர்மையுடன் கண்டறிந்து செய்துபாரே. (1101)

பாரப்பா தயிலவகை யறிந்துசெய்தால்
    பதிவான தேகமதுக் குறுதியாகும்
நேரப்பா வாசியது அகலாதய்யா
    நிசமான அறிவுகளு மங்காதய்யா
தேரப்பா தயில்வகை கண்டுதேறி
    தெளிவான அறிவதனாற் தீபம்பார்த்து
சாரப்பா சார்வான தலத்திலேதான்
    சதாபோதை பூரணமாய்த் தானேகாணே. (1102)

குளிகைவகை.

காணவே தயிலவகை தன்னைக்கண்டு
    கருவான குளிகைவகை யென்னசொல்வேன்
தோணவே குளிகைவகை தன்னைக்கேளு
    சொல்லுகிறே னாயிரத்தியெட்டுமாகும்
பேணவே தானிருந்து குளிகைசெய்தால்
    பேரண்டஞ் சித்தண்டம் ரெண்டுங்காணும்
பூணவே குளிகையுட மார்க்கத்தாலே
    பூலோக ராஜரிஷி யாகலாமே. (1103)

ஆகமுடன் சற்குருவின் கடாட்சத்தாலே
　　ஆகியந்தப் பூரணத்தாற் குளிகைசெய்தால்
வேகமுடன் லோகமெல்லாஞ் சுத்திமீண்டு
　　விசையான அண்டமெல்லாங் கண்டுதேறி
தாகமுடன் பரவெளியிற் பட்சிபோலே
　　தன்னறிவால் நின்றுவிளை யாடலாகும்
பாகமுட னின்றுவிளை யாடுதற்கு
　　பத்திகொண்டு நாதவிந்தைப் பணிந்துபாரே. (1104)

பாரப்பா நாதவிந்து ஒன்றாய்நின்று
　　பதிவான ரசகுளிகை மணியுமாச்சு
நேரப்பா ரசகுளிகை மணிக்கிமைந்தா
　　நிசமான நாதவிந்து சேனைபூட்டி
வீரப்பா கொண்டதொரு லகிரிபோட்டி
　　மேலான சீவகளை விசையுண்டாக்கி
தேரப்பா தன்னகமே அறிவாய்நின்று
　　தெளிவான பூரணத்திற் றிறமாய்நில்லே. (1105)

திறமான நாதவிந்தை யறியாமற்தான்
　　செகமெல்லாஞ் சீரணித்துச் செயலுமற்று
உறமான இருளதிலே ஒடுக்கமாகி
　　ஒமுடிந்து போகுதடா உலகவாழ்வு
பரமான வாழ்வதிலே பதிவாய்நின்று
　　பாலகனே கேசரியே வாசமாகி
சரமான சற்பமடா வாசியேறி
　　சரந்தொடுத்துச் சரமதனைத் தணிந்துபாரே. (1106)

பாரப்பா சரமதனை யெடுத்துக்கொண்டு
　　பத்தியுடன் சாஸ்திரங்கள் கண்டுதேறி
நேரப்பா வாசியைநீ பூசைபண்ணி
　　நேர்மையுடன் சிவயோக நிலையைப்பற்றி
சாரப்பா பூரணமே கெதியென்றெண்ணி
　　சதாயோக போதநெறி தவறாமற்தான்
மோரப்பா தாரகமாய் வாசமாகி
　　விளையாடுஞ் சித்தர்வெகு சுத்தமாமே. (1107)

சுத்தமுடன் ஞானநெறி பெற்றோர்க்கய்யா
சுகமாகக் காயாதி கற்பம்வேணும்
சித்தமுள்ள செந்தூர பற்பம்வேணும்
சிவசிவா களங்குவகை மெழுகுவேணும்
பத்தமுடன் செயநீர்கள் திராவகங்கள்
பரிவான சிங்கியொடு தயிலப்போக்கு
வெத்தியுள்ள ரசகுளிகை யிதுகளெல்லாம்
வேண்டிமனங் கொண்டவனே யோகிதானே. (1108)

தானென்ற ஞானியென்றும் யோகியென்றும்
சதாபோதை யானபர தேசியென்றும்
கோனென்ற குருவான சித்தனென்றும்
குவலயத்தில் பேரெடுத்துக் கொண்டாரானால்
ஊனென்ற உடலைமிக அறியவேணும்
உத்தமனே காயாதி கற்பம்வேணும்
தேனென்ற அமுர்தரச பானம்வேணும்
சிவசிவா சமாதிநிலை தெளிந்துபாரே. (1109)

பாரப்பா சரமறிந்து சரத்தைக்கொண்டு
பத்தியுடன் ரசவாதம் பார்க்கவேணும்
நேரப்பா நிலையறிந்து நிலையிலேதான்
நிலைதவறாக் கெவுனமதாய் நிற்கவேணும்
வீரப்பா கொண்டதொரு லகிரியெல்லாம்
விபரமுட னுண்டுநிலை காணவேணும்
தேரப்பா உண்டுநிலை கண்டுகொண்டு
சிவசிவா கூர்மம்போல் தெளிவாய்க்காணே. (1110)

நீத்தினக் கரு.

தெளிவாக நீத்தினதின் கருவைச்சொல்வேன்
செயமான வீரமொடு புனுகுபூரம்
ஒளியான குருவண்டு சூதஞ்சூடன்
உத்தமனே கார்முகியும் உறமுமாகும்
வழியான சவுக்காரச் சுண்ணமாகும்
வகையாக ஒன்பதையு மறிந்துகொண்டால்
பழியான சரக்குவகை லோகமெல்லாம்
பத்தியுடன் தானறிந்து நீத்தலாமே. (1111)

உருக்கினம்

ஆமப்பா சகலமுமே நீற்றுதற்கு
அப்பனே கருமானஞ் சொன்னேனையா
ஓமப்பா உருக்கினத்தின் வகையைக்கேளு
உண்மையுள்ள சவாதுடனே சாரங்காரம்
சாமப்பா வெடியுப்பு கல்லுப்புத்தான்
சார்வான மால்தேவி துருசுரெங்கும்
நாமப்பா சொல்லுகிறேன் வெள்ளைக்குன்றி
நலமான வெள்ளையுட ஆமணக்குவித்தே. (1112)

வித்தான தேனுடனே புருவினெச்சம்
விசையான சத்திசிவ உப்புங்கூட்டி
முத்தான சரக்குவகை பதினைந்தப்பா
முறையோடே கண்டறிந்து கொண்டாயானால்
சித்தான பாஷாணச் சரக்கெல்லாந்தான்
திறமான உபரசங்கள் காரசாரம்
பத்தாசை கொள்வதற்கு உருக்கலாகும்
பதிவாகக் கருவறிந்து பத்திப்பாரே. (1113)

பாரப்பாநீத்தினமு முருக்கினமுங்கண்டால்
பராசர ராசமுனி நீயேயாகும்
ஆரப்பா அறிவார்க ளாருமில்லை
அரகார கோடியிலே ஒருவன்காண்பான்
தேரப்பா கருவறிந்து கருவைக்கொண்டு
சிவசிவா பூரணமே கெதியென்றெண்ணி
மேரப்பா மேருகிரி வாசமாகி
வேதாந்த சித்தாந்தம் ரெண்டுங்காணே. (1114)

செந்தூர யினம்.

காணவே செந்தூர யினங்கள்தன்னை
கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
பூணவே மனதுறுதி யாகமைந்தா
புத்தியுடன் மால்தேவி மனோசிலையுமப்பா
தோணவே அப்புரகங் கெவுரிதுத்தம்
துடியான வெடியுப்புக் கெந்திகூட்டி
பேணவே சரக்குவகை யேழுங்கண்டால்
பிலமான செந்தூரம் பிசகாதென்னே. (1115)

என்னவே வற்ணவகை சொல்லக்கேளு
  ஏகாந்த நாதமுடன் தங்குஞ்சூதம்
வன்னமுள்ள சத்திசிவம் சிமியையுப்பு
  வகையான வற்ணத்துக் காதியாகும்
சொன்னமொழி தவருமல் நன்ருய்ப்பார்த்தால்
  சோதியென்ற தங்கயடா அதிககாந்தி
கண்ணிநிமை தானறிந்து காந்திகண்டால்
  கயிலாச பூரணத்தைக் காணலாமே. (1116)

காணலாம் ரவிமதியின் கலைகள் தன்னை
  கண்டறிந்தா லென்னபலன் கருவைக்கேளு
தோணலாம் ரவிமதியைக் கண்டபோது
  சூச்சமுள்ள ரவிதனிலே மதியைச்சேர்த்து
பேணலா மிருகலையு மொன்ருய்நின்று
  பிலமான அனுக்கிரகம் பீடத்தேகி
பூணலா மனதுருமை யாகநின்ருல்
  பொற்கமலச் சோதிவெகு சோதியாச்சே. (1117)

சோதிமய மானகா வியத்தைப்பாரு
  துலங்குகின்ற ஆயிரத்தி யிருநூறுகும்
நீதியுடன் பார்க்கையிலே மைந்தாகேளு
  நிசமான பூரணத்தி நிலையில்நின்று
ஆதியென்ற நிலையறிந்து நிலையில்நின்ருல்
  ஆனந்த மானசிவ சூட்சந்தோணும்
சோதியென்ற சூட்சமதைக் கண்டால்மைந்தா
  துரையான அஷ்டசித்தின் சூட்சம்பாரே. (1118)

பாரப்பா அஷ்டசித்துச் சூட்சம்பார்த்து
  பதிவாகப் பூரணத்தில் நின்றுகொண்டு
நேரப்பா நிலைபறிந்து அனந்தங்கோடி
  நிலையான சாஸ்திரங்கள் வெகுவாய்ப்பாடி
மேரப்பா மேருநிலை யறிந்தோர்க்கய்யா
  வேண்டிமன துருமையிஞ லீய்ந்தோம்பாரு
சீரப்பா அறியாத மூடர்கட்கோகான்
  செப்பினேன் அரிதரிது தெளிந்தோர்பாரே. (1119)

தெளிந்துமனந் தெளிந்தோர்க்குச் சாஸ்திரங்கள்சித்தி
சிவசத்தி யானதொரு மந்திரங்கள்சித்தி
அழுந்திநின்ற ஆதார மூலஞ்சித்தி
அதிலெழுந்த சகலகலை வாசிசித்தி
குளிர்ந்தகலை வாசியினால் யோகஞ்சித்தி
குறியான யோகமதால் ஞானஞ்சித்தி
தெளிந்துமனம் போகாமல் ஞானத்தேகி
நீமகனே நித்தியமுஞ் சோதிகாணே. (1120)

அஷ்டாங்கம் 8.

காணவே அஷ்டாங்க மெட்டுங்கேளு
கருவாகச் சொல்லுகிறேன் கண்டுகொள்ளு
பூணவே இயமமொடு நேமமைந்தா
புத்தியுட னாசனமும் பிராணாயந்தான்
தோணவே தாரணையும் பிரத்தியாகாரம்
சூட்சமென்ற சமாதியொடு தியானமெட்டும்
பேணவே யெட்டுமடா அஷ்டாங்கயோகம்
பெருமையுள்ள காவியத்தைக் கண்டுதேறே. (1121)

இயமம்-11

நேரப்பா நேர்ந்துமனங் கண்டுகொள்ள
சிவசிவா இயமமென்றால் பதினொன்றாச்சு
நேரப்பா பதினொன்றுஞ் சொல்வேன்கேளு
நிச்மான அங்கிஷமுஞ் சத்திஆர்த்திகம்
காரப்பா விரதமொடு ஆச்சரியமதமும்
கண்டுகொள்ளு ஆட்சேபஞ் சமயமோடுதிருதி
சாரப்பா சவுசமொடு இதாகாரமைந்தா
சங்கையுடன் பதினொன்றுஞ் சார்ந்துபாரே. (1122)

பாரப்பா சார்ந்துபதி னொன்றும்பார்த்தால்
பாலகனே இயமமென்ற தெல்லாஞ்சித்தி
நேரப்பா ஆதார நிலையுஞ்சித்தி
நேர்மையுடன் சகலகலை யெல்லாஞ்சித்தி
காரப்பா அடிநடு முடிமூன்றொன்றாய்
கருவான கண்ணறிந்து கண்ணாறப்பார்த்து
தேரப்பா இயமமென்ற தெல்லாங்கண்டு
தெளிந்துகொண்டு நேமமதைத் திறமாய்க்காணே. (1123)

நேமம்பத்து.

காணவே நேமமது விரஞ்சப்பா
கண்டுகொள்ள வகைவிபரஞ் சொல்லக்கேளு
பூணவே நேமமொடு தவசுசந்தோஷம்
புத்தியுடன் கண்டுகொள்ளு ஆஸ்திகஞ்சந்தானம்
பேணவே சிவபூசை சிரவணஞ் சித்தாந்தம்
பிலமான லட்சயமும் விரதமொடுபத்தும்
தோணவே கண்டுமனம் சுருதிபார்த்தால்
சுகமாக நேமவகை பத்துஞ்சித்தே. (1124)

ஆசனம் 9.

சித்தமுடன் நேமவகை பத்துங்கண்டு
தெளிந்துசிவ யோகமது திறமாய்நிற்க
வெத்தியுள்ள ஆசனந்தா னொன்பதப்பா
விபரமுடன் சொல்லுகிறேன் விரும்பிக்கேளு
பத்தியுள்ள கொத்திகங்கோ முகமும்பத்மம்
பதிவான வீரம்பத்திரஞ் சிங்கமொடுமுத்த
முத்தியுள்ள மயூரமொடு சுகமதுவுமைந்தா
முதலான நவக்கிரகம் ஒன்பதுஆசனமே. (1125)

ஆசனமாய் நின்றதொரு ஒன்பதையுங்கண்டு
அதிலிருந்து தவசுசிவ யோகஞ்செய்தால்
பூசணமாய் நின்றிலங்கு மாசனந்தான்மைந்தா
புத்தியுட னாசனமே லிருந்துகொண்டு
வாசனையாய் மனதுகந்து வாசிபார்த்து
மனமகிழ்ந்து சிவயோக நிலையில்நின்று
நேசமுடன் பிராணாயஞ் செய்துகொண்டு,
நிச்சயமாய்க் கற்பூர தீபம்பாரே. (1126)

பிராணாயாமம்.

பாரப்பா கற்பூர தீபம்பார்க்கப்
பதிவான பிராணாய வகைதானஞ்சு
நேரப்பா வகையஞ்சு நன்றாய்க்கேளு
நிசமான ரேஷகபூ ரகமுங்கும்பகம்
காரப்பா சவுபீசம் நிர்பீசமஞ்சும்
கண்டுகொண்டு பிராணாயம் நன்றாய்ப்பார்த்தால்
மேரப்பா மேருகிரி வாசமாகி
வேதாந்த சிவயோக முத்தியாமே. (1127)

பிரத்தி யாகாரம்.

முத்தியுடன் சிவயோகத் திருந்துகொண்டு
மோட்சமென்ற பிரத்தியா காரந்தன்னை
சித்தியுடன் பார்க்கவென்றால் வகைதானாறு
திர்க்கமுடன் சொல்லுகிறேன் சரீரயிந்திரியம்
பத்தியுள்ள பிராணனொடு காரணகாமியமும்
பாங்கான சறுவசங்கம் புத்தியுடனாறும்
சுத்தமுடன் கண்டறிந்து சித்தமொருமித்தால்
சுகமாக ஆறுவகைத் தாரணையைப்பாரே. (1128)

தாரணை.

பாரடா தாரணைதா றுவகைதன்னை.
பதிவான பூத்தா ரணைதானென்று
நேரடா பிராணதா ரணைதானென்று
நிசமான காரணத்தா ரணைதானென்று
தேரடா தெய்வதா ரணைதானென்று
சேர்ந்துநின்ற தத்துவதா ரணைதானென்று
சேரடா பிரமதா ரணைதானென்று
சித்தமுட றுவகை தாரணைதான்பாரே. (1129)

தியானம்.

பாரப்பா ஆறுவகை தாரணையில்நின்று
பதிவான தியானவகை பத்துங்கேளு
நேரப்பா சடாதார தியானமொன்று
நிசமான தேகமென்ற தியானமொன்று
காரப்பா மண்டலத்திற் தியானமொன்று
கருணையுள்ள பிரமாவின் தியானமொன்று
சாரப்பா மாலுடைய தியானமொன்று
சதாயோக ருத்திரனார் தியானங்காணே. (1130)

காணவே தேவாதி தியானமொன்று
கண்கண்ட விசுவனுட தியானமொன்று
பூணவே பிரணவத்தின் தியானமொன்று
பொருந்திநின்ற நிராதார தியானமொன்று
பேணவே தியானவகை பத்தும்பார்த்து
பேரண்டங் கெதியெனவே நின்றயானால்
தோணவே சமாதியிலே துலங்கலாகும்
சுத்தமுடன் சமாதியுட வகையைக்கேளு. (1131)

சமாதி.

கேளப்பா சமாதியஞ்சு நன்றாய்ச்சொல்வேன்
கிருபையுள்ள தத்வலய சமாதியொன்று
சூளப்பா சவ்விகற்ப சமாதியொன்று
சுருக்கான நிருவிகற்ப சமாதியொன்று
வாளப்பா சஞ்சார சமாதியொன்று
மகத்தான ஆரூட சமாதியொன்று
ஆளப்பா அஞ்சுவகை சமாதிபார்த்து
அஷ்டாங்க யோகமதி லறிவாய்நில்லே. (1132)

அறிவாகத் தானிருந்து அந்தத்தேகி
அறுபத்து நாலுவகை யறிந்துகொண்டு
விரிவாக நீயிருந்து பார்த்தால்மைந்தா
விண்ணடங்காக் காட்சியடா யென்னசொல்வேன்
குறியான குறிப்பறிந்து குருவைக்காத்து
குருவினுப தேசமதைக் குணமாய்ப்பெற்று
நெறியான நெறியறிந்து நெறியில்நின்றால்
நிச்சயமாய்ச் சகலசித்து மாடலாமே. (1133)

பஞ்சபூதச் சரக்குகள்

ஆடவே அஷ்டசித்துந் தானேயாட
அடங்கிநின்ற பூதவகைச் சரக்குக்கேளு
போடவே காரவகை பதிமூன்றுந்தான்
பாங்கான பிருதிவியென் றறிந்துகொள்ளு
கூடவே சாரவகை பனிரெண்டுந்தான்
குறியான அப்புவெனக் கூர்ந்துபாரு
வாடவே வைப்புவகை முப்பத்திரண்டு
வரிசையுடன் தேயுவென மகிழ்ந்துகாணே. (1134)

காணவே விஷவகை முப்பத்திரெண்டுங்
கருவான வாயுவெனக் கனிந்துபாரு
பூணவே உபரசம்நூத் திரண்டுபத்தும்
புத்தியுட னாகாச மென்றுபாரு
தோணவே வகையறிந்து பஞ்சபூதம்
சுத்தமுள்ள சரக்குவகை யறிந்துகொண்டு
பேணவே சத்துருமித் துருவைக்கண்டு
பிரியமுடன் சரக்குகளைக் கட்டிப்பாரே. (1135)

பாரப்பா பிருதிவிதா னப்பைக்கொல்லும்
பாங்கான அப்பதுதான் தேய்வைக்கொல்லும்
நேரப்பா தேய்வுதான் வாய்வைக்கொல்லும்
நிலையான வாய்வதுதா னுகாசத்தில்
வீரப்பா கொண்டதிலே மடிந்துபோச்சு
வேதாந்த பஞ்சகர்த்தாள் கூத்திதாச்சு
சாரப்பா தன்னறிவாற் சார்ந்துகொண்டு
சகலருமே வேதைமுகஞ் சார்ந்துபாரே. (1136)

துருசு சத்துரு

பாரப்பா சத்துருமித் துருவைநீயும்
பாலகனே சுருக்கமுடன் கொஞ்சங்கேளு
நேரடா துருசுசத் துருவைக்கேளு
நிசமான சவுக்காரம் வங்கம்நாகம்
காரடா யிந்துப்பு காந்தஞ்சிங்கி
கல்சவடு பாஷாணங் கல்லுப்புத்தான்
சேரடா அப்புரக மினங்கள்கூடன்
சிவசிவா அஞ்சனக்கல் சவுடுதொட்டி (1137)

தொட்டியுடன் சத்துருவை நன்றாய்ப்பார்த்து
துருசுதனைத் துரிதமுடன் சுண்ணம்பண்ணி
திட்டமுடன் வேதைமுறை நன்றாய்ப்பார்த்தால்
தேர்ந்துமனஞ் சிவயோகத் திறத்தில்நிற்கும்
சட்டமுடன் சிவயோகத் திறத்தில்நின்றால்
சகலகலை வல்லசிவ யோகியாகும்
இட்டமுடன் சத்துருவாற் செயமேசெய்து
இன்பமுடன் மித்துருவை யிருந்துகாணே. (1138)

துருசுக்கு - மித்துரு

காணவே மித்துருவைச் சொல்வேன்மைந்தா
கருவான லிங்கமுடன் கெவுரிபண்ணே
பூணவே நிமிளையொடு கெவுரிசிலைபூரம்
பூரணமாஞ் சூதமொடு கெந்திவீரம்
தோணவே வெங்காரஞ் சாரமரிதாரம்
சுத்தமுள்ள துருசதற்கு மித்துருவாய்நிற்கும்
[illegible]ணவே சத்துருவால் சங்காரம்பண்ணி
உத்தமனே மித்துருவா லுகந்துகாணே. (1139)

சாரத்தின் சத்துரு.

காரப்பா சாரத்தின் சத்துருவைக்கேளு
கல்லுப்பு யிந்துப்பு படிகிஇருகாந்தம்
சாரப்பா வளகிலுப்பு வங்கங் காரீயம்
கருவாக மடிக்தசுகக் கான்யோரண்டத்தோல்
வீரப்பா கொண்டகடல் லுரையுங்கல்சுண்ணம்
விசையான கிளிஞ்சியொடு சவுடுச்சத்துருவாம்
நேரப்பா சத்துருவாற் சாரந்தன்னை
நேர்மையுடன் கட்டிவிளை யாடிப்பாரே. (1140)

சாரத்தின்மித்துரு

பார்க்கவே சாரச்சத் துருவைச்சொன்னேன்
பத்தியுடன் மித்துருவைப் பகரக்கேளு
ஏர்க்கவே செம்புடனே வங்கம்நாகம்
இசைவான நிமிளையொடு கெவுரிகல்லூர்
சேர்க்கவே வெடியுப்பு லிங்கம்வீரம்
சிலையுடனே தாரமொடு கெந்திகாரம்
தீர்க்கவே சாரமதுக் கிதுதான்மைந்தா
சிவசிவா மித்துருவாய்த் தெளிந்துபாரே. (1141)

வெடியுப்பின் (சத்துரு)

தெளிந்துநின்ற வெடியுப்பின் சத்துருவைக்கேளு
திருவான அண்டோடு சுரைக்காய்க்கெந்தி
நெளிந்துநின்ற நீமுருக்கல் சிங்கிதொட்டி
நிலையான சிலைகாந்தஞ் செம்பிரும்பு
அளியாத வெள்ளியுடன் துருசுசூடன்
அடங்கிநின்ற காரீயம் வெள்ளீயஞ்சவுடு
வளிந்துமே வெடியுப்புச் சத்துருவேயாகும்
மார்க்கமுடன் மித்துருவை வணங்கிக்கேளே. (1142)

வெடியுப்பு மித்துரு.

கேளடா கடல்நுரையும் நிமிளைவெள்ளை
கெடியான ரோமமொடு நாகதந்தம்
வாளப்பா தாளகமுந் துத்தம்வீரம்
மகத்தான கல்லுப்பு காரம்லிங்கம்
ஆளப்பா படிகியுட னிந்துப்புத்தான்
அப்பனே வெடியுப்பு மித்துருவாய்ப்பாரு
சூளப்பா சத்துருமித் துருவைப்பபார்த்து
சுகமான சரக்குவகை யறிந்துகட்டே. (1143)

கல்லுப்பு சத்துரு)

கட்டவே கல்லுப்புச் சத்துருவைக்கேளு
கருவான சிங்கிசிலை பழம்புளியுமாகும்
மூட்டவே சவட்டுப்புப் பவழப்புத்து
முனையான வீரமொடு ராசவர்த்தம்
இட்டமுடன் இதுவெல்லாம்கல்லுப்புச் சத்துருவேயாகும்
இசைவான மித்துருவைச் சொல்லக்கேளு
திட்டமுடன் மித்துருவைக் கண்டுகொண்டு
சிவசிவா கல்லுப்பைச் செயமேபண்ணே. (1144)

கல்லுப்புக்கு மித்துரு.

பண்ணப்பா கல்லுப்பின் மித்துருவைக்கண்டு
பதிவாக அப்புரகம் லிங்கம்வங்கம்
பொன்னப்பா நிமிளையொடு தாளகமும்வெள்ளை
பொருந்திநின்ற வெங்காரம் கெவுரிநாகம்
கண்ணப்பா செம்பிரும்பு பூரமெல்லாம்
கல்லுப்பின் மித்துருவாய்க் கனிந்துகொண்டு
கண்ணப்பா சற்குருவா லறிந்துமைந்தா
காட்டமுடன் சரக்குகளை நன்றாய்ச்செய்யே. (1145)

காரத்தின் சத்துரு.

செய்யவே காரத்தின் சத்துருவைக்கேளு
சலாசத்து புளியுடனே அண்டஞ்சூடன்
நய்யவே சுண்ணமொடு பூரமெல்லாம்
நயமான காரத்தின் சத்துருவேயாகும்
பய்யவே காரமதைச் சத்துருவாற்கட்டி
பதிவான வேதைமுகம் நன்றாய்ப்பார்த்தால்
அய்யனே யென்னசொல்வே னதிககாந்தி
அப்பனே தங்கமய மாகும்பாரே. (1146)

காரத்தின்மித்துரு.

பாரப்பா காரத்தின் மித்துருவைக்கேளு
பாசாண முபரசங்கள் லோகமெல்லாம்
நேரப்பா மித்துருவா யறிந்துகொண்டு
நிசமான சரக்குகளை உருக்கிப்பாரு
வீரப்பா கொண்டுநின்ற சரக்கெல்லாந்தான்
விபரமுடன் கட்டியது வேதையாகும்
தேரப்பா வேதைமுகங் கண்டுமைந்தா
சிவாயகுரு பாதமதிற் தெளிவாய்நில்லே, (1147)

சீனச்சத்துரு

தெளிவான சீனமதின் சத்துருமித்துருதான்
செம்மையுடன் சொல்லுகிறேன் நன்மையாக
ஒளிவான காரத்தின் சத்துருமித்துருதான்
உண்மையுள்ள சீனமதுக் குகந்துநிற்கும்
வழியான வழியறிந்து வகையுங்கண்டு
மார்க்கமுள்ள கருக்குருவின் மகிமையாலே
தெளியாமல் நின்றுகலர யேறிமைந்தா
நேர்மையுட னின்றறிநு லெல்லாஞ்சித்தே. (1148)

தங்கத்தின்சத்துரு.

சித்தான தங்கமதின் சத்துருவைக்கேளு
சிவசிவா சவ்விரங் காந்தங்கெந்தி
வித்தான அண்டோடு கிளிஞ்சியப்பிரகம்
விசையான சவுட்டுப்பு அரிதாரஞ்சிங்கி
சுத்தான இனங்கனோடு கெவுரிலிங்கம்
சுகமான கண்டருடன் வெள்ளைநாகம்
பத்தான குதிரைப்பல் கோமுகம்பொன்னம்பர்
பதிவான தங்கச்சத் துருவுமாச்சே. (1149)

தங்கத்தின்மித்துரு

ஆச்சப்பா தங்கமதின் சத்துருவைச்சொன்னேன்
அருள்பெருகு மித்துருவை யறியக்கேளு
பேச்சப்பா யானறிந்து சொல்லக்கேளு
பெரிதான தங்கச்சத் துருவைநீக்கி
காச்சப்பா மற்றதெல்லா மித்துருவேயாகும்
கருவதிலே கண்டறிந்து கருத்தாய்ப்பாரு
மூச்சப்பா முன்னிலையாய்ப் பார்த்தாயானால்
முத்தியுள்ள சித்துகளைக் காணலாமே. (1150)

ரசத்தின்-மித்துரு.

காணவே சூதத்தின் மித்துருவைக்கேளு
கருவாக நாகமுடன் காரீயம்வங்கம்
பூணவே வெள்ளிசெம்பு துருசுசாரம்
பொன்னான வெங்காரம் அப்பிரகந்துத்தம்
தோணவே கெந்தகமு மரிதாரம்வீரம்
துலங்கியே அப்புரகம் பவழப்புத்து
பேணவே தீமுருக லஞ்சனக்கல்சிலையும்
பெலமான சூதத்தின் மித்துருவைப்பாரே. (1151)

சூதத்தின் சத்துரு.

பாரப்பா மித்துருவை நன்றாய்ப்பார்த்து
பதிவான சத்துருவைப் பகரக்கேளு
கோரப்பா சிங்கியுடன் கெவுரிசத்திசாரம்
நிசமான யிரும்புடனே காந்தஞ்சூடன்
காரப்பா கல்சவுடு வெடியுப்புபூரம்
கலந்துநின்ற பூனீரு நிமிளைபொன்னம்பர்
தேரப்பா குதிரைப்பல் பாஷாணத்தோடு
சிவசிவா சத்துருவென் றறிந்துகாணே. (1152)

இரும்புச் சத்துரு.

காணப்பா இரும்புக்குச் சத்துருவைக்கேளு
கருவான வெங்காரம் அண்டமப்பிரேகம்
பூணப்பா வெங்கலம் நிமிளைவங்கம்
பொருந்திநின்ற கிளிஞ்சியுடன் திருவுங்கெந்தி
பேணப்பா மனோசிலையும் சவ்வீரஞ்சாரம்
பெருகிநின்ற சிங்கியொடு கெவுரிவெள்ளை
ஊணப்பா சலாசத்து பூனீரெல்லாம்
உத்தமனே யிரும்புசத் துருவாய்ச்சேரே. (1153)

இரும்புக்கு மித்துரு.

சேரப்பா யிரும்புக்குச் சத்துருவைக்கண்டு
திறமான மித்துருவைத் தேர்ந்துகேளு
கோரப்பா செம்புவெள்ளி நாகங்காந்தம்
நிலையான கெவுரியொடு பூநாகம்பூரம்
சாரப்பா தங்கமொடு ராசவர்க்கம்
சங்கையுள்ள கெந்திசெம்பு பூரச்செம்பு
காரப்பா சூடன்முதல் மித்துருவேயாகும்
கைமுறையாய்க் கருவறிந்து கசிந்துகாணே. (1154)

நாகத்தின் சத்துரு

காணடா நாகமதின் சத்துருவைக்கேளு
கல்லுப்பு வெடியுப்புக் கிளிஞ்சியண்டம்
பேணடா படிகமொடு வங்கந்தங்கம்
பிலமான திருவுடனே வெங்கலமும்வெள்ளி
ஊணடா நண்டோடு மிருதார்சிங்கி
உத்தமனே வீரம்வெள்ளை வளாகிலுப்பு
பூணடா அபின்மிளகு அன்னபேதி
புத்தியுட னாகத்தின் சத்துருவாயெண்ணே. (1155)

நாகத்தின் மித்துரு.

எண்ணியே மித்துருவைச் சொல்லக்கேளு
இரும்புசெம்பு காந்தமொடு நிமிளைசலாசத்து
உண்ணியே கெவுரியொடு அப்பிரேகங்கெந்தி
ஓங்கியே சூதமொடு பூனாகஞ்சாரம்
வன்னியென்ற கருநாக மயூரச்செம்பு
மகத்தான நாகத்தின் மித்துருவேயாகும்
கண்ணிறைந்த காட்சியினால் சத்துருமித்துருவை
கண்டறிந்து நின்றபடி கருவாய்க்காரே. (1156)

கருவங்கச் சத்துரு.

கருவான காரீய சத்துருவைக்கேளு
கசகாத அயக்காந்தம் நிமிளையண்டம்
உருவான ராசவர்க்கம் கிளிஞ்சிரண்டோடு
உத்தமனே கெவுரியொடு கெந்திகத்தை
திருவான பூனீரு யிதுவெல்லாந்தான்
தீர்க்கமுள்ள காரீயச் சத்துருவேயாகும்
குருவான பதியறிந்து குருவைக்கண்டால்
குறித்தபடி கருவறிந்து திருத்தலாமே. (1157)

கருவங்க மித்துரு.

திருத்தமுள்ள சத்துருவைச் சொன்னேன்மைந்தா
தீர்க்கமுடன் மித்துருவைச் செப்பக்கேளு
வருத்தமில்லாச் சூதமொடு வங்கம்வெள்ளி
வகையான மயூரமொடு நாகம்செம்பு
உருத்தான பூனாக மிதுவெல்லாந்தான்
உத்தமனே மித்துருவென் றுகந்துபாரு
கருத்தான கருத்துவைத்துப் பார்த்தாயானால்
கனகமென்ற காட்சியைத்தான் காணலாமே. (1158)

புட நிதானம்.

காணவே புடம்போட நிதானங்கேளு
காடையென்ற புடமதுக்கு யெருத்தானென்று
பேணவே கவுதாரி யெருமூன்றாகும்
பிலமான குக்குடந்தான் யெருபத்தாகும்
ஊணவே வராகமெரு ஐம்பதாகும்
உத்தமனே கனபுடந்தான் யெருநூறாகும்
பூணவே கெசபுடந்தான் சொல்லக்கேளு
புகலாதே தட்டெரு ஆயிரந்தானாமே. (1159)

யெரிப்புத் திட்டம்.

ஆமப்பா யெரிப்புமுறை சொல்லக்கேளு
அப்பனே தீபமது விறகொன்றாகும்
ஓமப்பா கமலமது விறகோரெண்டு
உத்தகா டாக்கினிதான் விறகஞ்சாகும்
தாமப்பா யெரிப்புமுறை நன்றாய்ப்பார்த்து
தன்மையுள்ள திராவகங்கள் செந்தூரங்கள்
நாமப்பா சொன்னபடி கருவைப்பார்த்தால்
நல்லபிறை யோகமெல்லாம் நாடலாமே. (1160)

ஊத்துமுறை.

ஆமப்பா ஊத்துமுறை துருத்திகேளு
அப்பனே ஊத்துக்குத் துருத்தியொன்று
நாமடா உருக்கினத்துக் கய்யாகேளு
நாட்டமுடன் துருத்தியது ரெண்டேயாகும்
தாமடா சகலமுமே சத்துவாங்கச்
சங்கையுடன் சொல்லுகிறேன் துருத்திநாலு
ஓமடா யிம்முறையாய்ப் பார்த்தாயானால்
உத்தமனே சகலமுந்தான் சித்தியாமே. (1161)

சரக்கு முடிக்குங்காலம்.

சித்தமுடன் அற்பசியுங் கார்த்திகைமார்கழியும்
தீர்க்கமுட னுருக்கினத்தின் காலமாகும்
பத்தமுடன் தைமாசி பங்குனிதனிலே
பதிவான செயனீரின் காலமாகும்
புத்தியுடன் சித்திரைவை காசிஆனி
பொருந்தியிந்த மூன்றினிலே குருமுடிக்கலாகும்
சுத்தமுடன் ஆடிஆவணி புரட்டாசியுமே
சுகமாகத் திராவகங்கள் செந்தூரம்பண்ணே. (1162)

பண்ணுவது செந்தூரந் திராவகமுஞ்செயனீர்
பாங்கான மெழுகுடனே பற்பவகையெல்லாம்
திண்ணமுடன் காலாகா லங்கள்கண்டு
தீர்க்கமுள்ள கருமுறைகள் குருமுறைகள்கண்டு
எண்ணமுடன் கைமுறைகள் தப்பாமற்றான்
யேகாந்த மாயிருந்து பார்த்தாயானால்
சொன்னபடி தான்முடித்துக் கொள்ளலாகும்
சோதிதிரு வாசியிலே சுகமாய்நில்லே. (1163)

ஆகாத வழியுடையவன்

சுகமான சுகமறிய மாட்டாமற்தான்
தொல்லுலகில் மானிடர்கள் வேடம்பூண்டு
செகமாய்கை யதனிலுள்ள பூசைசெய்து
தீனியினி லாசைவைத்துத் தின்பான்மட்டை
அகமான சுகமதனை யறியாமல்தான்
அப்பனே வேர்தனைக்குக் காப்புக்கட்டி
பகவான்போல் தானிருந்து கண்ணைமூடி
பார்க்கும்நிலை யறியாமல் பசப்புவானே. (1164)

வானான வடிவுதனை யறியமாட்டான்
மகத்தான பூமிதனைக் காணமாட்டான்
ஊனான உரிசைதனை யறியமாட்டான்
உறுதியுள்ள வாசிநிலை காணமாட்டான்
தேனான அமுர்தரசங் காணமாட்டான்
திருவிருந்த மூலமதை யறியமாட்டான்
கோனான குருசமுகம் காணமாட்டான்
குவிந்தெழுந்த பூரணத்தின் குறிகாணானே. (1165)

குறிகாணா மடையர்வெகு கோலங்கொண்டு
கூடுகட்டி யதனிலொரு பீடம்போட்டு
நெறிகாணாப் பாவிகள்தா னிருந்துகொண்டு
நிசமில்லா யெந்திரங்கள் சிலைகள்வைத்து
பரிகாணாப் பாவிகள்தான் மலைத்துக்கொண்டு
பதியாமல் மனதுளன்று பரதவித்து
திரிகரண சுத்திதனை யறியாமல்தான்
சித்தமுள்ள பெரியோரைப் பழிப்பான்பாரே. (1166)

ஞான யோகம்.

பழியான உலகமதை யறியவேணும்
பதிவான பெரியோரை வணங்கவேணும்
மூழியாகத் தானிருந்து மூதுகண்பார்த்து
முனையான சுழிமுனையி லேறவேணும்
வெளிப்பார்வை கொண்டதினு லேதுண்டப்பா
வேகமுட னுள்புகுந்து மேலேபாரு
நெளிப்பாக நின்றதினு லொன்றுமில்லை
நீமகனே அஷ்டதிசை வட்டம்பாரே. (1167)

வட்டமென்ற சுழினையுட திட்டப்பார்த்தால்
மதிகதிரின் சோதியடா கண்ணேசூட்சம்
திட்டமுடன் கண்ணறிந்து சூட்சம்போது
திருத்தமுட னிருத்திநன்றாய் நிருத்திப்பாரு
இட்டமுடன் தானிருந்து நிருத்திப்பார்த்தால்
யேகவெளி தீக்காடு யேகாந்தத்தீ
சட்டமுடன் யேகாந்தத் தீயைமைந்தா
தனித்திருந்து வாசியினூ லூதிப்பாரே. (1168)

ஊதையிலே வாசியது ஒன்றாய்ச்சேர்ந்து
ஓமுடிந்து தான்வளர்ந்து செந்தீப்பற்றி
பூதையிலே போதைவெகு நீதமாச்சு
பொற்கமல நந்தியொளி காணலாச்சு
வாதையிலே போகாமற் போதைபாரு
மகிழ்ந்திருந்து மதியமுர்தம் வாசியாலே
பாதியிலே பிசகாமல் நேரேநின்றால்
பார்க்குமனஞ் சுத்தமடா யார்க்குந்தானே. (1169)

வெங்காரக்கட்டு.

ஆர்க்கும்வெகு சுகங்காண மைந்தாகேளு
ஆதியென்ற நாதமடா பூமிநாதம்
ஏர்க்கவே பூமியுட நாதம்வாங்கி
என்மகனே அதுக்குநிகர் சாரஞ்சேர்த்து
மார்க்கமுடன் தானரைத்து வழித்துநல்ல
மகத்தான காரமதுக் கங்கிபூட்டி
சேர்க்கையுடன் ரவிமுகத்தில் காயவைத்துத்
திறமாக மண்சீலை வலுவாய்ச்செய்யே. (1170)

செம்புச் சுத்தி.

செய்யப்பா மண்சீலை வலுவாய்ச்செய்து
தீர்க்கமுடன் வகையறிந்து புடத்தைப்போடு
மெய்யப்பா புடமாறி யெடுத்துப்பார்த்தால்
வேகமுள்ள காரமதுகட்டி நிற்கும்
கையப்பா தவறாம லெடுத்துநீயும்
களிம்பான செம்பதுதா னுருகும்போது
வைய்யப்பா காரமது பத்துக்கொன்று
மார்க்கமுடன் தானுருக்கி யெடுத்துப்பாரே. (1171)

எடுத்துமிகப் பார்க்கையிலே செம்பிலேதான்
இருந்தகளிம் பற்றதுவுஞ் சோதியாச்சு
தொடுத்தசெம்பு தானதுவுஞ் சொகுசாயாச்சு
சொகுசான செம்பிற்றங்கஞ் சேர்ந்தபோது
கடுத்தவொரு செம்பதுவுந் தங்கமாச்சு
களிம்பற்ற செம்பதனைக் காணப்போமோ
அடுத்தமனை நடுவீதி ஆதிபார்த்தால்
அந்தமனை சொகுசுவெகு சொகுசாம்பாரே. (1172)

பாரப்பா யின்னமொரு பருவங்கேளு
பதிவான சத்துவகை யார்தான்காண்பார்
பேரப்பா பெற்றதொரு சத்துவாங்கி
பெலமான சாரமுடன் பூனீர்கூட்டி
வீரப்பா கொண்டதொரு வாய்நீர்தன்னால்
விசையாகத் தானரைத்து மேலேகேளு
காரப்பா காரமதுக் கங்கிபூட்டி
கருவறிந்து புடம்போடக் கட்டும்பாரே. (1173)

கட்டிநின்ற காரமதை யெடுத்துமைந்தா
கருவான வீரமதுக் கிடையேசேர்த்து
திட்டமுடன் வாய்நீரா லரைத்துநல்ல
சிறுமணிபோ லுண்டைசெய்து உலர்த்திமைந்தா
நாட்டமுள்ள செம்புதனை யுருக்கிக்கொண்டு
நயமான வீரமணி யொன்றுபோட்டு
இட்டமுடன் தானுருக்கிப் பார்த்தால்மைந்தா
என்னசொல்வேன் செம்புநிறந் தங்கமாச்சே. (1174)

சாரக்கட்டு.

தங்கமய மாகும்வகை யின்னங்கேளு
தானவனாய் நின்றதொரு பூமிநாதம்
அங்கமென்ற நாகமுடன் துருசுகாரம்
அப்பனே வீரமுட னுலுங்கூட்டி
சங்கையுடன் வாய்நீரா லரைத்துமைந்தா
சாரமதுக் கேகவசந் தானேசெய்து
செங்கமலச் சோதியிலே காயவைத்து
தீர்க்கமுடன் மண்கவசந் திரமாய்ச்செய்யே. (1175)

செய்யடா கவசமது நன்றாய்ச்செய்து
சிவசிவா சற்குருவைத் தியானஞ்செய்து
கையடா தவறுமற் புடத்தைப்போடு
கண்ணான சாரமது கட்டிப்போகும்
மெய்யடா சாரமது கட்டிப்போனால்
மேன்மைபெறச் சாரமதை வாங்கிமைந்தா
வையடா நாகமதைக் குகையிலேதான்
மார்க்கமுடன் தானுருக்க வகையைக்கேளு. (1176)

நாகக்கட்டு

வகையாகக் கருமானஞ் சொல்லக்கேளு
மகத்தான நாகமது உருகும்போது
பகையான காரமதை முன்னேபோட்டு
பதிவான சாரமதைப் பின்னேபோடு
திகையாமல் வரிசைமுறை நன்றாய்ப்பார்த்து
திறமான நாகமதை யுருக்கிப்பாரு
தகையாமற் தானுருக்கிப் பார்க்கும்போது
தன்மையுள்ள ரசமணிபோ லிருக்கும்பாரே. (1177)

இருக்குமந்த நாகமணி தன்னைமைந்தா
ஏகாந்தத் தங்கமது கூடச்சேர்த்து
உருக்கமுடன் தானுருக்கிப் பாருமைந்தா
உருவான நாகதங்க மொன்றாய்ச்சேர்ந்து
திருக்கரவே தானுருக்கிச் செம்மையாகும்
செம்மையுட னின்னமொரு கருவைக்கேளு
கருக்கான இரும்புசெம்பு உருகும்போது
கனகமென்ற நாகமணி கருக்காய்ச்சேரே. (1178)

சேர்க்கையுட னேற்கவேதா னுருக்கிப்பாரு
திருவான களங்குவெகு குருவாய்நிற்கும்
ஏர்க்கையுடன் குருவான களங்கைவாங்கி
யென்மகனே வெள்ளிசெம்பு யிடையாய்ச்சேர்த்தால்
மார்க்கமுட னுருகையிலே பத்துக்கொன்று
வளமான குருகளங்கு ஒன்றுபோட்டு
தீர்க்கமுடன் தானுருக்கிப் பார்த்தாயானால்
திருவான தங்கம்வெகு சோதியாச்சே. (1179)

ஆச்சப்பா சோதிமய மானதங்கம்
அண்டகே சரிமாது ஆனதங்கம்
பேச்சப்பா பேசாத மவுனத்தங்கம்
பெருகிநின்ற வாசிநிறைந் திருக்குந்தங்கம்
மூச்சப்பா முகியாத அருளாந்தங்கம்
முத்திதரு அமுர்தரச மானதங்கம்
நீச்சப்பா நிலையாத வாசித்தங்கம்
நிசமான தங்கமடா சோதிகாணே. (1180)

லிங்கக்கட்டு.

சோதியென்ற வீரமுடன் பூரஞ்சேர்த்து
சுகமான காரமுடன் சாரங்கூட்டி
நீதியுடன் தம்பலத்தின் சாற்றாலாட்டி
நிசமான லிங்கமதுக் கங்கிபூட்டி
ஆதியென்ற ரவிதனிலே உலர்த்திமைந்தா
அசையாமல் மண்சீலை யமுத்தம்பண்ணி
வாதியென்ற பேர்சிறுத்திப் புடத்தைப்போடு
மகத்தான லிங்கமடா கட்டிப்போச்சே. (1181)

லிங்கக்கட்டு வேறு

போச்சென்று விடுகாம லின்னமொன்று
பூரணமாய்ச் சொல்லுகிறேன் புதுமையாக
பேச்சென்று நினையாதே வீரம்பூரம்
பிலமாக நின்றதொரு காரசாரம்
மூச்சென்ற அரிதாரங் கெந்தியாறும்
முத்தியுடன் சமபாகங் கல்வத்திட்டு
நீச்சென்ற அமுர்தரச முலைப்பால்தன்னால்
நீமகனே தானரைத்து நிசத்தைக்கேளே. (1182)

நிசமான நிசவசனஞ் சொல்லக்கேளு
நீண்டகம்பிச் சாதிலிங்கக் கட்டிவாங்கி
வசமாகத் தானரைத்த மருந்தைப்பூசி
மார்க்கமுடன் காயவைத்து மண்ணுஞ்செய்து
பிசகாமற் சற்குருவைத் தியானம்பண்ணி
பிலமறிந்து புடமதனைப் பேணிப்போடு
திசமான சிவசூட்சத் தாலேமைந்தா
தீர்க்கமுடன் லிங்கமது கட்டும்பாரே. (1183)

கட்டிநின்ற லிங்கமுடன் மைந்தாகேளு
கரியுப்பு வெடியுப்புச் சூடன்மூன்றுந்
திட்டமுடன் தானரைத்துப் புடத்தைப்போட்டால்
சிவமான கரியுப்புக் கட்டிப்போகும்
சட்டமுடன் கட்டிநின்ற கரியுப்போடே
சாதிலிங்கக் கட்டுடனே கல்வத்திட்டு
இட்டமுடன் கமலரசந் தன்னாலாட்டி
இருகவொரு வட்டதுபோற் திட்டம்பண்ணே. (1184)

பண்ணப்பா வட்டதுபோற் திட்டம்பண்ணி
பதிவான ஓட்டில்வைத்து மண்ணுஞ்செய்து
விண்ணப்பா தானேக்கிப் புடத்தில்வைக்க
வேதமென்ற உப்புடனே லிங்கங்கூட்டி
கண்ணப்பா கண்மணிபோ லுருகிக்கட்டும்
கட்டிநின்ற லிங்கமதின் களையைக்கேளு
நண்ணப்பா செம்புவெள்ளி ஒன்றாய்க்கூட்டி
நாட்டமுடன் பத்துக்கொன்று தங்கஞ்சேரே. (1185)

சேரப்பா மூன்றுமொன்றாய்க் குகையிலிட்டு
தீர்க்கமுடன் தானுருகி நிற்கும்போது
காரப்பா கட்டிநின்ற லிங்கமொன்று
கணக்காகத் தான்கொடுத்து யெடுத்துப்பார்த்தால்
பேரப்பா பெற்றதொரு தங்கமாகும்
பெலமான தங்கமடா அதிகமாத்து
ஆரப்பா அறிவார்கள் தங்கமாத்து
ஆதிசிவ சோதியுட யோகம்பாரே. (1186)

யோகம்.

பாரப்பா யோகமென்று லறிவானந்தம்
பதிவான தீபமென்றால் மனக்கண்பார்வை
நேரப்பா வாசியென்று லமூர்தபானம்
நிசமான பிரமமென்றால் மாய்கைமாய்கை
காரப்பா மாய்கைவெளிக் கண்மேனசூட்சம்
கருவான சூட்சமடா நாதவிந்து
வீரப்பா கொண்டெழுந்த நாதவிந்து
விபரமுட னித்தனையு மறியலாச்சே. (1187)

ஆச்சப்பா அறிவான நாதவிந்து
அடங்கிஉருத் திரண்டுஒரு ரூபமாகி
மூச்சப்பா அடங்கிவந்த பிண்டந்தானும்
முத்தியுடன் அசைவாகி ஆஊவென்று
பேச்சப்பா பேச்சற்ற தாலேமைந்தா
பெருகிநின்ற பிருணனல்லோ அறிவானந்தம்
நீச்சப்பா நிசமான அறிவானந்தம்
நின்றுவிளை யாடுகிற நிசத்தைக்கேளே. (1188)

கணபதி

கேளப்பா ஆதார மூலமான
கெணபதியின் பதிதனிலே மனதைவைத்து
கேளப்பா ஓம்சிவா வென்றுசொல்லி
கிருபையுடன் கண்ணுமனக் கண்ணுங்கொண்டு
கேளப்பா சகலசௌ பாக்கியங்கள்
கெணிதமுடன் தருகவென்று புருவமேவி
கேளப்பா மனதுரிமை யாகநின்றால்
கேட்டதெல்லாந் தருமிந்தப் பதிதான்பாரே. (1189)

பிர்மா.

பாரப்பா துரியாதீ தத்தில்நின்று
பதிவான பிரமாவை மனதிலெண்ணி
நேரப்பா நம்சிவஓம் மென்றேதான்
நேர்மையுடன் மனக்கண்ணால் புருவமேவி
காரப்பா யில்லறத்தோ டொத்துவாழ்ந்து
கனயோக வாழ்க்கையதா யிருக்கவென்று
சேரப்பா மனதோடே தியானம்பண்ணில்
செல்வமென்ற கனபவுசு தீர்க்கமாமே. (1190)

மால்பதி.

தீர்க்கமென்ற துரியமணி வீட்டிலேதான்
திறமான மலரடியைத் தியானம்பண்ணி
தீர்க்கமுடன் மங்சிவ உம்மென்றேதான்
திருவான புருவமதில் மனக்கண்வைத்து
தீர்க்கமென்ற தீர்க்கமுடன் உலகில் வாழ்ந்து
செல்வபதி யாகவென்று தியானஞ்செய்தால்
தீர்க்கமுட னினைத்தபடி யாடுந்தெய்வந்
திருவான லெட்சுமியைத் தியானம்பண்ணே. (1191)

ருத்திரன்.

பண்ணப்பா சுழுத்தியென்ற முக்கோணத்தில்
பரிவான ருத்திரனைத் தியானம்பண்ணி
விண்ணப்பா தானுக்கிச் சிங்சிவஓமென்றால்
வெத்திபெற அஷ்டதிசை தானேஆண்டு
பொன்னப்பா கனயோக மக்கள்சூழப்
பொருந்திநின்ற உலகமதில் தானேவாழ்ந்து
கண்ணப்பா கண்ணுமனக் கருத்தோடேதான்
காசினியில் வாழ்ந்திருப்பார் கருத்தாய்ப்பாரே. (1192)

மயேஷ்பரன்

கருவான சொற்பனமாம் விசுத்திவீடு
கருணையுள்ள மயேஷ்பரனைத் தியானம்பண்ணி
திருவாக வசிசிவ ஓமென்றுக்கால்
செகராச மகுடபதி தேவர்சூழ
பெருவாழ்வு தனைவிரும்பிப் பூசைசெய்தால்
பேருலகெல் லாம்நிறைந்த சோதியாலே
உருவான தேகமது சித்தியாகி
உண்மையுடன் வாழ்ந்திருப்பார் உலகில்தானே. (1193)

சதாசிவம்

தானென்ற சாக்கிரமா வட்டத்துள்ளே
சதாசிவனார் மனோன்மணியைத் தியானம்பண்ணி
கோனென்ற குருவருளால் யம்சிவஓமென்றுக்கால்
குருவான சிவயோகி யாகியேதான்
வானென்ற கேசரியிற் சோதிபோலே
மகுடரெட்ன பதிதனிலே வாழ்ந்துகொண்டு
தேனென்ற அமுர்தரச திவ்வியமாகி
செகராச ராஜரிஷி யாவார்பாரே. (1194)

பாரப்பா சாகரத்தின் மேலதாக
பருதிமதி தனையறியப் பார்க்கவென்றால்
நேரப்பா மூலவோங் காரக்கம்பம்
நிசமான கம்பமென்ற வாசியேறி
காரப்பா சதாசிவத்துக் கப்பால்நின்று
கருவான சோதியிரு சுடரைப்பார்த்தால்
வீரப்பா கொண்டதொரு கெவுனந்தங்கும்
மேலான அத்தொய்தஞ் சுத்தமாமே. (1195)

சுத்தமுள்ள ரவிமதிக்கு மேலதாகச்
சொல்லிறந்த பரவெளியிற் சுகத்தைக்காணில்
சித்தமுள்ள பஞ்சகர்த்தாள் வெளியுமாச்சு
சிவமான தவயோகம் வெளியுமாச்சு
சத்தமுள்ள கோடியடா யேழுகோடி
சங்கையுள்ள மந்திரங்கள் வெளியுமாச்சு
வித்தான வித்துகளும் வெளியுமாச்சு
வேகமொடு சாஸ்திரங்கள் வெளிதான்பாரே. (1196)

பாரப்பா அண்டமொடு புவனமெல்லாம்
பதிவான யெழுவகையின் தோற்றமெல்லாம்
நேரப்பா நினைவாலே பார்க்கும்போது
நிட்சயங்க ளொன்றுமிதில் காண்பதில்லை
காரப்பா நிட்சயங்க ளேதென்றக்கால்
கண்ணான பரவெளியே பரசொரூபம்
தேரப்பா பரசொரூபந் தானேதானாய்
சிவாயகுரு வருளதனால் கடாட்சங்காணே. (1197)

காணடா சற்குருவின் கடாட்சத்தாலே
கருணையுள்ள ஆதார தீட்சைபெற்று
பூணடா சத்திசிவ பூசைபண்ணி
பொற்கமலத் துச்சியிலே மனதைவைத்து
பேணடா ரேசகபூ ரகமும்பண்ணி
பிசகாமல் கும்பகத்தில் நின்றுகொண்டு
ஊணடா ஓங்காரக் கம்பத்தேகி
ஒளியான பரவெளியி லுகந்துபாரே. (1198)

பாரப்பா மனதுகந்து மைந்தாநீயும்
பரமான பூரணத்தைப் பணிந்துகொண்டு
காரப்பா சரிதையொடு கிரிகையோகம்
கருவான ஞானசா தனங்கள்கண்டு
பேரப்பா நவக்கிரக சூட்சம்பார்த்து
பிலமான அனுக்கிரக பீடத்தேகி
நேரப்பா நின்றுவழி பார்த்தாயானால்
நீசமான வழியெல்லாம் வெளிதான்பாரே. (1199)

வெளியான வெளியதுதான் பரசொரூபம்
வேதாந்த ரூபமடா சொரூபானந்தம்
வழியான அந்தமடா சொரூபானந்தம்
மகத்தான பூரணமா மந்தங்கண்டு
நெளியாம லாதாரங் கடந்தப்பாலே
நெருப்பாறு மயிர்ப்பால வழியேசென்று
அளியாத பரமவெளி வெளியோடேவெளியாய்
ஆனந்த பூரணமா யமருவது முற்றே. (1200)

முத்தான புலத்தியனே அய்யாகேளு
முழுதுமிதை ஆதிதொடுத் தந்தமாக
சித்தாக நின்றபரி பூரணத்தைநீயும்
செம்மையுடன் பூரணமாய்ப் பார்த்ததாலே
வத்தாத பாக்கியமும் வயதுஞ்சித்தி
மகத்தான யோகமொடு ஞானஞ்சித்தி
வித்தான மாய்கையற்றுச் சுத்தமான
வேதபர வெளியில்மன வெளிசேர்முற்றே. (1201)

அகத்தியர் பரிபூரணம் 1200 முற்றிற்று.

திருப்பூவணம் புதூர் நா. கனகசபாபதி பிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதிக்கிணங்க இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

இராமதேவரென்ற யாகோபு வைத்திய
வர்தக் கோர்வை,
17-சாஸ்திரமும்சேர்ந்தது விலைரூ9-0-0
தனிதனிப்பாகமாகவும் விலைக்குக் கிடைக்கும்.

உ

பரமசிவ துணை.

பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய வாதயோக

ஞானசாஸ்திரத் திரட்டு.

வெகுகாலமாக அச்சுக்கு வராமல் இருந்ததும், அநேக ஏட்டுப் பிரதிகளில் புதைபொருளாய்க் கிடந்த பதினெண் சித்தர்களால் பாடிய அநேக நூல்களை ஆங்காங்குபோய்ச் சேகரித்துக் கொண்டுவந்து பாகம் 1-க்கு சுமார் 270-பக்கங்களாக 10-பாகங்கள் அச்சிட்டிருக்கிறது இதில் வைத்தியமும்; வாதமும்; யோக ஞான மார்க்கம் அடைவதற்கு முக்கிய சாதனங்களும்; யோகஅப்பியாச முறைகளும்; கற்பமுறைகளும்; தீட்சை விதிகளும் தெளிவாகச்சொல்லியிருக்கிறது. நயம்பதிப்பு கலிக்கோ பயிண்டு பாகம் 1-க்கு விலை ரூ. 1—8—0

பதினேண் சித்தர்களில் ஒருவராகிய

இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், பஞ்சபூதங்களின் விபரமும், பற்பசெந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோகமுறைகளும், ஞானங்களும் விரிவாய்க் கூறியுள்ளது. விலை ரூ 1—0—0

கு, இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

திருவள்ளுவர்

கற்பம் 300.

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பு சூஸ்திரம் 30 வாத சூஸ்திரம் 16 முப்புச்குரு 11. வைத்திய சூஸ்திரம் 100 ஆக 7-சாஸ்திரம் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும், முப்பூ இன்னதென்ற விபரமும், வழலை மார்க்கமும் மிகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 1—0—0

பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

விஷவைத்தியமென்னும்

* ஒன்பதுவிஷ ஆரூடம். *

இதில் ஒன்பது சாஸ்திர ஆரூடங்கள் சேர்ந்திருக்கிறது. பாம்பு தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்கு இலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்து வந்த சாஸ்திரம். சுத்தப்பதிப்பு கலிக்கோ பயிண்டு

புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 1...8...0

த. ரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

பச்சிலை மூலிகைகளின்

தமிழ்ச்,

சித்தவைத்திய அகராதி

இதில் பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்களையும், கடைச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், இருபத்தைந்து உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம்செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், உபரசச் சரக்குகள் 120க்கும் பரிபாஷைப் பெயர்களையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், பஞ்சபூதச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், நிகண்டுகளின் பரிபாஷைபெயர்களையும்விபரமாய்க் கூறியுள்ளது. ஷை புஸ்தகத்தை சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும், முக்கியமாய் இதை வாங்கிப்பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்துப் படித்து இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோருகிறேன்.

புத்தகம் 1-க்கு விலை ரூ 1...12...0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

NEW CATALOUGE OF BOOKS.

புதிய புத்தக கியாட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

சித்தவைத்திய அகராதி,

இதில் பச்சிலை, கடைச்சரக்கு, பூதச்சரக்கு, உபரசச் சரக்குகள் 120 பரிபாஷைப் பெயர்களையும், 25 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும் வகாரம், செந்தூரஞ் செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புஸ்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்துப் படித்து இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோருகிறேன். 280-பக்கங்கள்கொண்ட கலிக்கோபயிண்டு

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்சபூதங்களின்விபரமும், பற்பசெந்தூரம், சுண்ணம் செய்முறைபாகங்களும், அஷ்டாங்கயோகமுறைகளும், ஞானங்களும் கூறியிருக்கிற புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

வைத்திய வாதயோக

ஞான சாஸ்திரத் திரட்டு

வெகுகாலமாக அச்சுக்கு வராமல் ஏட்டுப் பிரதிகளாக புதைபொருளாய்க் கிடந்தஅரிய பெரிய அநேக நூல்களை ஆங்காங்குபோய் ஏராளமான பொருள் செலவு செய்து சேகரித்துக் கொண்டுவந்து பாகம் 1-க்கு சுமார் 270-பக்கங்களாக 10-பாகங்கள் அச்சிட்டிருக்கிறது இதில் வைத்தியம்; வாதம்; யோகம் ஞானம் வாசி மார்க்கம் அடைவதற்கு முக்கிய சாதனங்களும்; யோகஅப்பியாசம் கற்பமுறைகள் தீட்சை விதிகள் முறைதப்பாமல் கைபாகம் செய்பாகத்தோடு தெளிவாகச் சொல்லியிருக்கிறது. கலிக்கோபயிண்டு பாகம் 1-க்கு விலை ரூ. 1—8—0

திருவள்ளுவர்கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பு சூஸ்திரம் 30. வாத சூஸ்திரம் 16. முப்புச்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100 ஆக 7-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ இன்னதென்ற விபரமும், வழலைமார்க்கமும் தெளிவாகக்கூறியுள்ளது புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0

அருணகிரிநாதர் திருப்புகழ் உரை

சிவசுப்பிரமணியக் கடவுள் அருட்பிரசாதத்தால் அருணகிரிநாதசுவாமிகள் பாடியுள்ள சில முக்கிய திருப்புகழ் பாட்டுகளுக்கு மாத்திரம் தமிழ்ச் சங்கத்தாரால் உரை யெழுதி அச்சிடப் பெற்றது.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

மகா மகத்துவந் தங்கிய

யூகி முனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டு சாஸ்திரங்கள்.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கையடக்கமாய் வெளி வராமல் இருந்ததில் .இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன.

கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் **2—0-0**

நந்தீஸ்வரர் நிகண்டு 300

இதில் உப்பு இன்னதென்றம், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்னம் அதினால் வசாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா **0—10—0**

தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்துகொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா **0—10—0**

கருவூரார் வாதகாவியம் நொண்டி 700

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பா(ர்)வாகவும், சிந்தாகவும் இம்மாதிரி பல வர்ணமெட்டுகளாய் வேடிக்கை விநோதமாக சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் விலை ரூபாய் **1—0—0**

விஷவைத்தியமென்னும்

"ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிதமான விஷ ஆரூடசாஸ்திரங்களைச்சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய்,குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ருபாய் 2...0...0

புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300.

இந்த் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குரிய செம்பு வேதை செப்புச் செந்தூரவேதை, தருசுச்செம்பு எடுக்கு விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முவைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஷ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரு 0—12—0

அகஸ்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளிவராமல் பழைய ஏட்டுப்பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்ததை ஷெயார் ஒருவருக்கும் வெளியிடாமல்தன்னனுபவத்தில் வைத்துக்கையாண்டுவந்ததை மகா-ா-ா-ஸ்ரீ இ. ராம. குருசாமிக்கோனாரவர்கள் சுவாமியாரிடம் போய் வேண்டும் பொருள் கொடுத்து வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும்பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் இலகுவான முறைகளாகச்சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

அகஸ்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துருவிபரங்கள் சொல்லியுள்ளது புதிய சாஸ்திரம். கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள் பின்பு பூனுனிமுறைகளையும், தமிழ், முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி வியாமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 10—0—0

இந்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாக தனித்தனியாகவும் பயிண்டுசெய்திருப்பதால் வேண்டியவர்கள் தனித் தனிப்பிரதியாகவும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500 ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருகிறது யாவரும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காமலிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்தது. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணா 0—12—0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

புலஸ்தியர் கற்பம்300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் யோக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம்1-க்குவிலை 0--12--0

அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம். 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம் 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம் 11-வது ஜாலகாண்டம். 12-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—12—0

மகா மகத்துவம் தங்கிய அகஸ்தியர்

கற்ப முப்புக் குருநூல்.

இதில் கற்ப விதிகளும் முப்பு முடிக்கும் விபரமும் பற்ப செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும் சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

நீங்கள் வெகுகாலமாய் எதிர்பார்த்திருந்த

ஸ்ரீமத் பாகவத அம்மானை.

ஐதீகப் போட்டோப் படங்களுடன்.

எண்ணுதற் கரிதன கண்ணன் லீலையென்னும் ஸ்ரீமத்பாகவதத்தை [அ. சங்கரமூர்த்திக் கோனாரவர்கள்] அம்மானைப்பாவாக விசித்திர விநோதமாகவும் சொன்னயம் பொருணயம் முதலிய பத்துவித அழகும் பொருந்தக் கடல்மடை திறந்த வெள்ளம் போல் பாடியுள்ளதை சுமார் இருபது வருடங்களுக்கு முன் அச்சிட்டு விற்பனையான பின்வெகு காலமாகப் புஸ்தகம் இல்லாதிருந்ததால் இப்பொழுது ஷை பாகவதஅம்மானையை ஆங்காங்கு போட்டோப் படங்களுடன் ஆதியில் ஏற்பட்ட புஸ்தகப்படியே 10, 11, 12, ஸ்கந்தங்கள் முடிய கல்லகடிதத்தில் சுத்தப்பதிப்பாக பூறுவும் அச்சிட்டு 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமாய் கலிக்கோ பயிண்டு செய்து வெளிவந்துவிட்டது புஸ்தகம்1-க்கு விலை ரூபாய் **2—0—0**

ஊற்றுமலைத் தனிப்பாடற் றிரட்டு

இஃது மகாவித்வான் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்களால் பாடிய பாடல்கள் அடங்கிய புத்தகம் கிளேஸ் கடிதம் கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் **1—0—0**

சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு.

இதில் சோலைமாமலையி லெழுந்தருளி யிருக்கும் அழகமலையாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலைவிசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து மண்டூக மாமுனிக்கு முத்திகொடுத்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை சென்ற முதலான சகல வைபவங்களையும் பத்து அவதாரங்களையும் வர்ணிப்புச் சந்தமாக யாவருக்கும் தெரியும்படி அலங்காரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா **0—3—0**

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

காகபுசுண்டர் 1000

சித்தர்களில் ஒருவராகிய புசண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷையாரால் பாடியதில் முக்கியமான இப்புசண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

உலக ரகசிய வெளிப்படை யென்னும்

பஞ்சலட்சணத் திருமுக விலாசம்

சோதிடர், வைத்தியர்களின், சூட்சமங்களும், சாமியார், கோடாங்கி, தட்டார், முதலானவர்களின் சாமர்த்தியங்களும், தாசிகள், காசுக்கடை வியாபாரிகள் ஜவுளிக்கடைக்காரர்கள் பழைய உறவுபாராட்டுகிற பாவனைகளும். கொடுக்கல் வாங்கல் லேவாதேவியின் சாமர்த்தியங்களும், வாசிப்போர் கேட்போர்களுக்கு விடா நகைப்பை யுண்டுபண்ணு மென்பதில் சற்றேனும் ஐயமில்லை. இஃது சிவகங்கை சமஸ்தான வித்துவான் வில்லியப்ப பிள்ளை யவர்களால் வெகு சாமர்த்தியமாயும் அழகாயும் வெண்பாச் சீராகப்பாடியுள்ளது இதை ஒவ்வொருவரும் வாங்கிப்பார்க்க வேண்டியதவசியம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 1—0—0

கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது- பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—4—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

பெரிய கந்தரனுபூதி.

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—4—0